
மலைக்கொழுந்து
நந்தி

T1526

மாலாவுக்கு
அன்புடன்
சித்தி -
6.2.91
நல்லூர் கோவில்

S. BALASUNTHARAM, B.A. (Hons)
NO. 20, CRO S T LANE,
CHUNDIKULI,
JAFFNA.

# மலைக்கொழுந்து

நாவல்

S. BALASUNTHARAM. B.A. (Hons)
NO. 20, CROSSETTE LANE,
CHUNDIKULI,
JAFFNA.

## நந்தி

ஆசீர்வாதம் அச்சகம்.
யாழ்ப்பாணம்.

MALAI KOLUNTHU (TAMIL NOVEL) BY NANTHI

முதற் பதிப்பு: டிசம்பர் 1964

விலை ரூபா. 200/-

ஆசீர்வாதம் அச்சகம்.
யாழ்ப்பாணம்.

நான்,

நாவல்,

# நண்பர்கள்.

1959ஆம் ஆண்டில் நான் 'குறுக்கு வழி' என்ற ஒரு சிறு கதையை எழுதினேன். டிக்கோயாவின் தேயிலைத் தோட்டம் ஒன்றில் மிக அழகான ஒரு பெண்ணைப் பார்த்த பின்பும் அந்தத் தோட்டத்தின் தொழிலாளர் சங்கத் தலைவனான ஓர் அறிவுமிக்க வாலிபனுடன் அரைமணி நேரம் உரையாடிய பின்பும் அழகு, அறிவு இவற்றைப் பசுமையான இளமையின் பின்னணியில் நான் காதலிக்க வைத்த முயற்சிதான் அந்தக் கதை.

நாவலப்பிட்டி ஆத்மஜோதி இல்லத்தில் அன்புமணி, திரு. நா. முத்தையா அவர்களுக்குக் 'குறுக்கு வழி'யைப் படித்துக் காட்டினேன். 'இந்தக் கதையில் புனிதமான காதல் இருக்கிறது இதை நீங்கள் ஒரு நாவலாக எழுதினால் நன்றாக இருக்கும்' என்ற ஆலோசனையைத் தெரிவித்தார் அன்புமணி. நாவல் என்ற சொல்லுடன் என்னைப் பிணைத்த அன்பு அவருடையதுதான்.

இரண்டு வருடங்களாக பல தேயிலைத் தோட்டங்களுக்குப் போய் வந்தேன். 'குறுக்கு வழி' என் மனத்தில் நெடுவழியாகிக் கொண்டே வந்தது. அந்தப் பாதையின் ஓரத்தில் பல அழகான பெண்களும் அறிவுள்ள ஆண்களும் நிற்காமல் இல்லை......

1961இல் 'குறுக்கு வழி' வளர்ந்து 'மலைக்கொழுந்து' ஆனது. இந்த இடைக்கால அனுபவத்தின் பின் என் புனை கதையில் காமம், குரோதம், கல்வியின்மை, ஒற்றுமைக்குறைவு, முதலாளித்துவம் இவற்றினால் காதல் பாதிக்கப்பட்டிருந்தால் அல்லது பின்னணிக்கு ஒதுக்கப்பட்டிருந்தால் அது எனது குற்ற

மல்ல. இந்த நாவலைப் படிப்பதன் மூலமே எனது மனப்போராட்டத்தையும் சிந்தனையையும் நீங்கள் தெரிந்து கொள்ள முடியும். இந்த முகவுரை அதற்கு ஒரு குறுக்கு வழியாக அமையும் என நான் கருதவில்லை.

★

ஆங்கிலத்துடன் ஒப்பிடும் போது தமிழ் உரைநடை பிள்ளைப் பருவத்தில் தான் இருக்கிறது. தமிழ் உரை நடையில் எதையும் நுணுக்கமாக, சுருக்கமாக, தெளிவாகச் சொல்லுவது, அது விஞ்ஞானம் இலக்கியம் எதுவானாலும் சரி, தமிழ் மக்களுக்கே கஷ்டமாக இருக்கிறது. புதிய கருத்துக்கள் தமிழுக்குப் புதிதாக இருப்பதாலும், அவற்றைக் கூறுவதற்கு ஒரு பாரம்பரிய உரை நடை இல்லாததாலும் இந்தக்காலகட்டத்தில் தமிழில் எதையும் எழுதுபவருக்கு அம்முயற்சி ஒரு பரிசோதனையாகவே அமைகிறது. ஓரளவு துணிகரமும் மொழிப் பற்றும் இல்லாவிடில் அன்றாட வாழ்க்கையின் தேவைகளுக்கே தமிழ், தமது மக்களால் புறக்கணிக்கப்பட்டு ஆங்கிலம் அல்லது வேறு மொழி உபயோகிக்கப்படும் அந்த ஆபத்தை நாம் தினமும் வேதனையுடன் உணருகிறோம். தமிழில் பழைய தமிழைப்பற்றி, கவிதை உருவில் உலக நூல்களில் முதன்மையான நமது இலக்கியங்களைப் பற்றி இப்போது சொல்லிச் சொல்லி என்ன பிரயோசனம்? நவீன இலக்கிய, தத்துவ, விஞ்ஞான, வியாபாரக் கருத்துக்களுக்குத் தமிழ் ஒரு துரிதமான பொருத்தமான வாகனமாக அமைவதில் அல்லவா அதன் வருங்கால வாழ்வு தங்கியுள்ளது?

கோவில் வலம் வரும் தேரைப்போல் புனிதமான கலைவடிவுள்ள எமது கவிதை இலக்கியம் தமிழ் மக்களுக்குக் காலாதிகாலமாக ஆத்மீக இலக்கிய இன்பத்தையும் பலத்தையும் தந்திருக்கிறது. ஆனல் இன்றைய உலகில் வாழ்வின் மேடு பள்ளங்களுக்குப் போய்வர, தமிழ்த் தேர் அல்லாது ஆங்கில 'ஜீப்' அல்லவா நமக்கும் உபயோகப்படுகிறது. இது தான் உண்மை. தமிழ் மக்களின் சிந்தனைகள், தேவைகள் பல துறைகளில் விரிய விரிய, அதற்கேற்ப அவர்களது மொழிவாகனத்தில் மாற்றங்கள் இன்றியமையாதது. பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற மரபின் சூத்திரத்தை நாம் எந்தக் காலத்திலும் பார்க்க இப்போது

அதிகமாக உணர்கிறோம். தமிழ் அறிந்த யாவரும் புதியன புகுத்தலுக்குத் தயாராகி துணிவுடன் ஆனால் நிதானத்துடன் செயல்படவேண்டியது அவசிய தமிழ்த் தொண்டாகும்.

அடுத்த அல்லது அதற்கு அடுத்த தலைமுறையில் தமிழில் நாவல் எழுதும் ஒரு நாவலாசிரியன் சர்வதேச நொபேல் இலக்கியப் பரிசுக்கு உரியவனுவான். வள்ளுவர், கம்பர், இளங்கோ இவர்களோடு ஒப்பிடக் கூடிய மேதா ஞானம் படைத்த இந்தத் தமிழ்க்கலைஞன், உரை நடையில் காவியம் படைத்துச் சர்வதேசப் புகழை அடைய உதவும் வண்ணம், இப்போதே வழி வகுப்பது இன்றைய எழுத்தாளரின் கடமையாகும். இந்த இலக்கியச் சிரமதான இயக்கத்தில் கஷ்டங்கள், எதிர்ப்புக்கள், தோல்விகள் வருவதைப் பொருட்படுத்தாத மனம் வேண்டும். இந்தக் குறிக்கோளேனும் இல்லாவிடில் எழுதுவதில் அதிக பலனில்லை.

★

இந்த நாவலை நான் மூன்று தடவை முற்றாகத் திருப்பி எழுதினேன். இன்னும் பலதடவைகள் பாகங்களாகத் திருத்தினேன். எல்லாத் தொழில்களிலும் பார்க்க இலக்கியம் படைப்பது சிரமமானது; அதற்கு அதிகம் உழைக்கவேண்டும் என்ற உண்மையை உணர்கிறேன்.

1963இல் ஞாயிறு தினகரன் இதழ்களில் 'மலைக்கொழுந்து' வெளிவந்தது. அதை வெளியிட்ட பத்திரிகையாசிரிய நண்பர் திரு. இ. சிவகுருநாதன் அவர்களுக்கும், அழகான படங்களைத் தீட்டிய ஓவியர் 'மூர்த்தி' அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகும்.

தினகரனில் மூன்றும் அத்தியாயம் வெளிவந்த அடுத்த நாள் 'மலைக்கொழுந்தின்' வசன அமைப்பில் மனத்தைக்கவரும் ஒரு போதைத் தன்மை இருப்பதாக ஒரு நீண்ட பாராட்டுக் கடிதம் வந்தது. வியாசம் எழுதி நல்ல புள்ளிகள் வாங்கிய மாணவனைப் போல் கடிதத்தையும் எனது நாவலின் மூன்று அத்தியாயங்களையும் பல முறை படித்தேன். கடிதம் எழுதியவர் இருபது ஆண்டுகளுக்கு முன் எனக்குப் புதிய முறையில் தமிழைக் கற்பித்த

திரு. கி. லட்சுமணன் M. A. அவர்கள் ஆவார். அவரிடம் விசேஷ புள்ளி வாங்குவதன் கஷ்டத்தை இதுவரை ஆயிரக்கணக்கான மாணவா அறிந்திருப்பர்.

இக்கடிதத்தைத் தொடர்ந்து பல நண்பர்கள் தமது அபிப் பிராயங்களைத் தெரிவித்தனர். ஈழத்தின் பிரபல நாவலாசிரியர் இளங்கீரன், இலக்கியப் பரிசோதனையாளர் 'பெனடிக்ட் பாலன்' தொழிலாளரைப் படிக்கச் செய்த 'சாரல் நாடான்,' நகைச் சுவை எழுத்தாளர் ரீ. பாக்கியநாயகம் முதலியோரின் விமர்ச னக் கடிதங்கள் என்னைக் குழந்தைபோல் மனம் மகிழச் செய்தன. நண்பர் 'அகஸ்தியர்' தினகரன் பத்திரிகையில் மலைக்கொழுந்து விமர்சன அரங்கையே ஆரம்பித்தார்.

'இதில் நீங்கள் படைத்துள்ள பாத்திரங்கள் எமது இதய மேடையில் அழியாத மனித நாடகத்தை நடத்தி, எமது உள் ளத்திலே மாருத மூத்திரையைப் பதித்து விடுகின்றன' என்று இலங்கைச் சர்வகலாசாலையிலிருந்து கலாநிதி. சு. வித்தியானந்தன் ஓர் அரிய கடிதத்தில் எழுதியிருந்தார். அதேபோல் கடிதம் எழுதிய கவிஞர் நாவற்குழியூர் நடராசன் 'இலங்கை நாட்டை நேசிக்கும் மலையப்பனது தேசீய உணர்ச்சி இந் நவீனத்தில் தேசீய ஒற்றுமையைப் பிரதிபலித்து நிற்கிறது' என்று எனது நோக்கத்தின் மிக முக்கியமானதொன்றை எடுத்துக்காட்டினர்.

இவர்கள் அத்தனை பேரும் எனது நண்பர்கள் எனது இந்த ஆரம்ப இலக்கிய முயற்சியை ஊக்கப்படுத்துவதற்காகவே இப்படி அவர்கள் எழுதினர்கள். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

1964இல் மலைக்கொழுந்து நூல் வடிவில் வர ஆசீர்வாதம் கிடைத்தது. அச்சகத்தில் நண்பர் திரு. ரே. ஜோசப் தலைமையில் அச்சுக்கோப்போரின் விரல்களில், கொழுந்து கிள்ளும் பெண்களின் விரல்களின் வேகத்தையும், உழைப்பின் துடிப்பையும், அன்பையும் காண்பது விருந்தாக இருந்தது.

மலையப்பனை நினைவில் நிறுத்தி அதன் மூலம் தனது எதிர் காலத்தை வெறித்துப் பார்க்கும் வீராயியை புத்தகத்திற்கு வரைந்தவர் நண்பர் திரு. எஸ். சிவப்பிரகாசம்.

இவர்களுக்கு என் நன்றி.

'மலைக்கொழுந்து' போல் ஒரு கையளவு சிருஷ்டியைப் படைப்பதானாலும் எவ்வளவு வேதனைகளும் சோதனைகளும்! பிரசவப் பெண்ணின் தவிர்க்க முடியாத இனிய வேதனை, மலை ஏறுபவரின் உழைப்பின் வேதனை, ஆராய்ச்சியாளரின் பொறுமை வேதனை.... மனத்தில் இப்படியாகப் பல உணர்ச்சிப் போராட்டங்களும் நாடகமும். இந்த வேளையில் ஓர் எழுத்தாளனுக்கு ஆக்க பூர்வமான ஆலோசனைகளைத் தரவும், ஊக்கம் அளிக்கவும், உதவிகள் புரியவும் நல்ல நண்பர் துணை இருப்பின் அவன் பாக்கியசாலி.

நான் பாக்கியசாலி. 'மலைக்கொழுந்து' மனத்திலும், மையிலும், அச்சிலும் உருவான வேளையில், எழுதும் கையின் விரல்கள் போல் ஐந்து நண்பர்கள் பல வேளைகளில் பல விதங்களில் துணை நின்று உற்சாகம் தந்தார்கள். இந்த ஐந்து நண்பர்களுக்கு நன்றி கூறுவதில் மட்டும் என் மனம் திருப்தியடைய முடியாது.

நந்தி

'அலங்காரம்'
168, கோவில் வீதி,
நல்லூர்,
25-12-1964

அமரர் விடிவெள்ளி

பரமஹம்ஸதாசன்

டொமினிக் ஜீவா

சொக்கன்

திரு. எம். வி. ஆசிர்வாதம்

ஆகிய நண்பர் ஐவர்க்கும்

இந்நூல்

சமர்ப்பணம்



# வணக்கம்



இது என் கதை.

இது என்னுடன் கூடி வாழும் வள்ளி, வீராயி, காத்தான், ரங்கசாமி மாமா, சிதம்பரக் கங்காணி, மீனாட்சிப் பாட்டி முதலிய பல தோட்டத் தொழிலாளர்களாகிய எங்களின் கதை. அவர்களிலே பலர் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்; சிலர் இப்போது என் நினைவில் மட்டும் வாழ்கிறார்கள். ஆனால், இந்த எழுத்துக்களிலே பிறந்து உங்கள் மத்தியில் என்றும் வாழப்போகிறார்கள்.

இது எனது இலங்கையின் மலைநாட்டுக் கதை. எனது மூதாதையரின் எலும்புரத்திலே வேர்விட்டுச், செழித்து வளர்ந்து, செல்வப் பசுங் கொழுந்துகளைத் தளிர்விடும் தேயிலைச் செடிகள் இதில் பேசுகின்றன. அவைகளை நாம் காதலிக்கின்றோம். எங்கள் அன்னையர் வயிற்றில் நாங்கள் கருவாக இருந்த காலம் தொடக்கம் பூமாதேவியின் வயிற்றில் நாங்கள் எருவாகும் காலம் வரை நமக்கும், பனி ஆடை உடுத்திய தேயிலைச் செல்விகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்புண்டு.

எங்கள் இருவரது பரம்பரையும் ஒருவரை ஒருவர் மாறி மாறி வாழவைக்கின்றது. இந்தக் கதையை எழுதியிருக்கவேண்டியவன் நான். ஆனால், எழுதவில்லை. அதற்கான காரணங்களை நான் நண்பர் மயில்வாகனத்திற்கு எழுதிய கடிதத்தில் காட்டியுள்ளேன். இதை நீங்கள் விரைவில் படித்து அறிந்துகொள்வீர்கள்.

எனது அருமை நண்பர் நல்லூரின் 'நந்தி' மலைநாட்டிலே பிறக்காவிட்டாலும் எங்களுடன் சிலகாலம் நெருங்கி வாழ்ந்தவர். எங்கள் இன்ப துன்பங்களை நன்கு உணர்ந்தவர். அவர், அன்பை வண்ணக் குழம்பாக்கி ஆர்வம் என்னும் தூரிகையால் எங்கள் கதையைத் தீட்டியுள்ளார். "அண்ணா! ஏழைத் தோட்டத் தொழிலாளியாகிய என்னை மலைக்கொழுந்து என்று சித்தரித்து விட்டீர்கள். பாசத்தின் துடிப்பினால் என்னைக் கொஞ்சம் அதிகமாகவே காட்டியுள்ளீர்கள்." என்றேன்.

"இல்லை, தம்பி! எனது ஆற்றலின் குறைவினால் நான் உன் திறமையைச் சரியாக உணர்த்த முடியவில்லை. நீ மலைக் கொழுந்து மட்டுமா? மலைநாட்டின் அறிவுக் கொழுந்துமாவாய். உன் விராயி அழகுக் கொழுந்து; உன் வள்ளி அன்புக் கொழுந்து..."

அண்ணா இப்படி அடுக்கிக்கொண்டே போனார்.

நாம் இந்த நாட்டில் வாழப் பிறந்தவர்கள். மலைபோன்ற கஷ்டங்களின் மத்தியில் உழைப்பின் உத்வேகத்தில் எங்களை மறந்து நாம் வாழ்கிறோம். கரிக்கும் கண்ணீரூடாகத் தேயிலைக் கொழுந்துகளில் வெண்பனி முத்துக்களைக் கண்டதும் சிறிது சிரிக்கிறோம்; மகிழ்கிறோம்; காதலிக்கிறோம்.

பின்பு—

அதுதான் இந்தக் கதை.

அன்புப் பனியில் துளிர்த்த இந்தக் கதைக் கொழுந்தை தமிழ்த் தாயின் புனிதமான பாத மலர்களில் வைத்து வணங்குகின்றேன்.

உங்கள் கதாநாயகன்

மலையப்பன்.

# 1

**வெ**ண்பட்டுத் துகிலைப் போல் எங்கும் எல்லாவற்றை யும் மூடிமறைத்திருந்த குளிர்ந்த பனித்திரை மெல்ல நகர்ந்து மறைகிறது. அதிகாலையிலேயே ஆற்றிலே குளித்துவிட்டு வந்து ஈர உடையுடன் சூரிய நமஸ்காரம் செய்யும் நல்ல ஆசார சீலரைப் போல டிக்கோயா மாணிக்க மலைத் தோட் டத்தின் தேயிலைச் செடிகள் கதிரவனின் வெள்ளி இளங் கதிர்களை வரவேற்கின்றன.

பிரட்டுக் களத்திலிருந்து நூற்றுக் கணக்கான ஏழைப் பெண் தொழிலாளிகள் தனியாகவும், சோடிகளாகவும், சிறு கூட்டங்களாகவும் மலைகளில் விரைந்து ஏறிக்கொண்டிருக்கின் றனர். சிறிது நேரத்தில் தேயிலைச் செடிகளை ஒருவித வெட்டுக் கிளிகள் படை எடுத்து வந்து தாக்குவது போல், அவர்கள் செடிகளைச் சூழ்ந்து கொள்கின்றனர். கொழுந்து கிள்ளும் வேலை நடைபெறுகிறது. எங்கு பார்த்தாலும் உயிர்த் துடிப்பு ; உழைப்பின் இயக்கம்.

துடித்தபடி உழைப்பவர்களையும், உழைத்தபடி துடிப்ப வர்களையும் பார்க்கிறோம். இளமையிலேயே பூரிப்பை இழந்து சிறுத்துப்போன முகங்கள், குழிகளுக்குள் சமாதியாகிவிட்ட கண்கள், ஈறு கரைந்து மிதந்த காவிநிறப் பற்கள், குச்சுப் போன்ற கைகள், நடந்து நடந்து, ஓடி ஓடி உரமேறிய

கால்கள்—இவை பூட்டப்பட்ட சிறு உடல்கள் தங்கள் கூடைகளுடன் குனிந்தும் நிமிர்ந்தும் வளைந்தும் திரும்பியும் வேலையில் ஈடுபட்டிருக்கின்றன. ஓயாத ஒழியாத வேலை.

அவர்களுக்குச் சிந்திக்க நேரமில்லை. அதற்கு அவசியமுமில்லை. பழகிப் போன வளையற் கைகளும், அவற்றிற்கு ஏற்றபடி ஆடி அசைந்து ஈடுகொடுக்கும் உடலும் கால்களும் தங்களை இயந்திரங்களாக மாற்றிக் கொண்டதால் அவர்கள் மூளைகளுக்கு என்ன வேலை? இரண்டு இலைகள் ஒரு மொட்டு, இரண்டு இலைகள் ஒரு மொட்டு......இப்படியாகக் கொழுந்துகள் அவர்களுக்குப் பின்னால் தொங்கும் கூடைகளில் விழுகின்றன. கூடைகள் நிரம்புகின்றன.

ஒரு கூடையில் மட்டும் கொழுந்துகள் மந்த கதியில் விழுகின்றன. அந்தக் கூடையின் சொந்தக்காரி வள்ளியம்மாள். அவள் சில வேளைகளில் விரல்களுக்கு ஓய்வு கொடுத்து விட்டு மூளைக்கு வேலை தருகிறாள். சிந்திக்கிறாள். அழகை இரசித்து மகிழ்கிறாள். தனக்கு முன்னால், தனது தேயிலைச் செடியின் எதிர்ப்பக்கத்தில் கொழுந்து கிள்ளும் அவளது தோழி முத்து வீராயியின் மோகன முகத்தைக் கண்களால் துழாவுகிறாள். முதன்முதலாக இதழ்விரிக்கும் செந்தாமரையைப் பார்த்தது போன்ற ஓர் இன்ப அநுபவம் அவள் இதயத்தைச் சிலிர்க்க வைக்கிறது. தினமும் பார்த்துப் பழகிய முகம்தான். ஆனால் பார்க்கப் பார்க்க மீண்டும் கண்களால் அளைக் கொஞ்சத் தோன்றுகிறதே அவளுக்கு! ஆனந்தமாகவும், ஆச்சரியமாகவும், பெருமையாகவும் இருக்கிறது. சில வேளைகளில் சிறிது பொறாமையாகக் கூட இருக்கின்றது.

'முத்துவீராயி நம்மைப்போல் தோட்டத தொழில் செய்யப் பொறந்தவளல்ல. அவள் பெரிய தொரை பங்களாவில் ராசாத்தி போல இருக்கவேண்டியவள்...'

இப்படியான சிந்தனையிலீடுபட்ட வள்ளியம்மாள் அவள் தோழியின் மணி ஓசைக் குரலைக் கேட்டு இவ்வுலகிற்கு

வந்தாள். கையில் அகப்பட்ட இரண்டு முற்றிய இலைகளைப் பிடுங்கிக் கூடைக்குள் அவசரமாக எறிந்தாள்.

கைவளையல்கள் சிரித்தன.

"ஏண்டி வள்ளி! உனக்கு என்னடி வந்திச்சு? இப் படி மரம்போல் நின்னு இன்னிக்கு இருவத்திமூணு ருத்தல் கொழுந்து எடுப்பியா. நேத்துக்கூட பதினெட்டு ருத்தல் தானே வந்திச்சு. சின்னக் கணக்கப்பிள்ளை ஐயா ஏசவில்லையா? கொஞ்சம் கடுமையான குரலில் கேட்டாள் வீராயி.

வள்ளியம்மாள் மொட்டையும் நுனிக் கொழுந்தையும் பறிக்காமல், இரு முற்றிய இலைகளை அவசாத்தில் கிள்ளிக் கூடைக்குள் வீசியதையும் வீராயி பார்த்துவிட்டாள். கொழுந்து பறிப்பதில் கைதேர்ந்த தனது சிநேகிதி மீண்டும் இந்தத் தவற்றைச் செய்கிறாளா என்று அறிய, வள்ளியின் விரல்கள் போகும் இடங்களில் தனது கண்களை அபிநய **பா**வனையுடன் உலாவவிட்டாள். ஒரு மொட்டு இரு துளிர் இலைகள் என்று ஒவ்வொரு முறையும் வள்ளியின் கூடைக் குள் விழுந்தன. 'அப்பாடா' என்று ஒரு நிம்மதியான பெருமூச்சை எறிந்துவிட்டு வீராயியும் தனது வேலையில் முழுக் கவனத்தையும் செலுத்தினாள்.

அவர்கள் தலைகளிலே கம்பளி, கொங்காணியாகப் போடப் பட்டு அவற்றின் மேலே கூடைகள் மாட்டப்பட்டிருக்கின்றன. அழகான மெல்லிய இடைகளில் படங்குகள் கட்டப்பட்டிருக் கின்றன. கால்களில் வெள்ளிக் கொலுசுகள்; கைகளில் சதா கலகலக்கும் வளையல்கள்.

அவர்கள் இருவரும் இளமையின் குளிர்ச்சியும் பூரிப்பு முள்ளவர்கள். கவலையும் வறுமையும் இன்னும் அவர்கள் மேல் தங்கள் கைகளை வைக்க அஞ்சி விலகியிருந்தனபோல்த் தோன்றிற்று.

வள்ளியம்மாள் மதர்த்த தேகவனப்பைக் கொண்டவள். அவளுடைய ஒவ்வோர் அங்கமும் உருண்டு திரண்டு கன்னி அழகை உமிழ்ந்து குலுங்கியது. அவள் முகத்தில் மட்டும், நெற்றியின் இடது பக்கத்தில் ஒரு சிறு தழும்பு. அவள் குழந்தையாக இருந்தபோது பிள்ளைக் காம்பரா ஏணையி லிருந்து நழுவி விழுந்ததால் ஏற்பட்ட காயத்தின் சின்னம்.

முதது வீராயி, அழகின் மதிப்பீட்டில் ஆயிரத்தில் ஒருத்தி. அவள் தேயிலைத் தோட்டத்திலே பிறந்து மலை களிலே வளர்பவளா? பரம்பரைப் பணக்காரக் குடும்பத்திலே பிறந்து பிரபல கொன்வென்ற் ஒன்றிலே படிக்கும் ஒரு செல்வ மகள், நாடகத்தில் நடிப்பதற்கென்று கம்பளியும் படங்கும் உடுத்துக் கூடையை ஏந்தியது போலல்லவா காட்சி தருகிருள்! அத்துடன் அவள் நெற்றியிலே திருநீறும், மூக்கிலே குச்சியும், காதுகளிலே தோடும் மாட்டலும் அவள் அழகுக்கு இன்னும் மெருகு ஏற்றுகின்றன. வெற்றிலைச் செல்வத்தின் சிவப்புச் சாயம், உதடுகள் பிரியாமலே அவை சிரிப்பதுபோல் ஓவியம் தீட்டுகிறது.

"வீராயி! நீ ஒரு ராசாத்தியடி, உன் அழகு யாரைத் தான் கொல்லாது?"

"ஆமா, இதுவரையும் அது ஒருவரையும் கொல்லவில்லை. இனிமேல் தான் புதிசா யாரையும் கொல்லணும்."

வீராயி குறும்பாகத் தந்த இந்தப் பதிலில் ஓரளவு உண்மை துப்பாக்கிக்குள் ரவை போல் மறைந்து இருக்கத் தான் செய்தது. அவள் சிரித்துக்கொண்டே சொன்னுள். சொல்லி விட்டும் சிரித்தாள்!

சிரிப்பு அலைகள் மிதந்த வீராயியின் முகப்பரப்பு, குளத்தில் தெரியும் நிலாவின் நிழல் போல் ஆடிவிட்டு நிலைக்கு வருகிறது. அந்த அழகை அனுபவிக்கத் தோட்டத்து இளம் பெண்களிடையே போட்டி பலமாக இருந்தது.

'அடி வீராயி! நாளைக்கு நீ நாலாம் நம்பர் மலைக்குத் தானேடி போறே? நானும் கங்காணிக்கிட்டே சொல்லிட்டு அந்த மலைக்குக் கொழுந்து எடுக்க உன்னோடை வறேன்டி' என்பாள் ஒருத்தி.

'போடி. வீராயி நாளைக்கு என்னோடை மூணு நம்பர் மலைக்கு வருவாளாம்' என்பாள் இன்னொருத்தி.

இப்படி அந்திப் பொழுதில் அடுத்த நாள் வேலை செய்யும் இடத்தை நிர்ணயிக்கும் போது, வீராயியுடன் ஒரே மலையில் கொழுந்து எடுக்கப் பேச்சுவார்த்தைகள் நடக்கும். அடுத்த நாள் பார்த்தால் ஒரே மலையில் எத்தனை பெண்கள் வேலைக்குப் போனாலும் வீராயி வள்ளியுடனேயே போவாள்.

வள்ளியம்மாள் வீராயியின் உயிர்ச் சிநேகிதி. வீராயி தன் இதயச் சாவியைக் கூட அவளிடம் கொடுப்பாள். வயதில் இருவருக்கும் சில நாட்கள் தாம் வித்தியாசம். பதினைந்து வருடங்களுக்குமுன் இருவரும் கைக் குழந்தைகளாகப் பிள்ளைக் காம்பராவில் மீனாட்சிக் கிழவியின் பராமரிப்பில் ஒன்றாக விடப்பட்டவர்கள்.

மீனாட்சி மாணிக்கமலைத் தோட்டத்துப் பிள்ளைமடுவத்தின் ஆயம்மாள். தோட்டத் தொழிலாளிகள் வேலைக்குப் போகும்போது தங்கள் குழந்தைகளைப் பிள்ளைக் காம்பராவில் விட்டுவிட்டுப் போய் விடுவார்கள். அந்தியில் அவர்கள் திரும்பி வருமளவும் பிள்ளைகள் ஆயம்மாவின் பராமரிப்பிலேதான் இருப்பார்கள். தங்கள் லயத்தின் காம்பராவில் யாருமே இல்லாத அநாதைப் பெற்றோர்கள்தாம் தங்கள் பிள்ளைகளுடன் பிள்ளைக் காம்பராவுக்கு வருவார்கள். வீட்டில் ஓர் ஐந்து வயதுப் பெண்ணோ சொந்தத்தில் ஒரு கிழவியோ இருந்தால், அந்த வீட்டுக் குழந்தைகள் பாக்கியசாலிகள். அவர்களுக்குப் பிள்ளைக் காம்பராவின் வாசம் தேவைப்படாது. அவர்கள் இருப்பதும் இறப்பதும் தங்கள் சொந்த வீட்டில் தான்.

வீராயிக்கும் வள்ளிக்கும் அந்த அதிர்ஷ்டம் கிடைக்கவில்லை. அவர்கள் பகல் முழுவதும் பிள்ளைக் காம்பராவில் மீனாட்சிக் கிழவியின் கருணையில் விடப்படுவார்கள்.

மீனாட்சிக் கிழவிக்கு தோட்டத்து 'ஆயம்மா' வேலைக்கு வேண்டிய இலட்சணங்கள் அத்தனையும் பரிபூரணமாக இருந்தன. 'அவள் அந்தப் பதவிக்கென்றே பிறந்தவள்' என்று கூற முடியாவிட்டாலும், அவள் உடலின் அமைப்பும் தொழிலும் இப்போது அதற்கேற்ப மாறிவிட்டன என்று நம்பிக்கையாகக் கூறலாம். அவளுடைய வலது இடுப்பு மூட்டு முறிந்து விலகிப் பிழையாகப் பொருந்தியதால் அவள் வேறு வேலைகளுக்குப் போக முடியவில்லை. அவள் எல்லாப் பிள்ளைகளையும் பாரபட்சமின்றி ஒரே மாதிரிப் பார்ப்பதற்குக் கண்கள் இரண்டிலும் வெள்ளெழுத்து. சின்னப்பிள்ளைகளை முயற்சியில்லாமல் தாலாட்டக் கைகளில் 'குடு குடு' நடுக்கம். அவர்களின் அழுகையைச் சகிக்குமளவுக்குக் காதுகள் செவிடு. தாலாட்டுக்குப் பதிலாக இருமல்; கரகரத்த ஒரே இருமல்!

வள்ளியையும் வீராயியையும் மீனாட்சிக் கிழவி பிள்ளைக் காம்பராவில் ஒரு மூலையில் கிடத்துவாள். அவர்கள் இருவரும் ஒன்றாக அக்கம் பக்கத்தில் விடப்படுவதற்குக் காரணம் உண்டு. அவர்கள் ஒரே லயத்தின் பக்கக் காம்பராக்களில் பிறந்தவர்கள். அத்துடன் வீராயியின் 'வீர்' என்ற முதல் குரலுக்கு அவள் அம்மாவினுடைய கடைசி மூச்சின் மெல்லிய ஓசை ஒத்துச் சுரங்கூட்டியதால், வள்ளியின் அம்மா தனது ஒரு மார்பை வீராயிக்கு அர்ப்பணித்தாள். அன்று தொடக்கம் வள்ளியின் அம்மா, வீராயியையும் தனது மகளென்றே கருதி வருகிறாள்.

இரு குழந்தைகளும் காலையில் ஒன்றாகவே பிள்ளைக் காம்பராவுக்கு வருவார்கள். வள்ளியை அவள் அம்மா

பொட்டு, காவி வருவாள். வீராயியை ஓர் எட்டு வயதுப் பையன் மலையப்பன், தனது சொந்த மச்சினி என்ற உரிமையுடன் இரு கைகளாலும் தனது இதயத்துடன் இறுக்கி அணைத்து மூச்சுத் திணறத் தூக்கி வருவான். இவையெல்லாம் பதினைந்து வருடங்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சிகளின் ஞாபகச் சிதறல்கள்.

'வள்ளியும் வீராயியும் சகோதரிகளா அல்லது சிநேகிதிகளா ? அவர்களைப் பிணைத்திருக்கும் அந்தப் பாசச் சங்கிலியின் விவரிக்கமுடியாத தன்மை என்ன ?' இப்படியான கேள்விகளுக்கு இந்த ஞாபகங்கள்தாம் பதில்கள்.

ஓரே செடியில் வீராயியுடன் கொழுந்து கிள்ளிய வள்ளி மெல்லமாக நெளிந்து அடுத்த செடிக்குத் தாவி, அதற்கு அடுத்த செடிக்குத் திரும்பி நழுவுகிறாள். திரும்பும் போது அவள் கண்கள் சிரித்துச் செய்தியைத் தெரிவிக்கின்றன.

'ஏ வீராயோ ! நீ தலை மறைவா இருக்கணும். அந்தா உன் நெஞ்சு நிறைஞ்ச ஆசாமி வர்றாரு'

பார்க்காதது போல் பார்க்கிறாள் வீராயி. பனிக் கொழுந்துகளைக் கைகளில் பிடித்தபடியே நிற்கிறாள். சிறிது தூரத்தில் பழங்காலத்துத் தமிழ்ப் படைவீரன் ஒருவன் தோட்டத் தொழிலாளியின் உடையில் வருவது போல், ஒரு சொராண்டியைத் தனது வலது தோளில் ஏந்தியவாறு மலையப்பன் வந்து கொண்டிருந்தான். வீராயியின் மதிமுகம் மதுமுகமாகிறது. நெஞ்சுக்குள் இதய மொட்டு விரியத்துடிக்கிறது. போதை கலந்த ஓர் இனிய உணர்ச்சியின் நுண்ணிய அலைகள் அவள் அங்கங்கள் ஒவ்வொன்றையும் தாக்கிக் குலுக்கின.

## 2

முத்து வீராயியின் இதயம், மார்புக் கூட்டுக்குள் களிப்பினால் ஆடி விட்டுப் பழையபடி நிதானமாக அடிக்கத் தொடங்கச் சில நிமிடங்கள் எடுத்தன. அதற்கிடையில் மலையப்பன் அவள் செடிக்கு அருகில் வந்துவிட்டான். இதயத்தின் ஒழுங்கில்லாத் துள்ளலால் திணறிய அவள் மூச்சு, மார்பை இப்போதும் மேலும் கீழும் அழுத்தமாக எழுந்து தாழச் செய்தது. வீராயியின் பூரிப்பான உடலுக்கு அது மிகமிக அழகாக இருந்தது. மலையப்பன் அந்த அழகைச் சிறிது நேரம் இரசித்துக்கொண்டே நின்றான். அவன் உடலின் இன்ப நரம்புகள் ஒவ்வொன்றும் சீண்டப்பட்டன. ஆனாலும், 'மச்சான், கல்யாணம் ஆகுமட்டும் நீங்க என்னைத் தொட நெனைக்காதேங்க' என்று அவள் அவ்வப்போது சொல்வதுதான் மலையப்பனின் ஞாபகத்திற்கு வந்து அவன் உணர்ச்சிகளைத் தடை செய்தது.

வீராயியின் கொழுந்து பறிக்கும் இயந்திர விரல்கள் மலையப்பனின் கழுத்தில் சுற்றியிருந்த நீல நிற மப்ளரை இலேசாகச் சரிப்படுத்தும் அன்பு வேலையைச் செய்கின்றன. மப்ளரின் முடிச்சுக்களைக் கொய்து, மலையப்பனின் சேட்டிற்கும் அவன் அதன் மேல் அணிந்திருந்த ஒரு பழைய கறுப்புக் கோட்டிற்கும் இடையில் செலுத்துகிறாள்.

அவன் ஒரு காக்கி நிற அரைக் காற்சட்டையை அணிந்து அதை இடுப்பில் தோற்பட்டியால் கட்டியிருந்தான். தோற் பட்டியின் முற்பக்கத்தை வெள்ளி முலாம் பூசப்பட்ட இரண்டு அங்குலச் சதுர வடிவான ஒரு செப்புத்தகடு அலங்கரித்தது. தலையிலே முண்டாசாகக் கட்டப்பட்ட தடித்த துவாயும், கால்களில் அவன் ஹட்டனில் பழைய உடுப்புக் கடையில் வாங்கிய பெரிய பூட்சும் அவன் 'யூனிபாரத்தைப்' பூர்ண மாக்குகின்றன.

வீராயிக்கும் தனது மச்சான் ஒரு துரையைப்போல் உடுத்திருப்பதைப் பார்க்கப் பெருமையாக இருக்கும்.

"என்ன மச்சான் நீங்க காசையெல்லாம் பொடவைக் கடைகளிலும் பொஸ்தகக் கடைகளிலும் கொட்டவா உழைக் கிறீங்க?" என்று சுருக்கமாகக் கேட்டு வைப்பாள் வீராயி.

"வீராயி! நான் என்ன வீண் செலவா செய்கிறேன்? தேவைக்கு வேண்டிய உடுப்புக்களை வாங்கிறேன். கம்பளி உடைகளைப் பழைய பொடவைக் கடைகளிலே சீப்பாகத் தாராங்க."

"ஆமா. நீங்க பெரிய பேச்சாளனல்ல. உங்க பேச்சைக் கேட்டவங்க சும்மாகூடத் தர்ராங்கன்னு சொல்லுங்க" இடை மறித்துப் பேசுவாள் வீராயி.

"நான் ஏன் சும்மா வாங்கிடணும்? வீராயி, நான் மற்றவர்களைப்போல நஞ்சுச் சாராயத்திலும் கஞ்சாவிலும் காசை வீசி உடம்பைக் கெடுத்துவிடுகிறேனு என்ன? ஒரு பீடி சிகரட் கூடத் தொடறதில்லே." என்று விளக்குவான் மலை யப்பன்.

"எனக்குத் தெரியாதா என்ன? மச்சான், சும்மா ஆசைக்குக் கண்டிச்சேன். நீங்க அழகா இருந்தாத்தான் எனக்கு ரொம்பப் பிரியமாக இருக்கும்." செல்லமாகச்

சொல்லுவதோடு ஓர் இளங் கொழுந்தைப் பறித்து அவன் மேல் அருச்சனை செய்து சிரிப்பாள் வீராயி.

அவனும் அவளுடன் சேர்ந்து சிரிப்பான்.

"மச்சான்! தோட்டத்துப் பிள்ளைகளெல்லாம் உங்களைப் போல இருக்கணும். அவங்களுக்கு அப்படி இருக்கப் பணமில்லை."

"வீராயி! அவங்களும் நிறைய உழைக்கிறாங்க. ஆனால் குடிச்சுத்தள்ளுறாங்க. கடன் எடுக்கிறாங்க. சம்பளம் கிடைச்சதும் பாதிப்பணம் பாயிக்கு வட்டிக் காசாகப் போகுது." பெருமூச்செறிவான் மலையப்பன்.

"மச்சான்?" என்று சோகக் குரலில் அழைத்தாள் வீராயி.

"என்ன?" அவள் முகத்தைக் கூர்ந்து நோக்கினான் மலையப்பன். அவளின் முகத்தில் புதிதாகக் கவலை ஒன்று வந்திருப்பதுபோல் இருந்தது.

"மச்சான்...எங்கப்பா கூட இப்போ குடிக்க ஆரம்பிச்சிட்டார்."

ஆழ்ந்த துக்கத்தின் நச்சு ஆவி அவள் தொண்டையை அடைத்தது.

"உங்களுக்கு அவர் குடிப்பது தெரியுமா, மச்சான்?" தொடர்ந்து கேட்டாள் அவள்.

"தெரியும்."

"உங்களால் ஒண்ணும் செய்யமுடியாதா?"

மலையப்பன் மௌனமாக நின்றான். வீராயியும் செடிகளில் பச்சை இலைகளைப் பார்த்தபடியே நின்றாள்.

அவள் கண்களில் கண்ணீர், திரை விரித்தது. அதில் அவளுடைய அன்பு அப்பா ரங்கசாமிக் கங்காணியின் அறிவு முகம் தெரிகிறது.

அந்த முகத்தின் அகன்ற நெற்றியில் வெண்பட்டுத் திருநீற்றின் மூன்று குறிகள். அவற்றின் மையத்தில் சந்திர வடிவில் சந்தனப் பொட்டும், அதன் நடுவில் ஒரு குங்குமப் புள்ளியும் தெரிகின்றன. புருவங்களையும் சேர்த்துப் பூசப் பட்ட திருநீற்றுப் பூச்சுக்குக் கீழே இடது பக்கத்தில் பல தோட்டத் தொழிலாளரைக் கண்காணிக்கும் கருணைக் கண்விழி. வலது பக்கத்தில், பல வருடங்களுக்கு முன்பு பெரியம்மை அம்மாளின் நூதனப் பசிக்குக் காணிக்கை செய்யப்பட்ட கண்ணின் வெறுங்குழி. இவற்றுடன் கம்பீரமான நீண்ட நாசியும், வஞ்சகமில்லாது வளர்ந்து இரு பக்கங்களிலும் தள்ளி நிற்கும் மீசையும், அதற்குக் கீழே ஓயாது அசையும் வெற்றிலைக் காவி நிறப் பற்களும் உதடுகளும் ரங்கசாமிக் கங்காணியின் முகத் தோற்றத்தை நிறைவாக்குகின்றன. வீராயியின் உடலின் ஒவ்வொரு கலமும் பாசத்துடன் 'அப்பா' என்று கூவி அந்த முகத்தை நோக்கும்.

'தாயில்லாப் புள்ளே' என்று சொல்லி ரங்கசாமி, வீராயியைக் கொஞ்சிக் கொஞ்சி வளர்த்தவன். வள்ளியின் அம்மா பொட்டுக்கும், பிள்ளைக் காம்பராவின் மீனாட்சிக்கும் வேண்டிய நேரமெல்லாம் பணம் கொடுத்து 'எம் புள்ளேயைக் கொஞ்சம் கவனமாகப் பார்த்துக்குங்க' என்று வேண்டியவன்.

'எம் மகளே வளர்த்து அந்தப் பையன் மலையப்பனின் கையில் கொடுத்திட்டா என் கவலை தீர்ந்தது. அப்புறம் அவன் அவளேக் கிளி போல பார்த்துக்குவான்' என்று சொல்லுவதையும் அவள் இரகசியமாகக் கேட்டிருக்கிறாள். பிள்ளைக் காம்பராவை விட்டு வெளியேறும் வயதை வீராயி அடைந்ததும், மீனாட்சிக் கிழவியையும் அந்த ஆயா வேலையை விடும்படி வற்புறுத்தி வீராயிக்குத் துணையாகத் தனது வீட்டிலேயே அமர்த்தினான் ரங்கசாமிக் கங்காணி.

மலையப்பன் கூட ரங்கசாமி வளர்த்த பிள்ளைதான். ரங்கசாமியின் அக்கா மகன். வீராயி பிறப்பதற்கு இரண்டு வரு

டங்களுக்கு முன், மலையப்பன் ஆறு வயதுப் பையனுக இருந்தபோது, அவன் அப்பாவும் அம்மாவும் நாவலப்பிட்டிக்குப் போன பஸ் கினிகத்தேனையில் ஒரு பெரிய பள்ளத்தாக்கில் விழுந்து தீப்பிடித்து எரிந்துவிட்டது. அன்று தோட்டப் பள்ளியிலிருந்து வந்த தன் மருமகனை வருடி அழுதவாறு 'இனி நான்தான்டா உன் அப்பா' என்றுன் ரங்கசாமி.

மலையப்பனை ரங்கசாமி படிப்பித்தான். வீராயியைப் பிள்ளை மடுவத்திற்கு எடுத்துச் செல்வதும், பின்பு லயத்திற்கு அழைதது வருவதும்தான் மலையப்பன் செய்யும் வேலைகள். வேறு வேலை ஒன்றையும் தந்து அவன் படிப்பைக் குழப்பியடிக்க விரும்பவில்லை ரங்கசாமி. எழுத்துக்களை ஒவ்வொன்ருகக் கூட்டி, சொற்களுக்குப் பின் சிறிது தாமதித்து, வசனங்களின் முடிவில் நன்ருக இளைப்பாறிவிட்டு முன்னேறிப் படிக்குமளவுக்குத்தான் ரங்கசாமியின் கல்வியறிவு இருந்தது. என்ருலும் தோட்டத் தொழிலாளர் மத்தியில் அவன் ஒரு படிப்பாளி. 'தோட்டத்து மக்களுக்கு கல்வி அறிவு மிக அவசியம். நம்ம கவலைகளுக்கெல்லாம் அறியாமைதான் முக்கிய காரணம்' என்பான் ரங்கசாமி.

தொழிலாளர்களைத் தோட்டத்து உத்தியோகஸ்தர்கள் 'ஏய்' என்றும் 'டேய்' என்றும் அழைப்பதைக் கேட்டு மனம் வருந்துவான் ரங்கசாமி.

'கொஞ்சம் பேசவும் எழுதவும் தெரிஞ்சவங்க நம்மை மிருகங்கள் என்றல்லவா நெனைக்கிருங்க. சே! தோட்டத்துப் பிள்ளைகள் ஒவ்வொருவரும் கடைசி ஐந்தாம் வகுப்பு வரையாவது படிக்க வேண்டும்.' என்று யோசிப்பான். மாணிக்கமலைத் தோட்டத்தின் ஒரே ஒரு பாடசாலையில் ஐந்தாம் வகுப்புத்தான் ஆகக் கூடிய வகுப்பாதலால், எல்லாப் பிள்ளைகளுக்கும் அந்த அளவு படிப்பாவது இருந்தால் போதும்

என்று மட்டும் அவனால் சிந்திக்க முடிந்தது. அப்படிப் பல பாடசாலைகள் இருக்க வேண்டும் என்பது ரங்கசாமியின் பேரவா. அவன் இப்படி ஒன்று நினைக்க, தெய்வம் கூட அப்படியே நினைத்திருக்கலாம். ஆனால், தோட்டத்தின் நிர்வாக மூளை வேறு இரண்டு விஷயங்களையல்லவா சிந்தித்து விட்டது! அதில் ஒன்று, பேருக்கு இருக்கும் அந்தப் பாடசாலையையும் மூடிவிடுவது. இரண்டாவது, அந்தக் கொட்டிலின் ஓட்டை ஒடிசல்களைத் திருத்திவிட்டு அதைத் தோட்டத்து டிஸ் பென்சருக்கும் கண்டக்டருக்கும் மாட்டுத் தொழுவமாக உபயோகிக்கக் கொடுப்பது.

தோட்ட முதலாளிகளின் இந்த இரு திட்டங்களும் இலகுவில் நடைபெற இன்னுமொரு காரணமும் சேர்ந்து கொண்டது. அந்தப் பாடசாலையின் தனிப்பெரும் தலைமை ஆசிரியராக இருந்து, உதவி ஆசிரியராக ஒவ்வொரு வகுப் பிலும் மாறி மாறிக் கத்திவிட்டு, குமாஸ்தாவாகவும் பணி யாற்றி, வேண்டிய நேரங்களில் பியூனாகவும் ஓடி ஆடி வேலை செய்த ஒரே ஒரு ஜீவனுக்கு வாயில் ஒரு சிறு பரு தோன்றிற்று. அந்தப் பரு சரியான நேரத்தில் தோட்டத்து டிஸ்பென்ச ரிடம் ஒப்படைக்கப்பட்டது. டிஸ்பென்சர் திடசித்தத்துடன் 'கொண்டிஸ்' மருந்தை வாய் கழுவக் கொடுத்துக் கொண்டே வந்தார். ஆசிரியரின் வாய்ப் பரு பருத்துக் கட்டியாகி, குழி விழுந்து பெரிய புண்ணாகிப் பரவியது. சவரம் செய்ய நொந்த அவர் மெலிந்த முகம் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. வாய் திறவாமலே இன்னும் ஆறுமாத காலம் பாடசாலையின் எண்பது பிள்ளைகளுக்கும் கல்வி புகட்டிவிட்டு ஆசிரியர் யாழ்ப் பாணத்திற்கு மூன்றாம் வகுப்பு டிக்கெட் எடுத்தார். யாழ்ப் பாணப் பெரிய ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் கையை விரித் தார்கள். ஆப்பரேஷனோ, ரேடியம் சிகிச்சையோ செய்ய முடியாத அளவுக்கு அவர் வாயில் புற்றுநோய் பரவி விட்டதாம்!

மேலே குறிப்பிட்ட அந்தச் சின்னப்பரு ஓர் உயிரைக் குடிப்பதற்குப் பிராயச்சித்தமாக இன்னொரு சீவனின் வாழ்க்கையை நல்ல வழியில் திருப்பியது. தோட்டத்துப் பாடசாலை மூடப்படவே, ரங்கசாமி மலையப்பனை ஹட்டனில் சென். ஜோன் பொஸ்கோஸ் கல்லூரியில் சேர்த்தான். அங்கு ஆறும் வகுப்புவரை படித்த பின்புதான் மலையப்பன் தோட்ட வேலையில் ஈடுபட்டான். தான் நினைத்திருந்ததிலும் பார்க்கத் தன் மருமகன் ஒரு வகுப்பு அதிகம் படித்ததில் ரங்கசாமிக்குப் பூரண திருப்தி.

'கத்துக்கிறதுக்கு அளவு ஏது? படிக்கப் படிக்க வாழ்வு உயருது. கெட்ட பழக்கங்களை ஒருவன் வெறுத்து விட்டுடுறான்.' ரங்கசாமி இப்படிக் கூறுவான்.

மருந்தாகக் கூட மதுவை அருந்த மறுத்தவன் வீராயியின் அப்பா. ஆனால் இப்போது தினமும் குடித்துவிட்டு இரவில் லயத்துக்கு வருகிறான். தள்ளாடியவாறு வந்து எல்லோரையும் ஏசுகிறான். வீராயியிக்கு இதை நினைக்க நெஞ்சு வெடிப்பது போல் இருந்தது.

பச்சைச் செடியோடு செடியாக நின்ற வீராயியிக்கு வேதனை தாங்க முடியவில்லை. அவள் இரு கண்களையும் மறைத்த கண்ணீர்த் திரைகள் சுருங்கி, குவிந்து, உருண்டு இரு முத்துக்களாகக் கன்னங்களில் உருளுகின்றன.

அதைப் பார்த்து மலையப்பனும் வேதனைப்பட்டான். தனது கோட்டுப் பையிலிருந்து மருக்கொழுந்து வாசனை வீசிய ஒரு கைக்குட்டையை எடுத்து உதறி அவளின் கண்ணீர் முத்துக்களைத் துடைத்து ஒற்றினான்.

"வீராயி! மாமாவை யாரோ வேணுமின்னு கெடுக்கிறாங்க. திட்டம்போட்டு அவருக்குக் குடிக்கப் பழக்கியிருக்கிறாங்க." என்றான் மலையப்பன்.

வீராயியினால் பேச முடியவில்லை. அவனுடைய முகத்தையும், மப்ளரையும், கோட்டையும் பார்த்துக் கொண்டே நின்றாள்.

"மாமாவுக்குக் குடிக்கக் குடுக்கிறவங்களைக் கண்டு பிடிச்சு நல்ல பாடம் படிப்பிக்காமல் விடுவதில்லை." என்று உறுதியுடன் கூறினான் மலையப்பன்.

மலையப்பனின் கோட்டுப் பையிலிருந்த நீண்ட கடித உறைகளை எடுத்துப் பார்க்கிறாள் வீராயி. அவளுக்கு வாசிக்கத் தெரியாது.

"மச்சான்! இது உங்க சங்கத்துக் கடிதம் தானே?"

"ஆமா"

"கண்டியிலிருந்து வந்ததோ?"

"இல்லை. கொழும்பிலிருந்து போட்டிருக்கிறாங்க"

"ஓ! உங்க சங்கத்தின் பெரியதலைவர் அனுப்பியிருக்கிறாரோ?"

மலையப்பன் சிரித்தான். வீராயி அவனைச் 'சின்னத் தலைவன்' என்று சிலவேளைகளில் அழைப்பது அவன் ஞாபகத்திற்கு வந்தது.

"ஏன் சிரிக்கிறீங்க?" வெடுக்கென்று கேட்டாள் அவள்.

மலையப்பன் அவள் கண்களைப் பார்த்தான்.

"புள்ளே, நீ ஏன் மறுபடியும் அழ ஆரம்பிச்சிட்டே?" என்று கேட்டான்.

அவள் மலையப்பனின் கைகள் இரண்டையும் தனது கைகளில் ஏந்தினாள். தனது குளிர்ந்த முகத்தை அதில் சிறிது நேரம் புதைத்து விட்டுக் கெஞ்சிக் கேட்டாள்:

"மச்சான், நம்ம கலியாணம் முடியும் வரையாவது நீங்க இந்தச் சங்கத்து வேலைகளைக் கைவிடமாட்டீங்களா?"

மலையப்பன் சிறிது தாமதித்துவிட்டு நிதானமாகப் பதில் சொன்னான் :

"வீராயி! எனக்கு நீ ஒரு கண்ணானா, நம்ம சங்கம் அடுத்த கண்ணு. அதை மாத்திரம் எந்தக் காலமும் நீ மறந்திடக் கூடாது."

வீராயி தன் கண்களைத் துடைத்துக்கொண்டு மேலும் கேட்டாள் :

"நீங்க, எங்கப்பாவின் சங்கத்துக்கு எதிராக வேலைகள் செய்கிறீங்க என்று சொல்லுறாங்க. நெசந்தானா மச்சான்?"

மலையப்பன் தனது கோட்டுப் பைகளுக்குள் கைகளைப் புதைத்து, தரையைப் பார்த்தபடி நின்றான்.

"மச்சான்! என்ன யோசிக்கிறீங்க? நான் கேட்டது நெசந்தானா?" வீராயி அவசரத்துடன் சிறிது உரத்து வினவினாள்.

அந்த நேரத்தில் 'எய் புள்ளைங்களா, நெறுவைக்குப் போகலையா? மடுவத்திலே இருந்து விசில் கேட்கலையா?' என்று ஒரு குரல் கேட்டது. சின்னக் கணக்கப்பிள்ளை வந்து கொண்டிருந்தான். தூரத்தில் ஒரு செடியோடு நின்ற வள்ளியம்மாள் கொழுந்து நிறுக்கும் மடுவத்தை நோக்கிக் கூடையோடு ஓடினாள்.

"வீராயி, நீயும் போ" என்றான் மலையப்பன். அவள் வள்ளி போன வழியே விரைந்து நடந்தாள்.

தரையில் கிடந்த சொரண்டியை எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு மலையப்பன் வேறு பக்கமாகச் சென்றான்.

# 3

மலையப்பன் தனது லயத்தின் காம்பராவில் ஒரு படங்குக் கட்டிலில் படுத்திருந்தான். மடிக்கப்பட்ட தனது இடது காலின் முழங்காலுக்கு மேல், வலது கணுக் காலைப் போட்டு இலேசாக ஆட்டிக் கொண்டிருந்தான். அவனது கைகளில் பிரபல மலையாள எழுத்தாளர் தகழி சிவசங்கரப்பிள்ளையின் 'செம்பீன்' என்ற நாவலின் தமிழ் மொழிபெயர்ப்புப் புத்தகம் ஒன்று இருந்தது. அவனுக்கு அந்த நாவல் மிகவும் பிடித்திருந்தது.

அவன் தலைமாட்டில் இருந்த சிறு விளக்கின் இலாவண்யமான சிவப்புச் சுடர் தனது உடலை வளைத்து வளைத்து, குனிந்து நிமிர்ந்து களி நடம் புரிந்தது. வெளியே, இரவுக் கடலில் பாதி உலகு அமிழ்ந்திருந்தது. பனி அலைகள் மலையப்பனின் காம்பராவுக்குள் நுழைந்தன.

அவன் அந்த நாவலை மிகக் கவனமாகப் படித்துக் கொண்டிருந்தான். அது கேரளத்துக் கடற்கரையில் வாழும் மீனவர் சமூகத்துக் கதை. அந்த மீனவர்களின் கொடிய வறுமை, அயரா உழைப்பு, எளிமை ஆகியவற்றுடன் தனது மக்களின் வாழ்க்கையை ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தான். எவ்வளவு ஒற்றுமை! மீனவர்கள் கடல் தாயின் குழந்தைகள். மலையப்பனின் மலை நாட்டவர்கள் கடலைக் கண்ணாலும் பார்க்காதவர்கள்! ஆனால் இரு சமூகத்தினரும் தொழிலாளிகள்.

அதனாலே தான் இந்த நெருங்கிய ஒற்றுமையோ? அவர்கள் வாழ்க்கை, அவர்கள் பிரச்சினைகள், அவர்கள் இதய ஆசைகள் எல்லாவற்றிலும் நெருங்கிய தொடர்பு!

'செம்மீன்' என்ற காதல் நாவலின் கதாநாயகி கறுத்தம்மா. அவளைப் பரீக்குட்டி காதலிக்கிறான். அவன் ஒரு முஸ்லிம் வாலிபன். சாதி என்ற கடல் முன், காதல் என்ற கண்ணீர்த் துளி எங்கே?

கன்னி கறுத்தம்மா கலங்கிய கண்களுடன் காதலன் பரீக்குட்டிக்குக் கூறுகிறாள்:

"முதலாளி, நீங்க என்னை அடியோடு மறந்திடணும். அதுதான் எனக்கும் நல்லது; உங்களுக்கும் நல்லது.

பரீக்குட்டி மௌனமாக இருந்தான். கறுத்தம்மாவின் வாயிலிருந்து அவள் நினைவின்றிச் சில வார்த்தைகள் வெளியே நழுவி விழுந்தன.

"முதலாளி! நான் எந்நைக்கும் உங்களெ நெனச்சுக் கிட்டிருப்பேன்."

இதைப் படித்ததும் மலையப்பன் புத்தகத்தை மூடிவிட்டான். அவன் கண்கள் பனித்திருந்தன. கட்டிலில் இருந்து எழுந்து காம்பராவில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தான். வாசலுக்கு வந்து இருட்டின் ஒளித்து மறைக்கும் மாயா ஜாலத்தைப் பார்க்கிறான். வீராயி அன்று கேட்ட அந்தக் கேள்வி அவன் நெஞ்சிலே, பழத்தில் புழுவைப்போல் மீண்டும் நெளிகிறது!

'மச்சான்! நீங்க அப்பாவின் சங்கத்துக்கு எதிராக வேலைகள் செய்கிறீங்களாமே! நெசந்தானா?'

அந்தத் தோட்டத்தில் அவள் அப்பாவுக்கு ஒரு சங்கம். அவனுக்கு ஒரு சங்கமா? அவன் தன் மாமாவுக்கு எதிராக வேலைகள் செய்வதா?

தோட்டத்தில் ஒரே ஒரு சங்கந்தான் இதுவரை இருந்தது. அது மாணிக்கமலைத் தோட்டத்திலுள்ள அத்தனை தொழிலாளரின் இதயக் குரல்களையும் ஒன்ருக எதிரொலித்தது. ஆனல், மிகச் சமீபத்தில் ஒரு சில சுயநலக்காரர் ஒரு புதிய சங்கத்தை அமைத்துக்கொண்டனர்.

'வீராயி! தொழிலாளர் நன்மையை மனசிலே கருதாத இந்தப் புதிய சங்கத்திலே மாமாவையும் இழுத்துக் கொண்டாங்க சில சூழ்ச்சிக்காரங்க.'

வீராயி கேட்ட கேள்விக்கு மலையப்பன் இப்படி உடனே பதிலளித்திருக்கவேண்டும்.

அதுதானே உண்மை!

இந்த உண்மையை, அவள் மனம் புண்படாதவாறு எப்படிச் சொல்வது என்று மலையப்பன் அன்று யோசனை செய்தான். அவள் கேள்வி கேட்டதும் சிறிது மௌனமாக நின்ருன்.

அவன் நிலைமையை விளக்குவதற்கிடையில் கணக்கப்பிள்ளை வந்து விட்டார். அவள் சென்று விட்டாள்.

அதன் பின்பு ஒரு வாரமாக மலையப்பன் வீராயியைச் சந்திக்கவில்லை.

அவன் தனது சங்கத்தின் மகாநாடு வைக்கும் ஆரம்ப வேலைகள் செய்வதற்காக நாவலப்பிட்டிக்குப் போயிருந்தான்: இன்று அந்தியில் தான் தோட்டத்திற்குத் திரும்பினன்.

அவன் உள் மனம் அவனிடம் ஒரு கேள்வி கேட்டது.

'மலையப்பா! வீராயியின் அந்தக் கேள்விக்கு நீ இதுவரையும் பதில் தராமல் இருப்பது உனக்குச் சரியாகத்தோன்றுகிறதா?''

பார்க்கப் போனல் அது அவனுக்கு எவ்வளவு முக்கியமான கேள்வி? அழகு வீராயியின் காதல் வாழ்க்கை அந்தப் பிரச்சினையின் சுகமான முடிவிலல்லவா தங்கியுள்ளது!

மலையப்பன் அவளின் சொந்த மச்சினன் தான். ஆனால் தோட்டத்திலே பகிரங்கமாக எதிர்த்து, சங்க வேலைகளைச் செய்யும் ஒருவனுக்குப் பெண் கொடுக்க எந்தத் தகப்பனாவது விரும்புவாரா?

'மாமா, தனிப்பட்ட முறையில் நான் உங்களை எதிர்க்க வில்லை. எதிர்க்கவும் மாட்டேன். நீங்கள் என்னை வளர்த்தவர். ஆனால்......'

மலையப்பன் தனது காம்பராவில் யோசித்துக்கொண்டு நின்றான்.

அவனுக்கும் அது உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைதான். மாமாவுக்கு எல்லாவற்றையும் விவரமாக விளக்கினால் அவர் புரிந்துகொள்வார் என்று நம்பினான். இரு சங்கங்களும் ஒன்று சேரவேண்டும். தொழிலாளரின் இதயங்கள் போர்க்களமாகக் கூடாது. இதயங்களில் இரத்தம் உண்டு! அத்துடன் அவனுடைய சொந்த வாழ்க்கையின் இனிப்பும் கசப்பும் அந்த ஒற்றுமையிலல்லவா தங்கியுள்ளன?

'நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வே' என்று பாடின புதுமைக் கவிஞன் படத்தைக் கொண்ட பழைய கலண்டர் மட்டை ஒன்று அந்தக் காம்பராவின் சுவரில் தொங்கிற்று. மலையப்பன் கைகளைக் கட்டியவாறு அந்தப் படத்தின் முன் சில நிமிடங்கள் நின்றான். பாரதி பாடல்களை மலையப்பன், தான் கனவு காணும் தோட்டத் தொழிலாள வர்க்கத்தின் இதய கீதங்களாகக் கருதுவான். அவன் சென் ஜோன் பொஸ்கோவில் படித்த காலத்தில் சுகாதாரப் பேச்சுப் போட்டியில் முதற் பரிசாகப் பெற்ற பாரதி கவிதைத் தொகுதியில் உள்ள பாடல்கள் அத்தனையும் அவனுக்கு மனப்பாடம். சங்கக் கூட்டங்களிலெல்லாம் அவன் பேசும்போது, பாரதி பாடல்களைச் சரியான இடங்களில் சேர்த்துக் கொள்வான். அவன் தனது வெண்கலக் குரலில் பாடும் நேரங்களில் தோட்

டத் தொழிலாளர் மெய்ம்மறந்து நிற்பர். 'கரும்புத் தோட் டத்திலே' என்ற பாட்டை அவன் ஹரிகாம்போதியில் பாடும் போது தோட்டத்து உள்ளங்கள் அதைத் 'தேயிலைத் தோட் டத்திலே—ஆ! தேயிலைத் தோட்டத்திலே' என்று கற்பனை செய்து தங்கள் துன்பங்களை நினைத்தே குமுறுவர்.

அவை இலேசான துன்பங்களா?

அட்டைக் கடி, மாடு போல் உழைப்பு, இருட்டு லயங்கள், வறிய உணவு.........

'மலைநாட்டு மக்களின் தொல்லைகள் தீரவேண்டுமென்றால், அவர்கள் அத்தனை பேரும் ஒரே குரலில் பேசவேண்டும்.'

இது மலையப்பனின் நித்திய கனவு.

இந்தக் கனவை நனவாக்க மலையப்பன் பல தோட்டங் களுக்குச் சென்று, அந்தந்தத் தோட்டத் தலைவர்களைக் கண்டு உரையாடி ஒற்றுமையை நிலைநாட்டி வந்தான். மஸ்கேலியா, பொகவந்தலாவை, சாமிமலை, லக்ஸபானு முதலிய ஊர்களி லுள்ள தோட்டச் சங்கங்கள் அவன் முயற்சியால் ஒன்றாகச் சேர்ந்துவிட்டன. அடுத்ததாக ஹட்டன், வட்டவளை, கினி கத்தேனைப் பகுதிகளுக்குப் போகத் திட்டம் போட்டிருந் தான். ஆனால் அதே நேரத்தில் டிக்கோயாவில் அவனது மாணிக்கமலைத் தோட்டத்திலே இருந்த ஒரே சங்கத்தி லிருந்து சிலர் பிரிந்து புதிய ஒரு சங்கத்தை அமைத்தனர். இந்தக் குட்டிச் சங்கம் தாய்ச் சங்கத்தைத் தனது முழு மூச்சுடன் எதிர்த்தது; பரிகாசம் செய்தது. புதிய சங்கத்தினர் தோட்டப் பெரியதுரை, சின்னத்துரை, கண்டக்டர், டிஸ்பென்ஸர் முதலியோருக்குப் 'பந்தம்' பிடிப்பவர்கள். அவர்கள் சங்கத்தில் அவன் மாமா ஓர் அங்கத்தவர்! நினைக்க ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

மலையப்பனின் மேசை மேல் இருந்த சிறு மணிக்கூடு நேரம் எட்டு என்று காட்டியது. இளம் இரவு. குளிரும், இருளும்,

மழையுந்தாம் அந்த இரவுக்கு வயோதிபக் கோலத்தைத் தந்தன.

மலையப்பனின் குளிர்ந்த உதடுகள், தாடைகள் படபடத்தன. 'மலைக்குளிர் பொல்லாததுதான். ஆனால் அது எம்மை என்ன செய்யும்?' என்று அவை தமக்குள்ளே கேட்டுக் கொண்டனவோ? மலையும் மழையும், புகையும் பனியும், குளிரும் இருளும் அவனுக்குப் புதியனவல்லவே? அவன் அந்த இடத்திலே பிறந்தவன். அது கடல் மட்டத்திலிருந்து நாலாயிரம் அடிகளுக்கு மேல் இருந்தது.

அவன் ஒரு கம்பளிச்சட்டையை எடுத்து அணிந்து கொண்டான். கம்பளி மப்ளரால் காதுகளையும் சேர்த்துத் தலையை மூடிக் கட்டினான். படங்குக் கட்டிலில் கிடந்த புத்தகத்தைத் தனது சிறு அலமாரியில் வைத்துவிட்டு 'டோர்ச் லைட்'டைக் கையில் எடுத்தான். ஒரு முறை காம்பராவுக்குள் 'லைட்'டை அங்கு மிங்குமாக அடித்தான். கடுதாசிப் பூமாலை அணியப்பட்ட காந்தி மகாத்மாவின் படமொன்று சுவரில் தொங்கிற்று. அந்தத் திருமுகத்தில் ஒரு மந்திரப் புன்னகை! மலையப்பனின் கண்களிலும் உதடுகளிலும் ஒரு வணக்கப் புன்னகை மலர்ந்தது. அவனும் அவரைப்போல் ஒற்றுமையை நிலைநாட்டப் போகிறானல்லவா? வடி சாராயம் உற்பத்தி செய்து ஏழைகளை மேலும் வறுமைப்படுத்தும் கயவர் கும்பலில் இருந்து, அவன் மாமாவைக் காப்பாற்றப் போகிறான்.

வெளியே மழை இலேசாகத் தூறியது. மலையப்பன் தனது காம்பராவின் வாசலைக் கடந்ததும், வானம் தாறுமாறாகக் கிழிந்ததுபோல் ஒரு வெள்ளி மின்னல் தோன்றி மறைந்தது. அந்த ஒளியில், தூரத்து மலைகள் பூதங்களைப்போல் தெரிந்தன. அப்பப்பா, என்ன இடி! பூதங்கள் மோதிக்கொண்டனவோ?

மேலும் ஒரு மின்னல். மலைகள், செடிகள், லயங்கள், ஸ்டோர் எல்லாமே தெரிந்து மறைகின்றன. கண்கள் தற்காலிகமாகக் குருடாகின்றன. சில அநாதை நாய்க்குட்டிகள் மலையப்பனின் கால்களில் தட்டுப்பட்டு 'வள்'ளென்ற முனகலுடன் கான்களுக்குள் விழுந்து புரண்டன.

லயங்களின் காம்பராக்களிலிருந்து புகையும், இரவு உணவைச் சமைக்கும் ஆரவார ஓசையும் வந்துகொண்டிருந்தன. வீராயி இருக்கும் லயத்தின் பொதுத் தண்ணீர்க் குழாய் அவள் காம்பராவுக்கும் வள்ளியின் காம்பராவுக்கும் இடையில் இருந்தது. அது பழைய சமுதாயத்தில் வாழ்ந்த விதவையைப் போலத் தனியாகச் சதா அழுது கொட்டிக் கொண்டிருந்தது. அது ஒழுகும் சலசலப்புக் கேட்டது. மலையப்பன் வெட்கப் பட்டான்; துக்கமடைந்தான்.

'சே! நம்ம தோட்டத் தொழிலாளரும் சில விஷயங்களில் காட்டுமிராண்டித் தனமாக நடந்துகொள்கிறார்கள். தண்ணீர்க் குழாய்களைக் கவனமாக உபயோகிக்கிறார்களில்லை.' மலையப்பன் இப்படிச் சிந்தித்தான்.

அவன் உள் மனத்திலிருந்து இன்னும் ஒரு கேள்வி:

'நம்ம பையன்கள் தண்ணீர்க் குழாய்களின் பாகங்களையும் லயங்களின் பொது மலகூடங்களின் கதவுகளையும் இரவிரவாகத் திருடி விற்றுவிடுகிறார்களே! இது வெட்கங்கெட்ட செயலல்லவா?'

இதற்கு 'ஆம். பெரிய வெட்கம்.' என்பதுதானே பதில்' அவர்களைத் திருத்துவதுதான் எப்படி?

இதையெல்லாம் மனத்தில் எண்ணிக்கொண்டு மலையப்பன் வீராயியின் காம்பராவின் முன் வந்து நின்றான்.

அங்கே ரங்கசாமி மாமாவின் குரல் கேட்டது. வீராயியின் குரலும் கேட்டது.

"வீராயி! நான் எல்லாம் யோசிச்சிட்டுத்தான் சொன்னேன். அந்த மலையப்பன் இனி என் கண்ணில் பட்டால் என்ன செய்வேன் பாரு........."

திடுக்கிட்டான் மலையப்பன். ஒரு நிமிடம் சிலையானான்.

அவனை வளர்த்த மாமா ரங்கசாமிப் பெரியவரா இப்படிப் பேசுவது?

"அடி வீராயி, உனக்கு அவன் யார்?" ரங்கசாமியின் கேள்வி இது.

வீராயியின் அழுகை ஓசை கேட்கிறது. அவள் பதில் அழுகைதானா?

"அப்பா! அவர் எனக்கு எல்லாம்.........எல்லாமே" என்று அவள் கூறியிருக்கக் கூடாதா?

அவள் ஒன்றும் பேசாததுதான் நன்று. மாமா குடித்திருக்கிறார். வாந்தி எடுக்கிறார்.

"ஏண்டி! அவர் தன்னைப் பெரிய வீடரன்னு நெனைச்சிட்டாரோ?" ஓர் ஏளனக் கேள்வி.

வெளியே வாண விளையாட்டுக்கள் போல் நாலா பக்கமும் சிறு மின்னல்கள். தொடர்ந்து வாண வெடிகள்.

"அப்பா! அவர் உங்க மருமகனல்லவா? மலையப்பா மலையப்பான்னு ஆசையாகக் கூப்புடுவீங்களே"

அவனுக்காகப் பரிந்து பேசும் தேன் குரல் கேட்கின்றது.

தூரத்தில் இருந்த ஒரு மலைக்குப் பின்னாலிருந்து, அங்கு அணுக்குண்டுப் பரீட்சை நடைபெற்றது போல் மின்னலின் ஒளியும் இடியின் ஒலியும் மாறி மாறி வந்தன. மலையப்பன் கண்களை மூடிக் காதுகளைப் பொத்திக்கொண்டான். வீராயி கேட்ட கேள்விக்கு ரங்கசாமி மாமா என்ன பதில் தந்தாரோ? கேட்க முடியவில்லையே! காம்பராவுக்குள்ளும் இடி இடித்ததோ!

வீராயி அழுதுகொண்டிருந்தாள். மீனாட்சிப் பாட்டி இருமும் சத்தமும் கேட்டது.

ரங்கசாமி ஏதேதோ புலம்பினான்.

'இந்த நேரத்தில் காம்பராவுக்குள் போகலாமா?'

மலையப்பன் தன்னையே கேட்டுக்கொண்டான்.

சங்கத்தின் பிளவு அவர்கள் குடும்பத்தைப் பிரிக்கின்றது. மாமாவுக்கு அவன் மேல் வெறுப்பு வளர்கிறது. அதை நினைக்க இதயத்தில் இரத்தம் உறைகிறது.

'இந்த வெறுப்பு தோட்ட விவகாரத்தில் மீண்டும் திரும்பி ஏதாவது விபரீதம் நடைபெறுமா? தோட்டத்தில் தொழிலாளர் அத்தனை பேரையும் கூறு போட்டுத் தாழ வைக்குமா?'

உள்ளத்தின் இந்தக் கேள்விகளை மலையப்பனின் உரமான உடலால் கூடச் சமாளிக்க முடியவில்லை.

பசி, சோர்வு, குளிர் வேறு.

அவன் நடுங்கினான்.

காம்பராவுக்குள் சிறிது நேரம் மௌனம் நிலவியது.

ரங்கசாமி இருமினான்; வாந்தி எடுத்தான். சாராயத்தின் குமட்டும் நெடி வெளிவந்தது. மலையப்பன் தனது காம்பராவுக்குத் திரும்பிப் போக நினைத்தான்.

வீராயியின் குரல் கேட்டது.

"என்ன அப்பா செய்கிறது?"

அவள் அவசரப்பட்டாள்.

"அப்பா, என்ட அப்பா, நெஞ்சு நோகிறதா?"

ரங்கசாமி வாந்தி எடுத்தான்.

மலையப்பன் காம்பராவின் கதவைத் திறந்துவிட்டான்.

உள்ளே நுழைந்து "மாமா" என்றான்.

"பண்டி மவனே, நீயாடா ?"

மலையப்பனுக்கு எப்படியிருக்கும்? அவன் சின்னக் குழந்தையைப் போல் அழுதான். அவன் கண்கள் சிறு கண்ணீர்ப் பைகளாகின. ரங்கசாமி நெம்பி எழுந்து தனது கையிலிருந்த பொல்லை அசுர பலத்துடனும் வேகத்துடனும் சுழற்றினான்.

"ஐயோ, என்ட மாமா!"

மலையப்பன் நினைவிழந்து துவண்டு விழுந்தான்.

"ஐயோ!"—வீராயியும் மீனாட்சிக் கிழவியும் கூச்சலிட்டனர்.

இந்தக் கூச்சலைக் கேட்டு அடுத்த காம்பராவிலிருந்து வள்ளியும் அவள் அப்பா சிதம்பரமும், அம்மா பொட்டும் ஓடி வந்தார்கள்.

# 4

மலையப்பனை வள்ளியும் சிதம்பரமும் பொட்டுவும் தங்கள் காம்பராவுக்குத் தூக்கி வந்தார்கள். தலையில் அவன் கட்டியிருந்த கம்பளி மப்ளரில் இரத்தம் கசிந்திருந்தது. காம்பராவின் விறாந்தையில் ஒரு பாய் விரித்து, அதில் மலையப்பனைக் கிடத்தினார்கள். அவனுக்கு இன்னும் சுய உணர்வு வரவில்லை.

"தலையில அடி பலம் போல. என்னங்க செய்யுது?" பொட்டு கேட்டாள்.

வள்ளி மலையப்பனின் தலைமாட்டில் இருந்து அவன் தலையில் கட்டப்பட்டிருந்த கம்பளித் துணியை அவிழ்த்துக் கொண்டிருந்தாள். சிதம்பரம் அதைக் குனிந்து பார்த்துக் கொண்டு நின்றான்.

பொட்டு கிட்ட வந்து "மலையப்பா" என்று அழைத்தாள்.

"அம்மா! கொஞ்சம் தேத்தண்ணி ஊத்திக்கிட்டு வா. அவருக்குத் தன்னினைவு வந்ததும் கொடுக்கணும்" என்றாள் வள்ளி.

"உடம்பு பூராகவும் பச்சததண்ணி போல குளுந்து போயிருக்கு" என்று அவள் தொடர்ந்து சொன்னாள்.

மலையப்பனின் நெற்றியோடு சேர்த்துத் தலையின் முன் பகுதியில் இரு அங்குலம் அளவிற்குத் தோல் வெடித்திருந்தது. அவன் சுருண்ட மயிர் இரத்தத்தில் தோய்ந்திருந்தது.

"இரத்தம் வந்து கொண்டிருக்குது. பார்த்தியா?" சிதம்பரம் கேட்டான்.

கம்பளித் துணியால் நெற்றியையும் தலையையும் இறுக்கிக் கட்டினாள் வள்ளி. அவளுடைய இதயம் வேகமாக அடித்தது. மலையப்பனின் தலை இப்போது அவள் மடியில் இருந்தது.

"அப்பா அவரின் காம்பராவுக்குப் போயி அவருடைய சிவப்புக் குருசுபோட்ட வெள்ளைப் பெட்டியை எடுத்து வாங்க. அதில மருந்தும் கட்டத் துணியும் இருக்கிறது" என்றாள் வள்ளி.

சிதம்பரம் தலையில் ஒரு படங்கைப் போட்டுக் சொண்டு வெளியேறும்போது "அவர் அந்தப் பெட்டியை மேசை மேல வச்சிருப்பார்." என்று கூறினாள்.

கொஞ்சக் காலத்துக்குமுன், மலையப்பன் அவளுக்கும் வீராயிக்கும் முதல் உதவி செய்யும் முறைகளை மிகவும் கவனமாகச் சொல்லிக் கொடுத்திருந்தான். ஆரம்பத்திலே அவர்களுக்கு அது வெறும் வேடிக்கையாகவே தோன்றிற்று.

'என்ன அண்ண! நாங்க டாக்டர்களாகப் போகிறோமா? சாகும் வரையும் கொழுந்து கிள்ளுறவங்கதானே?' இப்படி வள்ளி கேட்பாள்.

'மச்சான் இதெல்லாம் நமக்கு எதற்கு?' வீராயியும் தொடர்ந்து கேட்பாள்.

மலையப்பனுக்கு இனிமையான கோபம் வரும். ஒரு நாள் அவனுக்கு உண்மையாகவே கோபம் வந்தது. கொஞ்சம் கண்டிப்பாக அவர்களுடன் பேசினான்.

'இந்தா புள்ளைங்களா! இதெல்லாம் விளையாட்டுக் காரியமா என்ன?'

அவன் கண்டிப்பாகக் கேட்டாலும் வள்ளியும் வீராயியும் சிரிக்கத்தான் செய்தார்கள். அவனும் சிரித்தான். சிரித்து விட்டு இருவரையும் கிட்ட அழைத்துச் சொன்னான்:

'நமக்கெல்லாம் ஆபத்து எப்போ வருமோ யார் கண்டாங்க? தோட்டத்திலே முதல் உதவி செய்யத் தெரிஞ்சவங்க கொஞ்சப் பேரு இருக்கணும். ஒவ்வொரு லயததிலும் இப்படி ஒரு மருந்துப் பெட்டி வைச்சிருக்கணும். ராப்போதிலே ஏதாவது நடந்திட்டா என்ன செய்வீங்க?'

இது மிகவும் நியாயமான கேள்வியல்லவா? மலையப்பன் ஒரு நல்ல தலைவன். அப்படித்தானே கேட்பான்!

'இப்படிச் சின்ன உதவிகள் செய்யத் தெரிஞ்சிட்டா ஒரு உசிரையே நீங்க காப்பாத்துவீங்க. அந்த உசிர் அப்புறம் உங்களைச் சாகுமட்டும் மறக்குமா?' அந்த நாட்களில் மலையப்பன் இப்படியும் கேட்டான்.

இப்போது இதைப்பற்றி நினைக்க வள்ளியின் உள்ளம் கிளுகிளுத்தது. அவள் மடியில் மலையப்பன் கிடந்தான்.

சிதம்பரம் மலையப்பனின் சவரம் செய்யும் பெட்டி உட்படச் சில பெட்டிகளை ஏந்தியவாறு வந்து சேர்ந்தான்.

அவன் மழையில் நன்முக நனைந்திருந்தான்.

வள்ளி முதலுதவிப் பெட்டியை எடுத்து, அதிலிருந்த வெள்ளைத் துணிகளினால் மலையப்பனின் காயத்தை இறுக்கிக் கட்டினாள். இரத்தக்கசிவு குறைந்தது. நீலநிறப் போத்தல் ஒன்றிலிருந்த மணக்கக் கொடுக்கும் மருந்தை மூக்கிற்குக் கிட்டப் பிடித்தாள். அவனுடைய தலையைத் தனது இடது கையில் ஏந்தியவாறு அந்த மருந்துப் போத்தலை மிகப் பக்குவமாக அவனுக்கு முகரக் கொடுப்பதும் எடுப்பதுமாக இருந்தாள்.

அவன் தலையை மெல்ல அசைத்தான். காலையில் விடிவதைப் போல உணர்வு வந்துகொண்டிருந்ததோ?

பாதி நினைவு பாதி கனவு என்ற நிலை. கண்கள் திறபடவில்லை. அவன் அசைத்த கை வள்ளியின் தோளை வருடியது. அவன் புலம்பினான். "நான் உன்னை மறக்கமாட்டேன்."

சிதம்பரம் உள்ளே காம்பராவில் தனது நனைந்த உடைகளைக் கழற்றிக்கொண்டிருந்தான். பொட்டுவும் அவ்விடத்தில் இல்லை. வள்ளி தன் முகத்தை அவன் முகத்திற்குக் கிட்ட வைத்து அந்தப் புலம்பலைக் கேட்டாள்.

“நான் செத்தாலும் உன்னை மறப்பேனா ?”

அவளுக்கு ஏதோ மாதிரி இருந்தது. அவன் இருண்ட கறுப்பாக இருந்தாலும் மிக இலட்சணமாக இருந்தான்.

“தேத்தண்ணி குடிக்கிறீங்களா ?” அவள் கேட்டாள்.

“ஆம்”

மலையப்பன், கண்களை ஒரு தரம் திறந்து மூடினான். அவன் தாடையைத் தன் விரல்களால் தடவவேண்டும் போல் இருந்தது வள்ளிக்கு. அடுத்த காம்பராவிலிருக்கும் வீராயியின் விம்மல் கேட்டது.

என்ன விபரீத ஆசை! மலையப்பன் வீராயிக்கு உரியவன். அவன் ஸ்பரிசமும் அணைப்பும் வீராயிக்குத்தான் சொந்தம். அவன் பாதி அறிவில் முனகியது வீராயியை நினைத்துத்தான்.

வள்ளியின் நல்ல மனம் அவளுக்கு இடித்துச் சொல்லியது :

‘அடி வள்ளி, மலையப்பன் உனக்கு அண்ணா போல.’

மலையப்பனின் தலையை ஒரு தலையணையில் கிடத்திவிட்டுத் தேநீரைக் கரண்டி மூலம் பருக்கினாள் அவள். ஆஸ்பத்திரிகளில் அழகான தாதிமார் இலட்சணமான ஆண் நோயாளிகளுக்குத் தொண்டு செய்வார்களல்லவா ? அவர்கள் மனதில் எந்த விதமான சபல ஆசையும் இருக்கக்கூடாது.

வள்ளியும் அப்படித்தான் இருப்பாள்.

“அண்ணா ! எப்படி இருக்கிறது ?” அவள் கேட்டாள். மலையப்பன் கண்களை விழித்துப் பார்த்தான்.

“எப்படி அண்ணா ?”

"ஒன்றுமில்லை, சுகமாயிருக்கு."

மலையப்பன் மிகுதியாயிருந்த தேநீரைப் பருகினான்.

"மாமா எங்கே?" என்று கேட்டான்.

"அவர் தனது காம்பாராவில் இருக்கிறாங்க. கொஞ்சம் கூடக் குடித்திருக்கிறாங்க போல"

சிதம்பரமும் பொட்டுவும் அவன் பக்கத்தில் வந்து நின்றார்கள்.

"மலையப்பா! நீ படுத்துத் தூங்கு. கடவுள் காப்பாத்தி விட்டாரு. நாளை எல்லாம் பாத்துக்கிடலாம்." என்றான் சிதம்பரம்.

"நீங்க நடந்ததை வெளியிலே யாருக்கிட்டேயும் சொல் லிடாதீங்க." என்று வேண்டினான் மலையப்பன்.

அவன் வாய் தொடர்ந்து முணுமுணுத்தது:

"தோட்டத்திலே என் பேரால் ஒரு குழப்பமும் வரக் கூடாது."

பொட்டு சொன்னாள்: "ஆமா தம்பி, இது நம்ம விஷயம். தெரிஞ்சிக்கிட்டாக்கா அதைப் பெரிசாக்கிக் கலகம் செய்திடு வாங்க, அந்த நாசகாரப் பசங்க. தாயில்லாப் புள்ள புளைச்ச தோட்டம் இது. வரவரக் கெட்டுப் போச்சு."

"இதெல்லாம் தோட்டச் சின்னத்துரை செய்கிற வேலை" என்றான் சிதம்பரம்.

"சரி தூங்கு மலையப்பா. இதையெல்லாம் அப்புறம் பேசிக்கிடலாம்."

"சின்னத்துரைக்கு நாங்க என்ன செய்திட்டோம்? ரங்க சாமி மகள் அழகாக இருக்கக்கூடாதா?........" பொட்டு இப்படிக் கேட்டுக் கொண்டே இருந்தாள். இதற்கு யார் பதில் தருவது? யாருக்கும் முழு உண்மைகள் தெரிந்தால் தானே!

F

வள்ளி, காம்பராவின் பின்பக்கமாகச் சென்று "வீராயி வீராயோ" என்று அழைத்தாள்.

வீராயி மீனாட்சியுடன் தனது காம்பராவில் படுத்திருந் தாள். அவளுக்கு நித்திரை வரவில்லை. வள்ளியின் அழைப் பைக் கேட்டதும் எழுந்து வந்து யன்னல் வழியாகப் பார்த்தாள்.

அவள் கையிலே சிறு விளக்கு ஒன்று இருந்தது. அழுது அழுது அவள் முகம் வீங்கியிருந்தது.

"வீராயி, நீ யோசிக்காதே. அவர் கண்ணை முழிச்சுப் பார்த்தார். பேசினார்." என்று சொன்னாள் வள்ளி.

வீராயி அழுதுகொண்டு நின்றாள். வள்ளி தனது கண் களையும் துடைத்துவிட்டு மீண்டும் சொன்னாள்:

"நான் அவர் சொல்லித் தந்த மாதிரி அந்த மருந்தெல் லாம் போட்டு வெள்ளைத் துணியால் காயத்துக்குக் கட்டுப் போட்டிருக்கிறேன்."

வீராயிக்கு உடனே வள்ளியின் காம்பராவுக்குப் போக வேண்டும் போல் இருந்தது. ஆனால், அப்பா ரங்கசாமிக் கங் காணி இன்னும் தூங்கவில்லை. அவர் முனகலும் இருமலும் கேட்டன. மேலும் விபரீதம் நடப்பதா?

வீராயி கேட்டாள்:

"இரத்தம் ரொம்பப் போச்சா? அடி பலமா?"

"வீராயி நீ பயப்படாதே. அவர் சொல்லித் தந்தபடி நான் செஞ்சிருக்கேன்."

"வள்ளி! அவர் என்ன பேசினாரு?"

வள்ளி உடனே பதிலளிக்கவில்லை. ஒரு நிமிடத்தின் பின் சொன்னாள்:

"பாதி மயக்கத்திலே உன்னை நெனைச்சுக்கொண்டு 'நான் உன்னை மறக்கமாட்டேன்'னு சொன்னாரு"

"அப்படியா சொன்னார்?" வீராயி வெடுக்கென்று கேட்டாள்.

"ஆமா"

வள்ளி யன்னலின் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு நின்றாள். அவளுடைய மார்புப் பாகத்தைப் பார்த்தாள் வீராயி.

"இதென்னடி உன் சட்டையில் இரத்தம்?"

வள்ளி அப்போதுதான் குனிந்து தனது மார்பைப் பார்த்தாள்.

அவளுடைய சட்டை குங்கும நிறமாக இருந்தது. ஏதாவது சொல்லவேண்டுமே? அவளுக்கு வெட்கமாக இருந்தது.

அந்த நேரத்தில் பொட்டு அங்கே வந்தாள்.

"வள்ளியம்மா! உன்னை மலையப்பன் அழைக்கிறான்" என்றாள் பொட்டு.

வள்ளி காம்பராவுக்குள் ஓடினாள். வீராயி அந்த இடத்திலேயே குந்தி இருந்தாள். வெளியே தூறிய மழைத் துளிகளை மருவி வந்த காற்று அவளைத் துன்புறுத்தியது.

'அவர் வள்ளியைக் கூப்பிட்டாரே எதற்கு?'

அவருக்கு இப்போதுதான் அறிவு நன்றாக வந்திருக்க வேண்டும். வள்ளியிடம் என்னைப்பற்றி ஏதாவது கேட்டு அறிந்துகொள்ள ஆசைப்படுகிறாரோ? நான் கவலைப்படுவதை அவர் ஒருபோதும் விரும்பாதவர்.

'வீராயியைக் கவலையில்லாது இருக்கச் சொல்லு. எனக்கு அவள் மேல் துளிகூடக் கோபம் இல்லை.'—இப்படி அவர் சொல்லி அனுப்புவார். எங்கே வள்ளி வரக் காணோமே! ஓ! அவளுக்கென்ன அவசரம். அவள் அவருடன் இருக்கிறாள்.

மலையப்பன் அவர்களுக்கு முதல் உதவி முறைகளைக் கற்பித்த நாட்களில் கூறியது வீராயியின் ஞாபகத்திற்கு வந்தது.

'உங்க சீவிய காலத்திலே உங்க கைகளினாலேயே ஒரு உசிரைக் காப்பாற்றும் நல்ல பணியைச் செய்திட்டா, அந்தச் சந்தோஷத்திற்கு நிகராக வேறு எதும் இருக்குமா?'

மலையப்பனுக்கு இப்போது, வள்ளி தன் கைகளினாலேயே பணி செய்கிறாள். அவள் அதிர்ஷ்டசாலி. அதை நாம் சொல்லவேண்டுமா? அவளுக்கு அம்மா இருக்கிறாள். அம்மா இல்லாத குறை வீராயிக்கு இவ்வளவுகாலமும் தெரியவில்லை. அம்மா போல இருந்த அப்பா இப்போது குடித்து வெறித்து...

வீராயி குந்தி இருந்தபடியே அழுதாள். பக்கத்திலிருந்த விளக்கும் துடிததுவிட்டு அணைந்தது.

அவள் காம்பராவில் இருக்கவேண்டிய மலையப்பன் வள்ளியின் பக்கத்தில் இருக்கிறார்.

'அவள் அவருக்கு எவ்வளவு அண்மையில் இருக்கிறாளோ?'

இல்லை, அவள் அவரோடு இருக்கமாட்டாள். வேலைக்காரியைப்போல் அவருக்கு வேண்டிய வேலைகள் மட்டும் செய்து கொண்டிருப்பாள். அந்தக் காம்பராவில் அவரும் அவளுமா இருக்கிறார்கள்? வள்ளியும் அப்பாவும் அம்மாவும் இருக்கிறார்களே. அவர்கள் அப்பாவிகள். அவர்களை இலகுவில் ஏமாற்றிவிடலாம். அவர்களுக்கு எப்படித்தான் வள்ளி பிறந்தாளோ? அவள் எவ்வளவு புத்தியாகப் பேசுகிறாள். பேச்சிலே எவரையும் மருட்டி விடுவாள். அவருக்கு அவளுடன் பேசுவது திருப்திதரும்.

வீராயியின் உள்ளம் ஒரு கேள்வி கேட்டது:

'வீராயி! ஏன்டி இந்த மாதிரி யோசிக்கிறாய். வள்ளி உன் ஆசைச் சினேகிதியல்லவா. இது உனக்குத் தெரியாதா?''

சே! வீராயி அப்படிச் சிந்தித்தாளா? பார்க்கப் போனால் அது பெரிய தப்பு. வள்ளி நல்லவள்; நேர்மை யானவள். அவள் எதையும் ஒளித்து மறைத்தது இல்லை. அவள் மற்றவர்களுடைய பொருளை அபகரிக்க எண்ணிய தில்லை.

வீராயி அவருடன் பேசுவதை அப்பா தடைசெய்து விட்டார். சில காலம் அவர்கள் இருவருக்குமிடையில் வள்ளி தான் தூது செல்லவேண்டும்.

'இதை யோசித்துத்தான் செய்யவேண்டும்.'

இப்படியும் வீராயியின் மனம் சொல்லியது.

"வீராயி!"

வீராயி திடுக்கிட்டு எழுந்து நின்று பார்த்தாள். அங்கே மறுபடியும் வள்ளி வந்து நின்றாள்.

"வள்ளி நீயா?"

"என்ன வீராயி! நீ தூங்கலையா?"

"இல்லை. அவர் தூங்கிட்டாரா?"

வள்ளி வீராயியின் காம்பராவுக்குள்ளே வந்தாள். அவர்கள் இருவரும் தரையில் குந்தி இருந்தனர்.

வள்ளி சொன்னாள்:

"வீராயி! அவரும் அப்பாவும் சொற்ப நேரத்திற்கு முன்னால் புறப்பட்டுவிட்டாங்க. டிக்கோயா ஆஸ்பத்திரிக்குப் போறாங்க."

"ஏன்டி, அவருக்கு ரொம்ப வருத்தமோ?" வீராயி அவசரத்துடன் கேட்டாள்.

"இல்லை வீராயி! காலையில் நல்லா விடிஞ்ச பின்னாலே போனா, எல்லாரும் அதைப்பற்றி அறிஞ்சு 'என்ன? எதற்கு?'

என்டு விசாரிப்பாங்க. அதற்காக இப்பவே போயிட்டாங்க.'' என்று சொன்னாள் வள்ளி.

சிறிது நேர தாமதத்தின் பின் வள்ளி தொடர்ந்து சொன்னாள் :

"வீராயி, இரத்தமும் பூராக நிற்கலை. தையல் போட்டால் தான் பூராக நிற்கும் என்றாரு''

"வள்ளி! அவர் உன்னை என்னத்துக்குக் கூப்புட்டார்?''

"அவருக்குத் தலை வலிச்சதாம். அவர் பெட்டியில் மருந்துக் குளுசை வச்சிருந்தாரு. அதை எடுக்கக் கூப்பிட்டாரு.''

அப்படிச் சொன்ன வள்ளி, அதைத் தொடர்ந்து ஒரு பெரிய பொய் சொன்னாள் :

"வீராயி! அவர் புறப்படும்போது உனக்குச் சொல்லச் சொன்னார்.........''

"என்ன சொன்னார்?'' அவசரப்பட்டாள் வீராயி.

"என்ன வந்தாலும் நான் வீராயியைத்தான் கலியாணம் செய்வேன். அவள் இல்லாமல் எனக்கு வாழ்க்கை இல்லை.''

வள்ளி சொன்ன பெரிய பொய் இதுதான்.

மலையப்பன் அப்படிச் சொல்லவில்லை. உண்மையாக அவன் குறிப்பாக ஒன்றுமே கூறவில்லை.

அவன் போகும்போது ".அம்மா போயிட்டு வர்ரேன்; வள்ளி நான் போயிட்டு வர்ரேன்'' என்று மட்டும் சொல்லி விடைபெற்றான். அந்த நேரத்தில் அதிகம் பேச முடியுமா? வள்ளிக்குத் தெரியும் அவன் தொடர்ந்து பேசுவதானால், அவள் சொன்னதுபோல்தான் கூறியிருப்பான். மலையப்பனுக்கு வீராயி மேலுள்ள அன்பை யாராலும் மறுக்கமுடியுமா?

'வீராயி இல்லாமல் எனக்கு வாழ்க்கை இல்லை.' மலையப்பன் இப்படிக் கூறியதாக வள்ளி கற்பனைசெய்து சொன்னாள்.

வள்ளிக்கு உளநோய் வைத்தியம் தெரிந்ததோ? இந்த வாக்கியம் வீராயிக்கு இதமாக இருந்தது. இனிமையாகவும் இருந்தது. நல்ல வள்ளியைத் தழுவவேண்டும் போல் தோன்றியது வீராயிக்கு.

சரியான நேரங்களில் கூறப்படும் சில வாக்கியங்களில் தான் எவ்வளவு சக்தி மண்டிக்கிடக்கிறது? அவை மெய்யாக இருந்தாலென்ன; கற்பனையாக இருந்தாலென்ன!

# 5

மலையப்பனும் சிதம்பரமும் அந்த இருட்டிலும் மழைத் தூறலிலும் டிக்கோயா ஆஸ்பத்திரிக்குப் போய்க்கொண் டிருந்தனர். அவர்கள் போவதை மாணிக்கமலைத் தோட்டத் தின் ஒரு முக்கிய பேர்வழியின் கண்கள் பார்த்துவிட்டன. அவை சதிசெய்யும் ஒரு மூளையின் வெளி வாசல்கள்; வஞ் சகக் கண்கள்.

தூரத்தில் இரண்டு உருவங்கள் போவதைக் கண்ட தோட்டத்து டிஸ்பென்சர் பதியின் இதயம் விரைவாகத் துடித்தது. அவருடைய சிந்திக்கும் மூளைக்கு இரத்தம் அதிகமாக வந்தது.

ஒரு சிறு மலையின் அரைவாசி உயரத்தில் டிஸ்பென்சர் பதியின் பங்களா இருந்தது. அவர் தமது படுக்கை அறை யின் யன்னல் ஓரமாக நின்று நன்றாகப் பார்த்தார்.

'கம்பளிக் கந்தைகளால் தலை தொடக்கம் முழங்கால்கள் வரை போர்த்துக்கொண்டு செல்லும் அந்த உருவங்கள் யாரோ?'

இன்னும் சாகாத இரவின் கருமை பூசப்பட்ட பனித் திரை அவருக்கும் அவர்களுக்குமிடையில் இருந்தது.

'சே! ஒன்றும் சரியாகத் தெரியுதில்லையே!'

கோடாப் போட்ட யாழ்ப்பாணச் சுருட்டு ஒன்றை உதடு களின் நடுவில் புதைத்துச் சிகரெட் லைட்டரால் பற்றவைத்தார்.

சுருட்டு, கடைவாய்க்கு நழுவியது. நாறும் எச்சில் புகை சுருட்டைச் சூழ்ந்துகொண்டு வெளிவந்தது. அவருக்கு முன்னல், சூடான புகையும் சீதளப் பனிப் புகையும் சங்கமமாகும் நாடகம் நடைபெற்றது.

அவர் உடலில் நன்றாகச் சூடேறியது. யன்னல்களின் சட்டங்களைப் பிடித்தவாறு நின்றார்.

'அவர்கள் யார்?'

மலைப்பாம்பு போல் வளைந்து, நெளிந்து கிடக்கும் தேயிலைத் தோட்டத்து முக்கிய வழியாக அந்த உருவங்கள் போய்க்கொண்டிருந்தன. மலை ஏற்றங்களில் ஏறும்போது, அவர்கள் முயற்சி செய்து மெதுவாக ஏறினர்; இறங்கும் போது தள்ளப்பட்டனர்.

பதியின் மூளை கேட்டது:

'அங்கே போகிறவர்கள் எங்களுடைய ஆட்கள்தானே? அல்லது மலையப்பனின் யூனியனைச் சேர்ந்தவர்களோ?'

தேமோஸ் பிளாஸ்கில் இருந்து ஒரு கோப்பை தேநீரை ஊற்றிக் குடித்துவிட்டுத் தனது கட்டிலில் சாய்ந்தார். விழிகளை இமைகள் போர்க்க முயன்றன. கைகள் கட்டப்பட்டிருந்தன. கால்கள் கணுக்கால் மட்டத்தில் சிக்குப்பட்டு ஆடுவதும் ஓய்வதுமாக இருந்தன.

'பார்க்கப்போனல், அந்த ராஸ்கல் மலையப்பனின் சொல்லைத்தானே தொழிலாளர் கேட்கிறார்கள்.'

நினைக்க மனம் குமுறுகிறது. எவ்வளவு ஆபத்தான விஷயம்!

மலையப்பன் சின்னப் பையனு?

சில வருடங்களுக்கு முன் மலையப்பன் சின்னப் பையனுகத்தான் இருந்தான். பதினைந்து வயது இருக்குமோ? அப்படித்தான் இருக்கும். மருந்துப் போத்தல்களைக்கொண்ட ஒரு பெட்டியைத் தலையில் சுமந்துகொண்டு பதியுடன் லயம்

லயமாகப் போவான். தலைமேல் மருந்துப் பெட்டி இருந்தால் மருத்துவம் தெரிந்தது என்ற அர்த்தமா? 'ஆம்' என்று யாராவது சொல்வார்களா? பதியின் மூளை ஒரு கேள்வி கேட்டது:

'எப்படி இருந்தாலும், என்னவாக இருந்தாலும் அன்று நாவலப்பிட்டி எஸ்டேட் சுகாதார வைத்தியர் முன் பொடிப் பயல் மலையப்பனல்லவா பாராட்டுப் பெற்றான்?'

தொடர்ந்து அடுத்த கேள்வி:

'நீர் வெட்கப்பட்டுத் தலையைத் தடவியது உண்மைதானே?'

சொல்லப்போனால் அது பதியின் குற்றம்தான். அவர் நோயாளியைத் தன் கண்களால் பார்க்கவில்லை. சே! அந்த லயத்துக்குள் மனிதன் நுழைவானா? ஆனால், 'பெரியம்மை உடனே வரவும்' என்று நாவலப்பிட்டிச் சுகாதார வைத்தியருக்குத் தந்தி கொடுத்தார். சுகாதார டாக்டர் காரில் பறந்து வந்தார். அவரைக் கண்டதும் "பெரியம்மை இல்லைத் துரை, சின்னம்மை" என்று துணிகரமாக வாயைத் திறந்தானே அந்தப் பயல் மலையப்பன்.

"இல்லை டாக்டர், டெபினிட்லி ஸ்மோல் பொக்ஸ்—பெரியம்மை" என்றார் பதி.

நோயாளியை ஒரு தரமாவது பார்க்காமல் அப்படிக் கூறினர். பொல்லாத காலம்! டாக்டர் காம்பராவுக்குள் நுழைந்தார். அவர் திரும்பி வந்தபோது பார்த்த அந்தப் பார்வை!

"மிஸ்டர் கனகசபாபதி! அந்தப் பையனுக்குத் தெரிந்தது உமக்குத் தெரியவில்லை. சின்னம்மைதான்" என்றார்.

ஆங்கிலத்திலேயே அப்படிக் கூறினர். ஆனால் மலையப்பன் அதை விளங்கிவிட்டான். அவன் ஹட்டன் கல்லூரியில்

ஆங்கிலம் பொறுக்கியிருக்கவேண்டும். படிப்பால் வரும் ஆபத்து இதுதான்.

அன்று கை கொட்டிச் சிரித்தானே! அன்று தொடக்கம் இன்றுவரை அவன் அவரை ஒரு மாதிரித்தான் பார்க்கிறான்.

'மலையப்பன் பெரிய ராஸ்கல்'

பதியின் மூளை தொடர்ந்து சிந்தித்தது.

'மலையப்ப ராஸ்கலுக்கு என்ன செய்யலாம்?'

இது என்ன கேள்வி?

'மலையப்பன் ஒரு கூலி. என்னவும் செய்யலாம்'

இதுதானே பதில்.

ஆனால் மலையப்பனுக்கு மூளை இருக்கிறது. அவனது மூளையில் அரைவாசி தோட்டச் சின்னத்துரைக்கு இருந்தால் எப்பொழுதோ மலையப்பனுக்கு ஒரு பாடம் படிப்பித்திருக்கலாம்.

'சின்னத்துரை மகாராஜன் ஒரு மகா மடையன். என்றாலும் அவனைப் பிடிச்சுத்தான் எனது மூத்த பையனுக்குத் தோட்டத்தில் ஒரு நல்ல வேலை எடுக்க வேண்டும்.'

சுருட்டைக் கைகளில் எடுத்து அதைப் பார்த்து விட்டு வீசும்போது பதி இப்படித் தனக்குள்ளே சொல்லிக்கொண்டார்.

அவரது சிந்தனைக் கயிற்றை அடிவயிற்றின் அரிப்பு அறுத்தது. கட்டிலில் இருந்து எழுந்து, மிருதுவான செருப்புக்களுக்குள் பாதங்களை நழுவவிட்டுக்கொண்டு அடுத்த அறைக்குப் போய் வந்தார்.

'சிறு நீரில் சீனி இன்று கொஞ்சம் அதிகமாக இருக்கக் கூடும். நேற்று அந்தி முழுவதும் ரங்கசாமிக் கங்காணியுடன் கதைத்துக்கொண்டு இருந்ததால் பின்னேர இன்சுலின் போட்டுக் கொள்ள மறந்து போனேன்.'

'பரவாயில்லை'—மனம் தான் சமாதானமும் செய்தது.

'இன்று இன்சுலின் அதிகமாக ஏற்றினால் சிறுநீரில் சீனி குறையும்'

ஒற்றைக் கண் ரங்கசாமியை ஒரு வழிக்குக் கொண்டுவர இவ்வளவு பாடுபட்டுவிட்டு இந்த நேரத்தில் குழப்பியடிக்கலாமா? நேற்று ரங்கசாமி இங்கிருந்து போகும்போது நல்ல 'கட்' டாக இருந்தான்.

'இரவு ஏதாவது நடந்திருக்குமோ ?'

பதி மறுபடியும் யன்னலின் அருகே வந்து தோட்டத்தைப் பார்த்தார்.

பனிவலையில் அந்தப் பச்சைத் தோட்டம் சிக்கியிருந்தது. செடிகள், மரங்கள், மலைகள் எங்கும் வெண்மை கலந்த பச்சைக் குழம்பு பூசப்பட்டிருந்தது. அந்த வர்ணக் குழம்பு பனிப் பெட்டிக்குள்ளிருந்து எடுக்கப்பட்டதோ ? பதி தனது காதுகளை ஒரு மப்ளரால் மூடிக் கட்டிக்கொண்டார்.

சிறிது நேரத்தில், தூரத்து மலைகளின் மேல் ஓரங்கள் பாதரசம் பூசப்பட்டவை போல் தகதக என்று மினுங்கின. ஓர் இடத்தில் மலைமேல் தவழ்ந்த ஒரு முகிற் கூட்டம் வெள்ளி மேகமாயிற்று. நொடிப் பொழுதில் சில இரகசிய மாற்றங்கள் நடைபெற்றன. மேகத்திலிருந்து மலைகளுக்கிடையில் குருதி வெள்ளம் பாய்ந்தது. வெள்ளித் தகடெல்லாம் குங்குமச் சிவப்பு, இரத்தச் சிவப்பு, நெருப்புச் சிவப்பு மயம். அதைத் தொடர்ந்து ஓர் அலங்காரமான பிரசவம். பிரசவமான சூரியனை ஒரு முகில் வாங்கிற்று. அந்த முகில் கைவிடப் பக்கத்திலிருந்த ஒரு முகில் ஏந்தியது. சூரியன் மேலே மேலே தள்ளப்பட்டான். கால்வாசியாகவும் அரைவாசியாகவுந் தான் சூரியன் நமக்குக் காட்சி தந்தான். அவனுடைய வெள்ளிக் கதிர்கள் பனித்திரையில் தொட்டம் தொட்டமாகக்

கண்ணறைகளை விழச் செய்தன. பனித்திரை துண்டு துண் டாகக் கிழிந்து, தேயிலைச் செடிகள், சவுக்கு மரங்கள் முதலிய வற்றின் மீது படிந்தது. அவற்றின் இலைகளில் பனிநீர் முத்துக்கள் சின்னஞ்சிறு சூரியன் குஞ்சுகளாக நடித்துவிட்டு மறைந்தன.

தனது மலைப் பங்களாவிலிருந்து பார்க்கும் பதிக்கு நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் விரைந்து தங்கள் வேலை யிடங்களுக்குப் போவது தெரிந்தது. பதியின் பங்களா இருந்த மலையின் அடிவாரப் பாதையிலும் சில தொழிலாளப் பெண்கள் கூடைகளை ஏந்தி வெற்றிலையைக் குதப்பிக்கொண்டு சென்றனர். பதி மேலே நின்று பார்க்கிறார் என்று தெரிந்ததும் அவர்களின் கால்கள் விரைந்து வேலை செய்தன. கீழே பார்த்த வாறு கூனிக்கொண்டு ஓடினர். மெல்லிய சிரிப்பு!

சிரித்தது அவர்களா? வளையல்களா?

அந்த வழியால் காத்தான் வந்துகொண்டிருந்தான். எறிந்த பந்தை வாயில் தூக்கி ஓடிவரும் தனது சீமை நாயைப் பார்ப்பது போல் ஆவல் கலந்த பெருமையுடன் அவனைப் பார்த்தார் பதி. அவருடைய பங்களாவிற்கு ஏறும் மலைப் படிகளில் காலெடுத்து வைக்கும்போதே தலையில் கட்டியிருந்த துண்டைக் கழற்றினன், காத்தான். சிவனொளிபாத மலையில் ஏறும் பயபக்தியுடன் ஒவ்வொரு படியாக நிதானமாகக் கால் எடுத்து வைத்தான்.

"சலாமுங்க"

காத்தான் பதியின்முன் வளைந்து கைகட்டி நின்றான்.

"என்ன காத்தான்! உனக்கு இந்தப் பக்கமாகவா வேலை போட்டிருக்கிறாங்க?"—பதி கேட்டார்.

"இல்லிங்க தொரெ. இன்னிக்கு ஸ்டோர் பக்க ரோட்டு வேலை" என்றான், காத்தான்.

தோட்டத்தின் ஸ்டோர் வேறு ஒரு மலையில் இருந்தது. அங்கே போவதற்குப் பதிலாகக் காத்தான் பதியின் பங்களாவிற்கு வந்திருக்கிறான். அது நல்லதுதானே!

பதி அவனுடைய முகத்தைப் பார்த்தார்.

"என்னங்க தொரே! நேத்து இரா லயத்திலே பெரிய கொழப்பமா போயிட்டுதுங்க" என்றான் காத்தான்.

'குழப்பமா? எங்கே? அடிபிடியோ?.........' இப்படித்தானே பதி கேட்டிருக்கவேண்டும். ஆனால் அவர் ஒன்றுமே கேட்கவில்லை. அவர் புதிய சுருட்டு ஒன்றை இரசித்துக் கொண்டிருந்தார். அவர் கேள்வி கேட்கு மட்டும் பார்த்துக் கொண்டிருக்க, காத்தானுக்குத்தான் வேறு வேலை இருக்கிறதா?

"லயத்திலே ஒருத்தனை ஒருத்தன் அடிச்சுக்கிட்டாங்க." காத்தான் இப்படிச் சொன்னான்.

புதினத்திற்கு இது நல்ல தலைப்புத்தானே? காத்தான் மேலும் கூறினான்:

"அந்தக் கொழுத்த பயல் மலையப்பனும் அவன் மாமன் ரெங்கசாமிக் கங்காணியும் ஒருத்தனை ஒருத்தன் அடிச்சிட்டானுங்க."

தோட்டத்தில் படர்ந்திருந்த பனிவலை திரண்டு கட்டியாகி அவர் தலையில் வைக்கப்பட்டது போல் குளிர்ந்தது பதிக்கு.

பதி சுருட்டு எச்சிலைச் சிரிப்போடு துப்பினார். காத்தான் தன்னைச் சொறிந்துவிட்டுச் சொன்னான்:

"மலையப்பனை டிக்கோயா ஆஸ்பத்திரிக்கு சிதம்பரம் கூட்டிக்கிட்டுப் போட்டானுங்க. குருட்டுப் பய ரெங்கசாமி இன்னிக்கு வேலைக்குப் போகலை. அவனோட அந்தப் பொண்ணு வீராயி அழுதுகொண்டே இருக்குங்க."

பதி கேட்டார்:

"என்ன காத்தான் நீ இதையெல்லாம் பார்த்தாயா?"

"பார்த்து என்னங்க. லயத்திலே எல்லாம் பேசிக்கிடுறாங்க. தண்ணிப் பீலியிலே கதைச்சாங்க."

"வீராயிக்கு ஏதாவது அடிகிடி விழுந்ததா?"

"அவளுக்கு யாருங்க அடிக்கப் போறான்? அவ செஞ்சால் மலையப்பனைத்தான் கலியாணம் செஞ்சிடுவன்னு திரியிறா."

இதைக் கேட்டதும் பதிக்குக் கோபம் வந்தது.

அவர் சொன்னார்:

"அந்தக் குட்டியை வெட்டிப் புதைக்க வேணுமடா."

"ஆமாங்க" என்றான் காத்தான்.

பதி கேட்டார்:

"காத்தான்! ஒரு கூலிக்காரப் பெட்டைக்கு இப்படி ஒரு அதிர்ஷ்டம் வரும்போது அதைக் காலால் தள்ளலாமா?"

காத்தான் சிரித்தான்.

"ஏண்டா சிரிக்கிறாய்?"—கேட்டார் பதி.

"தோட்டச் சின்னத்துரையின்டை பங்களாவிலே அவள் இருக்கப்போறாள்."

"எனக்கு எல்லாம் தெரியுமுங்க. அவள் அதற்கு மாட்டா என்டா, மலையப்பனைக் கட்டிக்கிட்டுப் பிச்சைதான் எடுப்பா" என்றான் காத்தான்.

"நான் உயிரோடு இருக்குமட்டும் அது நடக்காது." என்றார் பதி.

அந்த நேரத்தில் ஹோன் சத்தம் கேட்டது. தோட்டச் சின்னத்துரை மகாராஜன் தோட்டத்து ஜீப்பில் வந்திருந்தார். சுருட்டை வீசிவிட்டு பங்களாவின் மலைப்படிகளில் இறங்கி ரோட்டிற்கு வந்தார் பதி. அவசரமாகக் குதித்து

இறங்கியதால் அவருக்கு மூச்சுத் திணறியது. அவர்கள் இரு வரும் சிறிது நேரம் ஏதோ பேசினார்கள். மகாராஜனுடன் ஜீப் போய்விட்டது. ஜீப்பைப் பார்த்தவாறு பதி சில நிமி டங்கள் அப்படியே நின்றார்.

காத்தானும் படிகளில் இறங்கி வந்தான். "அப்போ தொரே! நான் வர்ரேனுங்க. சலாம்" என்று கூறியவாறு ஸ்டோரை நோக்கிச் சென்றான்.

பதி தனது பங்களாவிற்கு விரைந்து சென்றார். தனது கறுத்த கம்பளிக் காற்சட்டையை அணிந்து கொண்டார். உயரத்தில் ஐந்து அடிக்கு மேலில்லாத பதி, நீளக் காற் சட்டையை அணிந்ததும் சிறிது உயரமாகக் காணப்பட்டார். நீலக் கோடுகள் போடப்பட்ட சேட்டை அணிந்து அதன் கீழ் ஓரத்தை 'புஷ்கோட்' பாணியில் களிசானுக்கு மேலேயே விட்டுவிட்டார். சேட்டுக்கு மேலே நீல நிறத்தில் ஒரு கம்பளி 'ஸ்வெற்றர்'. அதன் மேலே கோட். முன்வழுக்கைத் தலையை விரல்களால் வருடித் தலையின் பின் சரிவில் இரு காதுகளுக்கு மிடையில் சுருண்டு கிடந்த மயிர்க் கற்றைகளை ஒழுங்கு செய் தார். நெற்றியில் ஒரு சத அளவில் சந்தனப் பொட்டு. இடது கண்ணின் வாக்கை மறைப்பதற்காகவோ என்னவோ, வெளியில் போகும்போது ஒரு பச்சை நிற மூக்குக் கண்ணாடி.

முருகேசு கனகசபாபதி யாழ்ப்பாணத்துத் துரை. தோட் டத்துக்கு வந்து பல வருடகாலம். முருகேசு கனகசபாபதி! அப்பப்பா, அந்தப் பெயரை ஆங்கிலப் பெரிய துரைகளால் மெல்லவும் முடியவில்லை, சொல்லவும் முடியவில்லை. அதனால் வந்த ஆரம்ப நாட்களிலேயே வெறும் 'சபாபதி' ஆனார்.

ஒரு நாள் ஒரு துரை கேட்டான்:

"மிஸ்டர் ச-பா-ப-தீ! எதிர்காலத்தில் உம்மை நான் 'மிஸ்டர் தீ' என்று கூப்பிடுகிறேன். சரிதானே?"

டிஸ்பென்சர் கெஞ்சினார்.

"சபாபதி என்றே கூப்பிடுங்கள்" என்றார். கடைசியில் இருவரும் விட்டுக் கொடுத்தனர். அவர் 'பதி'யானார்.

கனகசபாபதி, பதியான காரணம் எப்படி இருந்தாலும் நமக்கென்ன ?

பதி அவருக்குப் பொருத்தமான பெயர்தான். மலையப் பனின் வாழ்க்கையைக் கவிதையாகத் தீட்ட விரும்பும் நாளைய கவிஞனுக்கு, 'பதி' என்ற பெயர் 'சதி'யுடன் எதுகை மோனையில் ஒத்து உதவி செய்யுமல்லவா ?

ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேகம் என்பதைக் கேள்வியுற் றதும், இராமாயண காலக் கூனி கைகேகியிடம் சென்றதைப் போன்று, எங்கேயோ அவதியுடன் சென்றார் ஸ்ரீமான் பதி.

அவர் சென்று சில மணி நேரத்தில், ஹட்டனில் இருந்து வந்த இரு பொலீஸ்காரர் ரங்கசாமியை அவனது காம்பரா வில் வைத்துக் கைது செய்து அழைத்துச் சென்றனர்.

# 6

டிக்கோயா அரசினர் ஆஸ்பத்திரியில் ஆண்கள் சத்திர சிகிச்சை வார்ட். அங்கே ஆரும் இலக்கக் கட்டிலில் மலையப்பன் படுத்திருந்தான். சுவரில் தொங்கும் நோய் விவர அட்டை அவனது தேக உஷ்ண நிலை சாதாரண அளவென்றே காட்டியது. கட்டிலில் மாட்டப்பட்ட 'டிக்கெட்'டில் சில குறிப்புக்கள் இருந்தன. அதில் 'நோயாளி, தான் குழாயடியில் வழுக்கி விழுந்ததால் தலையில் காயம் ஏற்பட்டது என்று கூறுகிறான்' என்று எழுதப்பட்டிருந்தது.

மலையப்பனின் காயத்திலிருந்து கசிந்த இரத்தத்தைக் கட்டுப்படுத்த, ஐந்து இழைகள் போட்டு 'பன்டேஜ்' பண்ணியிருந்தார்கள். அவன் நாலு ஐந்து நாட்கள் ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டுமாம்.

மருந்துகளைக் கொண்ட ஒரு தள்ளு வண்டியைத் தள்ளி வந்தாள் நர்ஸ். பெனிசிலினை அளந்து ஊசி மூலம் மலையப்பனின் நன்கு விளைந்திருந்த பக்கப் புயத் தசையில் போட்டாள். அவன் முகத்தை அவள் நன்ருகப் பார்த்தாள். இரு வைட்டமின் 'சி' குளிகைகளும் ஒரு சிறு கிளாசில் நீரும் அவனுக்குக் கொடுக்கப்பட்டன.

"நீங்க, மலேயப்பனு?" என்று கேட்டாள் நர்ஸ்.

"ஆமாங்க."

நர்ஸ் அவன் கட்டில் 'டிக்கெட்'டை இன்னும் ஒரு முறை பார்த்தாள்.

'மலையப்பன்—தோட்டக் கூலி' என்றுதான் அதில் எழுதப்பட்டிருந்தது.

நர்ஸ் டிக்கெட்டில் ஏதோ குறித்தாள். ஏன் இவ்வளவு நேரம்?

மலையப்பன் ஒலிம்பிக் ஓட்டப் பந்தய வீரனைப்போலப் படுத்திருந்தான். அவனுடைய கறுத்த தோல், உறுப்புக்களைச் சுற்றி இறுக்கிக் கட்டப்பட்டது போல் மினுமினுத்தது. 'பன்டேஜ்' கட்டப்பட்ட அகன்ற நெற்றி, கட்டவிழ்ந்த அறிவொளிக் கண்கள், உருவி விடப்பட்ட நாசி, வெற்றிலைச் சாயம் பூசிய உதடுகள் எல்லாம் ஒளித்து மறையாமல் நீயோ நானோ என்று முன்னின்றன. மேல் உதட்டோரமாக மிகக் கவனமாகச் சவரக் கத்தியால் உருவாக்கப்பட்ட கருங்கீற்று அரும்பு மீசை. மருந்து கொடுக்கும்போது நர்ஸ் இதையும் கவனித்தாள்.

அவளுக்கு வியப்பாக இருந்தது.

'தோட்டக் கூலிகளில் இவனைப் போன்றவர்களும் இருக்கிறார்களா?'

நர்ஸ் இப்படி நினைத்து இலேசாகச் சிரித்தாள்.

அந்தச் சிரிப்பின் அர்த்தம் என்ன? மலையப்பன் கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்ததால் அதற்கு அர்த்தம் தெரியாமல் போய்விட்டது. அவள் மருந்து வண்டியை ஏழாம் கட்டிலுக்குத் தள்ளினாள். பின்பு எட்டாம் கட்டில்......... அதற்கு அடுத்த கட்டில்........ அடுத்த கட்டில்.........

பெரும்பாலான கட்டில்களில் தோட்டத் தொழிலாளர்கள் தாம் படுத்திருந்தார்கள். அந்த ஆஸ்பத்திரிக்கு, அதிலும் அந்த வார்ட்டிற்கு வரும் நோயாளிகளில் தோட்டத் தொழி

ளிளரே அதிகம். எல்லாம் பட்ட மரக்கட்டைகள் போன்ற மனித உடல்கள். மெலிந்த எலும்புகள் பூட்டப்பட்ட எலும்புக் கூடுகள். அவற்றை, புகை போடப்பட்ட புகையிலையைப் போன்ற தோல் மூடி மறைக்கும். முனகலும் இருமலும் 'ஐயோ, அம்மா' என்ற புலம்பலும் அவற்றிற்கு உயிர் தரும்.

அவைதாம் இலேசான உயிர்களா? மாமனிடம் அடி பட்ட மருமகன்; மருமகனிடம் உதைபட்ட மாமன்; ஒருவரை ஒருவர் வெட்டிக் கொண்ட மச்சினன்மார்; வாடகைக் காரோடு மலைப் பள்ளத்தாக்கில் கவிழ்ந்து உயிர் தப்பிய குடும்பம்—இத்தியாதி உயிர்களும் உடல்களும்! இந்த உயிர் உடல் இணைப்புக்கள் வரும் வார்ட்டில் கூலி என்ற வர்ணனையுடன் சுமார் ஐந்து அடி ஒன்பது அங்குல உயரத்தில் கட்டுக் கோப்பான ஓர் உருவம்!

அந்த நாட்கள் தோட்டங்களில் சம்பளம் கொடுக்கும் நாட்களல்ல. ஆகவே குடித்துவிட்டு அடிபிடி காயங்களுடன் அதிகம் பேர் வரவில்லை. பழைய புண்களுக்குக் கட்டுப் போட்டபடி இருப்பவர்கள்தாம் பெரும்பாலோர். மலையப்பனுக்கு ஆஸ்பத்திரிச் சூழ்நிலை மனத்திற்கு ஓரளவு அமைதியைத் தந்தது.

அந்த வார்ட்டின் ஒரு கோடிக்குப் போய்விட்டுத் திரும்பி வந்தாள் நர்ஸ். மலையப்பனை இன்னும் ஒரு தரம் பார்த்தாள். பின்பு மருந்து வண்டியுடன் பெண்கள் வார்ட்டிற்குச் சென்றாள். மலையப்பன் கண்களை மூடிக்கொண்டே படுத்திருந்தான். கால்கள் மட்டும் அவ்வப்போது ஆடின. முகத்திலே புன் சிரிப்பின் தெளிவுகள். குழந்தைப் புன்னகை ஒன்று அவன் முகத்தில் தவழப் பழகியதோ?

'அந்த மனிசன் நல்லவனாகவும் இருக்கவேண்டும்'—நர்ஸ் தனக்குள்ளே சொல்லிக்கொண்டாள்.

'அவன் இப்போது கனவு காண்கிறானோ?'—இப்படியும் ஒரு கேள்வி.

முதல் நாளிரவு நடந்ததை மலையப்பன் நினைக்க விரும்ப வில்லை. நினைக்கத்தான் என்ன இருக்கிறது? மாமா குடித்து விட்டு வந்திருந்தார். மதி இழந்த நிலையில் ஒரு கழியைச் சுழற்றினார். அது தவறுதலாக அவன் நெற்றியில் பட்டது. அவ்வளவு தானே!

மாமா இப்போது குடிக்கிறார். இது சிந்திக்கவேண்டிய விஷயந்தான். தோட்டத்தின் லயங்களில் ஒவ்வொரு காம்பாராவிலும் குடிப்பவர் ஒருவராவது இருப்பர். இது ஒரு பொதுப்பிரச்சினை. சங்கத்தின் மகாநாட்டில் அலசி ஆராயப்பட வேண்டியது. அவன் அதை இப்போது சிந்திக்கவில்லை. அதையெல்லாம் நினைத்தால் மலையப்பனால் சிரிக்க முடியுமா?

அவன், தனது வாழ்க்கையில் தான் அநுபவித்த ஒரு சில இன்ப நிகழ்ச்சிகளை மனத்தில் வரவழைத்து ஆராய்ந்து பார்த்தான். இன்ப நிகழ்ச்சிகள்! ஆம், உடலில் இயற்கையாக விளையும் இனிய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த யாராலும் முடியுமா? அந்த உணர்ச்சிகளும் சம்பவங்களும் அவன் எழுத இருக்கும் நாவலில் இடம் பெறும்.

அவனுடைய நாவல் 'மலைக் கொழுந்து' காதல் நவீனமாக இருக்கும்.

அவனுக்கும் ஒரு காதலி இருக்கிறாளல்லவா? ஏன், இருக்கக்கூடாதா?

சில வாரங்களுக்கு முன், ஒரு புதிய கொப்பியில் 'மலைக் கொழுந்து' என்ற தலைப்பு மட்டும் போட்டிருந்தான். ஆனால் ஒரு வரிகூட எழுதவில்லை. 'மலைக் கொழுந்து' என்ற பெயர் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. பனியிலே தோய்ந்த தேயிலைக் கொழுந்துகளைப் பார்க்கும் நேரங்களில், அவனுக்குத் தனது முத்து வீராயியின் குளிர்ந்த முகந்தான் நினைவில் இனிக்கும். வீராயி நீரோடையில் குளித்துவிட்டு ஆடி வருவாள்.

பச்சைக் கொழுந்துகளும் பனி மழையில் நீராடிக் காற்றில் ஆடி அசையும். மெல்லிய அசைவு தான். கொழுந்துப் பெண்களும் தோட்டத்தில் பிறந்தவர்கள் தானே!

மலையிலே பிறந்த தோட்டத்துத் தொழிலாளர் மலையப்பனின் கதா பாத்திரங்கள். அவர்கள் கதையை எழுத்தில் வார்க்க மலையிலே பிறந்த கொழுந்துத் தமிழ். மலையப்பனின் மனம் சொல்லிச் சிரித்தது:

'தொழிலாளரின் துன்பங்களையும் கஷ்டங்களையும் எங்க தமிழைப் போல வேறு மொழி புரிந்துகொள்ளுமா?'

என்றாலும் அவன், தனது நாவலில் தோட்டத் தொழிலாளரின் கஷ்டங்கள் எல்லாவற்றையும் அழுது கொட்ட மாட்டான். காதல் கொஞ்சின நிகழ்ச்சிகளும் அதில் இருக்கும்.

சென்ற வருடம் மலையப்பன் கண்டிக்குப் போய் வந்த போது, ஐந்து ரூபாய்க்கு ஓர் இசைக் கருவி வாங்கி வந்திருந்தான். பெயர் தெரியாத அந்த இசைக்கருவியை வாங்க வேண்டுமென்பது அவனது வெகு நாளைய ஆசை. ஹட்டன் வீதிகளில் சிங்கள வாலிபக் கூத்தாடிகள் தங்கள் கொண்டாட்ட நாட்களில் அந்த நூதனக் கருவியில் இசை மீட்டுத்தான் 'பைலா' ஆடுவார்கள். அது நீண்டு தட்டையான ஒரு சிறு பெட்டி. அதன் மேல் மூன்று நான்கு கம்பிகள் மாறுபட்ட இழுவிசைகளுடன் பூட்டப்பட்டுள்ளன. அவற்றைத் தட்டி இசை எழுப்ப ஒரு செப்புத் தகடு. அந்தக் கருவியின் உடலமைப்பு அவ்வளவுதான். அதிலிருந்து எழும் ஓசையின் சங்கீத அந்தஸ்து அதை மீட்பவரது விரல்களின் அசைவுகளிலேயே முற்றாகத் தங்கியுள்ளது.

மலையப்பன் அந்த இசைக் கருவியுடன் நேரே வீராயியின் லயத்திற்குச் சென்று அவள் காம்பராவிற்குள் நுழைந்தான். அவன் இதற்கு முன் எந்தக் கருவியிலும் இசை மீட்

டியதில்லை. இதய வீணையின் இசைக்கு ஏற்ப, தனிமையான நேரங்களில் மலைநாட்டுப் பாடல்களையும் பாரதியார் பாட்டுக் களையும் பாடியிருக்கிறான். அவ்வளவுதான்.

வீராயி காம்பராவின் ஒரு மூலையில் சமையல் செய்து கொண்டிருந்தாள். தோட்ட வேலை முடிந்த பின் இரவு உணவிற்குச் சமையல் நடந்தது. மலையப்பன் வந்ததை அவள் காணவில்லை. காம்பராவின் மற்றொரு மூலையோடு சாய்ந்து, வலது காலை மடக்கிச் சுவருடன் ஊன்றியபடி இடது காலில் நின்றான் மலையப்பன். இசைக் கருவி தோள் மேல் சரிக்கப் பட்டது. அறை முழுவதும் சமையல் புகை வியாபித்து அந்தக் காட்சி வான வெளியில் மேகங்கள் சூழ நடைபெறுவது போல ஒருவித கனவுத் தோற்றத்தைத் தந்தது.

'டிங்'—இசைக் கருவியின் முதல் ஒலி. குனிந்து அடுப்பை ஊதிக்கொண்டிருந்த வீராயி திரும்பிப் பார்த்தாள்.

காம்பராவை நிரப்பிய புகையை மேகமென்றால்......

திரும்பிப் பார்த்த அவள் முகம் முழுமதிதான்!

'ஓ! நீங்களா? நல்லாயிருக்கு'

அவள் சிரித்ததன் அர்த்தம் இதுதானே?

மலையப்பன் பாடகனானான். அவன் வலது பெருவிரலுக் கும் ஆள்காட்டி விரலுக்குமிடையில் இருந்த தகடு, இசைக் கருவியின் கம்பிகளைத் தொட்டும் தொடாமலும், அவற்றில் பட்டும் படாமலும்.........டிங்! டிங்!! டிங்!!!

வீராயி எழுந்துவிட்டாள். 'அப்பப்பா, என்ன சங்கீதம் இது? அதை அவளால் இனம் கண்டுகொள்ள முடியவில்லை. அந்த இசைக்கு விளக்கம் தருவதுபோல, மலையப்பனின் கம் பீரமான குரல் சேர்ந்தது. அப்போதுதான் வீராயியின் நெஞ்சு கிளுகிளுத்தது. தனது மார்புச் சேலையைச் சரிப்படுத்

கினாள். பனித்த கண்களையும் துடைத்துக்கொண்டாள். ஒரு வர் பிறந்த மண்ணில் தோன்றிய பாடலுக்குத்தான் என்ன அபூர்வ சக்தி!

''கூடை மேலே கூடை வைத்து
கொழுந் தெடுக்கப் போற பெண்ணே !''

வீராயி குனிந்துவிட்டாள். முகத்தில் வெட்கச் சிவப்பு ஏறியது.

மலையப்பன் தொடர்ந்து பாடினான்:

''கூடை மேலே கூடை வைத்து
கொழுந் தெடுக்கப் போற பெண்ணே—அந்தக்
கூடையை இறக்கி ஒரு
குளிர்ந்த வார்த்தை சொல்லிப்போடி''

மலையப்பன் தனது குரலைச் சிறிது மாற்றினான். பெண் குரல்போல் ஒலிக்கச் செய்து பாடினான்.

''எண்ணெய்த் தலையழகா என்னிலேயும் ஏ சிவப்பா
தண்ணிபோல் பேச்சழகா சாகிறேன்டா ஒன்னாலே''

வீராயி, காம்பராவின் பின் பக்கத்திற்கு ஓடிவிட்டாள். அங்கே மீனாட்சிப் பாட்டி படுத்திருந்தாள். பாட்டிக்குப் பக்கத்தில் குந்தி இருந்தாள் வீராயி. வெட்கத்தின் நடுக்கம் இப்போது சிறிது அடங்கியது. உரக்கச் சிரிக்க வேண்டும் போல் இருந்தது அவளுக்கு.

மலையப்பனின் பாட்டு அலை அலையாகத் தொடர்ந்து வந்தது.

''அஞ்சி விரலழகா
ஆடு தொடை இரண்டழகா
கொஞ்சுங் காலை போனவுடன்
கஞ்சிகுடி நான் மறந்தேன்''

மலையப்பன் நாவல் எழுதினால் இந்த நிகழ்ச்சி கண்டிப் பாக அதில் இடம்பெறும்.

அதன் பின்பு?

"எத்தனையோ சம்பவங்கள். அவற்றை நினைக்கக் கண்ணீர்தான் வரும். அவன் நெஞ்சை வேதனைப் பழு அமுக்கியது.

தனது சட்டைப் பையிலே தட்டுப்பட்ட ஒரு தபால் அட்டையை எடுத்துப் பார்த்தான்.

கோவில் வீதி,
நல்லூர்.

அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தம்பி மலையப்பன் அறிவது,

நீர் இங்கு வந்தபோது செய்த சத்தியத்தை மறக்கவில்லை என்று நம்புகிறோம். உமது நாவலை எப்போது எழுதி முடிப்பீர். அதை இங்கு பிரசுரித்து, வெளியீட்டு விழாக் கொண்டாடும் நன்னாளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

உமதன்புள்ள,
சி. மயில்வாகனம்.

யாழ்ப்பாணச் சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர் மயில்வாகனம் எழுதிய இந்தத் தபால் அட்டையை மீண்டும் ஒரு முறை படித்தான் மலையப்பன். அவன் சிந்தனைக் குருவி, சிறகடித்துக்கொண்டு வடக்கே யாழ்ப்பாணத்தை நோக்கிப் பறந்தது.

# 7

மலையப்பனுக்கு யாழ்ப்பாணத்துச் சிந்தனை மிகவும் இனிமையாய் இருந்தது. சென்ற ஆவணி மாதம் யாழ்ப்பாணச் சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவரது வேண்டுகோளின்படி, மலையப்பன் யாழ்ப்பாணம் சென்றிருந்தான். அவன் நல்லூரில் தலைவர் மயில்வாகனத்தின் வீட்டிற்கு வந்து சேர இரவு பத்து மணிக்கு மேலாகிவிட்டது. சாப்பாட்டை முடித்துவிட்டு இரு தலைவர்களும் தரையில் பெரிய பனை ஓலைப் பாய் விரித்து ஒன்ருகப் படுத்துவிட்டார்கள்.

அதிகாலையிலேயே மலையப்பன் கண் விழித்துவிட்டான். தெருவில் ஏராளமான ஆண்களும் பெண்களும் போகும் ஆரவாரம் கேட்டது. மலையப்பனுக்கு எழுந்து அவர்களுடன் போகவேண்டும் போல் இருந்தது.

அவன் கேட்டான் :

"என்ன அண்ணே! சுருட்டுத் தொழிலாளர் வேலைக்குப் போக ஆரம்பிச்சிட்டாங்க போலிருக்கு."

சிரிப்பதா? அழுவதா? மயில்வாகனத்திற்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

மலைநாட்டு மக்களைப் போல் குடும்பத்தில் அனைவருமே வேலைக்குப் போகும் வாய்ப்பு யாழ்ப்பாண மக்களுக்குக் கிடைத்திருக்கிறதா? மலையப்பன் எழுந்து தெருவில் போகும் மக்களைப் பார்த்தான்.

"மலையப்பா! இன்று நல்லூர்க் கந்தசாமி கோவில் தேர்த் திருவிழா. அதுதான் எல்லாரும் போகிறார்கள்" என்றான் மயில்வாகனம்.

"அப்படியா அண்ணே?"

மலையப்பன் தெருவில் நின்று பார்த்தான். மக்கள் ஓட்டமும் நடையுமாகப் போய்க்கொண்டிருந்தனர். சிலர் பாடிக்கொண்டு சென்றனர்.

மணி ஓசை கேட்டது. தெருவில் போனவர்கள் அத்தனை பேரும் 'அரோ ஹரா' என்றனர். மலையப்பன் அவர்களைப் பார்த்துக்கொண்டே நின்றான்.

"மலையப்பா! பக்தர்களுடன் நீ ஓட்டிவிட்டாய் போலிருக்கிறது" என்று கேட்டான் மயில்வாகனம்.

"அண்ணே! மக்கள் நமது செல்வம். அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தா எனக்குப் பசியே வராது."

மலையப்பன் தொடர்ந்து கேட்டான்: "அப்போ அண்ணே, கும்பிட நாங்களும் போயிட்டா என்ன?"

மயில்வாகனத்தின் வீட்டிலும் ஆரவாரம் தொடங்கி விட்டது.

கிணற்றிலே குளித்துவிட்டுத் திருநீறு சந்தனம் பூசி, மயில்வாகனத்தின் குடும்பத்தினருடன் அவர்களுள் ஒருவனாகக் கோவிலுக்குச் சென்றான் மலையப்பன்.

அவனுடைய இதயம் ஒரு கேள்வி கேட்டது:

'நீயும் உனது மலைநாட்டு மக்களும் அநாதைகளா?'

மயில்வாகனம் அவனுக்கு முன்னால் நடந்தான். அவர்களுக்குப் பின்னால் செல்வம் நிறைந்த அருச்சனைத் தட்டத்துடன், குங்கும சந்தன முகத்தினளாய், பெண்மையின் அடக்க அசைவுடன் மயில்வாகனத்தின் மனைவி சரஸ்வதி வந்துகொண்டிருந்தாள்.

'மலையப்பா, அவன் உன் அண்ணு; அவள் உன் அண்ணி. ஏன் அப்படித்தானே?'

சின்னப் பட்டுப் பாவாடை உடுதது, மலையப்பனின் தோள்களில் இருந்த பூமணி குனிந்து அவன் கண்களைப் பார்த்தாள். அவள் கேட்டாள்:

"கண்டி மாமா! நீங்க அழுகிறீங்களா?"

அவளைத் தோளில் இருந்து இறக்கிக் கைகளில் ஏந்திக் கொஞ்சினுன் மலையப்பன்.

பக்கத்திலே வந்துகொண்டிருந்த இராசதுரை கேட்டான்:

"கண்டி மாமா! பலூன் வாங்கித் தருவீங்களா?" அவனையும் அணைத்துக்கொண்டான் மலையப்பன்.

"மலையப்பா! நீ அடுத்த தடவை இங்கை வரும்போது பூமணியைப்போல ஒரு குழந்தையோடு வரவேணும்"

இப்படி ஓர் அன்புக் கட்டளை இட்டான் மயில்வாகனம்.

"ஆமண்ணே? சாமி மனசு வச்சுட்டா அடுத்த வருஷம் அந்தக் குட்டியையும் கூட்டிக்கிட்டு வர்றேன்."

கோவிலுக்குப் போகும் அந்தக் கூட்டத்தில், யாழ்ப்பாணப் பெண்மணிகளின் உடையில் தன் வீராயியை வைத்துக் கற்பனை செய்து மகிழ்ந்தான் மலையப்பன்.

மணி எட்டு அடித்தது. நல்லூரின் ஆறுமுகசாமி, வள்ளி தெய்வயானை சமேதராய், பூவும் பொன்னும் பட்டும் போட்டியுடன் அலங்கரிக்கக் கோவில் வாயிலுக்கு வந்தார். வீதிகள் நிறைய நின்ற அடியார்கள் அந்தத் திருக்காட்சியைக் கண்டதும் ஒருமித்து ஆரவாரம் செய்தனர்.

மலையப்பனும் அவர்களுடன் சேர்ந்து 'அரோஹரா' என்ருன். அவன் தோடியில் மயில்வாகனம் குடும்பத்துடன் நின்ருன். கற்பூர வாசனையும் பஜனைக் கோஷ்டிகளின் தேவாரப்

பண்ணொலியும் அவனை மெய்ம்மறக்கச் செய்து விட்டன. கற்பூரக் குவியல்களிலிருந்து எழுந்த புகை முகிற் கூட்டங்களாக, மேகத்தின் குமுறல்போல் கெட்டிமேளம் கொட்டியது. இந்தச் சூழலில் தங்களை மறந்த ஒரு கலாபமயில் கூட்டத்தை ஒப்ப, பல காவடிகளின் ஆனந்த ஆட்டம் முருகனை வரவேற்றது. பக்தர்களின் ஆரவாரம் அதிகரித்தது. 'அரோஹரா! முருகனுக்கு அரோஹரா!' பஜனைப் பாடல்களிலும் வேகம் சேர்ந்தது. பஜனைக் கூட்டங்கள்தாம் எத்தனை! அவற்றில் பாடுபவர்கள்தாம் என்ன என்ன விதம்! பக்தியில் மயங்கி நின்றனர் சிலர். பக்தியில் கண் கலங்கி உருகினர் சிலர்; சிலர் பக்தியைச் சத்தியாக்கி வெறியேற்றி ஆடினர். பூம்பந்தலின் தண்ணிழலிலே ஆறுமுகப் பெருஞ்சுடர் ஆடி அசைந்து வந்து கொண்டிருந்தது.

நாதஸ்வரத்தில் மல்லாரி. பக்தர்களின் சிந்தனைகள் ஒன்றுபட்டன. அவர்கள் உள்ளங்களிலெல்லாம் பக்திப் பால் பொங்கி நுரை தள்ளியது.

முருகனைத் தேரின் பீடத்தில் அமர்த்தினர். அடியார்கள் ஒன்று சேர்ந்து ஆர்ப்பரித்தனர். அவர்கள் இதய பீடங்களிலும் முருகன் வீற்றிருக்கிறார்—அழகனாக, குழந்தையாக, குமரனாக, கிழவனாக, வீரனாக......

அவர்கள் சிந்தனையைத் தெரிவிக்கத் தெய்வத் தமிழ்ப் பாடல்கள்!

> **வீர பராசக்தி வேல் வேல்—ஞான**
> **வித்தகர் கண்டபொற் சித்திர வேல்வேல்**
> **சூரைப் பிழிந்த சுடர்வேல்—அருட்**
> **சோதியாய் எங்கும் துலங்கும் எழில்வேல்**
>
> **வீர பராசக்தி..............**

தேர் நகர்ந்துவிட்டது. நின்ற இடத்தில் மலையப்பனைக் காணவில்லை. மயில்வாகனம் பரபரப்புடன் சுழன்று தேடிவிட்டு,

"தம்பி! அங்கே பார் கண்டி மாமா" என்று சுட்டிக் காட்டினுன் இராசதுரைக்கு.

தேரின் வடம் இழுக்கும் நூற்றுக்கணக்கான கைகளுடன் மலைநாட்டின் இரு கைகளும் சேர்ந்துகொண்டன.

அவை இரண்டே இரண்டு கைகள்தாமா? ஆயிரமாயிரம் தோட்டத் தொழிலாளருக்கு வாழ்க்கைப் பாதையைக் காட்டப் போகும் கைகளல்லவா?

'அரோ ஹரம்'

தேர் அசைகிறது; கடகடவென்று ஓடுகிறது. மலையப்பனுக்கு இது ஒரு புதிய அனுபவமாய் இருந்தது. மிகவும் உற்சாகமாக இருந்தது.

'அடேயப்பா, இந்த மாபெரும் தேர் நாம் விரும்பியபடி அசைகிறதே! மக்கள் சத்தியின் பெருமையே பெருமை'

தேர் ஆறுமுகசாமி வாசலில் நின்றது. மலையப்பன் வடத்தைப் பிடித்தவாறு தேரைப் பார்த்துக்கொண்டு நின்ருன். தேரின் நான்கு சக்கரங்கள், கீழ் அண்டம், பீடம், மேலண்டம், முடி, குடை எல்லாவற்றையும் ஆராய்ந்தான்.

என்ன ஆராய்ச்சி? தேரோட்டத்திற்குப் புதிய தத்துவ விளக்கமோ?

பார்க்கப் போனுல் மலைநாட்டு மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள், இன்னல்கள், சிறிய சந்தோஷங்கள் எல்லாம் ஒரு பிரம்மாண்டமான சமூகத்தேரின் பாகங்கள் தாம். தொழிலாளர் ஒன்று சேர்ந்து அதற்கு வடம் கட்டி இழுத்தால் அந்தத்தேரைக் கண்டிப்பாக அசைக்க முடியும். அதில் என்ன சந்தேகம்?

மலையப்பனின் மனம் ஒரு நல்ல கேள்வியைக் கேட்டது:

'அந்தத் தேர் அசைந்தால் மட்டும் போதுமா?" ஒரு தொழிலாளர் சங்கத் தலைவனைக் கேட்க வேண்டிய கேள்வி தானே?

'அந்தத் தேரைச் சரியான வழியில் திருப்பிச் சென்றுலல்லவா நன்மை உண்டாகும்?'

ஆம், அப்போதுதான் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் மறையும். அவர்களுக்கு ஒரு நல்ல தலைவன் வேண்டும்.

கோவில் தேர் நகர்ந்து, மேற்கு வீதிக்குத் திரும்பி யாழ். மாநகர சபையின் தற்காலிக அலுவலகத்தின் முன் வந்து நின்றது.

அடேயப்பா, இந்தப் பெரிய தேரை வேண்டிய நேரத்தில் சறுக்குக்கட்டை போட்டுத் திருப்பிச் சரியான நேரத்தில் நிறுத்துகிறுரே ஒருவர். அவர் போன்ற ஒருவர்தான் மலைநாட்டு மக்களுக்குத் தலைவராக வேண்டும். தேக வலிமை, மன வலிமை, அனுபவம் இவற்றுடன் தனது உயிரைக்கூட மதியாது சேவை செய்யக் கூடியவர்தான் தலைவராகத் தகுதியானவர். அத்துடன் அப்படியான ஒரு தலைவர், தேருக்குச் சறுக்குக் கட்டை போடுகிறவர் போலத் தொழிலாளருடன் கீழேயே நிற்பாரல்லவா? அவர்களுடைய இன்னல்களை அனுபவித்து அறிந்து கொள்வார். இப்போது தோட்டத் தொழிலாளருக்கு இருக்கும் தலைவர்கள், தேரின் பீடத்தில் நிற்கும் ஐயரைப் போன்றவர்கள். பூத்தூவி, மணி கிலுக்கித் தீபம் காட்டுபவர்கள்தாம்.

'இப்படியான தலைவர்களால், தொழிலாளரின் வாழ்க்கைத் தேரைச் சரியான வழியில் திருப்ப முடியுமா?'

இது பழைய பிரச்சினைதான். ஆனுல் இப்போது அது மலையப்பனின் சிந்தனையில் புதிய உருவம் எடுத்தது.

மலையப்பன் யாழ்ப்பாணத்தில் தங்கிய மூன்று நாட்களில் பல சுருட்டுத் தொழிலாளரைக் கண்டு பேசி மகிழ்ந்தான். கீரிமலை, செல்வச் சந்நிதி, மாவிட்டபுரம் போன்ற தெய்வ ஸ்தலங்களுக்குப் போய்வந்தான்.

"என்ன அண்ணே! நம்ம பயல்கள் இந்த அழகை எல்லாம் வந்து பார்க்கணும். அவங்க குடிச்சுத் தொலைக்கிற சல்லி இருந்தா, பத்துத் தடவை வந்து போகலாம்" என்ருன் மலையப்பன். அவன் தொடர்ந்து சொன்னுன் :

"அண்ணே! யாழ்ப்பாண மக்களும் நம்ம தோட்டங்களுக்கு வந்து எல்லாம் பார்க்கணும். அப்பதான் அண்ணே, நமக்குள் ஒற்றுமையும் அன்பும் வளரும்"

இப்படிச் சொன்னபோது மலையப்பனின் நா உணர்ச்சியால் தடதடத்தது.

கடைசி நாள் யாழ்ப்பாண மாநகரசபைக் கட்டடத்தையும் பொதுசன நூல் நிலையத்தையும் பார்த்த பின், பெரிய ஆஸ்பத்திரிக்குச் சென்ருன். அங்கே ஆஸ்பத்திரித் தொழிலாளர் சங்கத் தலைவர் இரத்த வங்கியில் 'அட்டன்டன்ட்' என்று தெரிந்ததும், இரத்த வங்கிக்குச் சென்ருன். மயில்வாகனம் இருவரையும் அறிமுகப்படுத்தி வைத்தான்.

அங்கே நடைபெற்ற சம்பாஷணையின் போது ஒரு கட்டத்தில் மலையப்பன் வெட்கப்பட்டான். இரத்த வங்கித் தொழிலாளி சொன்னுன் :

"மலையப்பா! யாழ்ப்பாண மக்கள் தங்கள் நெருங்கிய உறவினருக்குக் கூட இரத்த தானம் செய்ய வருவதில்லை"

மலையப்பன் வெட்கப்பட்டது நியாயந்தானே? யாழ்ப்பாண ஆஸ்பத்திரியின் இரத்த வங்கி சில வேளைகளில் வற்றிப் போகிறது. அவசர "கேஸ்களு"க்குக் கூட இரத்தம் இல்லாத காரணத்தினுல் சத்திர சிகிச்சைகள் ஒத்திப் போடப்படுகின்றன. இதைக் கேட்டதும் மலையப்பன், நல்லூர்த் தேர்த் திருவிழாவில் தான் கண்ட மக்கள் திரளை நினைத்தான்.

'பதினையாயிரம் மக்கள் இருந்தார்களே. அவர்களில் பதினைந்து இதயங்கள் இருக்காமலா போய்விடும்'

மலையப்பனின் இதயம் இந்தக் கேள்வியைக் கேட்டது.

அவன் தனது இரத்ததைச் சோதிக்கக் கொடுத்தான். கால் மணி நேரத்தில், மலையப்பனின் இரத்தம் நாலாம் வகுப்பைச் சேர்ந்தது என்று அறிவித்தார் டாக்டர். அவனுடைய இரத்தம் யாருக்கும் கொடுக்கக் கூடிய வகையைச் சேர்ந்தது.

"மலையப்பா! பரோபகார சிந்தனை உள்ள உனது இரத்தம் வேறு எந்த வகையைச் சேரும்?" என்று கேட்டு அவன் முதுகில் தட்டிக்கொடுத்தான் மயில்வாகனம்.

"உனது இரத்தம் எல்லோருக்கும் எந்த நேரத்திலும் உதவக்கூடியதாக அல்லவா இருக்கும்."

மலையப்பன் ஒரு பைந்து இரத்தம் தானம் செய்துவிட்டு வந்தான். அவன் இதய வங்கியில் ஓர் உயிருக்கு உதவி செய்த பெருமிதம் நிறைந்திருந்தது.

மலையப்பனுக்குப் பத்து ரூபா கொடுத்தார்கள்.

"இது எதுக்குங்க?" என்று கேட்டான் மலையப்பன்

"இரத்தம் கொடுப்பவர்களுக்கு அன்பளிப்பு மலையப்பா. நீ வாங்கிக்கொள்" என்று மயில்வாகனம் விளக்கினான்.

மலையப்பன் தமாஷாகவும் ஓரளவு உண்மையாகவும் சொன்னான்.

"பேஷ்! கரும்பு தின்னக் கூலியுமா அண்ணே. இன்னிக்கு ஊருக்குப் போக றயில் செலவுமாச்சே. நம்ம பயல்களுக்கு இந்த விஷயம் தெரிஞ்சு டிக்கெட் எடுத்து வந்தாங்களானா, போறதுக்கு இங்கே இரத்த வங்கியிலேயே பணம் எடுத்திடலாமே."

மலையப்பன் மயில்வாகனம், இரத்த வங்கி அட்டன்டன்ட் முதலியோர் பல விஷயங்களைப் பற்றிப் பேசினர். இந்தச் சம்பாஷணையின் போதுதான் மலையப்பன், மலைநாட்டு வாழ்க்கையை வைத்து நாவல் எழுதுவதாக ஒப்புக்கொண்டான்.

"அடே கள்ளத் தோணி, உனக்குப் பால் வேணுமாடா?"

மலையப்பனது கட்டிலின் கால்மாட்டிலிருந்து ஓர் ஏளனக் குரல் வந்தது. அவன் கண்களை விழித்துப் பார்த்தான். தான் டிக்கோயா ஆஸ்பத்திரியில் படுத்திருப்பதை உணர்ந் தான். நல்லூரின் தெய்வீக, இனிய, அன்புச் சிந்தனை கலைந் தது. நோயாளிகளுக்குப் பால் விநியோகம் செய்துகொண்டு வந்த ஆஸ்பத்திரி அட்டன்டன்ட் அவனைத் தாண்டி அடுத்த கட்டிலுக்குப் போனான்.

'கள்ளத்தோணி என்று அழைத்தானே!' மலையப் பனுக்கு இது சொல்லொணு வேதனை தந்தது. அட்டன் டன்ட் வார்ட்டின் முடிவுக்குப் போய்விட்டுத் திரும்பிவந்தான்.

"ஐயா! தயை செய்து இங்கு வாருங்க" என்று சிங் களத்தில் அவனை அழைத்தான் மலையப்பன்.

அவன் தொடர்ந்து கேட்டான்:

"பாருங்க ஐயா! நீங்களும் என்னைப்போல் ஒரு தொழி லாளி. என்னைப்போல் கஷ்டங்களை அனுபவிப்பவர். ஆகை யால் நான் சொல்வதைப் புரிந்துகொள்வீர்களல்லவா?"

அட்டன்டன்ட், மலையப்பன் பேசிய சிங்களத்தையும் அதன் உச்சரிப்பையும் கேட்டுப் பிரமித்துப் போனுன். மலையப்பன் தொடர்ந்து பேசினுன்:

"நான் கள்ளத்தோணியில் வந்தவனல்ல. இந்த நிலத் தில் பிறந்தவர்களுக்குப் பிறந்தவன். இந்த நாட்டின் நலத் தையே எனது வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு உழைப்பவன்........." மலையப்பனின் பேச்சை அரைவாசியி லேயே தடுத்தான் ஆஸ்பத்திரிச் சேவகன்.

"நீங்க போன வருஷம் தொழிலாளர் கூட்டத்திலே டன்பார் மைதானத்திலே பேசினதல்லவா?" ஒற்றுமையைக் காட்டத் தமிழில் பேசினுன் அட்டன்டன்ட்.

"ஆமா, சகோதரா!"

"நீங்க மலேயப்பன் அல்லவா?"

மலையப்பனின் உதட்டோரம் ஒரு புன்சிரிப்புத் ததும்பியது. இருவரும் பரஸ்பரம் தழுவிக்கொண்டனர். மலையப்பனின் சிறு மேசை மேல் இருந்த அலுமினியக் கோப்பை நிரம்பப் பாலை வார்த்தான் சேவகன். ஆனால் அவன் தொடர்ந்து கூறிய சில விஷயங்கள் மலையப்பனின் வயிற்றில் நெருப்பைக் கொட்டுவது போல் இருந்தது.

அன்று காலை, மாணிக்கமலைத் தோட்டத்து டிஸ்பென் ஸர் பதி, டிக்கோயா ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தார். அவர் ஆஸ்பத்திரிக் குமாஸ்தாவிடம் மலையப்பன் அனுமதிக்கப்பட்ட விபரங்களை அறிந்து கொண்டு, அங்கிருந்தே டெலிபோனில் ஹட்டன் பொலிசுடன் ஏதோ பேசினர். அதன் பின்னர் வார்ட் சேவகனை அழைத்து 'காலையிலே வந்த கள்ளத் தோணிக்கு அடி பலமோ?' என்று வினவினர். மலையப்பனைக் கள்ளத் தோணியென்று அறிமுகம் செய்துவிட்டுப் போனவர் பதிதான். அவருக்குக் கோபம் வந்தால், தோட்டத் தொழிலாளர் அத்தனைபேரும் கள்ளத்தோணிகள் தாம்.

இவ்வளவு செய்திகளையும் அட்டன்டன்ட் மூலம் அறிந்த மலையப்பன் மிகவும் வேதனைப்பட்டான். அந்த நேரத்தில் அங்கே காத்தான் வந்து சேர்ந்தான்.

"என்ன மலையப்பா, நேற்றுப் பெரிய குழப்பமாகப் போச்சுதாமே?"

"ஆமா காத்தான் தெரியாதா, மாமா கொஞ்சம் குடிச்சிட்டாரு"

"மலையப்பா! அந்தக் குள்ளன் பதி இருக்குமளவும் ரங்கசாமிக் கங்காணி சரிவர மாட்டாரு" தனது தலையையும் உடலையும் சொறிந்துவிட்டு, காத்தான் மேலும் சொன்னான்:

"அவருடைய பங்களாவிலேதான் உன் மாமா குடிச்சிருக்கிறாரு"

மலையப்பன் கேட்டான் :

"என்ன காத்தான், உன் கையெல்லாம் புதிய உரசல் காயம் இருக்கே. இன்று வலிப்பு வந்ததா?"

"முதுகு, நெஞ்சு எல்லாம் காயம் இருக்கு மலையப்பா" என்றான் காத்தான்.

இன்று காலையில் பதியுடன் பேசிவிட்டு ஸ்டோரை நோக்கிப் போகும் போது, காத்தானுக்கு வழக்கமாக வரும் காக்கை வலிப்பு வந்தது. அவன் வேலைக்குப் போகவில்லை.

"மலையப்பா! கங்காணிக்கு நல்லா அடிச்சிட்டாங்க." என்று சொன்னான் காத்தான். மலையப்பன் பதற்றத்துடன் எழுந்து கட்டிலில் உட்கார்ந்தான்.

"என்ன காத்தான், மாமாவுக்கு அடிச்சாங்களா? யார் அடிச்சாங்க?" அவன் அவசரத்துடன் கேட்டான்.

"கங்காணியைக் காலையிலேயே அட்டன் பொலீஸ் புடிச்சிக்கிட்டுப் போட்டாங்க. உனக்குக் கங்காணி அடிச்ச செய்தியை எவரோ பொலீசுக்குத் தெரிவிச்சிருக்கிறாங்க"

மலையப்பனுக்கு எல்லாம் ஓரளவு விளங்கியது. "தோட்டத்து டாக்டர் ஐயாதான் பொலீசுக்கு அறிவித்திருக்கிறார்" என்றான் அவன். காத்தானுக்கும் பதிமேல் வெறுப்புத்தான். ஆனால் அசட்டுத்தனமாக அவனல்லவா அவருக்கு விஷயத்தைச் சொல்லிவிட்டான்.

"ஏன் மலையப்பா வள்ளியோட அப்பா சிதம்பரம் பொலீசுக்குச் சொல்லியிருக்க மாட்டானா?" என்று கேட்டான் காத்தான்.

இப்படிப் பேசுபவனோடு தொடர்ந்து இந்த விஷயத்தைப் பற்றிப் பேசுவதில் ஏதாவது பயன் உண்டா?

மலையப்பன் பொதுப் படையாகச் சொன்னான்: "காத்தான் எல்லாம் ஒரே குழப்பமாயிருக்கு. தோட்டத் தொழிலாளர் ஒற்றுமையாக இல்லாவிட்டால் எல்லாருக்கும் கஷ்டம்தான்"

"ஒற்றுமைக்கு என்ன குறைச்சல் மலையப்பா. அந்தப் புது யூனியனைச் சாக அடிக்கணும். நீ சுகமாகி சுருக்கா வந்திடு. அந்தப் பயல்க பெரிய அட்டகாசம் செய்யுறாங்க. சாமி இதெல்லாம் பொறுக்காது."

இப்படிக் கூறிவிட்டுக் காத்தான் விடைபெற்றுப் போய் விட்டான். மலையப்பன் மனத்தில் குடிகொண்டிருந்த சிறிதளவு அமைதியும் கூட அத்துடன் விடைபெற்றுக் கொண்டது.

சிறிது நேரத்தில் வேதனையைக் குறிக்கும் முனகலுடன் ஒருவர் அந்த வார்ட்டிற்குக் கொண்டு வரப்பட்டார். பதின் மூன்றாம் கட்டிலில் அவரைக் கிடத்தி, 'ஒக்சிஜன்' குழாயை அவர் மூக்கில் வைததார்கள். அவர் வேதனையைக் குறைக்க ஊசி மூலம் மருந்து ஏற்றினார்கள்.

'நன்றாக அடித்து உதைத்திருக்கிறார்கள் போல் இருக்கிறது' என்று பேசிக் கொண்டார்கள்.

அந்தக் கட்டிலின் டிக்கெட்டில் 'ரங்கசாமி. மாணிக்க மலைத் தோட்டக் கங்காணி' என்று எழுதப்பட்டிருந்தது. புதிய நோயாளியை டாக்டர் பார்க்கும் போதே, மலையப்பன் தனது டிக்கெட்டில் 'அதிகாரிகளின் வேண்டுகோளுக்குமாறாக, எனது விருப்பப்படி நான் ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறு கிறேன்' என்று கை நடுங்க எழுதினான். வார்ட்டை விட்டு வரும்போது வார்ட் சேவகனிடம் சொன்னான்:

"சகோதரா! பதின் மூன்றாம் கட்டிலுக்கு வந்தவர் என் மாமா. கொஞ்சம் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்க"

அவன் டிக்கோயா ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்த போது அவன் மனத்தில் ஒரு கேள்வி அந்தரத்தில் அங்குமிங்கும் ஊஞ்சலாடியது.

'என் வீராயியை இப்பவேபோய்ப் பார்ப்பதா, அல்லது பார்க்காமல் விடுவதா?'

# 8

**வீ**ராயி தனது காம்பராவில் அழுதுகொண்டிருந்தாள். மலையப்பன் அவளது அப்பாவால் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரிக்குப் போனபின், அவள் ஒரு நேரமாவது சரியாகச் சாப்பிடவில்லை.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர் லயங்களில் கண்ணீரும் பசியும் அபூர்வ விஷயங்களா ?

நாள்முழுவதும் பச்சைக்கம்பளம் போர்த்தது போன்ற மலைகளில் அவர்களுக்கு வேலை. அந்தியில் தங்கள் வீடுகளுக்கு வந்ததும் அதன் இருட்டோடு இருட்டாக, புகையோடு புகையாக மாறிவிடுகிறார்கள். கண்ணீரைப்பற்றியும் பசியைப்பற்றியும் சிந்திக்க அவர்களுக்கு அதிக நேரம் இருக்கிறதா ?

தகரக் கூரைகளையுடைய லயங்களின் காம்பராக்கள்தாம் அவர்கள் வீடுகள். அங்கே, எங்கே பார்த்தாலும் உலரும் கம்பளிகள். மூலைகளில் விறகுச் சுள்ளிகள். லயங்களின் உடைந்த கான்களில் அழுக்கு நீர் தேங்கிச் சிறுநீரைப்போல் நாற்றமெடுக்கும். காம்பராவுக்கும் கானுக்குமிடையிலுள்ள வெடித்த சிமெந்துத் தரைகளில்—கூடுகளில் கோழிகள், சொறிபிடித்த நாய்கள், ஐம்புலன்கள் மங்கிய மனிதக் கிழடுகள்.

காம்பராவுக்கு உள்ளே ஒளியைக் காணாத குருட்டு இருள். ஒரு கருப்பையின் இயற்கையான இருட்டு. மூடப்பட்ட பிணப் பெட்டியின் பயங்கர அந்தகாரம் !

கருப்பையும் பிணப்பெட்டியும் இரு எல்லைகள்தாம். அந்த எல்லைகளுக்கிடையில் பல் முளைத்து, முலை பெருத்து, காதலித்து உயிர் திரும்பவும் மக்களிக்கும் உயிர் நாடகம். எல்லாம் இருட்டில்; எல்லாம் அந்தக் காம்பராக்களில்!

ஆமாம், வீராயியும் தோட்டத்துப் பெண்தானே, அவள் அழலாமல்லவா? அவர்கள் அடுப்பும் பலநாள் புகையாமல் இருக்கலாமே!

ரெங்கசாமிக் கங்காணியின் காம்பராவைப் பொறுத்த வரை இப்படியெல்லாம் இலகுவில் கூறிவிட முடியாது. அவனுடைய கண்ணான வீராயி இதுவரை காலமும் அழாமல் வளர்ந்தவள்தான். ரெங்கசாமிக் கங்காணி மாணிக்க மலைத் தோட்டத்தில் கண்ணியமான ஒருவன். ஒழுக்கமாக வாழ்ந்தவன். தொழிலாளர்களால் 'பெரியவர்' என்று அழைக்கப் படுபவன்.

வீராயி பிறந்தபோது, அவள் தாயின் கருப்பையிலிருந்து நஞ்சும் கொடியும் பிரியு முன்பு உயிர் பிரிந்துவிட்டது. அப்போது ரெங்கசாமி தனது காம்பராவின் சுவர்களில் தலையை மோதி மோதிக் கதறினன். அதன் பின்பு அந்தக் காம்பராவில் யார் அழுதார்கள்? வீராயிதான் இப்போது, பதினெட்டு ஆண்டுகளுக்குப் பின்பு அழுதுகொண்டிருக்கிருள். சொல்லப் போனல் ஒரு சில மாதகாலமாக அவள் இரகசியமாக ஒரு மூலையிலிருந்து சில சமயங்களில் அழுதிருக்கிருள்.

மூன்று நான்கு மாதங்களுக்கு முன் அவள் அப்பா முதல் தடவையாகக் குடித்துவிட்டு வந்தார். அவள் அன்று அழத் தொடங்கினள்.

'எதற்கும் பார்ப்போம். அப்பா எப்போவுமா குடிக்கப் போருரு? மச்சானுக்குச் சொல்லலாம்' என்று இருந்து விட்டாள்.

அந்த நாட்களில் தோட்டத்துச் சங்கம் பிளவுபட்டது. ரெங்கசாமியும் மலையப்பனும் எதிர்க்கட்சிகளுக்குப் போனார்கள். அவர்கள் இருவரும் ஒருவருடன் ஒருவர் முன்போல் பேசிக் கொள்வதில்லை. வீராயிக்கு அவள் அப்பா ஒரு கண். மச்சான் மலையப்பன் மற்றக் கண். இந்த நிலையில் அவள் கண்கள் கலங்குவது நியாயம்தானே ? கண்கள் மெல்லக் கசிந்த காலம் கூடப் போய்விட்டது. மலையப்பன் அடிபட்டபின், அவள் எல்லாவற்றையும் சிந்தித்து வாய்விட்டு அழுவாள்.

மலையப்பனுக்குச் சொற்ப காயம் என்று வள்ளி கூறியிருந்தாள். அத்துடன் டிக்கோயா ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிறார். ஆகையால் அதைக் குறித்து அவள் கவலைப் படவில்லை. அவள் கவலையெல்லாம் குடும்பப் புண்ணை எண்ணித்தான். இப்படி வரும் என்று அவள் ஒருபோதும் எதிர் பார்க்கவில்லை. கனவுகூடக் காணவில்லை. மலையப்பன் ரெங்கசாமிக்குச் சொந்தப் பிள்ளை போல. மலையப்பனுக்கோ ரெங்கசாமி தெய்வம்.

'வீராயி! உனது மச்சானுக்குத் தோட்டத் தொழிலாளர் அத்தனை பேரும் கண்முன்னே நடமாடும் தெய்வங்களல்லவா ?

வீராயியின் மனம் இப்படி ஒரு கேள்வியைக் கேட்டு மகிழ்ந்தது. பார்க்கப் போனால் அது சந்தோஷப்பட வேண்டிய விஷயம்தானே ? ஆனால், வீராயியைப் பொறுத்தவரையில் தொழிலாளர் மேல் மலையப்பன் வைத்திருக்கும் அளவற்ற அன்புதான் இப்போதைய குடும்பச் சிக்கலுக்குக் காரணம். அவள் அப்பா சேர்ந்திருக்கும் புதிய தோட்டத்து யூனியன், தொழிலாளர் நலனுக்கு நல்லதல்ல என்பது மலையப்பனின் நம்பிக்கை. தொழிலாளரின் வாழ்க்கையைப் பாதிக்கும் எதையும் அவன் கடைசி மூச்சு இருக்கும் வரையும் எதிர்ப்பான்.

வீராயிக்கு இது தெரியாததொன்றா ? அவள் அழுது அழுது அரைவாசியாகிவிட்டாள்.

மலையப்பன் தலைமை வகிக்கும் சங்கம் பழையது. அவள் அப்பா, வள்ளியின் அப்பா, தோட்டத்துப் பெரியவர்கள் எல்லோரும் வளர்த்த சங்கம். பணத்தையும் உழைப்பையும் அவர்கள் அதற்கு அர்ப்பணித்திருக்கிறார்கள். தொழிலாளர் எல்லோருமே அதன் அங்கத்தவர்கள். அதை விட்டு இப்போது ஒரு புதிய யூனியனில் அப்பா சேரவேண்டுமா? தோட்ட டாக்டர் பதி எதற்காக அந்த யூனியனில் இருக்கிறார்? நம்மைக் 'காட்டுமிராண்டிகள்' என்றும் 'கள்ளத் தோணிகள்' என்றும் கூறும் அவர் தொழிலாளர் சங்கத்தில் இருந்து நன்மை வருமா? அப்பாவுக்கு ஏன் இந்தக் கூத்து? எண்ணெயும் நீரும் கலக்க முடியாது என்ற உண்மையை இந்தப் பெரிய அப்பாவுக்கு அவள் சொல்லிக் கொடுக்க வேண்டுமா? அவளுடைய காதலைக் கொழுந்தோடு கிள்ளத் தான் இந்தப் புதிய யூனியன் தோன்றியதோ? அப்படி ஒருபோதும் இருக்க முடியாது. அந்தப் பெரிய அளவுக்கு அவளைப் பற்றி யாரும் சிந்திப்பார்களா? அவள் ஒரு கொழுந்து கிள்ளும் தோட்டப் பெண்தானே!

காலந்தான் அவள் காதலுக்கு எதிராக வேலை செய்கிறது. அதில் ஒரு துளி அளவு சந்தேகம் இல்லை. அல்லாவிடில், அவர் அந்தக் குளிர் இரவில் அவள் காம்பராவுக்கு வர வேண்டுமா? குடித்து மதி இழந்துகிடந்த அப்பாவிடம் அடி பட்டாரே! அப்பா அவரைப் 'பண்டி மகன்' என்று ஏசியது பெரிய தப்பு.

மது என்ன வேலையெல்லாம் செய்கிறது. குடிப்பவர்கள் இருக்கும் லயங்களில் தினமும் இப்படித்தானே ஏதாவது நடக்கும்? குடிப்பவர்களின் பெண்சாதி பிள்ளைகள் என்ன பாடு பாடுவார்கள். குடிப்பவனைக் கல்யாணம் செய்வதிலும் பார்க்க, வாழ்நாள் முழுவதும் கன்னியாகவே இருந்து இயற்கையின் கெஞ்சுதலை அடக்குவது நல்லது. மதி இழந்த புருஷனிலும் பார்க்க இயற்கையின் அந்த வேதனை அவ்வளவு பொல்லாததல்ல.

வீராயி அதிர்ஷ்டசாலி. மலையப்பன் குடிப்பதில்லை. அவளுக்குச் சந்தோஷமாக இருந்தது.

'அவர் குடியை வெறுப்பவர். மிகவும் நல்லவர், நான் இல்லாமல் அவருக்கு வாழ்க்கை இல்லையாம். அப்பா அடித் தும் கூட எனக்காக அவரை மன்னித்துவிடுகிறார்.'

வீராயி இப்படிச் சிந்தித்து வாழ்வின் துன்பத்திலும் ஓர் இன்ப ஒளியைக் காண முயற்சி செய்தாள். ஆனால் அதே நேரத்தில் ஹட்டனில் இருந்து வந்த பொலீஸ்காரர்களில் ஒருவன் ரெங்கசாமியைக் கைது செய்தான்.

போலீஸ்காரர் வந்தபோது அக்கம் பக்கங்களில் தொழில் செய்யும் பெரியவர்கள் இருக்கவில்லை. வள்ளி, அவள் அப்பா அம்மா உட்பட எல்லோருமே வேலைக்குப் போயிருந்தார்கள். மீனாட்சிக் கிழவி மாத்திரம் தனக்குக் குளிப்பதற்கென்று ஒரு தகரப் பாத்திரத்தில் சுடுநீர் போட்டுக்கொண்டிருந்தாள். பாதி ஈரமாயிருந்த விறகுச் சுள்ளிகளை அடுப்பில் இடுக்கிக் குனிந்து ஊதித் தனது பறட்டைப் பஞ்சு முடிமேல் வெண் புகையை விளையாட விட்டிருந்தாள். இப்படிப் பல காம் பராக்களுக்கு முன் கிழடுகள், முக்கியமாகப் பாட்டிகள் குளிப்புக்கு என்று தண்ணீர் சுட வைக்கப் பகீரதப் பிரயத் தனம் செய்து நேரத்தைப் போக்குவதுடன் குளிர் காய்ந்து கொண்டிருந்தனர்.

போலீஸ்காரர் வரும்போது ஒவ்வொரு லயத்திலிருந்தும் 'ஹூயா' என்ற கூச்சலுடன் பின் தொடர்ந்த தோட்டச் சிறுவர்கள், வீராயியின் லயத்திற்கு வரும்போது இருபது இரு பத்தைந்துபேர் என்று சேர்ந்து விட்டனர். உடம்பெல்லாம் அழுக்குப் படர்ந்து முடைவீசிய இந்தப் பிள்ளைகள், தங்களைத் தொடர்ந்து ஓடிவந்த சொறி நாய்க் குட்டிகள் தங்களைக் கௌவியும் பிராண்டியும் அவயவங்களை இழுத்தும் புண்படுத் தாதவாறு நெளிந்து வளைந்து கொடுத்தனர். சில சமயம் நாய்க்

குட்டிகளுடன் தரையில் புரண்டனர். நொந்தால் அழுதனர். நோகாவிட்டால் உரக்கப் பேய்ச் சிரிப்புச் சிரித்தனர். கோழிகள் 'கொக்கரக்கோ'வென்று கொக்கரித்து நாலாபக் கமும் சிதறிப் பறந்தன.

இந்த ஆரவாரத்தைப் பார்க்க வீராயி தனது காம்பராவின் வாசலுக்கு வந்தாள். அவள் முகம் குளு குளுத்த மாம்பழமாக இருந்தது. இரவிரவாக நன்ருக அழுதிருக்கிருள். தாவணி விலகி, ஆடை சீர்குலைந்திருந்தது. இரவிக்கை பிரியாமல் அதன் கீழ் ஓரத்தில் ஒரு முடிச்சு. அங்கு வந்த பொலீஸ்காரன் அவளைப் பார்த்துக்கொண்டு நின்ருன். "இது தான் ரெங்கசாமிக் கங்காணி வீடுங்க." ஒரு சிறுவன் சுட்டிக் காட்டினான். பொலீஸ்காரன் ஒரு நிமிடமாவது தாமதிக்கவில்லை. வீராயியின் நெஞ்சில் கைவைத்துத் தள்ளியவாறு அவள் காம்பராவுக்குள் நுழைந்தான்.

'உங்கள் வீட்டிற்குள் வரலாமா?' இப்படி உத்தரவு கேட்கவேண்டிய அவசியம் இல்லையல்லவா? அது ஒரு தோட்டக் குட்டியும் அவள் அப்பாவும் வாழும் காம்பரா தானே!

இரண்டாம் பொலீஸ்காரனும் அவனைப் பின் தொடர்ந்தான். அவனுக்குப் பின் ஆறு ஏழு சிறுவர்களும் இரண்டு குட்டி நாய்களும். இரு பிள்ளைகளின் மெல்லிய உடல்களின் மேல் பொலீஸ்காரன் ஒருவனின் குண்டாந்தடி பதம் பார்க்கவே, சிறுவர்கள் ஓட்டமெடுத்தனர். மிதிபட்ட நாய்க் குட்டிகள் 'வள்'ளென்று மூலைகளில் பதுங்கின.

"என்னடா ஆ கொளப்பம்" என்றவாறு புகையிலிருந்து விடுபட்ட மீனுட்சி காம்பராவுக்கு வந்தாள்.

ரெங்கசாமியைக் கைது செய்து இழுத்துச் சென்றனர் பொலீஸ்காரர்கள். மீனுட்சி "ஓ"வென்று தலையில் கைவைத்து அலறியவாறு அப்படியே இருந்து விட்டாள். லயத்தைவிட்டுப் போகு முன்பே ரெங்கசாமியின் வலது விலாவில் ஒரு குத்துக்

குத்தினான் பொலீஸ்காரன். மீனாட்சி ஒப்பாரி வைத்தாள். பழையபடி சில சிறுவர்கள், சிறிது தூரத்தில் பொலீஸ் காரரைப் பின்தொடர்ந்தனர். 'ரெங்கசாமிக் கங்காணி யைக் கூட்டிக்கிட்டுப் போறுங்க டோய்' என்றும் 'பெரிய வருக்கு அடிச்சு இழுத்துக்கிட்டுப் போறுங்க டோய்' என்றும் கூச்சலிட்டனர். லயங்களில் பெரும்பாலான காம்பராக்களின் வாசல்களில், இரவிக்கை போடும் வயதடையாத பெண் பிள்ளைகள், தங்கள் உடன் பிறந்த கைக்குழந்தைகளை இடுப் பில் இருத்தி நெளிந்து நின்று வேடிக்கை பார்த்தனர்.

நல்ல வேளையாக வேதனை தந்து, இதயத்தைப் பிழியக் கூடிய இந்தக் காட்சிகளை வீராயி காணவில்லை. இயற்கை என்னும் வைத்திய நிபுணன், அவளுக்கு மயக்க மருந் தைச் சரியான நேரத்தில் கொடுத்திருந்தான். பொலீஸ் காரன் அவள் மார்பில் கையை வைத்துத் தள்ளியபோதே, அவள் மூர்ச்சையாகி, சுவரோடு சாய்ந்து, மூலையில் இருந்த படங்குக் குவியல் மேல் துவண்டு விழுந்துவிட்டாள்.

புது மலையில் கொழுந்து கிள்ளிக்கொண்டிருந்த வள்ளியின் விரல்கள் அன்று வழக்கம்போல் இயங்க மறுத்தன. அவளுக்கு முன்னால் வீராயி நிற்கவேண்டிய இடத்தில், ஒரு கறுப்புக் கிழவி பாய்ந்து பாய்ந்து ஒருவிதப் பசிப்பார்வையுடன் கொழுந்து களைக் கிள்ளிக் கூடைக்குள் வீசினாள். அவளைப் பார்த்து வள்ளி மிகவும் பரிதாபப்பட்டாள். கண்களை அவளிலிருந்து விடுவித்து அக்கம் பக்கம் பார்த்தபோது தூரத்தில் தோட்டச் செம்மண் பாதையில் ரெங்கசாமிக் கங்காணியும் பொலீஸ்கார ரும் போவதைக் கண்டாள்.

வள்ளி குறுக்குவழி ஒன்றில் விழுந்தடித்து ஓடிவந்து அவர்கள் போகும் பாதையில் எதிராக வந்தாள். பொலீஸ் காரர் இருவரும் அவள் கொழுத்த வடிவைப் பார்த்துக்கொண்டு மெல்ல நடந்தனர். "என்னங்க இதெல்லாம்." அவள் பதற் றத்துடன் கேட்டாள்.

கீழே பார்த்துக்கொண்டு வந்த ரெங்கசாமி நிமிர்ந்து வள்ளியைப் பார்த்தபோது, அவன் இடது கண் கலங்கியது. வலது கண்ணின் குழியை மூடிய தோல் பட பட வென்று சுருங்கிச் சுருங்கி விரிந்தது.

ரெங்கசாமி சொன்னான் :

" வள்ளியம்மா, நான் நெனச்சதெல்லாம் நடந்திட்ட தம்மா. நான் வளர்த்த மாடு இடிச்சிட்டுது."

அரை நிமிடம் துக்கத்தின் மௌனம்.

ரெங்கசாமி தொடர்ந்து சொன்னான் :

"மலையப்பன் போயி போலீசுக்கு அறிவிச்சிருக்கான்."

வள்ளியினால் இதை நம்பமுடியவில்லை. மலையப்ப அண்ணா போலீசுக்கு இதைச் சொல்லியிருக்க முடியாது. மலையப்ப அண்ணாவை அவளுக்குத் தெரியாதா? அவள் வாய் திறக்கமுன், ரெங்கசாமிதான் தொடர்ந்து கண்டிப்புடன் பேசினான் :

"இந்தா வள்ளியம்மா, நீ வீராயிக்கிட்ட சொல்லிடு. எனக்குத் தெரியாம அவ அந்த மலையப்பனோட ஒருவார்த்தை பேசி ஏதாவது தொடர்பு வைச்சா, எல்லாரையும் வெட்டிப் புதைச்சுப்புடுவேன் என்று. அவ அவனோடு பேசினதாக என் காது கேட்கப்படாது"

வள்ளி அழுதுகொண்டே அவர்களுடன் ஓடினாள்.

ஒரு தோட்டக் கூலி, பொலீஸ்காரருடன் போவதை உணராது, இப்படிப் பேசலாமா ? அது அவர்களை அவமதித்தது போலல்லவா ? ரெங்கசாமியின் முதுகில் ஒரு பொலீஸ் குதது விழுந்தது. வள்ளி அப்படியே நின்றுவிட்டாள். அவள் அறியப் பெரியவர் மீது யாரும் இதுவரை கை வைத்ததில்லை. பெரிய துரை ஏசி இருக்கலாம். அதைக்கூட அவள் நேரில் கேட்ட தில்லை. அவள் 'ஓ'வென்று அழுதாள். ஓர் ஐம்பது சிறுவர்கள் அவளைச்சுற்றி நின்றனர். அவர்களில் சிலர் வள்ளியுட ன்சேர்ந்து

அழுதனர். அவர்களிடம் வள்ளி சில விபரங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டாள். வீராயியின் காம்பராவை நோக்கி விரைந்து சென்றாள்.

அவள் போகும் பாதையின் ஓரத்திலே ஒரு தேயிலைச் செடியோடு காத்தான், காக்கை வலிப்பின் தாக்குதலால் ஓய்ந்து கிடந்தான். உணர்வு இன்னும் முற்றாக வரவில்லை. வாயி லிருந்து சிறிதளவு நுரை தள்ளியது. வேட்டி அவிழ்ந்து அவன் கால்மாட்டில் கிடந்தது.

"தம்பி? காத்தானைக் கொஞ்சம் அவருக்கு உணர்வு வருமட்டும் பார்த்துக்கிட்டு நில்லடா" என்று அங்கு நின்ற ஒரு பையனிடம் கூறிவிட்டுத் தன் வழியே ஓடினாள் வள்ளி. வீராயியின் அப்பா தனக்குக் கூறியவற்றைக் காத்தான் கேட்டிருக்க முடியாது என்று நினைத்தபோது, அவளுக்கு ஆறுதலாக இருந்தது. காத்தானுக்குத் தெரிந்திருந்தால் அது எங்கெல்லாம் போகுமோ?

அவள் வீராயியின் காம்பராவை அடைந்தபோது வீராயி தரையில் விரிக்கப்பட்ட ஒரு படங்கில் கிடந்தாள். உணர்வு வந்தும் இன்னும் அதிர்ச்சி போகவில்லை. மீனாட்சி நடுக்கத் துடன் ஏதோ பருக்கிக் கொண்டிருந்தாள். அவள் வள்ளியைக் கண்டதும் "இந்தா வள்ளியம்மா ஆ, நீ குடு ஊ" என்று சொற்களைத் தனக்கே உரித்தான அளபெடைகளுடன் நீட்டி, கையிலிருந்த குவளையைக் கொடுத்தாள்.

"வீராயி! அடி வீராயி" வீராயியின் தோள்களைப் பிடித்துக் குலுக்கினாள் வள்ளி.

"என்னடி வீராயி! காலையில உன்னோடை இன்னிக்கு இருக்கிறேன்னு சொல்ல வலோற்காரமாகப் போகச் சொன் னியே. சொல்லடி என்ன செய்யுறது?"

வீராயி கண்களை விழித்துத் திருப்பிப் படங்கில் முகத் தைப் புதைத்து 'ஓ'வென்று அழுதாள்.

வள்ளி கேட்டாள் :

"வீராயி! அழுது என்ன செய்வியாம். ஏதோ நடந்து விட்டது. தெய்வம் கைவிட மாட்டார்டீ."

வள்ளி இப்படிச் சொல்லும் போதே, அவள் கண்களும் கலங்கின. முந்தானைச் சேலையால் தனது கண்களையும் மூக்கையும் துடைத்துக் கொண்டாள்.

வீராயியை ஓரளவு தேற்ற வள்ளி வெகு நேரமாகப் பேசிக்கொண்டிருக்க வேண்டியிருந்தது. கடவுளை நேரில் கண்டுவந்தவள் போல் அவர் கருணை உள்ளவர் என்றும் கெடுதல் செய்பவர்கள் அதைக் கட்டாயம் அனுபவிப்பார்கள் என்றும், நல்லவர்கள் நன்மையையே அடைவார்கள் என்றும் பல உபதேசங்களைக் கூறினுள். போதனைகள் செய்வது படித்தவர்களுக்கும் ஞானிகளுக்கும் பிரத்தியேக உரிமையா?

வீராயியின் அழுகையை ஒருவாறு சமாளித்ததும் வள்ளி பக்கத்திலிருந்த தனது காம்பராவுக்குச் சென்றுள்.

அழுதுகொண்டிருந்த போது வீராயிக்கு மன வேதனை தெரியவில்லை. இப்போது உள்ளம் குமுறியது.

'அவர் அப்பாவைப் பற்றி, பொலீசுக்கு ரிப்போர்ட் செய்திருக்கிறுரே. அப்பா குடிச்சுட்டுத் தெரியாத் தனமாச் செய்ததைப் பெரிசாக்கலாமா?'

மற்ருெரு கேள்வி :

'என் மேல் ஆசையெல்லாம் மறந்து போச்சோ?'

அவள் மிகவும் வேதனைப்பட்டாள். இந்தப் பெரிய பிளவை நிரப்புவது எப்படி?

'அப்பாவை எதிர் யூனியன்காரர் என்று யோசிக்காமல் மாமா என்று யோசிச்சா இப்படிச் செய்திருப்பாரா?'

பனி நூல்களைத் திரையாகப் பின்னியவாறு இரவுப் பெண் வந்துகொண்டிருந்தாள். ரெங்கசாமிக் கங்காணி லயத

திற்குத் திரும்பவில்லை. மீனாட்சி ஈனஸ்வரத்தில் அவலப் பாட்டாக அழுது அந்தச் சூழ்நிலையில் மேலும் துன்பத்தை விதைத்தாள். வள்ளியின் காம்பராவிலிருந்து சிதம்பரமும் பொட்டும் வந்து, வீராயியைப் பலவிதமாகத் தேற்றிவிட்டுச் சென்றனர்.

வீராயி தனது வாசலுக்கு வந்து வெளியுலகைப் பார்த்தாள். தண்ணீர்க் குழாயடிக்கு அவள் கண்கள் திரும்பியதும் நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது. அங்கே குடத்தில் நீர் ஏந்திக்கொண்டிருந்த வள்ளியோடு, தலையில் கட்டுடன் மலையப்பன் பேசிக்கொண்டிருந்தான். பேச்சு முடிந்ததும் குனிந்தவாறு மலையப்பன் தனது லயப் பக்கமாகச் சென்றான்.

வள்ளி குடத்துடன் தனது காம்பராவுக்குள் ஓடினாள்.

வீராயி உலரப் போட்டிருந்த ஒரு தடித்த கம்பளியின் பின்னால் நின்று இதை எல்லாம் நன்றாகப் பார்த்தாள்.

மலையப்பன் அன்று வீராயியிடம் வரவில்லை. காம்பராவுக்குக் குடத்துடன் ஓடின வள்ளிகூட வரவில்லை.

வீராயி யோசித்துக்கொண்டிருந்தாள். அவள் மனதில் ஒரு புதிய கேள்வி:

'வள்ளி! உனக்கும் அவருக்கும் இந்தத் தொடர்பு எப்போ தொடக்கமடி?'

இன்னும் பல கேள்விகள்:

சொல்லப் போனால் இதே கேள்விதான். ஆனால் அவை பல உருவங்களில் இருந்தன.

# 9

**வீ**ராயிக்கு அன்றிரவும் நித்திரை வரவில்லை. படுக்கையில் அங்குமிங்குமாகப் புரண்டாள். அவள் தன்னைப் பழைய தடித்த கம்பளியால் போர்த்திருந்தாள். என்றாலும் குளிர் ஊசிகள் குத்தின. கண் மடல்களை மெல்லத் தளர்த்தி மூடினாள்.

மாணிக்க மலைத் தோட்டத்தின் எல்லையில், மலையிலிருந்து குளிர்ந்த பால் வழிவதுபோல் ஒரு சிறு அருவி. மலையப்பனும் வள்ளியும் அதில் குளித்துவிட்டு ஒன்றாக வந்தார்கள். அவள் உடுத்திருந்த மெல்லிய நனைந்த சேலை பால் ஆடையைப் போல் அவள் உடலைத் தழுவியது. சே! இந்த வள்ளிக்குக் கொஞ்சமாவது வெட்க மிருக்கக் கூடாதோ?

வீராயி தனது கண் மடல்களை மலர்த்த முயன்றாள். ஆனால் அவை கனத்தன. பக்கத்துக் காம்பராவில் வள்ளியுடன் மலையப்பன் பேசிக்கொண்டிருந்தான். இருவரும் புருஷன் மனைவி போல் குடும்ப இரகசியம் பேசினர். மடித்த முழங் கால்கள் முட்ட இருவரும் நெருங்கி இருந்தனர்.

வீராயி வெடுக்கென்று எழுந்து உட்கார்ந்தாள். இனி அவள் விடியுமட்டும் சும்மாவேனும் கண்களை மூடமாட்டாள். அப்போது இப்படியான குட்டிக் கனவுகள் அவளைச் சித்திர வதை செய்யமாட்டா அல்லவா!

நேற்று அந்தியில் மலையப்பனும் வள்ளியும் தண்ணீர்க் குழாயடியில் பேசிக்கொண்டு நின்றதையும், தங்கள் காம்பராக்

களுக்குப் போனதையும், அவர்கள் இருவரும் அவளைக்காண வராததையும் வீராயி யோசித்துக்கொண்டிருந்தாள். அவள் இதயத்திற்கு வெறி பிடித்தது.

அவள் தனக்குள் சொல்லிக்கொண்டாள் :

'இப்படி யோசித்துக்கொண்டிருப்பதிலும் பார்க்க, வெறும் பொய்க் கனவுகள் நன்றாக இருந்திருக்கும்'

காலையிலே, அதிகாலையிலே யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. துடித்து எழுந்து கதவைத் திறந்தாள் வீராயி. அங்கே காக்கை வலிப்புக்காரக் காத்தான் காத்துக் கொண்டு நின்றான். வீராயி கதவைத் திறந்ததும், தன் காப்பிரி மயிர்த் தலையைச் சொறிந்தவாறே உதட்டின் வலது பாதியால் ஒரு குட்டிச் சிரிப்பை நெளிய விட்டான் அவன். முக்கியமான ஒரு கடிதம் வரவேண்டிய நாட்களில் வந்த தபால்காரனைப் போல, அவனை வரவேற்றாள் வீராயி.

"ரெங்கசாமி!... ரெங்கசாமி!!" என்று படுக்கையிலிருந்து அழைத்த மீனாட்சி, தொடர்ந்து கேட்டாள்.

"வீராயி! யாருடி வந்தது?"

"அம்மாயி! காத்தான் வந்திருக்கிறாரு" என்று பதிலளித்தாள் வீராயி.

மீனாட்சி ஒரு தரம் இருமிவிட்டுக் கிழிந்த கம்பளியால் தன்னைப் போர்த்துக் கொண்டு மறுபடியும் குறண்டிப் படுத்தாள்.

விறாந்தையில் ஒரு படங்கை இழுத்துவிட்டு இருந்தான் காத்தான். காத்தான் கேட்டான் :

"என்ன வீராயி? கங்காணி படுக்கிற இடம் காலியா யிருக்கே!"

வீராயிக்கு அழுகை "குப்"பென்று வெடித்தது. முந்தானைச் சேலையின் ஒரு மூலையைத் தன் பற்களுக்குள் இடுக்கிக்கொண்டாள். பொருத்தமான இடங்களில் கூறப்படும் சில வாக்கியங்களில்தாம் எவ்வளவு கண்ணீர் கரைந்து கிடக்கிறது.

"அழாதே வீராயி! பெரியவரை டிக்கோயா ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருக்கிறாங்க" என்றான் காத்தான்."

"ஏ இப்படி 'ஓ' என்று கத்துறே? பெரியவருக்குச் சொற்ப காயம்தான்."

வீராயி குந்தி இருந்து அழுதாள். காத்தான் தனது உரைசல் காயங்களுக்கு எச்சில் தடவிக்கொண்டிருந்தான்.

"வீராயி" என்று அழைத்தான் அவன். அவள் குனிந்தபடியே இருந்தாள்.

"வீராயி! எனக்கு நேற்று வலிப்பு நல்லா வந்திடுச்சு... ... இந்தா பாரு புதுக் காயங்கள். டிக்கோயா ஆஸ்பத்திரியிலே மருந்து போட்டாங்க. அதோடு மலையப்பனையும் பார்த்துக்கிட்டேன்."

வீராயி நிமிர்ந்து காத்தானின் கண்களைப் பார்த்தாள். அவன் தன் புண்களை எண்ணியபடியே தொடர்ந்து சொன்னான்.

'பொல பொல' வென்று சொல்லிக்கொண்டே இருந்தான்.

"மலையப்பன் தடிப்பயல் போலப் படுத்து இருக்கிறான். அவனுக்கென்ன? சும்மா அப்படி ஒரு தரம் தலையிலே தட்டிக்கிட்டா உசிரா போயிட்டுது..... பாவம், பெரியவரைத்தான் பொலிஸ்காரங்க நல்லா மொத்திட்டாங்க... அழுது என்ன பிரயோசனம் வீராயி? பக்கத்தில் பாம்பு இருந்தா ஒருநாளைக்கு கடிக்கத்தானே செய்யும்?...வள்ளியோட அப்பா சிதம்பரம் பொலிசுக்கு விஷயம் எல்லாம் சொல்லியிருக்கான் பாரு."

பாம்பை மிதித்தவள்போல் திடுக்கிட்டாள் வீராயி. சிந்தனை விஷம் அவள் தலைக்கு மெல்ல மெல்ல ஏறிற்று. தனது தலையின் பளுவை இரு கைகளாலும் ஏந்தினாள்.

"வீராயி! அந்தக் குள்ளன் பகி மிகவும் கெட்டவன்" என்றான் காத்தான்.

"அவன்தான் நம்ம பெரியவருக்குக் குடிக்கப் பழக்கிட்டான். தோட்டச் சின்னத்துரை, கண்டக்டர் துரை, டாக்டரு

எல்லாருமே நம்ம கங்காணியையும் வைச்சு இராவிரவாக குடிக்கிறுங்க. அப்புறம் பெரியவரை அனுப்பிக்கிட்டு ஏதோ எல்லாம் பேசிக்கிடுறுங்க".

மீனாட்சி படுத்தபடியே தொடர்ச்சியாகச் சிறிது நேரம் இருமிவிட்டுத் துப்பினுள்.

"அம்மாயி! எச்சிலில இரத்தம் போகுதா?" என்று கேட்டாள் வீராயி.

மீனாட்சி பதிலளிக்கவில்லை. என்ன கேள்வி இது? அந்த இருட்டில் எச்சிலில் இரத்தக் கீறல்களைப் பார்க்க முடியுமா மீனாட்சியினுல்? அப்படித் தெரிந்தாலும் காத்தான் இருக்கும் போது வாயைத் திறந்து ஏதாவது பேச மீனாட்சி அனுபவம் இல்லாதவள் அல்ல. காத்தான் தான் திரும்பவும் தனது வாயைப் பிளந்தான்.

அவன் சொன்னுன்:

"மலையப்பன், யூனியன் யூனியன் என்று சாகிறுன். மகாநாடு ஒன்று நடத்தப் போகிறுன். வள்ளியிட அப்பா, மலையப்பனின் சங்கத்து வேலைகளைச் செய்துக்கிட்டு ரெங்கசாமிக் கங்காணிக்கு மண் போட்டுட்டான்."

வெளியிலே தோட்டத்துப் பெண்களும் ஆண்களும் மலைக்குப்போகும் ஆரவாரம் கேட்டது.

"நான் அப்போ வர்ரேன் வீராயி. இன்னிக்கு வெட்டு வேலை" என்று கூறியவாறு காத்தான் வெளியேறினுன்.

வயிற்றுக் குழப்பக்காரனுக்கு வாந்தி எடுத்தபின் ஏற்படும் ஆறுதல் உணர்ச்சி அவனுக்கு அப்போது இருந்தது.

வீராயி அப்படியே சுவரோடு சாய்ந்து கொண்டிருந்தாள்.

'வள்ளி! உனக்கும் அவருக்கும் இந்தத் தொடர்பு எப்போ தொடக்கமடி?'

இந்தக் கேள்வி யாரும் கேட்கக்கூடிய தொன்றுதானே?

நேற்று அவருடன் குழாயடியில் பேசியபோது, வள்ளி என்னவெல்லாம் சொன்னாளோ. அவள் நன்றாகப் பேசி யாரையும் மருட்டக்கூடியவள். உள்ளத்திலே கள்ளம் இல்லா விடில், வள்ளி உடனே என் காம்பராவுக்கு வந்து எல்லாவற் றையும் சொல்லியிருக்கமாட்டாளா?

அவருக்கும் சங்க வேலைகள் தானே பெரிசு. என்னுடன் பேசிக்கொண்டிருக்க அவருக்கு நேரம் இல்லையாம். தினமும் வந்து, பிரட்டுக்களத்திலே பேர் போடுவது போல் சில நிமிஷங்கள் இருந்து விட்டுப்போகிறார்.

'உங்களுக்கு என்மேல் அன்பு இல்லை' என்று சொன் னேன் ஒரு நாள்.

'வீராயி! இந்த உலகத்திலே உன் மேலே நான் அன்பு வைச்சிருக்கிற அளவுக்கு, ஒரு உயிர் இன்னொரு உயிர்மேல் அன்பு வைக்க முடியுமா?' என்று கேட்டார் அவர். அவர் கண்கள் அந்த இமைப்பொழுது நேரத்தில் கலங்கின.

'இது என்னங்க' என்று துடித்தேன். அவர் கண்களை நான் துடைக்க எழுந்தபோது, அவரே துடைத்துவிட்டார். அவர் நிதானமாகக் கேட்டார்:

'வீராயி! தனக்கு மட்டும் வாழ்ந்து காலத்தை வீணாக்கி விட்டுத் தேயிலைச் செடிகளுக்கு எருவாகப் போகும் மலையப்ப ஞெடு தினமும் மணிக்கணக்கில் பேச விரும்புகிறாயா? அல்லது, கஷ்டப்படும் சகோதரத் தொழிலாளரின் சுகமான வாழ்விற் காகத் தனது வாழ்க்கையை அர்ப்பணம் செய்யும் மலையப்ப னுடன் தினமும் சில நிமிடங்கள் இருக்க விரும்புகிறாயா?'

இந்தக் கேள்விக்கு வீராயியின் இதயத்துப் பதில் இது தான்.

'நீங்க என்னோட பல மணிநேரம் இருக்கவும் வேண்டும், தோட்டத்து மக்களுக்காக உழைக்கவும் வேண்டும்.'

இது நடக்கக் கூடிய தொன்றா?

வீராயி ஒன்றும் பேசவில்லை.

'உங்களுக்கு எது சரியாகப்படுகிறதோ அப்படியே செய் யுங்க' என்று கூறுவது போல அவன் கன்னங்களைத் தன் குளிர்ந்த கைகளால் வருடினாள் அவள்.

பார்க்கப்போனால் மலையப்பன் தோட்டத் தொழிலாள ருக்கு ஒரு சிறு தலைவன். அவனுடன் ஒரு சில நிமிடங்க ளாவது தினமும் நெருங்கிப் பழகக் கொடுத்து வைக்கவேண்டும். வீராயி அதிர்ஷ்டசாலிதான். ஆனால் அந்த அதிர்ஷ்டத்தைக் கூட வள்ளி பறித்துவிட்டாளே. இனியெல்லாம் மலையப்பன் அவளைப் பார்க்க வருவானா?

வள்ளி எத்தகைய துரோகம் செய்துவிட்டாள்!

வீராயி வள்ளியை வெறுத்தாள்.

"வீராயி! வீராயோ"

படங்கு, கூடை சகிதம் வள்ளி அங்கு வந்து நின்றாள்.

"வீராயி! நீ இன்னிக்கும் மலைக்கு வரலையா?" என்று கேட்டாள் வள்ளி.

வள்ளி வீராயியின் முகத்தைப் பார்த்தாள். ஐயோ! அந்த முகததை அவளால் ஓர் இமைப் பொழுதுக்கு மேல் தொடர்ந்து பார்க்க முடியவில்லை.

அது முத்து வீராயியின் முகந்தானா? வள்ளி வீராயி யின் பக்கத்தில் சிறிது நேரம் ஒன்றும் பேசாமல் இருந்தாள்.

வீராயி கேட்டாள்:

"நீயும் உங்கப்பாவும் எத்தனை நாளாக இந்த நாடகம் நடத்திறீங்க?"

வள்ளியை இந்தச் சொற்கள் காதுகளில் மலை அட்டைகள் புகுந்ததுபோல் வதைத்தன. வள்ளிக்குப் பேச்சுவரவில்லை.

வீராயி தொடர்ந்து கேட்டாள்:

"உனக்கு இங்குவர வெட்கமில்லையாடி?"

"வீராயி! நீ என்னைச் சந்தேகிக்கிறாய்" என்றாள் வள்ளி.

"வீராயி! நான் சொல்லுவதைக் கொஞ்சம் கேட்கிறாயா?"

"பேசாதேடி!" ஆவேசம் வந்தவள்போல் துடித்தாள் வீராயி.

இந்த நேரத்தில் நடந்தவற்றைக் கூறி, நியாயம் பேசமுடியுமா வள்ளியினால்? நிதானமான புத்தி படைத்தவர்கள் யாருமே அந்த நேரத்தில் வாயைத் திறந்திருக்கமாட்டார்கள்.

வள்ளி திரும்பிவிட்டாள். பைத்தியம் பிடித்தவள் போல், தான் வேலை செய்யவேண்டிய மலைக்கு ஓடினாள். அங்கே ஒரு தேயிலைச் செடிக்கு முன்னால் நின்றாள். இரண்டிலைகள் ஒரு மொட்டு என்று அவள் கிள்ளவிருந்த கொழுந்துகள், நீர் திரையிட்ட அவள் கண்களுக்கு இரண்டு மொட்டுகள் ஓர் இலையாக எங்கும் காட்சி தந்தன.

அவள் மனம் ஆராய்ச்சி செய்தது.

'நேற்று மலையப்ப அண்ணை என்னுடன் பேசியதை யாரோ வீராயிக்குச் சொல்லியிருக்கிறார்கள். கதை கட்டியிருக்கிறார்கள். அவர் விஷயத்தில் என்னைத் தனக்கு எதிரியாக நினைக்கிறாள் வீராயி.'

வள்ளியின் அப்பா சிதம்பரம் நாடகக்காரனும். வள்ளி மிகவும் துக்கப்பட்டாள்.

தோட்டத்துச் சின்னத்துரை வீராயியைத் தனது சிநேகிதருக்குப் பலியாக்க நினைத்தபோது சிதம்பரம் அல்லவா கொதித்து எதிர்த்தார். மலையப்பன், ரெங்கசாமிக் கங்காணி முதலியோருக்கு அவர் அதைப்பற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லையே.

'அப்படிப் பார்த்தால் அப்பா நடிகர்தான்.'

வள்ளி தன் கண்களைத் துடைத்துக்கொண்டாள். அவள் கையில் ஒரு பிடி கொழுந்து இருந்தது.

ஆமாம், அவை இரு இலைகளும் ஒரு மொட்டுமாகவே இருந்தன.

மலையப்பனுக்கும் தோட்டச் சின்னத்துரை மகாராஜனுக்குமிடையே வீராயி ஒரு மொட்டாகவே காட்சிதந்தாள் அவளுக்கு.

எப்படியாகிலும் மலையப்ப அண்ணுவுக்கே வீராயி மனைவியாக வேண்டும். இது வள்ளியின் பிரார்த்தனை. மகாராஜனுக்கு வீராயி மேல் இருந்த ஒருவித ஆசையால் சில விஷயங்கள் நடந்துவிட்டன. அவற்றை அவள் அப்பா சிதம்பரம் மூலம் வள்ளி ஓரளவு அறிந்திருந்தாள். ஆனால் அவள் அவற்றை யாருக்கும் சொல்லவில்லை. 'வீராயி பக்கத்துக் காம்பராக்காரிதானே. அவசியம் வரும்போது சொல்லலாம்' என்று இருந்துவிட்டாள்.

அப்படி அவள் இருந்துவந்தது எவ்வளவு ஆபத்தில் வந்துவிட்டது.

'சே! மலையப்ப அண்ணு நேற்று அந்தியில் வந்ததை நான் உடனே வீராயிக்குச் சொல்லியிருக்க வேண்டும்.'

வள்ளி இப்படி யோசித்தாள்.

யோசித்துப் பார்த்தால் அது முற்றுக அவள் பிழை இல்லை. ரெங்கசாமி பொலீஸ்காரரோடு போகும்போது சொன்னுன், வீராயிக்கும் மலையப்பனுக்கும் பேச்சுத தொடர்பு இருக்கக்கூடாதென்று. அப்படிச் சொல்லி அரைநாள் கூட ஆகவில்லை. ரெங்கசாமி எச்சரிக்கை செய்ததை அவள் மலையப்பனுக்குத் தெரிவித்தது சரிதானே?

'வள்ளி, இப்போ வீராயியுடன் நான் பேசிஞ ஆபத்து. நான் மகாநாடு விஷயமாக நாவலப்பிட்டிக்குப் போகிறேன். மூன்று நாட்களில் வந்துவிடுவேன். வீராயிக் குட்டிக்குச் சொல்லிவிடு' என்றுன் மலையப்பன். நாவலப்பிட்டியிலிருந்து வந்து எல்லாவற்றையும் சரிப்படுத்தலாம் என்று நம்பிஞன் அவன். மலையப்பன் கூறியவற்றையும் ரெங்கசாமியின் எச்சரிக்கையையும் அடுத்த நாள் விளக்கமாக வீராயிக்குத்

தெரிவிக்க இருந்தாள் வள்ளி. வீராயி அன்று மூர்ச்சை போட்டுக் கிடந்தவள், அந்தச் செய்திகளைத் தாங்கியிருக்க மாட்டாள்.

"ஏய் பொம்பளை! என்ன அழுதுக்கிட்டு நிக்கிறே. முதலாம் நிறுவைக்குப் போயிட்டியா?" என்று ஒரு கங்காணியின் மிரட்டல் கேட்டது. அக்கம் பக்கத்துப் பெண்கள் எல்லாரும் நிறுக்கும் மடுவத்திற்குப் போய்விட்டார்கள்.

வள்ளியின் கூடை வெறுமையாக இருந்தது. இதயம் கனத்தது. அவள் தன்னுடைய லயத்தை நோக்கி நடந்தாள். நடந்தவற்றை உடனே வீராயிக்குத் தெரிவிப்பாள் அவள். அல்லாவிடில் அவள் இதயம் வெடித்துவிடும்.

'வீராயி மிகவும் வேதனைப்படுகிறாள். அவளைத் தேற்ற வேறு யாரும் இருக்கிறார்களா?'

கஷ்டப்படுபவர்களுக்கு யோசனைகள் சில வேளைகளில் கெட்டதாக வரும்போலும். அதனால்தான் வீராயி ஏசினாள். வள்ளியின் நல்ல உள்ளம் சமாதானமடைந்தது.

'நான் வீராயிக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை. நான் அவளை நேசிக்கிறேன். அவள் ஏசியதற்கு அர்த்தம் கொடுக்க மாட்டேன்.'

அவள் செம்மண் வழியாக ஓடினாள்.

அவள் சென்ற வழியில், அவள் எப்போதோ பார்த்த ஒருவன் வந்துகொண்டிருந்தான். அவன் வள்ளியை நிறுத்தினான்.

"நீ வள்ளியம்மா இல்லே?" என்று வினவினான்.

"ஆமாம்"

அவன் ஒரு கடிதத்தை அவளிடம் நீட்டிச்சொன்னான்:

"இந்தா, மலையப்பன் கொடுக்கச் சொன்னான்"

கடிதத்தை வாங்கிய வள்ளி, அதை அவனிடமே வாசித்துக்காட்டும்படி கொடுத்தாள்.

"என்ன, அப்படியே படிக்கட்டுமா?" என்று அவன் இழுத்து வினவி, வள்ளியின் சம்மதத்தைப் பெற்றதும் ஒவ்வொரு சொல்லாக வாசித்தான்.

'என் அருமைக் காதலி வள்ளிக்கு, மலையப்பன் அன்புடன் எழுதிக்கொள்வது'

"என்னகுட்டி, காயிதத்தை அப்படியே படிக்கட்டுமா? ஏதோ காதல் கடிதம்போல இருந்திச்சிட்டின்னு, இப்படி சொந்த விஷயங்களை மற்றவங்க தெரிஞ்சிக்கிடலாமா?" கண்களில் விஷக்குறும்புப் பார்வையுடன் கேள்விகளை ஏளனமாக இழுத்தான் அவன்.

வள்ளி திடுக்கிட்டாள்.

நள்ளிரவில் இரு கள்ளக் கைகள் காம ஸ்பரிசத்துடன் தன்மேல் குலவியதைப்போல் உணர்வுற்றுத் திணறினாள். அந்தக் காமக் கைகள் அவள் "அண்ணு" என்று அழைக்கும் ஒருவரின் கைகளாக இருந்தால்...?

வள்ளியின் சம்மதத்தை மீண்டும் கேட்காமலே அந்தக் கடிதத்தை, வேதனைதரும் விகட பாவனைகளுடன் படித்தான் அவன்.

'என் அருமைக் காதலி வள்ளிக்கு, மலையப்பன் அன்புடன் எழுதிக்கொள்வது: நான் வீராயியைப் பார்க்காமல் போனது எவ்வளவு நல்லது. எனக்குத் தெரியாமல் பல காரியங்கள் நடந்துவிட்டன. இனி அவள் பெரிய இடத்துப் பெண். எங்களை இனி மதித்து நடப்பாளா? வள்ளி! நான் உன்மேல் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறேன் தெரியுமா? என் கனவுகளிலே நீ வீராயிக்குக் கூடுதலாகத தோன்றியிருக்கிறாய். நீ தான் என் வாழ்க்கை...'

கடிதத்தை அப்படியே பறித்துக் கொண்டு லயத்தை நோக்கி விரைந்தாள் வள்ளி. கடிதத்தைப் படித்தவனின் பரிகாசச் சிரிப்பு அவளை உதைத்து முன்னால் தள்ளியது.

பாதையின் இரு பக்கங்களிலும் பச்சை உடுத்து நின்ற தேயிலைச் செல்விகளும் அவளைப் பார்த்து நகைத்தனவோ?

அவைகளைப் பார்க்க அவளுக்கு வெட்கமாக இருந்தது. பின்னால் ஓடும் பாதையைப் பார்த்தபடியே சென்று தனது காம்பராவை அடைந்தாள். படுத்துக் கொண்டாள்.

வீராயியைப் போய்க் காணவும், தான் சொல்ல வேண்டியவற்றைச் சொல்லவும் இனி முடியுமா?

வீராயியின் கண்களை எப்படிப் பார்ப்பது? அவள் இரவிக்கைக்குள் செருகியிருந்த அந்தக் கடிதம் இதயத்தைச் சுரண்டியது.

'வீராயி என்னை ஏசியது சரியானதாக வரப்போகிறதே! நான் தங்கையென்ற முறையில் மலையப்ப அண்ணவுடன் பழகினதை அவள் வேறொரு மாதிரியாக நினைத்தாள். ஆனால் அவரும் அந்த விதமாக அல்லவா எண்ணிவிட்டார்!'

வள்ளியின் சிந்தனையில் ஒரு கேள்வி:

'இந்தக் குழப்பத்தால் என்ன எல்லாம் நடக்குமோ?'

என்ன நடந்தாலும் மலையப்பன் அவளுக்கு அண்ணதான். அவளைப் பொறுத்தவரையில் அவள் அவனுக்குத் தங்கையாகவே என்றும் இருப்பாள். அவள் காம்பராவில் குளிர்ந்த சிமெந்துத் தரையில் கால்களை நீட்டி, கைகளைப் பின்னால் முட்டுக் கொடுத்தபடி இருந்தாள். துக்க மூச்சுக்கள் அவள் மார்பை மேலும் கீழும் எழுந்து தாழச்செய்தன.

'எப்படி இருந்தாலும் ஆண்களுக்கு அடக்கம் வேண்டும். அதிலும் சீர்திருத்தம் செய்யப்போகிறவர்கள், தங்கள் சொந்த வாழ்க்கையில் மிகக் கவனமாக இருக்கவேண்டும்'

வள்ளி இப்படியெல்லாம் யோசித்துக்கொண்டிருந்தாள். மிகவும் கவலைப்பட்டாள்.

அவள் கடிதத்தை எடுத்து விரித்துப்பார்த்தாள். அவளுக்கு எழுத்துக்கள் தெரியாது. அதில் மலையப்பனின் முகம் தான் தெரிந்தது.

அவள், உண்மையாக வாய்திறந்து கேட்டாள்:

"என் அண்ண! நீங்களா இதை எழுதினீங்க?"

# 10

மலைகளின் உச்சிகளில் முகிற் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தன. அவற்றில் சில, மலைகளின் அரைவாசிக்கு இறங்கிப் பசுமையான தேயிலைச் செடிகளுக்கிடையே தவழ்ந்து சென்றன.

முகில் தவழாத சிறிது பதிவான இடத்தில் தோட்டத் துச் சின்னத்துரை மகாராஜனின் அழகான பங்களா இருந்தது. பங்களாவைச் சுற்றி ஒரு பூந்தோட்டம். பலவிதமான பூக்கள். அந்தூரியம் பூவில் மாத்திரம் நாற்பது வகை. பல விதமான கொடிகள். பலவிதமான இலைகள். மரங்கள், செடிகள், கொடிகள் எல்லாம் ஓர் ஒழுங்கில் நாட்டப்பட்டிருந்தன. சவுக்கு மரம் ஒன்று ஆடும் மயில் உருவத்திலும், அழகிய பெண் உருவத்திலும் வெட்டப்பட்டிருந்தன.

மகாராஜன், தனது பூந்தோட்ட பங்களா இருந்த மலையின் விளிம்பில் நின்று மஸ்கேலியாவைப் பார்த்தான். பதது மைலுக்கப்பால் இருந்த சிவனொளிபாதமலையின் சிகரம் இலிங்க உருவிலே தெரிந்தது. அந்த மலைத் தொடருக்கும் மாணிக்கமலைத் தோட்டத்திற்குமிடையே "காசில்ரீ' நீல நீர்ப் பரப்பு. சிவனொளிபாதமலையின் யாத்திரிக சீசன்' தொடங்கி விட்டதால், மலை உச்சியிலும் மலைப் பாதையிலும் மின்சார விளக்குக்களைப் பொருத்தியிருந்தார்கள். அவை தூரப் பார் வைக்கு, வான அரங்கில் பாம்பு உருவில் ஒரு புதிய நட்சத் திரக் கூட்டம் தோன்றி நெளிந்து கிடந்ததுபோல் இருந்தன.

மகாராஜன் அந்த அழகைப் பார்த்துக்கொண்டு நின்றான். அவனுக்கு அந்தக் காட்சி மணப் பெண்ணின் நீண்டு நெளிந்த பின்னலில் பொருத்தப்பட்ட சடை நாகம் போல் இருந்தது.

இரவும் பனியும் ஒன்றாக வந்துகொண்டிருந்தன. பிரிக்க முடியாதவாறு அவை இரண்டும் கலந்துகொண்டன. மகாராஜன் ஒரு விதப் போதை மயக்கத்துடன் தனது படுக்கை அறைக்குச் சென்றான். தனது காலணியைப் படுக்கை அறையின் ஒரு மூலையில் கழற்றிவிட்டு விரித்திருந்த ஒரு கம்பளத்தின் மேல் நடந்து கட்டிலில் சாய்ந்தான். கட்டிலின் ஸ்பிரிங் மெத்தை மெல்ல ஆடி அசைந்து நெளிந்து கொடுத்து, சுகம் தந்தது. பக்கத்தில், கட்டிலின் கைக்குழந்தை போல் இருந்த ஒரு குட்டி மேசை மீது கையை வைத்து ஒரு போட்டோவை எடுத்தான். அதை மீண்டும் ஒரு முறை பார்த்துக்கொண்டிருந்தான்.

அவன் அதை இதற்கு முன் ஓர் ஆயிரம் தடவை பார்த்திருப்பானோ?

அந்தப் போட்டோவில் கொழுந்து கிள்ளும் பெண்கள் வரிசையாக நின்றனர். அது கொழுந்து நிறுக்கும் மடுவத்திற்கு முன்னால் எடுக்கப்பட்ட படம். இளம் பெண்களின் முகங்களில் நாணத்தின் கோண நெளிவுகள் தெரிகின்றன. தோட்டத்துக்குப் புதிதாக வந்த சின்னத்துரை பிடித்த படமல்லவா அது? ஒரு சஞ்சிகையின் தீபாவளி மலரின் அட்டைப் படமாக அமையக் கூடிய அழகுப் பொலிவுடன் வீராயி அந்தப் போட்டோவில் 'போக்கஸ்' பண்ணப்பட்டிருந்தாள். போட்டோவில் அசையாத அவள் அழகு நிழல் மகாராஜனின் இதய அரங்கில் ஆடியது.

மகாராஜனின் மனத்தில் ஒரு கேள்வி. சில மாதங்களாக இருந்துவரும் மன உளைச்சல்.

'தோட்டக் குட்டியை ஒரு சின்னத்துரை கல்யாணம் செய்வது சரியா ?'

இந்தக் கேள்விக்கு 'ஆம்' என்று சொல்வது புத்தி சாலித்தனமாகுமா ?

எடுத்தால்போல் 'இல்லை' என்றும் கூற முடியாது.

மகாராஜன்தான், சீமையிலிருந்து வந்து தோட்டத்தில் குதித்தவனா? ஒருகாலம் கூலியாக இருந்தவர்களின் வாரிசு தானே. அவன் அப்பா, தலவாக்கொல்லை எலிசபெத் எஸ்டேட்டில் ஒரு கணக்கப்பிள்ளை. அங்கே தகப்பனுக்குத் துரையாக இருக்க விரும்பாமல், மகாராஜன் மாணிக்கமலைத் தோட்டத்திற்கு வந்து சரியாக ஒரு வருடம் பூரணமாகிவிட்டது. என்றாலும், 'கண்ணன் தீராத விளையாட்டுப் பிள்ளை' என்ற ரீதியில் மலைகளில் தனது அல்சேஷன் நாயுடன் உலாவிவரும் மகாராஜன் தோட்ட நிர்வாகத்தின் அரைக்கால்வாசியையாவது புரிந்துகொண்டான் என்று கூற முடியாது. நிர்வாகத்தை ஓரளவு திருப்தியாக கொண்டுசெல்வதற்குக் கண்டக்டர், டீ மேக்கர், டிஸ்பென்சர், ஹெட்கிளார்க் முதலியோரின் அனுபவச் சரக்கு, அவனுக்கு மிகவும் வேண்டியிருந்தது. அவனுக்குப் புத்திதானம் செய்பவர்களும் இதை நன்கு அறிந்திருந்தனர். வேண்டிய நேரங்களில் அவனுடைய உதவிகளை வட்டியும் குட்டியுமாக வாங்கி அனுபவித்தார்கள்.

டெலிபோன் கிணுகிணுத்தது.

இரா அரட்டைக்கு நண்பர்கள் இன்னும் வரவில்லையே என்று பார்த்துக்கொண்டிருந்த மகாராஜன் எழுந்து டெலிபோனை எடுத்தான்.

"ஹலோ.........ஓ டாக்டர் பதியா?" என்று கேட்டான். அவன் முகத்தில் சிநேகிதப் புன்னகை ஒன்று ஒவ்வொரு தசையாகப் பரவியது.

அவன் தொடர்ந்து சொன்னான் :

"நான் இன்று டெனிஸ் விளையாடப் போகலே. இன்னும் யாருமே இங்கு வரலே. ஆமா பிரிட்ஜ் விளையாடலாம்.........ஓ, நிறைய விஷயமிருக்கோ?"

மகாராஜன் சிறிது நேரம் பதி பேசுவதைக் கேட்டுக் கொண்டே நின்றான். அவன் உதடுகளில் புன்சிரிப்பு, கண்களில் பிரகாசம், நெற்றியில் சிந்தனைச் சுருக்குகள் மாறி மாறியும் ஒன்றாகக் கூடியும் தோன்றின.

அவன் கேட்டான்:

"என்ன டாக்டர் உங்களுக்கில்லாத ஜீப்பா? நீங்கள் ரெடியானதும் அனுப்புகிறேனே."

டெலிபோனைப் பக்குவமாகக் கீழே வைத்த மகாராஜன், உற்சாகத்துடன் தனது உல்லாச அறைக்கு வந்து ஓர் அரைச் சாய்வு நாற்காலியில் சாய்ந்தான். ஒரு சிகரெட்டை உதட்டில் ஒட்டிப் பற்றவைத்தான். சிகரெட் புகை மோதிர வடிவில் பிறந்து, விரிந்து விரிந்து பெரு வட்டங்களாகி மறைந்தது. மகாராஜனின் சிந்தனை, சர்க்கஸ் நாயைப் போல் அந்த வட்டங்களுக்கூடாகத் தாவித் தாவிப் பாய்ந்தது.

கண்டியில் டிரினிட்டி கல்லூரியில் செல்லப்பிள்ளையாகக் கல்லூரி விடுதியில் இருந்த காலம், கிரிக்கெட் கோஷ்டியில் ஒருவனாக இருந்து பெற்ற வெற்றிகள், ஜி. சி. ஈ. பரீட்சையில் பௌதிக சாஸ்திரம் என்ற பூதாகார உருவத்துடன் ஐந்து தடவை போரிட்டும் தோல்வியடைந்தது எல்லாம் அவன் ஞாபகத்திற்கு வந்தன. மேலே குறிப்பிட்ட அந்தத் தோல்வியினால் அவன் தகப்பனின் விருப்பத்தை நிறைவேற்ற டாக்டர் படிப்புக்குப் போகமுடியாமல் போய் விட்டது. அவனுடன் படித்த சில மாணவர்கள் இப்போது டாக்டர்களாகி, கண்டி பெரியாஸ்பத்திரியில் வேலை பழகினர். மகாராஜனோ டிரினிட்டி கல்லூரியில் படிப்பு முடிந்ததும் நான்கு வருடங்களை எலிசபெத் எஸ்டேட்டில் கழித்தான். ஒரு கணக்கப்பிள்ளையின் மகனுக்குச் சின்னத்துரையாவதற்கு அந்தஸ்துப் போதாது என்றது நிர்வாகம்.

மகாராஜனின் மூதாதையர் ஒரு காலம் கூலிகளாக இருந்தவர்கள். அவர்களின் வாரிசு துரையாக முடியுமா?

சிந்திக்க வேண்டிய பிரச்சினைதான்.

பல வருடங்களுக்கு ஒரு முறைதான் இந்தச் சிக்கல் ஏற்படுகிறது. ஓர் இலட்சம் கூலிக்காரக் குடும்பங்களில் ஒரு குடும்பத்தில் ஒருவன் படித்து விடுகிறான்!

மகாராஜனுக்கு டிரினிட்டி கல்லூரிப் படிப்பு மிகவும் உதவி செய்தது. அவன் கல்லூரி நாட்களில் பல துரைமாரின் மக்களுடன் பழகியிருக்கிறான். அவர்களுடன் குடித்து உணவருந்தி, உல்லாசமாகப் பொழுது போக்கிக் காலத்தைக் கழித்திருக்கிறான். இவை எல்லாவற்றிற்கும் மேலாகத் தேயிலைத் தோட்டக் கூலிகள் காட்டுமிராண்டிகள் என்று ஒப்புக்கொள்ளப் பழகியிருக்கிறான்.

அவன் சின்ன உருவமானாலும் பந்தயக் குதிரைகளை ஓட்டும் ஜொக்கியைப் போல் முறுக்கேறிய தேக வனப்பு உடையவன். உடுப்பும் ஏறத்தாழ இந்த வர்ணனைக்கேற்றதாகவே இருக்கும். பலதடவைகளில் மகாராஜன் கூலிகளைத் தனது பூட்ஸ் காலால் உதைப்பதை எலிசபெத் தோட்டப் பெரிய துரை பார்த்திருக்கிறார்.

மகாராஜனை ஒரு சின்னத் துரையாக்கி டிக்கோயா மாணிக்கமலைத் தோட்டத்திற்கு அனுப்புவதாகத் தோட்ட நிர்வாக சபை தீர்மானித்தது. மாணிக்கமலைத் தோட்டம் எலிசபெத் எஸ்டேட்டிலும் பார்க்க நிலப்பரப்பிலும் பொருளாதாரத்திலும் அந்தஸ்திலும் குறைந்ததாகும்.

'கிணிங்-கிணிங்' டெலிபோன் மீண்டும் ஒரு முறை அழைத்தது.

"ஹலோ...... இல்லை டாக்டர், பொலீசிலிருந்து ஒரு தகவலும் வரலை. நீங்க டிக்கோயா ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டாம்" என்றான் மகாராஜன்.

டெலிபோனைக் கையில் பிடித்தவாறு, சுவரிலிருந்த ஒரு பொத்தானை அவன் அழுத்த, மின்சாரப் பொம்மை போல் ஓடிவந்து ஒரு வேலைக்காரன் நின்றான்.

"உடனடியாக வாங்க டாக்டர்" என்று டெலிபோனில் சொன்ன மகாராஜன் அதை வைத்து விட்டு "பெரியசாமி! டிரைவர் நிற்கிறானடா?" என்று கேட்டான்.

"ஆமாங்க"

"தோட்ட டாக்டர் ஐயாவிடம் போய், அவரை அழைச்சிட்டு வரச் சொல்லிடு......இந்தா, வர்ர வழியிலே டீமேக்கர் ஐயாவைப் பார்த்து அழைச்சு வரச்சொல்லு"

"சரிங்க"

டாக்டராக வரமுடியாத மகாராஜன், டிஸ்பென்சர் பதியை டாக்டர் என்று அழைத்து அவர்மீது அதிக மதிப்பு வைத்திருந்தான். அத்துடன் கண்டிக்குப் போகும் நாட்களில் ஆஸ்பத்திரிக் கருகில் பிரமச்சாரி டாக்டர்கள் வசிக்கும் விடுதியில் தங்குவான். அவர்களில் இருவர் டிரினிட்டி கல்லூரியில் அவனுடன் படித்த நண்பர்கள். நாள் முழுவதும் கடுமையாக உழைத்துவரும் இந்த இளம் டாக்டர்கள், இரவுத்திரையின் பின்னணியிலே போத்தலும் விளையாட்டுக் 'கார்ட் பாக்கெட்'டுமாகப் பெரிய ஹாலில் கூடுவார்கள். இராவேலைக்குப் போகும் டாக்டர்களும் வார்ட்டுக்குப் போவதும் வந்து மற்றவர்களுடன் இலேசாகக் கலந்து கொள்வதுமாக இருப்பார்கள். சிகரெட் புகை, மதுவின் நெடி, ஆங்கில கீத அலைகள் உண்டாக்கும் சூழலில் மகாராஜனும் இரண்டறக் கலந்து கொள்வான். இடையிடையே ஆஸ்பத்திரியில் வேலை பார்க்கும் நர்ஸ்மாரைப் பற்றிய விபரங்களைத் தலை முதல் கால்வரை அறிந்து கொள்வான். அந்தி வேளைகளில் டாக்டர்கள் விடுதியின் பூங்காவில் நின்று கொண்டு வேலைக்கு அந்த வழியாக வந்து போகும் நர்ஸ்மாரையும் நர்ஸ் மாணவிகளையும் பார்த்துக்கொண்டு நிற்பான்.

"மிஸ்ஸி! 'டாக்டர்' மகாராஜன் உனது அழகிலே சொக்கிப் போய்விட்டார்" என்று அறிமுகப்படுத்துவான் ஓர் இளம் டாக்டர்.

"மிஸ்! டிக்கோயா ஆஸ்பத்திரியின் டி. எம். ஓ. டாக்டர் மகாராஜன் உம்மைப் பற்றி விசாரிக்கிறான்"

இப்படியான அறிமுகங்கள் மகாராஜனுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் தந்தன. அந்த நேரங்களில் அவன் காதுகளில் 'ஸ்டெத்தாஸ்கோப்' வைத்தது போலல்லவா இருக்கும் அவனுக்கு. 'ஸ்டெத்தாஸ்கோப்'பின் நுனியிலே அவன் காமித்த அழகிகளின் இதயங்கள்!

இரவெல்லாம் இந்த நினைவுகள் கனவாகும். சில வேளைகளில் கனவு நனவாகும். ஆமாம்! அந்தப் பிரம்மச்சரிய டாக்டர்கள் விடுதியிலுள்ள ஓர் அறையில், இரவின் நிர்வாண நிசப்தத்திலே...

ஒரு நாள் ஒரு டாக்டர் கேட்டான்:

"மகாராஜன்! இவர்களைப் போல் தோட்டத்திலே நல்ல குட்டிகள் இருப்பாங்களில்லையா?"

இன்னும் ஒரு டாக்டர் சொன்னான்:

"குளிர்ச்சியான பெண்கள் ஒருவர் இருவர் இருக்காமல் விடுவார்களா?"

முதல் பேசிய டாக்டர், மகாராஜனின், முதுகில் தட்டிக் கேட்டான்:

"சொல்லும் ராஜன், நீர் எங்களுக்கு எப்படி உதவி செய்யப் போகிறீர்?"

"நீர் மகாராஜனின் வல்லமையை அவமதிக்கிறீர். இதென்ன கேள்வி? அவர் தோட்டத்தின் சக்கரவர்த்தியல்லவா?"

மூன்றும் டாக்டர் இப்படிக் கூறினான்:

"நான் உங்களை மாணிக்க மலைக்கு மிக மகிழ்ச்சியுடன் வரவழைக்கிறேன்" என்றான் மகாராஜன்.

டாக்டர்கள் ஒன்று சேர்ந்து 'ஹோ ஹோ' என்று ஆர்ப்பரித்தனர்.

டாக்டர்கள் சிறிசேனவும் இராசத்தம்பியும் ஒருநாள் காலை வோக்ஸ்வாகன் காரில் வந்து மாணிக்கமலைத் தோட்டத்தில் இறங்கினர்கள்.

தோட்டத்தைச் சுற்றிக் காட்டினன் மகாராஜன்.

பிள்ளைக் காம்பரா, டிஸ்பென்சரி, ஸ்டோர், ஆபீஸ், லயங்கள் என்று தனது ஆட்சி செய்யும் உலகைக் காட்டிக் கொண்டு வந்தான்.

பிள்ளைக் காம்பராவில் நடக்கக் கூடிய பிள்ளைகள் எழுந்து நின்று கம்பி வலைகளுக்கூடாகப் பார்த்தனர். தவழுகிற குழந்தைகள் அங்கு மிங்குமாகத் தவழ்ந்து கையில் அகப்பட்டதை வாயில் வைத்தனர். சிறு குழந்தைகள் தரையில் படுத்து, புரண்டு, உருண்டு பெரும்பாலும் அழுது கொண்டிருந்தனர். டாக்டர்கள் இராசத்தம்பியும் சிறிசேனவும் அந்தக் காம்பராவின் கம்பி எல்லைக்கு வெளிப் பக்கத்தில் நின்று குழந்தைகளுடன் சிநேகிதம் கொண்டாடினர். காம்பராவின் ஆயம்மாள் அதைப் பூட்டிவிட்டு எங்கோ போய் விட்டதால் அவர்களுக்குக் கதவைத் திறந்து காம்பராவை நன்ருகப் பார்க்க முடியவில்லை.

மகாராஜன் தூரத்தில் நின்ருன். அவன் கேட்டான் :

"உங்களுக்கு இந்த மணத்தை அனுபவித்தபின் உண வருந்த முடிகிறதா?"

அவனே ஒருவித நையாண்டிப் பதிலும் தந்தான்.

"ஓ, நீங்கள் டாக்டர்கள் அல்லவா? மலருக்கும் மலத்திற்கு மிடையே உள்ள வித்தியாசம் உங்கள் மூக்குகளுக்கு எப்படித் தெரியப்போகிறது?"

டாக்டர் சிறிசேன கேட்டான் :

"மிஸ்டர் மகாராஜன்! தோட்டத்துப் பிள்ளைகள் சாகுமுன் அவர்களை இந்த அறையில்தான் அடைப்பீர்களோ?"

எல்லோரும் சிரித்துவிட்டு, தோட்டப் பாதை வழியாக நடந்தார்கள். நின்ற இடத்திலிருந்தே அக்கம் பக்கம் சுற்றிப் பார்த்தார்கள். பச்சை மலைகள், தேயிலைச் செடிகள், வாகை, சவுக்கு, கறுவா மரம், முருங்கை மரம் முதலிய மரங்கள் எல்லாம் கண்களுக்கு இதமாக இருந்தன. பச்சைக் குளிர் கண்ணாடியைப் போட்டுப் பார்த்ததுபோல் பார்வைக்கு உலகம் குளிர்ந்தது. அவ்வப்போது சீதளக்காற்று கண்களைத் தடவியது.

கொழுந்து நிறுக்கும் இடத்தில் பெண்கள் வரிசையாக நின்றனர். டாக்டர்களும் மகாராஜனும் அவர்களைப் பார்த்துக் கொண்டே சிறிது நேரம் நின்றனர். மகாராஜன் ஒரு போட்டோ எடுத்தான். அப் புகைப்படத்தின் நாயகி வீராயி.

மகாராஜன் அந்தப் போட்டோவை மீண்டும் ஒரு தரம் எடுத்துப் பார்த்தான். டாக்டர்கள் வந்த அன்று இரவு அவன் அடைந்த தோல்வியின் பயங்கர நினைவு அவனைத் துன்புறுத்தியது.

கண்டி நாட்டுச் சுந்தரிகளுக்கு வீராயி அழகமைப்பில் எந்த விதத்தில் குறைந்தவள்?

அவளை டாக்டர் நண்பர்களுக்குப் பரிசாக அளிக்க நினைத்தான் மகாராஜன். அவன் அந்தத் தோட்டத்தின் சக்கரவர்த்தியல்லவா? பார்க்கப்போனல் சர்வாதிகாரி என்று சொல்லுவதுதான் மிகப் பொருத்தமாகும்.

மகாராஜனின் விருப்பத்தை நிறைவேற்ற டிஸ்பென்ஸர் பதி லயம் பக்கமாகச் சென்ருர். வீராயியின் அப்பாவிடம் இதையெல்லாம் பேசலாமா? சிதம்பரத்தை அழைத்துச் சென்று, மாஜி பாடசாலையான மாட்டுக் கொட்டிலில் வைத்து விஷயத்தைச் சொன்ஞர். பதி சொன்னது ஆரம்பத்தில்

சிதம்பரத்திற்கு விளங்கவில்லை. ஆனால் முத்து வீராயி என்ற பெயரைக் கேட்டதும், அவன் தலைமேல் இடி விழுந்ததைப் போல் அதிர்ச்சியுற்றான்.

"என்ன ஐயா. யாரைச் சொல்லறே?" என்று தடுமாற்றத்துடன் கேட்டான்.

"அவள்தான் சிதம்பரம், ரெங்கசாமிக் கங்காணியின் மகள்" என்றார் பதி.

தனது மெலிந்த ஆனால் கருங்காலிபோல் உரமான கையால் பதியின் கோட்டை இறுக்கிப் பிடித்தான் சிதம்பரம். அவன் முற்புயத்தின் தோலின் கீழ், நீண்ட நாளங்கள் மண் புழுக்களைப்போல் நெளிந்து துடித்தன. பதியைக் குலுக்கியபடியே சிதம்பரம் கேட்டான் :

"என்ன ஐயாஆ, வீராயி எம் மக போல். உனக்கு எழவு விழ. அவ்வளவு துணிவு வந்திடுச்சா?"

பதியை இழுத்துத் தனக்குக் கிட்டப் பிடித்தவாறு அவர் முகத்தைப் பார்த்துக் கதறினான் சிதம்பரம் :

"தோட்டப் பொண்ணு எண்டா வியாபாரப் பொருளென்று நெனைச்சிட்டீங்களா?"

பதி ஒன்றும் பேசவில்லை. இருவருக்கும் மூச்சுத் திணறியது.

பதியைக் கைவிடும்போது சிதம்பரம் கண்ணீருடன் கேட்டான் :

"ஐயா! நீங்க பெரிய மனிசனுங்க. எங்க புள்ளைகளை உங்க புள்ளைகள்போல நேசிக்கக்கூடாதா? நேசிக்காவிட்டாலும் அவமானம் வராமல் காப்பாத்த முடியாதா?"

பதியின் காதுகளில் இந்தக் கேள்விகள் விழவில்லை. அவர்தான் சிதம்பரம் கைவிட்டபோது மல்லாந்து தரையில் விழுந்தார். அவர் உடுப்பிலும் பிடரியிலும் புதுச்சாணி புரண்டது.

அவர் எண்ணத் துடக்கைக் கழிக்க அதுவும் நல்லதுதானே?

பதி அந்தக் கோலத்துடனேயே மகாராஜனின் பங்களாவிற்கு வந்தார். விருந்தாளிகளாக வந்திருந்த டாக்டர்கள். பொல்லாதவர்கள். "பாட் லக்" என்று கூறிச் சிரித்துவிட்டனர். நினைத்துப் பார்த்தால் இது எவ்வளவு அவமானமான நிகழ்ச்சி!

அந்தப் போட்டோ மகாராஜனின் மனத்தில் இந்தப் பழைய சம்பவங்களை நிழலாடச் செய்தது. சிகரெட்டைப் புகைத்துத் தள்ளியவாறு ஹாலில் சுற்றினான் மகாராஜன். அவனது பாட்டனின் போட்டோ பெரிதாக்கிக் கலர் பூசப்பட்டு ஹாலின் சுவரில் தொங்கிற்று. அவர் நெற்றியின் நடுவில், கண்ணாடியிலே பெரிய சந்தனப் பொட்டு இடப்பட்டிருந்தது. போட்டோவுக்குக் கடுதாசிப் பூமாலை ஒன்று மாட்டப்பட்டிருந்தது.

தலவாக்கொல்லையில் கங்காணியாக இருந்த தனது பாட்டன் சரியாகவோ பிழையாகவோ சேர்த்த பணம்தான் தன்னை இப்போது இந்த அந்தஸ்திற்கு உயர்த்தி இருக்கின்றது என்பது மகாராஜனுக்குத் தெரியும். கறுத்துப் பருத்துக் குட்டையான மூக்கு, பரந்த கன்னம், தடித்த உதடுகள், பெரிய காதுச்சோணை என்றிருந்த அவரின் திராவிட முகத்தின் போட்டோவைக் குல தெய்வத்தின் படமென்று மரியாதை செய்ய அவன் அப்பா கற்பித்திருந்தார். வெள்ளிக்கிழமைகளிலும் விசேஷ நாட்களிலும் அந்தப் போட்டோவுக்குப் பொட்டுப் போட்டுச் சாம்பிராணிப் புகை காட்டுவார்கள். மற்றவர்களுடன் சேர்ந்து மகாராஜனும் கைகூப்பிக் கும்பிடுவான்.

அந்தப் போட்டோவிலிருந்த முகம் அவனிடம் ஒரு கேள்வி கேட்டதோ?

'மகாராஜன்! இப்போது நீ எப்படி இருந்தாலும் தோட்டக் கூலிகளாக இருந்தவர்களின் வாரிசுதானே?'

அந்தப் படத்தைக் கழற்றிப் பத்திரமாக ஓர் இடத்தில் வைத்துவிட்டான் மகாராஜன். அவனுக்குத் திருப்தியாக இருந்தது.

முத்து வீராயியும் ஒரு தோட்டக் கூலிதானே. அவளை நினைத்துக் கொண்டிருப்பது அவன் அந்தஸ்திற்குக் குறைவில்லையா?

தலவாக்கொல்லை எலிசபெத் எஸ்டேட்டின் பெரிய துரை மிஸ்டர் ஸ்டீபன் மக்ரிகோர், அவன் இங்கு மாறி வந்தபோது நல்லதோர் உபதேசம் செய்தார்.

அவர் சொன்னார்:

'மிஸ்டர் மகாராஜன்! ஒரு தோட்டத்தை நல்ல முறையில் நடத்துவதற்கு ஒழுக்கம் மிக அவசியம். உண்மையில் ஒழுக்கம் முக்கால் வாசியும் பழக்கம் கால்வாசியும் இருந்தால் நிர்வாகத்தில் திறமை அடையலாம்'

அவை எவ்வளவு உண்மையான வார்த்தைகள்!

கூலிகளுக்குள்ளும் நம்மைத் தடுமாறச் செய்யக் கூடிய அழகான பெண்கள் உண்டு. நிர்வாகம் சீர்குலையப் போதிய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

ஸ்டீபன் மக்ரிகோர் தொடர்ந்து ஆங்கிலத்தில் கூறினது ஓர் அனுபவ மொழி.

'மை டியர்! ஒழுக்கம் என்று நான் கூறினது உமது தோட்டத்தைக் குறித்துத்தான். தோட்டத்தை விட்டுத் தூரப் போய் உமது அந்தஸ்தில் இருப்பவர்களுடன் நீர் விரும்பியதைச் செய்யலாம். மனச் சாந்தி மாதத்திற்கு ஒரு முறையாவது அவசியம்.'

டாக்டர்கள் மாணிக்க மலைக்கு வந்திராவிடில் நிலைமை இவ்வளவு மோசத்திற்கு வளர்ந்திருக்காது. சொல்லப் போனால் பதியையும் சிதம்பரத்தையும் தவிர நடந்தது யாருக்குத் தெரி

யும்? வீராயியுடன் அவன் நேரடியாக உரையாடியதுமில்லை. அவள் பேருடன் அவன் பெயரைப் பதி என்ன மாதிரிப் பிணைத்துவிட்டார். சே! தோட்டக் குட்டியைப் போய் மனைவியாக்கிக் கொண்டு, முன் வைத்த காலை இரு சந்ததிகள் பின் வைப்பதா? அவனுக்கு இவையெல்லாம் ஒரே குழப்ப மாய் இருந்தன.

'எதற்கும் டாக்டர் பதியின் யோசனையைக் கேட்டுப் பார்ப்போம்' என்று யோசித்தான் மகாராஜன்.

மாணிக்கமலையில் மகாராஜனின் நிர்வாக, வைத்திய, சமுதாய, குடும்ப ஆலோசகர் பதிதானே!

ஒரு வழி இருக்கிறது. ஒரு நல்ல இடத்தில் கல்யாணம் செய்துகொண்டு, இந்த வீராயியைப் பங்களாவில் ஆயாவாக வைத்தாலும் அவன் நினைப்பது நிறைவேறலாமல்லவா?

அவன் பங்களாவின் வாசலில் தோட்டத்து ஜீப் வந்து நின்றது. பதியும் டீ மேக்கர் வல்லிபுரமும் ஜீப்பிலிருந்து குதித்தார்கள். மகாராஜனின் அல்சேஷன் நாய் பாய்ந்து சென்று அவர்கள் இருவரையும் தனது நட்பு நாக்கால் நக்கியது. மகாராஜன் "குட்ஈவினிங்" என்றான்.

# 11

மகாராஜனின் சீமை நாய் பதியையும் வல்லிபுரத்தையும் அவர்கள் வழக்கமாக உட்காரும் சோபாக்களுக்கு அழைத்துச் சென்றது. பதியைக் கண்டதும் தனது உள நோய் பாதி குணமானது போல் இருந்தது மகாராஜனுக்கு.

'பதி பக்தி'யுடன் ஒரு வித மரியாதைக் குரலில் மகாராஜன் கேட்டான் :

''டாக்டர்! நீங்கள் குளிக்கிறீங்களா? வெந்நீர் இருக்கிறது.''

''இல்லை சார்! காலையில் எனது வீட்டில் குளித்தனன்'' பதி இப்படி ஒரு பொய் சொன்னார். அவருக்கு அந்தப் பொய் அநாவசியமாகக் கூடத் தோன்றவில்லை.

''அப்போது மிஸ்டர் வல்லிபுரம் குளிக்கட்டும். இந்த நேரத்தில் வெந்நீர் நன்றாக இருக்கும்'' என்று கூறியவாறு பொத்தான் ஒன்றை அழுத்தினான் மகாராஜன்.

''பொடியன்! குளிக்கிற அறையிலே வெந்நீர்க் குழாயைத் திறந்து விடு. துவாலை ஒன்று புதிசா எடுத்துவை''

''சரிங்க'' என்று மகாராஜனுக்குப் பதிலளித்த வேலைக்காரன், பதியையும் வல்லிபுரத்தையும் நோக்கிப் ''சலாமுங்க சலாமுங்க'' என்று வந்தனம் தெரிவித்தான்.

"சலாம். சௌக்கியம் தானே பெரியசாமி?" என்று அவனிடம் ஓர் அன்னியோன்னியமான கேள்வியைக் கேட்டுவிட்டு "—ம் இன்று காத்தான் இந்தப் பக்கம் வந்தானடா?" என்று வினவினார்.

"இல்லிங்க தொரே. அவன் இன்னிக்குப் படம் பார்க்கப் போயிருப்பானுங்க. ஹட்டனுக்குப் புதுப்படம் வந்திருக்குங்க"

குளிக்கும் அறையில் குழாயிலிருந்து நீர் பளிங்கு நீர்த் தொட்டியில் சல சலவென்று கொட்டும் சத்தம் கேட்டது. பதி அந்தப் பக்கமாகப் போய்விட்டு வந்தார்.

"உங்களுக்கு எப்படி இருக்கிறது டாக்டர்?" என்று கரிசனையுடன் கேட்டான் மகாராஜன்.

"சிறுநீரில் சீனி இருக்கத்தான் செய்கிறது. நேற்றும் இன்சுலின் போட மறந்து போனேன். நிறைய வேலை இருந்தது. பாதங்களில் 'சுள்'ளென்று குத்துகிறது. காலம் சரியில்லை. ஏழரைக் கழிவு" என்றார் பதி.

மகாராஜன் சிகரெட்டைப் புகைத்துக் கொண்டிருந்தான்.

பதி தொடர்ந்து சொன்னார்.

"என்னுடைய மூத்த மகன் பூபாலசிங்கம் இந்தத் தடவை நான்காம் முறையாக ஜீ. சி. ஈ. பரீட்சை எடுக்கின்றான் சார். அவன் இனி பாஸ் செய்தாலும் பாஸ் செய்யாவிட்டாலும், உங்கள் கைகளில்தான் அவனை ஒப்படைக்கப் போகிறேன். அவனால் எனக்குப் பெருங் கவலை."

மகாராஜன் ஒரு புதிய சிகரெட்டை உதட்டில் வைத்தான். பதி அதைத் தனது சிகரெட் லைட்டரால் பற்ற வைத்தார். புதிய யாழ்ப்பாணத்துச் சுருட்டு ஒன்றைத் தானும் பற்றவைத்துக்கொண்டு பதி கேட்டார்:

"ஆபீசில் புதிதாக வந்துள்ள கிளார்க் சேவுகப்பெருமாள் வேலை செய்யக்கூடியவன் என்று நினைக்கிறீர்களா? தோட்டத்துப் பையன்கள் சரிவரமாட்டான்கள். அத்துடன் அவன் மலையப்பனின் ஆதரவாளன். சார்! சேவுகப்பெருமாளுக்குப் பிரஜா உரிமை கிடைக்கமாட்டாது என்று சொல்லுகிறார்கள்."

வல்லிபுரமும் தனது பொய்ப் பல்வரிசையைக் காட்டிச் சிரித்தார். "சார் என்னுடைய மகனும் யாழ்ப்பாணத்திலிருந்து லீவில் வந்திருக்கிறான்" என்று சொன்னார் வல்லிபுரம்.

"அவன் உங்களைக் காண ஆசைப்படுகிறான். காலையில் வருவான். மாம்பழம் கொஞ்சம் கொண்டு வந்திருக்கிறான்."

சிறிது நேரத்தில் வல்லிபுரம் குளிக்கப் போனார்.

"பாவம் வல்லிபுரம்" என்று மகாராஜனின் முழுக் கவனத்தையும் தன் பக்கமாக இழுத்த பதி, தொடர்ந்து பேசினார்:

"வல்லியின் பையன் இப்படியாகப் போனான். அவருக்குப் பெரிய மனவேதனைதான். பையனைப் பாடசாலையிலிருந்து விலக்கிவிட்டார்களாம். அது ஒரு கலவன் பாடசாலை. இவன் ஏதோ பிழையாக நடந்துவிட்டான். எதற்கும் ஒழுக்கம் வேண்டும் சார்."

மகாராஜன் கீழே விரிக்கப்பட்டிருந்த குங்கும நிறக் கம்பளத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். ஹாலில் பலநிறப் பல்புகளின் மங்கலான ஒளிக் கலப்பு அந்தி வானத்தின் போதையைத் தந்தது.

மகாராஜன் ஏன் ஒன்றும் பேசாமல் இருந்தான்? பதி தனது நாக்கை இலேசாகக் கடித்துவிட்டுச் சில வசனங்களை ஒப்படைத்தார்:

"பாருங்க சார். படிக்கிற சின்னப் பையன் இப்படி வயது வந்தவர்களைப் போல நடந்துகொள்ளலாமா? படித்துப் பாஸ்

செய்ததும், தான் விரும்பியபடி ஒரு பெண்ணை எடுத்திட்டுப் போறான். காதல் என்பது ஒரு பெரிய விஷயம். ஒருவன் ஒரு பெண்ணை விரும்பினால் அவளை உலகமே எதிர்த்தாலும் மனைவியாக்கிக் கொள்ளவேண்டும். வல்லிபுரத்தின் மகன் கொஞ்சம் பொறுத்திருக்கலாம்.''

அந்த நேரத்தில், ஆஸ்பத்திரி வார்ட்டுகளில் நர்ஸ் வருவதைப் போல், பெரியசாமி போத்தல்களைக் கொண்ட ஒரு தள்ளுவண்டியைத் தள்ளி வந்தான். அதில் விஸ்கி, ஜின் பிராண்டி, சாராயம், பியர், இத்தியாதி மதுசாரங்கள் பல விதமான போத்தல்களில் நிறைவாகவும், அரைவாசியாகவும் கால்வாசியாகவும் இருந்தன. தள்ளு வண்டியின் கீழ்த் தட்டில் பொரித்த இறைச்சித் துண்டுகளும் உருளைக் கிழங்குச் சீவல்களும் 'டேஸ்ட்'டாகத் தயாரிக்கப்பட்டிருந்தன.

வல்லிபுரம் குளித்துவிட்டு வந்து அவர்களுடன் சேர்ந்தார்.

மதுவண்டி மதுவண்டு போல் மூன்று நண்பர்களுக்கிடையிலும் போய்ப் போய் வந்தது.

வல்லிபுரம் பியரை மாத்திரம் உறிஞ்சினார். அவர் சிகரெட் புகைப்பதில்லை.

''எனக்கு என்னுடைய சாராயமும் சுருட்டுந்தான். நான் ஏழை'' என்றார் பதி.

வல்லிபுரம், சிரிக்கவேண்டுமென்பதற்காகச் செய்த சிறு முயற்சியையும் கலைத்துவிட்டுக் குளிக்கிற அறைக்கு விரைந்தார்.

''வல்லி பொய்ப்பல் செட்டைப் போட்டுக்கொள்ள மறந்திட்டான் சார். அவன் வேலையெல்லாம் இப்படித்தான். ஒரு பூல். நீங்கள் வருவதற்கு முன் பியர் கூடத் தொடமாட்டான். நான்தான் பழக்கினேன்.........என்ன மிஸ்டர் வல்லிபுரம்; அப்படித்தானே? இண்டைக்குக் கொஞ்சம் பிராண்டி எடுங்கோ சார்.''

மகாராஜனுடன் பேசத் தொடங்கிய பதி, வல்லிபுரத்தைப் பார்த்துப் பேச்சை இப்படி முடித்தார்.

வல்லிபுரம் திரும்பிவந்து கதிரையில் இருந்தபோது, அவர் வாயெல்லாம் பல்லாக இருந்தது.

"பியரில் ஒரு சுகமுமில்லை மிஸ்டர் வல்லி! கொஞ்சம் பிராண்டி எடுத்துப் பாருங்கள். தேக உளைச்சல் எல்லாவற்றிற்கும் நல்லது" என்றவாறு சிறிய கிளாசில் இரண்டு அவுன்ஸ் அளவு பிராண்டியை வார்த்து, சோடாவுடன் கலந்து நீட்டினார் டி.ஸ்பென்சர்.

அது இலவசமாகக் கொடுக்கப்பட்டதல்லவா? யாழ்ப்பாணத்து வல்லிபுரம் பிராண்டி கிளாசைத் தன் கையினால் வாங்கினார். பதிக்கு இது இன்னும் ஒரு வெற்றிதானே? மது அவர் மூளையின் ஒரு மூலையில் விளையாடியது. அவர் தனது புத்திசாதுரியமான செய்கைகளில் ஒன்றைப்பற்றிய விளக்கத்தை எடுத்துரைத்தார்.

பதி சொன்னார்:

"பாருங்கள் சார்! இந்தக் குடியைப் பழக்குவது ஒரு நுட்பமான வேலை. அதை ஒரு கலை என்று கூடச் சொல்லலாம்.........உம்மைப் பற்றிச் சொல்லவில்லை வல்லி. நீர் என்ன வெறிக்கவா குடிக்கிறீர்? ரெங்கசாமியின் கதையைத் தான் சொல்லப்போகிறேன்."

மகாராஜன் அதிகம் பேசாமல், போதைக்குப் போதிய அளவு குடித்திருந்தான். அவன் முகத்தில் குங்குமச் சாயம் ஏறியிருந்தது. பக்கத்தில் கொழுந்து கிள்ளும் பெண்ணின் உருவில் இருந்த ஒரு சாம்பல் படிக்கத்தில் சிகரெட் சாம்பலைத் தட்டினான். கூடையாக இருந்த பாகத்தில் சாம்பல் விழுந்தது. டிஸ்பென்சர் சொல்வதைக் கவனமாகக் கேட்டான், மகாராஜன். பதி மிகுந்த உற்சாகத்துடன் எழுந்து நிற்பதும் சிறிது நடப்பதுமாகவே கதையைச் சொன்னார்.

"ரெங்கசாமிக் கங்காணி, தான் குடிப்பதில்லை என்று ராங்கி யாகப் பேசுவான். அவனுக்கு நாமெல்லாருமே குடிகாரப் பயல்கள். ஒருநாள் பாருங்கோ, என்னிடம் ஏதோ வருத்த மாக வந்து சேர்ந்தான். மருந்திலே கொஞ்சம் மது கலந்து கொடுத்தேன்"

இதைக் கேட்டதும் வல்லிபுரம், பிராண்டி கிளாசை அப் படியே மேசை மீது வைத்துவிட்டு, சற்று முன்னால் சரிந்து உற்றுக் கேட்டார்.

"என்ன வல்லி, ஆச்சரியப்படுகிறீர்? மது துளி அளவில் மருந்துதான். ஆனால்..." சாராயத்தை ஒரு மிடறு விழுங்கி விட்டு அதன் நாற்ற ஆவியுடனேயே சொற்களைக் கக்கினார் பதி.

"மதுவைக் கொஞ்சம் கொஞ்சமாக, படிப்படியாக அதி கரித்தால் மது இரத்தத்துடன் கலந்து விடுகிறது. பின்பு உடல் மதுவிற்காக வாய் விட்டு அழுகிறது. ரெங்கசாமி இரண் டாந் தரம் வந்தபோது மதுவின் அளவை அதிகரித்தேன். மூன்றும்முறை மதுவைத் தாராளமாகச் சேர்த்தேன்."

மகாராஜன் வாய்விட்டுச் சிரித்துவிட்டான். அவன் கேட்டான்:

"டாக்டர்! பின்பு மதுவையே கொடுத்திருப்பீங்க"

"ஆம் சார். அவன் அந்த நாட்களில் எனது டிஸ் பென்சரிக்கு வந்து, விபசார விடுதியில் காத்திருக்கும் ஆவ லுடன் என்னைப் பார்த்துக் கொண்டிருப்பான். பின்பு சாப்பாட் டிற்கு முன் கொஞ்சம் சாராயம் உபயோகிக்கச் சிபார்சு செய்தேன். முதலில் திடுக்கிட்டான். நானே கொஞ்சம் வார்த்துக் கொடுத்தேன்..."

பதி தன்னுடைய இந்த மதுவின் தொழிலியல் ஆராய்ச்சிக் கதையை முடிக்க முன்பே மகாராஜன் "சபாஷ்" என்று கூறியவாறு எழுந்து அவர் முதுகில் தட்டிக் கொடுத்தான்.

காலியாக இருந்த பதியின் கிளாசில் சிறிது விஸகியை வார்த்து "கம் ஓன் டாக்டர், வண் போர் மீ" என்று பதியிடம் கொடுத்தான் அவன்.

பதியின் கிளாசும் மகாராஜனின் கிளாசும் முட்டியதும் ஒரே மூச்சில் கிளாஸ்களைக் காலியாக்கினர்.

பதி உடனே அந்த கிளாஸ்களுக்குள் மீண்டும் அரைவாசி விஸ்கியை வார்த்து, ஒன்றைத் தான் எடுத்துக் கொண்டு மற்றதை மகாராஜனுக்குக் கொடுக்கும் போது "கம் ஒன் சார், வண்போர் முத்து வீராயி" என்றார்.

கிணிங்—கிளாஸ்கள் ஒன்றை ஒன்று முத்தமிட்டுக் காலியாகின.

வல்லிபுரத்தின் வாய் முணுமுணுத்தது.

"அட பாவி, நீ வாழ்வியா? மருந்துடன் மதுவைக் கலந்து ஓர் ஏழைக்குக் குடியை வேண்டுமென்றே பழக்கியிருக்கிறாயே!"

யோசிக்க வேண்டிய விஷயந்தான். தோட்டத் தொழிலாளரிடம் ஏற்கனவே இருக்கும் இந்த மது விருப்பு நோயை நீக்க அல்லவா ஒரு மருத்துவரின் மூளையில் ஆராய்ச்சி நடக்க வேண்டும்.

வல்லிபுரத்தின் மூளையும் இதயமும் ஒரு முடிவுக்கு வந்தன.

'தோட்டத்தில் மது ஒழிப்பு இயக்கத்தை உடனே ஆரம்பிக்க வேண்டும்.' ஆமாம், இந்த முடிவை யாருமே மாற்ற முடியாது.

அவரின் கண்களில் நீர் சுரந்தது. அவர் கையை அசைத்த போது எதிர்பாராத விதமாக அவருடைய பிராண்டிகிளாஸ் கீழே விழுந்தது. கிளாஸ் பொடியாயிற்று. வல்லிபுரம் அதைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

பதி கேட்டார்:

"என்ன வல்லி, 'கட்'டாகி விட்டீரோ?" மகாராஜன் பேயைப்போல் சிரித்தான். வல்லிபுரத்தினல் தொடர்ந்து அங்கிருக்க முடியவில்லை. இனிமேல் அவரால் அங்கிருக்க முடியுமா? ஏதோ சொல்லி ஜீப்பில் தனது வீட்டிற்குப் போய்விட்டார்.

பதி பக்கத்தில் நின்ற அல்சேஷன் நாயைத் தடவியவாறு மகாராஜனுடைய சோபாவில் அவன் பக்கத்தில் அமர்ந்தார்.

"சார்! இன்று பிரன்ட்ஸ் வராதது நல்லது. வல்லிபுரம் இருக்கும்போதும் நான் பேச விரும்பவில்லை. அவன் ஒரு மடையன். எல்லாவற்றையும் எல்லோருக்கும் சொல்லி விடுவான். நான் நல்ல வேலை செய்திருக்கிறேன்" என்ருர் பதி.

"ரெங்கசாமி விஷயம் எப்படி?" என்று கேட்டான் மகாராஜன்.

"அவனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருக்கிருர்கள். பொலீஸ் குத்துத் தானே. வெளியே தெரியாமல் சில கண்டல் காயங்கள் இருக்கலாம். சார், சிதம்பரம் வரவர மோசமாகிக் கொண்டு வருகிருன். இன்று காலையில் எனது டிஸ்பென்சரியில் கலாட்டா செய்தான். ரெங்கசாமி அடிபட்டதற்கு நான்தான் கால் என்று ஏசினன். இதுபோல் எத்தனையோ குற்றங்கள் அவன் மேல் உண்டு. சார், அவனை வேலையிலிருந்து நீக்கி விடுவதுதான் சரி."

"டாக்டர் அதைப்பற்றிப் பெரியதுரை பிரௌனுடன் பேசித்தான் ஏதாவது செய்யவேண்டும்" என்ருன் மகாராஜன்.

"கிழவன் இது ஒன்றிலும் கவனமில்லை சார். அவர் எப்போது இங்கிலாந்துக்கு மூட்டை கட்டலாம் என்றிருக்கிருர். அவருக்கு என்மீது ஒருவித வெறுப்பு. அவருடைய விருப்பு வெறுப்பு என்னை என்ன செய்யும்? அவர்

கொழும்பு ஆஸ்பத்திரியில் இருந்து வர இரண்டு மாதங்கள் செல்லும். கொரனரி துரொம்போசிஸ் என்றால் இலேசான விஷயமா?"

மகாராஜன் சோபாவில் நன்றாகச் சாய்ந்து கொண்டிருந்தான். இரண்டொரு தரம் கொட்டாவி விட்டான்.

பதி தொடர்ந்து பேசினார் :

"இனிமேல் உங்கள் நிர்வாகத்திலேதான் எல்லாம் நடைபெறப் போகின்றன. நீங்கள் இட்டது சட்டம்......... சார்! மலையப்பனை எப்படியென்றாலும் சரியாக மாட்டிவிட வேண்டும். வாறகிழமை அவன் நாவலப்பிட்டியில் தனது சங்கத்தின் மகாநாட்டை நடத்த இருக்கிறான். வேலை நிறுத்தத்தைப் பற்றியும் பேசிக் கொள்கிறார்கள். மலையப்பன் இந்த நாட்களில் தோட்டத்தில் இல்லை. இப்போது நாம் ஏதாவது செய்தால் சரி. சார், அத்துடன் வீராயி விஷயம் எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. எப்படியாகிலும் அவள் இங்கு வந்துதான் ஆகவேண்டும். அல்லாவிடில் நாம் தோற்றுவிட்டதாகவே நினைத்துக் கொள்வார்கள்."

மகாராஜன் யோசித்துக் கொண்டிருந்தான். மூளையில் ஓரே குழப்பம்.

தோட்ட நிர்வாகப் பொறுப்பு, மலையப்பனின் மகாநாடு, வேலை நிறுத்தம், தோட்டப் பெண்ணைக் கல்யாணம் செய்வது, டிஸ்பென்சர் பதியின் ஆலோசனைகள், இவை எல்லாம் இலகுவில் புரிந்து கொள்ளக்கூடிய விஷயங்களா? எவ்வளவு பெரிய சிக்கல்கள்!

"என்ன சார் யோசிக்கிறீர்கள்! வீராயியைப் போல் வடிவான பெண் வேறு யாரும் இந்த இலங்கையில் இருக்க முடியுமா? மலையப்பன் தோட்டத்திற்குத் திரும்பி வருவதற்கிடையில் அவனுக்கும் வீராயிக்கும் இடையில் ஒரு பெரிய

பிளவு வந்துவிடும். வள்ளி மூலம் ஒரு சிக்கலை உண்டு பண்ணிவிட்டேன்'' பதி இப்படிக் கூறியவாறு, தான் எழுதிய கடிதத்தின் பிரதியை எடுத்து வாசித்தார்.

'என் அருமைக் காதலி வள்ளிக்கு, மலையப்பன் அன்புடன் எழுதிக்கொள்வது.........'

பதி கடிதத்தைப் படிக்கும்போது, ஏதோ ஒரு சுவாரஸ்யமான உபகதையைக் கேட்பது போல மகாராஜன் அவர் முகத்தைப் பார்த்தபடியே இருந்தான்.

"நீங்களா இப்படி எழுதினீங்க?'' என்று கேட்டான் மகாராஜன்.

பதி சிரித்தபடியே அதை முற்றுகப் படித்துக் காட்டினர்.

மகாராஜன் சிரித்துக் கொண்டிருந்தான். கடிதப் பிரதியைப் பதி அவனிடம் கொடுத்தபோது மகாராஜன் "தாங்க் யூ'' என்றான்.

இந்த நேரத்தில் அவர்கள் இருந்த ஹாலுக்கு வெளியே பூச்சட்டிகள் விழும் சத்தம் கேட்டது.

"ரோவர் ரோவர் கம் ஹியர்'' என்று தனது நாயை அழைத்த மகாராஜன் "பாருங்க டாக்டர், தோட்டத்துப் பெட்டை நாய்களால் பெரிய தொல்லை. ரோவருக்கு நல்ல கிராக்கி'' என்று சொல்லிச் சிரித்தான்.

"தோட்டக் கூலிகளுக்கு இதனால் பெரிய லாபம்'' என்றார் பதி. "நாய்கள் குட்டிகள் போட்டதும் அல்சேஷன் கலப்பு என்று சொல்லி விற்றுவிடலாமல்லவா?''

ரோவர் பாய்ந்து ஓடிவந்து மகாராஜனின் காலடியில் தன்னை நீட்டிப் படுத்துக்கொண்டது. பதிக்கு அதைப் பார்க்கப் பொல்லாத ஆத்திரமாக இருந்தது. ஆனால் குனிந்து அதன் தலையையும் முதுகையும் தடவிக் கொடுத்தார். ரோவர் மகாராஜனின் முகத்தைப் பார்த்தது. அது ஒன்றும் செய்யவில்லை.

இவ்வளவு நேரமும் வெளியே ஜன்னல் ஓரமாக நின்று பதியும் மகாராஜனும் பேசியதை எல்லாம் ஒற்றுக் கேட்டுக் கொண்டிருந்த காத்தானுக்கு வலிப்பு வந்தது.

இதுதான் உண்மை.

காத்தான் வலிப்பினால் கைகளையும் கால்களையும் உதறிய போது இரு அந்தூரியம் பூச்சட்டிகள் உடைந்துவிட்டன. இவற்றையெல்லாம் மகாராஜனுக்கு யார் சொல்லுவது?

பாவம், அல்சேஷன் என்றாலும் ரோவர் ஒரு நாய் தானே!

# 12

**வீ**ராயி தனது காம்பராவில் யோசித்துக் கொண்டிருந்தாள். மலையப்பன் தண்ணீர்க் குழாயடியில் வள்ளியுடன் உரையாடி விட்டுப் போனபின் அவளுக்குச் சிந்தனை வெறி பிடித்து அலைந்தது.

அந்த நிகழ்ச்சியின் பின் மலையப்பனோ, வள்ளியோ அவளைக் காண வரவில்லை.

'அததான் இப்படி நடந்துகொள்வார் என்று நான் ஒரு போதும் நினைக்கவில்லை.'

அவள் மனம் தொடர்ந்து ஒரு கேள்வி கேட்டது:

'அப்படி நீ நினைக்காதது யார் குற்றம்?'

மலையப்பன் சிறு பையனாக இருந்தபோது அவளைத் தன் நெஞ்சோடு அணைத்துப் பிள்ளைக் காம்பராவுக்குத் தூக்கிப் போவானாம். அது ஏதோ உண்மைதான். அப்போது அவன் கன்னமும் அவள் கன்னமும் சேர்ந்து முத்தமாகியிருக்கலாம். ஆனால் அதை அரும்பும் காதலின் சின்னமாகக் கருத முடியுமா?

மீனாட்சிப் பாட்டி எப்பொழுதோ சொன்னது வீராயியின் ஞாபகத்திற்கு வந்தது. ஒருநாள், பிள்ளைக் காம்பராவிலிருந்து வள்ளியை எடுத்துச் செல்ல அவள் அம்மா பொட்டு வரவில்லையாம். வீராயியைத் தூக்கிச் செல்ல வந்த மலையப்பன் அவளை ஒரு கையிலும் வள்ளியை மற்றொரு கையிலும் ஏந்தி லயத்தை நோக்கிச் சென்றான்.

'அட மலையப்பா ஆ! அவங்க புள்ளைங்களை விழுத்திப் புடாதேடா. வீராயிக்குட்டி உன் பொண்ணு. நீ எதுவும் செய்துக்கோ. வள்ளியைப் போட்டுடாதேடா' என்று மீனாட்சி கத்தினளாம்.

'பாட்டி! வள்ளியும் என் பொண்ணு' என்று மலையப்பன் பதிலளித்தானும்.

மலையப்பன் அப்படிச் சொல்லியிருக்கிறன்! சின்னஞ் சிறு வயதில் 'வள்ளியும் என் பொண்ணு' என்று அவன் கூறிய தற்கு இப்போது அர்த்தம் கொடுக்கலாமா? அது துடுக்கான வயது. அந்த நேரத்தில் குறும்புத் தனமும் அறியாமையும் பாட்டியைப் பார்த்துக்கூட 'நீ என் பொண்ணு' என்று சொல்லச் செய்யும்!

இருவரையும் இரு கைகளிலும் தூக்கிச் சென்ற மலை யப்பன், தோட்டப் பாதையில் ஒரு கல்மேல் கால் தடக்க விழுந்துவிட்டான். அந்த நேரத்தில் வீராயியைக் கைநழுவ விட்டுவிட்டான் மலையப்பன். வள்ளி மாத்திரம் அவன் அணைப் பில் இருந்தாளாம்.

இப்போது இந்த நேரத்தில் அந்தக் குழந்தைக்கால நிகழ்ச் சியை நினைக்கும் போது வீராயிக்கு ஒருவித பயமாக இருந்தது.

பல்லி சொல்வதற்கும், பல்லி விழுவதற்கும் சாஸ்திரம் இருக்கிறதல்லவா? அதேபோல் மலையப்பன் சொன்னதற்கும் அவள் அவன் பிடியிலிருந்து தரையில் விழுந்ததற்கும் அர்த்தம் இருக்குமோ?

இவ்வளவு காலமும் மலையப்பனின் நடத்தையிலிருந்து, அந்த நிகழ்ச்சிக்கு ஓர் அர்த்தமும் கொடுக்க முடியாது.

அவன் வீராயியை 'முறைப் பெண்' என்று கூறிக்கொள் வதில் பெருமையடைபவன்.

சிந்தித்துக் கொண்டிருந்த வீராயி சிறிது சிரித்தாள்.

அவளுக்கு மலையப்பன் பாடும் பாட்டு ஒன்று ஞாபகத்திற்கு வந்தது.

**கன்னங் கறுத்த ஒரு கம்பளியாம்—அதனுள்**
**வண்ண வடிவழகு வட்ட முகம்**
**எண்ணம் சிதையுதடி, என் கிளியே**
**பின்னல்வரப் பேதை மனம் தவிக்குதடி**

மலையப்பன் கூறுவான்:

'வீராயி! இந்தப் பாட்டு உன்னைப் பார்த்து நான் பாடுவதற்கே இயற்றப்பட்டது. பார்த்தியா, மலைநாட்டில் எப்பவோ வாழ்ந்து இறந்து போன ஒரு கவிஞருக்கு மலையப்பன்—வீராயி ஜோடி வாழப் போற சங்கதி தெரிந்திருக்கு!'

இதைக் கேட்ட அவள் உரக்கச் சிரிப்பாள். இப்போதும் மெல்லிய முறுவல் வரத்தானே செய்தது.

வீராயியின் மனம் அவளுடன் பேசியது.

'மலையப்பன் உனக்கென்றே பிறந்தவன். ஆனால் வள்ளியல்லவா அந்த நியதியை மாற்றப் பார்க்கிறாள்!'

அவள் தொடர்ந்து யோசித்தாள்.

'அன்று அப்பாவிடம் அடிபட்டுவிட்டு வள்ளியின் காம்பராவிலிருந்து போகும்போதுகூட நான் இல்லாமல் அவருக்கு வாழ்வில்லை என்று கூறினாராம். அவர் இன்னும் எவ்வளவோ சொல்லியிருப்பார். வள்ளி எல்லாவற்றையும் மறைத்திருப்பாள்!'

இப்படிச் சிந்திப்பது சரியென்று வீராயிக்குத் தோன்றியது.

வள்ளியின் உள்ளத்தில் கள்ளம் இல்லாவிடில் அவள் ஏன் வீராயியின் காம்பராவுக்கு இன்னும் வரவில்லை?

மலைக்குக் கூடப் போகாமல் ஏன் தனது காம்பராவில் ஒளிந்து கிடக்கிறாள்?

வள்ளியும் தனது காம்பராவில் யோசித்துக் கொண்டிருந்தாள். இருவருடைய காம்பராக்களும் அக்கம் பக்கத்தில்

இருந்தன. ஆனால் அவர்களுக்கு, இருவரும் மிக மிகத் தூரத்தில் இருப்பது போல் தோன்றியது. இதயம் அளவு கோலாக மாறும்போது அளவைகளுக்கும், பிரமாணத்திற்கும் எல்லைகள் வகுக்க முடியுமா?

'மலையப்ப அண்ணா இப்படி நடந்து கொள்வார் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை'

வள்ளியின் மனம் இன்னும் ஒரு கேள்வி கேட்டது. வீராயியின் மனம் கேட்ட அதே கேள்விதான்!

'அப்படி நினைக்காதது யார் குற்றம்?'

சிந்தனையை அவளால் தாங்க முடியவில்லை. ஆனால் அதே சமயத்தில் சிந்திக்காமலும் இருக்கமுடியவில்லை.

'நான் அவரை அண்ணா என்று அழைத்தேன். ஆனால், அவர் என்னை வேறு விதமாகவல்லவா எண்ணிவிட்டார்'

மலையப்பன் வள்ளியின் அண்ணா இல்லைத்தான். பார்க்கப் போனால் ஒருவிதமான இரத்தத் தொடர்புகூட இல்லையே.

இரத்தத் தொடர்பு இருந்தால்தான் உரிமை பாராட்ட முடியுமா? இதயத் தொடர்பு இவை எல்லாவற்றிலும் மேல் அல்லவா?

ஆனால் இதயம் தவறு செய்கிறது. அன்பு, ஆசை, காதல் காமம் இவற்றிற்கு அர்த்தம் தெரிந்து எல்லைக் கோடு போட அதற்குச் சில வேளைகளில் தெரிவதில்லை.

வள்ளி, மலையப்பனை உண்மையாக அண்ணாவென்றே நேசிக்கிறாள். அப்படி இருந்தும், அவன் அடிபட்டு அவள் காம்பராவில் மயக்க நிலையில் கிடந்தபோது 'அண்ணா, அண்ணா' என்று அழைக்கும் அவள் பெண் மனமே வசதி வசத்தால் தத்தளித்தது. அதை அவள் மறுக்கமுடியாது.

இந்த நிலையில் 'தங்கை' என்று அழைக்கும் ஆண் உள்ளத்தை முற்றாக நம்பலாமா? சே! வள்ளி என் இப்படி யோசித்தாள்! அவளுக்கு இந்த யோசனை ஒருவித மன எரிச்சலை உண்டாக்கியது.

மலையப்பனின் கடிதத்தை எடுத்துப் பார்த்த நேரங்களில் வள்ளி வாய்விட்டு அழுதாள்.

'அண்ணு! நீங்கள் வீராயியின் அத்தான். அவள் உங்கள் முறைப்பெண். நான் ஒரு நாளும் அவளுக்குத் துரோகம் நினைக்கமாட்டேன். இந்தக் கடிதத்தை என் முன்னுலேயே நெருப்பில் எரித்து உங்கள் தவருன எண்ணத்தைச் சாம்பராக்கி விடுங்கள்.' இவ்வாறு அவள் நினைப்பதை மலையப்பனுக்குக் கூறிஞல்தான், அவள் மனப்பாரம் குறையும். மலையப்பன் தொழிலாளர் தலைவன். அவன் சொந்த வாழ்க்கையில் கெட்ட பெயர் வருவதை வள்ளி விரும்பவில்லை.

அவன் எப்போது தோட்டத்திற்குத் திரும்பப் போகிருன் ?

வள்ளி தனக்குள் சொல்லிக்கொண்டாள் :

'அண்ணு வந்ததும் அவருடன் பேசமாட்டேன். இரண்டொரு நாட்கள் அவர் முகத்தைக்கூடப் பார்க்க மாட்டேன். என் முகத்தில் நான் காட்டும் வெறுப்பு அவரைத் துன்புறுத்தித் திருத்த வேண்டும்'

தொடர்ந்து ஒரு கேள்வி :

'இப்படி ஒரு கடிதத்தை எழுத அவருக்கு எப்படித்தான் மனம் வந்ததோ ?'

வள்ளி அழுதாள். அவளுக்கு வீராயியைக் கூடப் பார்க்க முடியவில்லை. மலையப்பனின் அந்தக் கடிதம் அவளிடம் இருக்கும் வரை அவள் வீராயியைக் காணமாட்டாள். அவள் உலகத்தையே வெறுத்தாள். அந்தக் கடிதம் தீயிலே எரிபட வேண்டும். அதை மலையப்பன் தன் கையிஞலேயே எரிக்கவேண்டும்.

மலையப்பனுக்கு நாவலப்பிட்டியில் அதிக வேலை இருந்தது. ஜயத்திலகா மைதானத்தில் ஒரு மாபெரும் மண்டபம் உருவாகிக்கொண்டிருந்தது. சில நுட்பமான ஜோடனை வேலைகளை

மலையப்பன் தானே செய்துகொண்டிருந்தான். அதே நேரத்தில் அவன் மூளை ஊர்வலத்தைப் பற்றியும், சுவரொட்டிகளைப் பற்றியும் உடனடியாக வர இருந்த தோட்ட 'டெலிகேட்டு களை'ப் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருந்தது. இந்த வேலைகளுக்கும் மகாநாட்டுச் சிந்தனைக்கும் மத்தியில் மலையப்பனின் மனம் ஏங்கும். 'எனது வீராயியைக் காணாது வந்துவிட்டேனே. அவளிடம் ஒரு வார்த்தையாவது சொல்லி விட்டு வந்திருக்கலாம்.'

பின்பு, 'எதற்கும் வள்ளி இருக்கிறாள். அவள் உபதேசம் செய்து வீராயியைத் தேற்றுவாள்' என்று நினைத்து ஆறுதல் அடைவான்.

ஆனால் அவன் மூளையில், மெல்லிய இனந்தெரியாத தலைவலிபோல், கவலை எப்போதும் கப்பிக்கொண்டே இருந்தது.

மலையப்பனின் முகம் மலர்ந்தது. தூரத்திலே காத்தான் வந்து கொண்டிருந்தான்.

"தம்பி காத்தான்!" என்று உரக்க அழைத்து வரவேற்றான்.

"மாணிக்க மலையில் எல்லோரும் சௌக்கியமா?" என்று கேட்டான் மலையப்பன்.

"ஆமா அண்ணே. சுகத்திற்கு என்ன குறைச்சல்"

"பார்க்க நல்லாயிருக்கிறியே. சந்தோஷம். உனக்கு இன்றைக்கு வலிப்பு வரவில்லைப்போல"

"இன்று காலை தொடக்கம் வலிப்பு இல்லை அண்ணே. ஆனா, மனசுக்குத்தான் வலிப்பு வந்திச்சுது"

காத்தான் தொடர்ந்து சொன்னான்:

"அண்ணே! பதி மிகவும் கெட்டவனுங்க."

காத்தான் அழுது கொண்டிருந்தான். கண்ணீருடன் காத்தான் சொன்ன செய்தியைக் கேட்ட மலையப்பன்

தனது தலையை இரு கைகளாலும் ஏந்தியவாறு அப்படியே இருந்து விட்டான். அவனுக்கு மண்டை வெடிப்பதுபோல் இருந்தது.

மலையப்பன் கேட்டான் :

"காத்தான்! இந்தப் பொய்க் கடிதத்தைப் பற்றி நீ வள்ளிக்குச் சொல்லிட்டு வந்திருக்கலாமே?"

"அதுதானே அண்ணே உனக்குச் சொன்னேன். காலையில் இருந்து ஹட்டனிலிருந்து நடந்து வர்றேன். கால் வலிக்கு தண்ணே. இருபது மைல். ஆனு இப்ப மனசு லேசாயி யிருக்கு. இனிப்போயி வள்ளிக்குச் சொல்லுவேன்"

"காத்தான்! நீ தோட்டத்துக்குப் போன உடனேயே இதை வள்ளிக்குத் தெரிவிக்க வேண்டும்."

"தெரிவிக்காமல் விடுவேனு அண்ணே" காத்தான் தொடர்ந்து கேட்டான் :

"அண்ணே, நீயும் ஒருக்கா வந்துட்டா என்ன? வீராயி யும் அழுதுக்கிட்டு இருக்கிறு"

இதைக் கேட்டதும் மலையப்பன் சிறிது கலங்கினுன். அவ னுக்கும் மாணிக்கமலைக்குப் போக வேண்டும்போல்இருந்தது. வீராயி அவன் நெஞ்சில் நிறைந்திருந்தாள். அவன் சிறிது நேரம் மௌனமாக நின்றுன். பின்பு தனது கைக்கடிகாரத தைப் பார்த்து விட்டுக் கூறினுன் :

"காத்தான்! எனக்கு இப்போது இதையெல்லாம் விட்டு விட்டு வரமுடியுமா? பூண்டுலோயா, பசறை, வெலிமடை, உடப்புசல்லாவை, ராகலை முதலிய இடங்களிலிருந்து மாவட்டப் பிரதிநிதிகள் வந்து விட்டாங்க. அவர்களுக்கு இடவசதி செய்யணும். கினுக்கொல்லையிலிருந்து வந்த மாதர் சங்கப் பிரதிநிதிகள் சென்ட்ரல் ஹோட்டலில் தங்கியிருக்கிறுர்களாம். அவர்களையும் சந்திக்க வேண்டும்."

"என்ன அண்ணே, அவங்க இப்பவே வந்துட்டாங்களா?"

"ஆமா, சில ஆரம்ப பேச்சு வார்த்தைகள் இருக்கின்றன."

"நம்ம தோட்டத்திலிருந்து அஞ்சலை, பூச்சி, சோலையம்மாள் முதலியவங்க எப்ப வாராங்க?"

"அவங்க மகாநாடு நடக்கப்போற அன்னிக்குத்தான் வருவாங்க. வீராயி, வள்ளி எல்லோரும் வாருங்க"

"அடடே! மகாநாடு பெரிசா நடக்கணும் அண்ணே. அது எங்க உரிமைப் போராட்டம் அல்லவா?"

"காத்தான்! நீ வருவாயல்லவா?"

"அண்ணே! இது என்ன கேள்வி? விளையாடுறியா?"

"இந்தா காத்தான் பஸ்ஸிலே போ" என்று கூறியவாறு அவனுக்கு ஒரு ரூபாய் நோட்டைக் கொடுத்தான் மலையப்பன்.

"சரி அண்ணே! நாளை மறுநாள் வந்திடுறேன்"

"காத்தான்! நீ அப்படித்தான் சொல்லுவாய். அப்புறம் எங்கேயாவது படுத்திடுவாய்".

காத்தானுக்குக் கோபம் வந்தது. அவன் தனது வலது கையை நீட்டி உயர்த்திக் கத்தினன்:

"மகாநாடு நம்ம உரிமைக்காக. நாம் நமது கோரிக்கைகளை அடைந்தே திருவோம். பாட்டாளிப்படை தயாராகட்டும்! போர்!" மலையப்பனுக்கு மெய் சிலிர்த்தது.

காத்தான் தணிந்த குரலில் கேட்டான்:

"அண்ணே, என்ன நெனச்சே? நான் உசிருபோனலும் வராமல் விடுவேன?"

மலையப்பன் தன் வேட்டியின் தலைப்பால் கண்களைத் துடைத்துக்கொண்டான். அவன் இதயம் துன்பங்களின் சுமைதாங்கி. ஆனல் ஒரு போலிக்கடிதத்தின் பளு அவனைக் கலங்க வைத்தது.

வள்ளி அவனைப் பற்றி என்ன நினைக்கிறாளோ? வள்ளி இயற்கையாகவே சிறிது கண்டிப்பான பெண். ஒழுக்கம் எல்லோருக்கும் இருக்க வேண்டும் என்ற மிக உயர்ந்த எண்ணங்களைக் கொண்டவள். அவள் ஒழுக்கத்தைப் பற்றியோ நீதி நெறிகளைப் பற்றியோ புத்தகங்களில் படித்ததில்லை. யாரிடமும் கேட்டதுமில்லை. அவளுக்கு மாணிக்கமலைத் தோட்டந்தான் உலகம். மாணிக்கமலைத் தோட்டத் தொழிலாளர் வாழ்க்கைதான் அவள் படிக்கும் பெரிய பாடப்புத்தகம். வாழ்க்கைக்குத் தேவையான நீதி நெறிகளை அவள் ஒருவித உள்ளுணர்வால் அறிந்திருக்கிறாள். தனது அறிவு சான்ற எண்ணத் துணுக்கைகளை மற்றவர்களுக்கும் கூற அவள் தவறுவதில்லை.

இரு வருடங்களுக்கு முன் நடந்த ஒரு சம்பவம் மலையப்பனின் ஞாபகத்திற்கு வந்தது.

வீராயியும் வள்ளியும் தங்கள் லயத்திற்கு முன், கான் ஓரமாகப் பேசிக்கொண்டிருந்தனர். அந்த வழியாக வந்த மலையப்பனுக்கு, வள்ளி ஏதோ உபதேசம் செய்து கொண்டிருப்பதாகப் பட்டது. மெதுவாக அவள் பின்னால் சென்று அவள் கண்களைத் தன் கைகளால் மூடினான்.

"யாரு சொல்லடி வள்ளி" சிரித்துக்கொண்டே கேட்டாள் வீராயி.

"மீனாட்சிப் பாட்டி"

"இல்லேடி. கை நடுங்குதா ?"

"வீராயி, உங்கப்பா"

"போடி, தெரியவில்லையா. மருக்கொழுந்து வாசனை வரலையா ?'

வள்ளி தன் கண்களைப் பொத்திய கைகளை விலக்கி விட்டுத் துடித்து எழுந்து பார்த்தாள். சிரிக்கும் மலையப்பனின் முகம் அவளுக்குப் பனி படர்ந்த கண்ணாடி ஊடாகப் பார்ப்பது போல் தெரிந்தது.

"சே! இந்த ஆண்களுக்கு ஒழுக்கம் வேண்டும்" என்றாள் வெட்கத்துடன், கண்களைக் கசக்கியவாறு.

"என்ன வள்ளி! சும்மா விளையாட்டா கண்களை மூடினா என்னவோ ஒழுக்கம் கிழுக்கம் என்று பேசுறியே" என்று கேட்டான் மலையப்பன்.

வீராயி சமாதானம் செய்தாள்.

"இல்லை அத்தான்! வள்ளி நமக்கு ஒழுக்கம் வேணும் என்று பேசிக்கொண்டிருந்தா. அந்த நேரத்தில் நீங்க வந்தீங்க. மனசிலே இருந்ததைச் சொல்லிட்டா."

"ஒழுக்கத்தைப் பற்றி என்ன சொன்னே வள்ளி" என்று மலையப்பன் வினவ, வள்ளி உபதேசம் செய்பவர்களைப் போல் செருமிவிட்டுத் தனது கையை உயர்த்திக் கூறினாள் :

"மலையப்பா—தலைவரே! ஒழுக்கம் எனப்படுவது உலகத்தில் எல்லோருக்கும் அவசியம். அதிலும் தோட்டத்திலே இருக்கிற ஏழைத் தொழிலாளருக்குத் தலைவராக வரப்போறவங்களுக்கு நிரம்பத் தேவை ......"

சிரித்துவிட்டான் மலையப்பன். வீராயியும் விழுந்து விழுந்து சிரித்தாள்.

விளையாட்டாகப் பேசிய வள்ளி, இப்போது எங்கிருந்தோ வந்து எண்ண அலைகள் மனத்தில் மோத, கதாசிரியனின் பிரசவ வேதனையால் அவதிப்பட்டாள்.

"நல்லது வள்ளி! ஒழுக்கம் தேவைதான். எதற்கு? நமக்குச் சோறு போடுமா?" மலையப்பன் சும்மா கேட்ட இந்தக் கேள்வி மருத்துவனின் வேலை செய்து, அவள் சிந்தனையைச் சொற்களாகப் பிரசவிக்க உதவியது.

"தலைவரே, என்ன கேள்வி கேட்டீர்? இது தெரியாதா அப்பனே! ஒழுக்கம் மனுஷனுக்கு மேன்மை தரு

கிறது. அதிலும் பார்க்க உசந்தது ஒண்ணுமே இல்லை. அது உசிரிலும் பெரியது; மதிக்கப்படுவது, ஆனபடியா, ஒருத் தன் உசிருபோனாலும் நல்ல நடத்தையைக் கைவிடப்படாது.''

மலையப்பன் அதிசயப்பட்டான். திகைத்து நின்றான்.

வள்ளி சொன்னாள்:

''அண்ணா! நான் கேலிக்குச் சொல்லலை. எம்மனசு அப்படிச் சொல்லுது.''

மலையப்பனுக்கு ஒரு குறள் ஞாபகத்திற்கு வந்தது.

**ஒழுக்கம் விழுப்பம் தாலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்**

'வள்ளி, நீ இப்போது சொன்ன இதே கருத்தை இரண்டாயிரம் வருடங்களுக்கு முன், எமது மூதாதையர் ஒருவர் கூறியிருக்கிறார்.'

இப்படிக் கூறவேண்டும் போல் இருந்தது மலையப்பனுக்கு.

ஆனால், 'அ'கூட எழுதத் தெரியாத வள்ளிக்குத் திருக்குறளை எப்படி அறிமுகப்படுத்துவதென்று அவனுக்குத் தெரியவில்லை. ஆகையால் ஒன்றும் பேசாமல் விட்டுவிட்டான். அத்துடன் குறள் தரும் உண்மைகளை அவ்வப்போது தனது கொச்சைத் தமிழில் கூறும் அவளுக்கு உபதேசம் செய்ய அவன் யார்? வள்ளி எழுத்தறியாத, ஆனால் அறிவுக் கண் படைத்த தமிழ் மகள்.

அதில் என்ன சந்தேகம்?

இந்த நிகழ்ச்சியை ஞாபகப்படுத்தியதால் மலையப்பன் தன் மனவருத்தத்தை அதிகரித்துக்கொண்டான்.

பதி எழுதின கடிதத்தை உண்மையான கடிதம் என்று எண்ணி அவனைப் பற்றி அவள் என்ன நினைப்பாளோ?

ஒரு சில மணி நேரங்கள் என்றாலும், அவன் ஒழுக்கத்தில் குறைந்தவன் என்று வள்ளி எண்ணலாமா?

தங்கை வள்ளி உண்மையை உடனே அறியவேண்டும்

'காத்தான் வந்துபோனது நல்லதாய்ப் போயிற்று. அவன் போய் எல்லாவற்றையும் வள்ளிக்கும் வீராயிக்கும் தெரிவிப்பான்.'

இப்படி யோசித்தபோது அவனுக்கு மனஆறுதலாக இருந்தது.

# 13

மலையப்பன் நாவலப்பிட்டியில் சொயிசாகலே என்ற வீதி யில் ஒரு சங்கப் பிரமுகர் வீட்டில் தங்கியிருந்தான். மற்றத் தோட்டங்களிலிருந்து இதுவரை வந்துள்ள பிரதிநிதிகள் அவன் தங்கியிருந்த அறையில் தங்கள் மூட்டை முடிச்சுக்களை வைத்து விட்டு, நாவலப்பிட்டியைச் சுற்றிப் பார்க்கப் போய்விட்டார் கள். சிலர் படம் பார்த்துவிட்டு வருவதாகச் சொன்னார்கள். மலையப்பன் ஒரு சாய்வு நாற்காலியில் படுத்திருந்தான். மகா நாட்டில் கொண்டுவரப்படவிருக்கும் கோரிக்கைகள், திட் டங்கள் கொள்கைகள் முதலியவற்றை அவன் மூளை அலசி ஆராய்ந்து கொண்டிருந்தது. அவனிடம் தோட் டத் தொழிலாளர் சம்பந்தமான முக்கிய புள்ளி விபரங் களும் இருந்தன. அவர்களின் பிறப்பு விகிதம், இறப்பு விகிதம், சிசு மரண விகிதம், முதலியவற்றின் புள்ளி விபரங் களை ஆராய்ந்தபோது, அவனுக்குப் பலத்த ஏமாற்றமாக இருந் தது. இலங்கையிலுள்ள மற்ற மக்களுடன் ஒப்பிட்டுப் பார்க் கும்போது, தோட்டத் தொழிலாளரிடையே பிறப்பு விகிதம் குறைவாகவும் இறப்பு, சிசு மரண விகிதங்கள் அதிகமாகவும் இருந்தன. தோட்டப் பகுதியின் சீர்கேடான சுகாதார-வைத் திய நிலையை இந்தப் புள்ளி விபரங்கள் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டின. மலையப்பனுக்குத் துக்கமாக இருந்தது. அவன் மது அருந்துவதில்லை; சிகரெட் புகைப்பதில்லை. துக்

கத்தைச் சமாளிக்க இவை தேவை என்று அவன் ஒருபோதும் கருதியதில்லை. மது, புகையிலை, இலாகிரிப் பொருள்கள் முதலியன ஒருவனை வறுமையாக்கி, நிரந்தர விசனத்தைத் தருவன என்பது மலையப்பனின் கருத்து. அவன் தனது "டயரி"யை எடுத்து ஒரு விபரத்தைக் குறித்துக் கொண்டான். இலங்கையில் தோட்டப் பகுதியைத் தவிர மற்ற இடங்களில் ஆயிரம் குழந்தைகள் பிறந்தால் அறுபத்தேழு குழந்தைகள் இறக்கின்றன. ஆனால் தோட்டங்களில் பிறக்கும் ஒவ்வோர் ஆயிரம் குழந்தைகளில் நூற்றிருபது இறக்கின்றன!

சிந்தித்துப்பார்த்தால் துக்கந்தான். ஆனால் அதற்கு மதுவையும் இலாகிரிப் பொருள்களையும் உபயோகித்தால் வாழ்க்கைத் தரம் உயர்ந்து சிசு மரணம் குறையுமா? மலையப்பன் ஜன்னல் ஓரமாக வந்து நின்றுகொண்டு தனது "டயரி"யைத் தட்டிப்பார்த்தான். அந்தச் சிறிய "டயரி" அவனுக்குப் பல விஷயங்களை, பல இடங்களை, பல பெயர்களை ஞாபகமூட்டியது. பட்டுத் துணியால் அவன் முகத்தை யாரோ வருடியதைப்போல, மெல்லிய பனிக்காற்று அவன் கண்களையும் கன்னங்களையும் தொட்டுச் சென்றது. அவன் பலதையும் பத்தையும் யோசித்துக்கொண்டு நின்றான். உள்ளங்கையளவு "டயரி"யிலுள்ள விஷயங்கள் அவன் இதயத்தை வேதனையால் அழுத்தின. இந்த வேதனைகளையும் சிந்தனைகளையும் அவனுடன் பகிர்ந்து கொள்ள அங்கே அப்போது யார் இருந்தார்கள்? மலையப்பனுக்கு யாழ்ப்பாணத்துச் சுருட்டுத் தொழிலாளர் தலைவன் மயில்வாகனத்தின் ஞாபகம் வந்தது. தனது துன்பங்களை ஓரளவு எழுதிக்கொட்டுவதற்கு அவர் மிகவும் தகுதியானவர் என்று அவனுக்குப்பட்டது. அவருக்கு ஒரு கடிதம் எழுதத் தொடங்கினான்.

அக்கடிதத்தை, மலையப்பன் ஒரு மன்னிப்பு வேண்டுதலுடன் ஆரம்பித்தான். மயில்வாகனம் அவனை ஒரு காவல்

எழுதுமாறு பணித்திருந்தான். மலைநாட்டு வாழ்க்கையை வைத்து ஒரு நாவல் எழுதும் நிலையில் மலையப்பனின் மனம் இருக்கவில்லை.

'அண்ணு, நாவல் எழுதாததற்கு நீங்கள் என்னை மன்னிப்பீர்கள் அல்லவா? அதற்குப் பல காரணங்கள்' என்று மலையப்பனின் கடிதம் தொடங்கியது.

பார்க்கப் போனால் மலையப்பனுடைய வாழ்க்கையே ஒரு சிக்கலான துன்பியல் நாவலைப் போன்றது. சொந்த வாழ்க்கையில் சோதனைகள், தோட்டத் தொழிலாள வர்க்கத்தின் பிரச்சினைகள் எல்லாம் நீர்ச்சுழி போல் அவனைச் சூழ்ந்து துன்பக் கடலில் அமுக்கித் திணறச் செய்கின்றன.

அவன் எழுதினன்:

'எங்கள் ஒவ்வொருவரின் வாழ்க்கையும் தனித்தனி நாவல் தான். மனிதன் பிறந்தநாள் தொடக்கம் வாழ்வதிலும் பார்க்கச் சாவதையே இலக்காக வைத்து அதனை நோக்கிச் செல்லும் மர்மக் குறுநாவல்'

கடிதத்தில் மலையப்பன் ஒரு முக்கியமான கேள்வி கேட்டான்.

'அண்ணு! நாட்டு உரிமையை ஒரு மனிதனின் உயிர் நாடியாக நீங்கள் கருதவில்லையா?'

'நாட்டு உரிமை ஒருவரின் உயிர் நாடி மட்டுமல்ல, அது தன்மான இதயத்தின் துடிப்புங்கூட' என்பதுதான் மயில்வாகனத்தின் பதிலாக இருக்கும்

இதை எதிர்பார்த்த மலையப்பன் தொடர்ந்து எழுதினன்:

'அப்படியானல், மலைநாட்டில் உங்கள் சகோதரரும் சகோதரிகளும் செத்துத்தான் பிறக்கிருர்கள். என்ருலும் எங்கள் பிறப்பு எழுதவேண்டிய கதைதான்.' அதில் என்ன சந்தேகம்? பிணத்தையும் எலும்புக் கூட்டையும் வைத்துக்

கொண்டு வைத்தியம் படிக்கும் மாணவர்கள் இரண்டு வருடங்கள் அவற்றைக் கூறுபோட்டுப் படிப்பார்களாம். மலையப்பனின் வாழ்க்கையும் அவன் உடன் பிறந்தவரின் தோற்றமும் அப்படியாவது ஆராய்ச்சி செய்யத் தகுதியற்றனவா?

மலையப்பன் அந்த அறையிலுள்ள பொருள்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு மூலையில் சிறு அலுமாரி ஒன்றின் மேல் இலங்கை உருவில் ஒரு பெரிய வெள்ளித் தாம்பாளம் சாத்தப்பட்டிருந்தது. அது மிக அழகாக இருந்தது. அவனுக்கு அதைப் பார்க்க மனத்தில் ஒரு திவ்விய உணர்ச்சியும் மகிழ்ச்சியும்! இலங்கை உருவில் எதைப் பார்த்தாலும் மலையப்பனின் உள்ளம் பூரிக்கும். அது படமாக, கனியாக, நிழலாக, மேகத்துணுக்கையாக எதுவாக இருந்தாலும் இலங்கை வடிவென்றால் மலையப்பன் பக்தி ரசனையுடன் அதைப் பார்த்துப் பரவசமடைவான். ஆமாம், யார் விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி, அது அவன் தாய் நாடு. அதன் வாழ்வு அவன் வாழ்வு. அவன் தாழ்வு நாட்டின் வீழ்ச்சிதான்!

மலையப்பனின் மனம் மகிழ அவன் கண்கள் ஏனோ கலங்கின. அவன் விரல்கள் தொடர்ந்து எழுதின.

'எனது நாட்டைப் பொறுத்தவரையில் நாங்கள் செத்தாலும், உயிருடன் இருந்தாலும் ஒன்றுதான். ஒரு சந்ததி தேயிலைச் செடிகளின் மேற்பரப்பைக் கவ்வாத்துப் பண்ணிக் கொழுந்து கிள்ளிப் பராமரிக்க, முந்தின சந்ததி செடிகளின் ஆணி வேர்களுக்கு எருவாகி வளர்க்கின்றது. அவ்வளவுதான் வித்தியாசம். ஒற்றுமையும் அதுதான்.'

யாழ்ப்பாணத்திற்குச் சென்றபோது அவன் மயில்வாகனத்திற்குக் கூறியது ஞாபகம் வந்தது.

'சுதந்திரத்தையும் உரிமைகளையும் வாழ்க்கையின் இன்பங்களையும் ஒரு நாளும் அனுபவியாத மலைநாட்டு மக்களுக்கு அவை இல்லாத குறையைத் தெரிந்து கொள்ள அதிக கற்

பனை வேண்டும். அத்துடன் எங்கள் வேதனையை எடுத்துக் கூறுவதற்குக்கூட மனம் ஒரு நிலையான நிலையில் இருப்பதில்லை. எங்கள் கதையை எழுதக்கூடியவர்கள் நீங்கள். எழுத்திலாவது எங்களை வாழவையுங்கள்.'

மலையப்பன் இதை இப்போது கடிதத்தில் ஞாபகப் படுத்தினன்.

'ஆனல் ஒரு நிபந்தனை' என்று எழுதினன் மலையப்பன்.

'அண்ணு! மலையின் பசுமையான உச்சியில் நின்ரே தோட்டத் துரைமாரின் அழகிய பங்களாக்களிலுள்ள பூங்காவனங்களில் நின்ரே மலைநாட்டவரின் வாழ்க்கையைக் கணிக்காதீர்கள். மலை அணங்கின் இலாகிரி இலாவண்யத்தில் உள்ளத்தை அலையவிடாதீர்கள். இயற்கை மேல் வெறி ஏற்பட்டால், எங்களை உணர்ந்து கொள்ளமாட்டீர்கள்.

மலையப்பன் தனது கையை ஒரு தரம் உதறிவிட்டு, நாற்காலியில் சிறிது சாய்ந்தான். கண்களை இலேசாக மயக்கி நனவிற்கும் கனவிற்கும் இடையிலுள்ள போதை உலகில் சஞ்சரித்தான்.

ஆமாம், மலைநாட்டுப் பச்சை மோகினி மிகவும் பொல்லாதவள். அவள் மேல் விழும் பிரமச்சரியப் பார்வை மிகப் பெரிய சோதனைதான்.

அவள் பச்சை வண்ண ஆடை அணிந்து மல்லாந்து கிடக்கிருள். அவள் மார்பக உருவ மலைகள் மேல் வெண் மஸ்லின் துணியென முகில் தாவணி. அது நழுவும்போது மனித மனத்தை யெல்லாம் அள்ளி மாயமாய் மறையும். தூரத்துச் சிறு அருவிகள், வானத்துத் தேவர்கள் அவள் மீது தூவும் வெண்ணிற மலர்கள்தாம். அவள் மடியிலே, பிறந்த அதிர்ச்சியிலிருந்து விடுபட்டு நெளிந்து தவழும் நீல ஆறுகள். இவையெல்லாம் மலையப்பனின் உள்ளத்தை நீவிய

இயற்கை இன்பங்கள். யாழ் குடாநாட்டில் அவன் கண்ட மலட்டு நிலத்துடன் மலையப்பன் தான் பிறந்த மலையகத்தை ஒப்பிட்டுப்பார்த்போது அவனுக்குப் பெருமையாக இருந்தது.

"சார் டீ!" என்று ஒரு குரல் வந்தது. மலையப்பன் கண்களைத் திறக்க அவன் முகத்தில் படர்ந்த புன்னகை மறைந்தது.

அவன் தேநீர்க் கோப்பையை வாங்கி உறிஞ்சினன்.

தேநீர் கொண்டுவந்த பையன் பக்கத்தில் மேசை மீதிருந்த ஒரு பிரசுரத்தை எடுத்துப் படித்தான்.

மலையப்பன் கேட்டான் :

"தம்பி! உனக்குப் படிக்கத் தெரியுமா?"

தனது கடைவாய்ப் புண்கள் விரிய, தேநீர்க் கடைப் பையன் பதிலளித்தான்.

"சார்! நான் எட்டாம் வகுப்பு வரை படித்திருக்கிறேன்."

"எங்கே?"

"கதிரேசன் கல்லூரியில்"

"தொடர்ந்து படித்திருக்கலாமே"

"எங்க வகுப்பு மாஸ்டரின் அண்ணு, இங்கு வந்து இந்த "யாழ்ப்பாணக் கபே" போட்டாங்க. அங்கு வேலை செய்ய ஒரு ஆள் தேவைப்பட்டது."

"நல்லதாய்ப் போயிற்றே. அதிகம் படித்துத்தான் எதற்கு?" என்ருன் மலையப்பன்.

"தம்பி! உனக்குச் சம்பளம் எவ்வளவு தாராங்க."

"சம்பளம் இன்னும் இல்லிங்க. சாப்பாடும் உடுப்பும் தாராங்க."

பையனின் கிழிந்த சட்டையையும் அழுக்கு வேட்டியையும் அவை மறைக்காத அவன் எலும்பையும் தோலையும் பார்த்துவிட்டு மலையப்பன் கேட்டான் :

“ஏன் தம்பி! வேலைக்குப் போய் சொற்ப காலமோ?”

“மூன்று வருஷம் சார்” என்றான் பையன். அவன் தொடர்ந்து சொன்னான் :

“சம்பளம் கேட்டா ஏசுவாங்க. கள்ளத் தோணி என்று பொலீசுக்கு அறிவிப்பதாக மிரட்டுறாங்க.”

மலையப்பன் கோப்பையை அவனிடம் கொடுத்துவிட்டுச் சொன்னான் :

“தம்பி! நமக்கும் நல்ல காலம் வரும். அதற்காக நாம் எல்லோரும் ஒற்றுமையாகப் பாடுபடவேண்டும்.”

பையன் சலாம் போட்டுவிட்டுத் திரும்பும்போது மலையப்பன் தொடர்ந்து கூறினான் :

“தம்பி! என்னை நீ ‘சார்’ என்று அழைக்காதே. மலையப்ப அண்ணா என்று கூப்பிடு. தெரியுதா?”

அவன் மலையப்பனை ஒரு தரம் பார்த்துவிட்டுச் சென்றான். அவன் “மலையப்ப அண்ணா” என்று ஒருபோதும் அழைக்கமாட்டான். “அண்ணா” என்று மாத்திரம் அழைப்பான். இப்படி ஓர் அண்ணா எல்லோருக்கும் கிடைப்பார்களா?

பையன் போனதும், மலையப்பன் தனது கைகள் விறுவிறுப்பதை உணர்ந்தான். கடிதத்தைத் தொடர்ந்து எழுதினான்.

‘உங்கள் ஊரிலிருந்து வந்து இங்கு பெரிய வேலைகளில் இருப்பவர்கள் எங்களை உதாசீனம் செய்கிறார்கள். காட்டு மிராண்டிகள், மாடுகள், கழுதைகள் என்றெல்லாம் ஏசுகிறார்கள். என்ன அண்ணா! ‘கள்ளத்தோணி’ என்பதும் உங்கள் பகுதியின் மண்வளச் சொல்தானே! சிங்கள வார்த்தை அல்லவே?’

‘உங்கள் உதவி எங்களுக்குச் சரியான நேரத்தில் சிறிதாவது கிடைத்திருந்தால், நாங்கள் இந்த நிலையில் இப்போது இருப்போமா?’

மலையப்பன் இப்படியும் கடிதத்தில் கேட்டான். அவனுக்குக் கொஞ்சம் அதிகமாக எழுதிவிட்டதுபோல் தோன்றியது. அதே சமயத்தில் இன்னும் எழுதத்தான் எவ்வளவோ இருந்தது.

மகாநாட்டில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் கோரிக்கைகள் அடங்கிய ஒரு பிரசுரத்தைத் தன் கடிதத்துடன் மயில்வாகனத்திற்கு அனுப்ப யோசித்தான் மலையப்பன். அதில் அவர்கள் பிரச்சினைகள் தொட்டுக் காட்டப்பட்டிருந்தன.

மலையப்பனின் சொந்த வாழ்க்கையில் கூட அமைதி குறைந்துவிட்டதே!

'அண்ணை! சாமி மனசு வைச்சா அடுத்தமுறை இங்கு வரும்போது அந்தக் குட்டியையும் கூட்டிக்கிட்டு வர்றேன்' என்று தானே மலையப்பன் மயில்வாகனத்திற்கு யாழ்ப்பாணத்தில் சொன்னான்.

இப்போது அது இலகுவில் செய்யக்கூடிய காரியமா? வீராயியுடன் பேசுவதற்கே அவன் சிந்திக்கவேண்டி வந்துவிட்டது.

அவனுக்கு எதிராகப் பணம், பட்டம், அறிவு எல்லாம் உபயோகப்பட்டு வருகின்றன. மலையப்பன் கடிதத்தை முடிக்க முன்பு எழுதினான் :

'அண்ணை! தோட்டத் தொழிலாளி என்றால் காதலிக்கும் உரிமையைக் கூடப் பறித்துவிடலாம் என்பது சிலருடைய எண்ணம் போலும்'

கடிதத்தைக் காகிதக் கப்பல் செய்யும் சிறுவனின் உற்சாகத்துடன் பக்குவமாகப் பல தடவை மடித்து, கோரிக்கைகள் அடங்கிய பிரசுரத்துடன் சேர்த்து, நீண்ட கடித உறைக்குள் போட்டு நாவினால் ஒட்டியபோது மலையப்பனுக்குச் சிறிது இனித்தது.

அன்று யாழ்ப்பாணத்துக் கடிதங்கள் எடுக்கும் நேரம் பிந்திவிட்டது என்று தெரிந்துங்கூட, கடிதத்தை உடனே தபால் பெட்டியில் சேர்க்க வேண்டும்போல் இருந்தது அவனுக்கு. ஒரு மப்ளரைக் கழுத்தில் சுற்றிக்கொண்டு தபால் கந்தோரை நோக்கிப் புறப்பட்டான். ஏற்புவலிக்காரனைப் போல் பாதிக்குமேல் திறக்க முடியாதிருக்கும் தபால் பெட்டியின் வாயில் தனது தடித்த கடிதத்தை வைத்து விரல்களால் தள்ளி விட்டான்.

மலையப்பன் தபால் கந்தோரின் படிகளில் இறங்கும்போது யோசித்தான் :

'இந்தக் கடிதத்தை நான் இவ்வளவு அவசரத்தில் போட்டிருக்க வேண்டுமா ?'

உணர்ச்சியின் காந்தம் அவன் விரல்களை இன்னும் துடிக்கச் செய்தது. அந்தத் துடிப்பில் எழுதிய கடிதம் தானே அது. மிக வேகமாக எழுதிய கடிதம். அவன் அதை ஒரு தரம் கூடத் திருப்பிப் படிக்கவில்லை. விரல்களில் கடிதம் எழுதிய நோவு இன்னும் முற்றாக மறையவில்லை.

படியில் நின்றபடியே தபால்பெட்டியை ஒரு தரம் திரும்பிப்பார்த்தான். போட்ட கடிதம் திரும்பி வருமா ? அவனுக்கு வெட்கமாகவும் இருந்தது. அதில் என்ன என்னவெல்லாம் எழுதிக் கொட்டிவிட்டானோ ?

மயில்வாகன அண்ணைவிற்கு அதை வாசித்ததும் கோபம் வருமா ? துக்கம் வருமா ? அவன் மேல் அன்பு குறையுமா? மதிப்பு மறையுமா ?......

அவர் அதை அண்ணிக்கும் காட்டி உரக்கச் சிரிப்பாரா ? அவன் வெறும் மலையப்பனா ? தோட்டப் பகுதியில் சிந்திக்கும் இளம் சந்ததியில் ஒருவனல்லவா ? அவன் சொல், எழுத்து, உடை, உணவு, நடை, செயல் எல்லாவற்றிற்கும் அர்த்தம் இருக்க வேண்டும். ஓரளவு மதிப்பும் வேண்டும்.

தபால் கந்தோருக்கு முன்னால் இருந்த பஸ் நிலையத்தில் நலவாக்கொல்லை, நாவலை, ஹட்டன், கொத்மலை, கண்டி முதலிய இடங்களிலிருந்து பஸ்கள் வந்து தங்கின. பிரயாணிகள் பஸ்களில் ஏறுவதும் இறங்குவதுமாக இருந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் தோட்டத் தொழிலாளிகள். மலையப்பன் பஸ் நிலையத்திற்கு வந்து தோட்டக் கமிட்டி அங்கத்தவர்கள் யாராவது பஸ்களிலிருந்து இறங்குகிறார்களா என்று பார்த்தான். அவர்கள் இன்னும் வரவில்லை. தோட்டத் தொழிலாளிகளில் பலர் குடித்திருந்தார்கள். சிலர் குடும்பச் சச்சரவுகளைப் பகிரங்கமாகச் சண்டை போட்டுத் தர்க்கித்து மற்றவர்கள் சிரிக்குமளவுக்குக் கோமாளித்தனமாக நடந்து கொண்டார்கள். வட்டிக்குப் பணம் கொடுக்கும் பாய்மார்களின் கழுகுப் பார்வையில் சிக்கிய சிலர், பணம் கொடுத்தவர்களால் இழுத்துச் செல்லப்பட்டனர். தோட்டப் பெண்கள் அலங்கோலமாக உடுத்திருந்தார்கள். இயற்கையாக நல்ல தேக வனப்பைக் கொண்ட இளம் பெண்கள்கூடத் தங்களின் அளவுக்குப் பெரிய இரவிக்கைச் சட்டைகளை மாட்டி அவற்றின் கீழ் முன் ஓரங்களை முடியாமல் தொங்க விட்டிருந்தார்கள். தாவணி என்று பெயரெடுத்த சேலையின் பகுதி நாகம்போல் படமெடுத்து மார்பைத் தழுவி மூடவில்லை. அது உருண்டு, கயிறுபோல் நீண்டு இரு மார்பகங்களுக்குமிடையே ஓடித் தோளைத் தாண்டியதும் ஆலம் விழுதுபோல் பின்னால் ஆடிக்கொண்டிருந்தது. மலையப்பன் அவர்களைத் தன் சிங்களச் சகோதரிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டிருந்தான். மிகவும் வறிய சிங்களப் பெண்கள்கூட அலங்காரமாக உடுத்திருந்தார்கள். அவர்கள் கட்டுக்கோப்பான உடலை இறுக்கமாகத் தழுவிப் பிழிந்து அழகை முழுமையாக்கும் சட்டைகள். இடுப்பைச் சிறிதாக்கிக் குறைவை நிறைவாக்கி உடலோடு ஒட்டி உறவாடி உற்சாக நடை தரும் 'சாரி' அணியிலக்கணம்.

இன்னும் எத்தனையோ விதங்களில் தோட்டப் பெண்கள், ஏன் ஆண்களும் கூடச் சிங்கள மக்களுடன் ஒப்பிடும் போது நாகரிகம் குறைந்தவர்களாகக் காணப்பட்டனர்.

'தோட்டத்து மக்கள் முதலில் பறிக்கப்படாத உரிமைகளைப் பாதுகாததால் போதும். ஒழுங்காக உடுக்க, அழகாக நடக்க, பண்பாகப் பேச, சுந்தரமாக வெற்றிலைச் செல்லத்தை மெல்ல, அதை நாகரிகமாகத் துப்ப மற்றவன் நமக்கு உரிமை தரவேண்டுமா?' இப்படித் தன்னைக் கேட்டுக்கொண்ட மலையப்பன் வெட்கப்பட்டான். மிகுந்த துக்கமடைந்தான்.

அவர்களைத் திருத்த அவனால் முடியுமா? சிந்தித்துப் பார்க்கும்போது, அது அவனுக்கு இலேசான காரியமாகப் படவில்லை.

அவன் கைகளைப் பின்னால் சேர்த்தவாறு, குறிப்பாக ஒன்றையும் இப்போது யோசிக்க விரும்பாதவனாய் அங்கும் இங்கும் நடந்தான். அவனுக்குத் தன்னம்பிக்கை போய்விடும் போல் இருந்தது.

அப்போது—

"மலையப்பா, என்ன யோசிக்கிறாய்? தடுமாறாமல் வீட்டை நோக்கிப் போ...உன்னை நம்பித்தானே இருக்கிறேன். நேரே போடா வழிகாட்டி" என்று ஒரு குரல் கேட்டது. அதிர்ச்சியடைந்தான் மலையப்பன். அவனுக்குக் கடவுள் பேசுவது போல் இருந்தது.

கடவுள் உண்மையில் இருக்கிறாரா? அவர் எங்குஇருக்கிறார்?

மலையப்பன் மேலே அண்ணாந்து பார்த்தான்.

"வழிகாட்டி! நீ சலனப்படலாமா?" என்ற கேள்வி அங்கிருந்து தொடர்ந்து வந்தது.

# 14

**நா**வலப்பிட்டியில் பஸ் நிலையததையும் தொலஸ்பாகே ரோட்டையும் புகையிரதப் பாதை பிரித்தது. பஸ் நிலையத்தை அடுத்துச் சந்தை இருந்தது புகையிரத நிலையத்திலிருந்து வருப வர்கள் தொலஸ்பாகே ரோட்டு வழியாகத்தான் டவுணுக்கு வரு வார்கள். அவர்கள் நேரடியாக நாவலப்பிட்டியின் இதயத்தை அடைவதற்கு ரோட்டையும் சந்தை பஸ் நிலையம் இவற்றை யும் ஓர் உயர்ந்த பாலம் பிணைத்தது. அந்தப் பாலத்தில் நின்றால் நகரத்தின் பெரும் பகுதியைக் கண்களால் அளக்கலாம். தபாற் கந்தோர், சுகாதாரக் காரியாலயம், நகரசபை மண்ட பம், பரி அந்தோனியார் கோவிலும் பாடசாலையும், பரி மரியாள் கோவிலும் பாடசாலையும், அரசினர் வைத்தியசாலையில் ஒரு பகுதி, கடை வீதிகள் எல்லாம் தெரியும். வாரத்தில் மூன்று நான்கு நாட்களில் பண்டாரி என்ற ஒரு கிழவன் பாலத்தின் மேல் இருந்து அந்த வழியாகப் போகிறவர்களிடம் பிச்சை வாங்குவான். அவனுக்குப் பக்கத்தில் சங்கிலியால் கட்டப் பட்ட ஒரு மெலிந்த நாய் சுருண்டு படுத்திருக்கும். பாலத் தின் கீழே ஒழுங்காகப் போகும் புகையிரதங்கள் புகையைக் கக்கிக் கிழவனையும் அவன் நாயையும் ஒரு நிமிடம் மூச்சுத் திணற வைத்துவிட்டு ஓடும். புகையின் கரிநெடி முற்றாக ஓய முன்பு, பொல்லாத எஞ்சின் ஒன்று அவ்விடத்தில் 'ஷண் டிங்' செய்து சாமான் ஏற்றிவந்த குட்ஸ் பெட்டிகளுக்கு ஓட் டம் பழக்கும். மீண்டும் பாலத்தைப் புகைப் படலம் சூழ்ந்து

கொள்ளும். பண்டாரிக்கு இந்தச் சூடான புகைப் போர்வை மலைநாட்டின் சீதளக் காற்றைச் சமாளித்துத் திருப்தி அளித்ததோ என்னவோ! சதா சிரித்த முகத்தினனாய் 'சாமி! இந்தக் குருட்டுப் பண்டாரிக்கு ஏதாவது போடுங்க சாமி...தொரே' என்று அவ்வப்போது கேட்டுவைப்பான்.

ஒரு புகையிரதம் பாலத்தின் கீழாக நாவலப்பிட்டிப் புகையிரத நிலையத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. பாலம் கிடுகிடு என்று அதிர்ந்தது. அன்று அந்தப் பாதையின் வழியாகச் சென்ற புகையிரதங்களில் அது எத்தனையாவது என்று பண்டாரிக்குத் தெரியும். 'அந்தியாகிவிட்டது. வீட்டுக்குப் போக நேரம் சரி' என்று நினைத்தான் பண்டாரி. படுத்திருந்த அவன் நாயும் எழுந்து உடலை நீட்டி நெளிவு எடுத்துவிட்டுக் கழுத்தால் சங்கிலியை மெல்ல இழுத்தது.

பண்டாரி தனது நாயுடன் பாலத்தின் படிகளில் மெல்ல இறங்கிக் கொண்டிருந்தான். நாய் ஒரு நிமிடம் அசையாமல் படியில் நின்றது.

"மலையப்பா என்ன யோசிக்கிறாய்? தடுமாறாமல் போடா, போடா வழி காட்டி" பண்டாரியின் உரிமைக் குரல் அதிகாரத்தொனியுடன் கேட்டது. நாய் காலெடுத்து இரண்டு அடிகள் வைத்து, இரு படிகள் இறங்கிவிட்டு மேலும் அசையாமல் நின்றது. பாலத்தின் கீழே முதலாம் படியில் மூன்று நான்கு அநாதைச் சந்தை நாய்கள் நின்று சண்டைப் பார்வை பார்த்துக் குரைத்தன. பண்டாரியின் வழிகாட்டி நாயும் 'வள்'ளென்று எச்சரிக்கை செய்தது.

"ஓ, இதற்கா நிற்கிறாய் என் ராஜா. குலைக்கிறவங்க கடிக்க மாட்டாங்கடா. நாசமாய்ப் போறவங்க. நீ உன் வழியே போடா. மலையப்பா! கேட்டுதாடா. போடா வழி காட்டி."

பண்டாரி சர்வாதிகார 'டா'வை அன்புக்காக உபயோகித்தான்.

'கடவுள் எங்கே இருக்கிறார்? அவர் பேசுவதுபோல் இருக்கிறதே!' என்று நினைத்து மேலே அண்ணாந்து பார்த்த மாணிக்கமலைத் தோட்டத்தின் மலையப்பன், பாலத்தில் நடந்த இந்த நாடகத்தை அதிசயத்துடன் இரசித்தவாறு நின்றான்.

பாலத்தின் படிகளில் இறங்கி ஊன்றுகோல் ஒன்றால் நிலத்தைத் தட்டியவாறு பண்டாரி முன்னேறிக்கொண்டிருந்தான். அவனுக்கும் வழிகாட்டி நாய்க்குமிடையே இரும்புச் சங்கிலி. அவர்கள் இதயங்களைப் பிணைத்த அன்புச் சங்கிலி, பண்டாரியை முணுமுணுக்க வைத்தது.

"மலையப்பா! நீ தாண்டா என் கண்ணு. கடைக்குக் கிட்ட கொஞ்சம் நில்லுடா, ரொட்டி வாங்கிட்டுப் போவோம். அடே வழிகாட்டி கேட்குதாடா?"

சங்கிலி ஒரு தரம் சிலிர்த்துத் துடித்தது.

"ஓ கேட்டுக்கிட்டியா. சரி போ, போடா போ."

பஸ் நிலையத்தில் நின்ற ஒரு சிறுவன் ஒரு துண்டு வடையை வீசினான். நாய் அந்தப் பக்கமாகத் திரும்பி இரண்டு அடி வைத்து அதைக் கவ்விற்று. சங்கிலி, நடையின் மாற்றத்தைப் பண்டாரிக்கு அறிவித்தது.

"என்னடா உன் பெண்டாட்டி வந்தாளா? யாரு மேலே பாஞ்சே. ஓஹோ, பொண்ணு விஷயம் வேறயா? அது அப்புறம் பார்த்துக்கிடலாம். நீ போற வழியே போ. வழி காட்டுறவனுக்கு வழியில் பொம்பிளை குறுக்கிடலாமாடா?"

மலையப்பன் பண்டாரிக்கு அண்மையில் வந்து இதையெல்லாம் கேட்டுக்கொண்டே நடந்தான். அவனுக்கு அப்போதுகூடக் கனவு உலகில் நடப்பது போலவும், கடவுளின் ஓசை கேட்பது போலவும்தான் இருந்தது. அவனுடைய உதடுகள் துடித்தன. பண்டாரியின் தோள்மேல் தோழமையுடன் கையை வைத்து.........

"சாமி!"

"யாருங்க.........யாருங்க அது?"

"நான் ஒரு தோட்டத் தொழிலாளி. நீங்கள் மலையப்பன், மலையப்பன் என்று அழைத்தீங்களே. அது யாரு சாமி?"

"ஓ, அதைக் கேட்கிறியா? மலையப்பன் இதோ போறானே. இந்தப் பிறவிக் குருடனுக்கு வழிகாட்டி."

மலையப்பன் எதிர்பார்த்த பதில்தானே இது. அவன் பண்டாரியையும் நாயையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டு நடந்தான். கண்களில்லாத ஒரு மனிதனுக்குக் கண்கள் படைத்த ஓர் உயிர் வழிகாட்டி! பல விதங்களில் குருடாகி விட்ட தோட்டத் தொழிலாளர் சமூகத்தோடு தானும் கண் காணாத ஒரு சங்கிலியால் பிணைக்கப்பட்டிருப்பது போல் தோன்றியது மலையப்பனுக்கு. ஆமாம், வழிகாட்டி கூடக் கட்டுப்படுத்தப்பட வேண்டியது அவசியம்தானே? அவனையும் அவன் சமூகத்தையும் பிணைக்கும் அந்தச் சங்கிலியின் தன்மையை அறிய மலையப்பன் விரும்பினான்.

'வழி காட்டுகிறவனுக்குப் பொம்பிளை குறுக்கிடலாமா?'

இந்தக் கேள்வியில் என்ன அர்த்தம் இருக்கிறது?

மலையப்பன் சிந்தித்தான்.

பண்டாரி கேட்டான்:

"என்ன தம்பி உனக்குள்ளேயே ஏதோ பேசிக்கிட்டு வாறாப் போல இருக்கு. என்ன விஷயம்?"

"ஒண்ணுமில்லை சாமி. நாய்க்கு மலையப்பன் என்று பேர் வச்சிருக்கிறியே. அதற்குத் தமிழ்ப் பேரு வைச்சா விளங்குமா? ஜிம்மி, ரோவர், ரெக்ஸ் என்றுதானே சாமி பேர் வைப்பாங்க."

"அப்படி இல்லைத் தம்பி. இவனுக்குப் பேரு டைகர். எனக்கு ஒரு துரை இவனைத் தந்தபோது அதுதான் பேரு. இரண்டு வருஷங்களுக்கு முந்தி நாவலப்பிட்டியில் ஒரு தோட்ட

மகாநாடு நடந்துதல்ல. அப்ப அவன் பேரை மலையப்பன் என்று மாத்திக்கிட்டேன்'' இப்படிப் பதிலளித்தவாறு பெருமையுடன் சிரித்தான் பண்டாரி.

கொத்மலை வீதி வழியாக அவர்கள் போய்க்கொண்டிருந்தார்கள். கதிரேசன் கோவில் வாசலுக்கு முன் வந்ததும் சங்கிலி ஒரு தரம் உசும்பியது.

"ஓ, கோவில் வந்திடுச்சா'' என்றவாறு பண்டாரி இரு கைகளையும் கூப்பிக் கும்பிட்டான். பின்பு ஒருவித திருப்தி முகத்தில் நிழல் விழத் தொடர்ந்து நடந்தான். மலையப்பனும் அவன் பக்கத்திலேயே போய்க்கொண்டிருந்தான். நடை பழகும் பச்சைக் குழந்தையுடன் போவதுபோல் அவனுக்கு அந்தப் பிரயாணம் ஒருவிதமான இன்பத்தைத் தந்தது.

"என்ன தம்பி, நீ என்னோடேயே வந்துகிட்டிருக்கிறியே?''

"ஆமா சாமி நீ உன் நாய்க்குப் பேரு வைச்ச கதையைப் பூராவாகச் சொல்லலையே.''

"ஓ, அதுவா தம்பி. நீ இரண்டு வருஷத்துக்கு முந்தி தொழிலாளர் மகாநாட்டுக்கு வந்திருந்தியா?''

"ஆமா சாமி.''

"அப்போது உனக்குத் தெரிஞ்சிருக்குமே? மலையப்பன் என்று ஒரு பையன் பேசினான். கேட்டிருக்கிறியா?''

பண்டாரி திருப்பி வினவினான்:

"என்ன கேட்டிருக்கிறியா?''

"ஆமா, ஆமா, கேட்டிருக்கிறேன்.''

"தம்பி, அவன் என்ன மாதிரிப் பேசினான். சிறு பையன் இப்படிப் பேசுகிறானே என்று எல்லோரும் ஆச்சரியப்பட்டாங்க. அவனைப் பார்க்கக் கண்ணில்லையே என்று எனக்கு அப்போதுதான் கண்ணில்லாத குறை தெரிஞ்சுது.''

பண்டாரி தொடர்ந்து சொன்னான்:

"நம்ம தோட்டத் தொழிலாளர் பிரச்சினை எல்லாம் அவன் புரிஞ்சுகொண்டான். அவன் ஒரு காலத்திலே நம்ம எல்லோருக்கும் தலைவனாக வரக்கூடியவன் என்று எனக்கு ஏதோ ஒரு நம்பிக்கை. ஆனா........"

மலையப்பனின் கண்களில் மகிழ்ச்சி பனித்திருந்தது.

அவன் கேட்டான்:

"என்ன சாமி, ஆனா என்று இழுக்கிறீங்க...ஏன் உங்க முகம் இப்படி மாறுகிறது? கன்னங்களின் சதை ஏன் இப்படித்துடிக்கின்றது?"

"நம்ம பையன்கள் கெட்டுப் போறாங்க. சிறிதா இருக்கும் போது பெரிசாகப் பேசுறாங்க. பெரிசா வளர்ந்ததும் சிறிசா வேலைகளைச் செய்யுறாங்க. கள்ளு சாராயம் குடிச்சு வெறிச்சு, ஒருத்தனை ஒருத்தன் அடிச்சுக்கிறாங்க. அந்தப் பையன் மலையப்பன் என்ன ஆனானோ!"

மலையப்பனுக்கு ஒன்றுமே பேச முடியவில்லை.

"தம்பி, கஷ்டங்களை மேலும் மேலும் வருவிச்சா இருக்கிற கஷ்டங்கள் தொலையுமா?" என்று கேட்டான் பண்டாரி. "கஷ்டங்கள் வர வர நம்பிக்கை போய்விடுகிறது. தொழிலாளர் தடுமாற்றம் அடைகிறாங்க. ஒரு மகாநாட்டிலே பேசினவன் மற்ற மகாநாடு வர முந்தியே மனம் கசந்து ஒதுங்கி விடுகிறான். புதிய ஒரு பயல் வந்து பேசுகிறான். இப்படிப் போனா அனுபவம் உள்ள ஒருவன் தொழிலாளிகளுக்கு வழிகாட்டியாக வர முடியுமா? இந்த நிலையில் பணம் படைத்த தோட்ட முதலாளிகளில் ஒருவன்தானே நமக்குத் தலைவனாக இருப்பான்!" பண்டாரி இப்படியாக பேசிக்கொண்டே நடந்தான்.

'கடவுள் எங்கு இருக்கிறார்?' என்ற தத்துவ ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த மலையப்பனின் சிந்தனை மூளை, இரணியனுக்குக் கிடைத்த பதிலைப் போல, 'அவர் தூணிலும்

இருப்பார், துரும்பிலும் இருப்பார்; கூனிலும் இருப்பார், குருட்டிலும் இருப்பார்' என்ற ஒரு சமாதானத்திற்கு வந்தது. இந்தக் குருட்டுப் பிச்சைக்காரன் தானா இப்படிப் பேசுவது?

"சாமி" என்று அழைத்து, பண்டாரியின் கவனத்தைத் தன் பக்கம் திருப்பினான் மலையப்பன்.

"சாமி, மலையப்பனை எனக்குத் தெரியும். அவன் குடித்து வெறித்துச் சூதாடி எந்த விதத்திலும் கெட்டுப் போகவில்லை. அவன் எப்போதும் மலைநாட்டுத் தொழிலாளரின் சுக வாழ்வையே எண்ணிக்கொண்டிருக்கிறான். மலையப்பன் இனி எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் தன் மனத்தை தத்தளிக்க விடமாட்டான். இதை நீங்க நம்புங்க"

இப்படிக் கட கடவென்று பேசிய மலையப்பன், மிருதுவாக ஆனால் உருக்கமாகச் சொன்னான்:

"சாமி, மலையப்பன் இந்த முறையும் நாவலப்பிட்டி மகாநாட்டில் பேச இருக்கிறான்"

ஓசை வந்த பக்கம் திரும்பிய பண்டாரி தனது இதயத்தின் ஆனந்தத்தைக் காட்டும்பொருட்டு ஒரு மழலைக் குழந்தைச் சிரிப்பை முகத்தில் தவழவிட்டான். பண்டாரிக்கு மலையப்பனையே பார்த்ததுபோல் இருந்தது!

ஒரு சில நிமிட மௌனத்தின்போது அந்தச் சந்தோஷத்தை மனமார அனுபவித்துவிட்டுப் பண்டாரி சொன்னான்:

"அந்தப் பையனுக்கு இந்தக் குருடன் ஒன்று சொல்ல இருக்கு"

"என்ன சாமி அது?"—கேட்டான் மலையப்பன்.

"இல்லை. மலையப்பனுக்கு நான் கூறவேண்டிய புத்திமதி ஒன்று இருக்கு என்று சொன்னேன். என்னை அவன் எங்கே சந்திக்கப் போகிறான்." பண்டாரியின் பெருமூச்சு முற்றுப் பெறுவதற்கு முன்பே மலையப்பன் சொன்னான்:

"சாமி, நீங்க சொல்லுங்க. நான் மலையப்பனுக்குத் தெரியப்படுத்தறன்."

மலையப்பனுக்குத் தன்னை யார் என்று அறிமுகம் செய்ய வேண்டும்போல் இருந்தது. சிறிது யோசித்தபின், தன்னை இந்த நேரத்தில் காட்டிக்கொள்வது புத்தியல்ல என்று தீர்மானித்தான்.

பண்டாரி சொன்னான் :

"மலையப்பன் அந்த மகாநாட்டில் பேசியபோது சிறிது உணர்ச்சிவசப்பட்டான்"

மலையப்பன், தனது மகாநாட்டுப் பேச்சில் அதீத உணர்ச்சியின் உளறல் சிலசமயங்களில் இருந்ததை எப்போதோ உணர்ந்துவிட்டான். என்றாலும் பண்டாரியின் வாய்மொழிகளைக் கேட்க விரும்பினான். அவன் கேட்டான் :

"நரம்புள்ள இதயத்திற்கு உணர்ச்சி இருக்கத்தானே செய்யும் ?"

பண்டாரி மெல்லிய சிரிப்பின் பின்னணியோடு சொன்னான்:

"ஆமா தம்பி! இருதயததுக்கு உசரமான இடத்திலே மூளையென்று ஒன்று இருக்குதல்லவா ? நம்ம எல்லா அவயவங்களும் அதற்குக் கட்டுப்பட வேண்டாமா ?"

பண்டாரி கூறியது உண்மைதானே.

மூளைக்கு மிக அண்மையில் இருக்கும் நாக்கு அதைப் புறக்கணித்துவிட்டு, இதய ஓசைக்கு மட்டும் ஆடுவது பைத்தியக்காரத்தனமாகும். இதை இப்போது நன்கு உணர்ந்த மலையப்பன் ஏதோ கூற முயன்றபோது, பண்டாரி தொடர்ந்து பேசினான் :

"மனிதன் உணர்ச்சிவசப்படுவான். ஆனால் அதைக்கட்டுப்படுத்திய பின் பேசுபவனும் செயல்படுபவனும்தான் தலைவனாகின்றான். மதிப்பிற்குரிய மலையப்பன் அழிவுச் சொற்களை உபயோகிக்கக்கூடாது"

'மதிப்பிற்குரிய' என்ற அடை மொழி மலையப்பனுக்கு ஒருவித பயத்தைத்தந்தது. மிகப் பெரிய ஒரு பொறுப்பை எற்றுக்கொண்டது போல் இருந்தது. ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய விஷயம்தான்.

அவன் ஒரு கடுதாசியில் ஏதோ எழுதி "இந்தா சாமி, இந்தத் துண்டை மகாநாட்டில் யாரிடமாவது காட்டினால் உன்னை மண்டபத்துக்குள்ளேயே விடுவாங்க. நீ பேச்சுக்களை நன்றாகக் கேட்கலாம்" என்று கொடுத்தான்.

மலையப்பன் விடைபெறும் போது அவன் கையிலிருந்த பேணியில் அன்பின் அறிகுறியாக மடிபட்ட ஒரு தாள் விழுந்தது. அது ஒலி எழுப்பவில்லை.

மலையப்பன் தனது இருப்பிடத்தை நோக்கி நடந்தபோது மிக்க உற்சாகமுடையவனைக் காணப்பட்டான். 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி......' என்ற பாட்டின் மெல்லிய சீழ்க்கை ஒலி, குழலாகிவிட்ட அவன் உதடுகளிலிருந்து வந்து கொண்டிருந்தது.

சொயிசாகலையில் மலையப்பன் தன் விடுதியை அடைந்த போது, அங்கு பல தோட்டப் பிரதிநிதிகள் இருந்தார்கள். எல்லாம் அவனுக்கு அறிமுகமான, அவன் நேசிக்கும் முகங்கள் தாம். மலையப்பன் எல்லோரையும் பெயர் கூறி அழைத்தான். அவர்கள் சொந்த விஷயங்களையும், குடும்பப் பிரச்சினைகளையும், தோட்ட விவகாரங்களையும் விசாரித்தான்.

"பெருமாள் சுகமா இருக்கிறியா ?" என்று கேட்டான் மலையப்பன். வலது கை புயத்தோடு வெட்டப்பட்ட ஓர் உருவம் பேசியது.

"சுகத்திற்கு என்ன அண்ணே. தொழிலாளர் சுகந்தானே நமக்கு முக்கியம். நம்ம தோட்டத்திலே பாடசாலை இன்னும் வரவில்லை. மகாநாட்டிலே கட்டாயக் கல்வியைப் பற்றிப் பேசப் போகிறேன்."

விக்டோரியா தோட்டத்து வெள்ளையத்தேவர் சொன்னான்:

"நம்ம தோட்டத்தில் நூற்றைம்பது பிள்ளைகளைப் படிப்பிக்க ஒரே ஒரு ஆசிரியர்தான் இருக்கிறார்"

"ஆமா தேவர், பத்துத் தலைகள், இருபது காதுகள், இருபது கைகள் படைத்த ஸ்ரீ இராவணனுக்கு, அவன் உருவைக்கொண்ட ஒரு சந்ததி இல்லாதது நமக்குத்தான் நஷ்டம். அப்படிப்பட்ட உருவும் திருவும் படைத்த ஆசிரியர் தான் ஒரே நேரத்தில் நூறு பிள்ளைகளைப் படிப்பிக்க முடியும்" என்றான் மலையப்பன்.

அங்கிருந்தவர்களில் அநேகர் வாய்விட்டுச் சிரித்தனர். பூண்டுலோயாவிலிருந்து வந்த முத்துக்கறுப்பன் உரக்கக் கத்தினான்:

"என்ன எல்லாரும் சிரிக்கிறீங்க. சிரிக்கிற விஷயமா இது?"

அவன் எழுந்து நின்று வலது கையை மடக்கிச் சொன்னான்:

"தோழர்களே! லட்சக் கணக்கான நம்ம பிள்ளைகள் கல்வி அறிவில்லாமல் இருக்கிறாங்க. இது நம்மைத் தொடர்ந்து அடிமைகளாக்க ஒரு பெரும் சூழ்ச்சி. தோட்ட முதலாளிகள் இதற்கு உடந்தையாக இருக்கிறார்கள். அவர்கள் பிள்ளைகள் கண்டியில் பெரிய பள்ளிகளில் படிக்கிறாங்க. கார்களில்தான் போவாங்க. அந்தக் கார்களை நாம் வழி மறித்து அடித்து உடைக்கணும்....."

"அவர்கள் பிள்ளைகள் தொடர்ந்து பள்ளிக்குப் போகாதவாறு அவர்களை மிரட்டணும்" என்றான் இன்னும் ஓர் இளைஞன்.

"உங்களுக்கு என்னடா பைத்தியம் புடிச்சுட்டுதா?" என்று கேட்டான் சிவனு என்ற ஒரு கிழவன்.

“ஆமா, அயோக்கியத்தனம் செய்யிறவங்க பெரிய வங்க. நாங்கதான் பைத்தியக்காரங்க” என்றான் முத்துக்கறுப்பன். அவன் தனது கழுத்து நாளங்கள் புடைக்கத் தொடர்ந்து கத்தினான்.

“நாங்க போராடியே தீருவோம். நம்ம பையங்கள் எதற்கும் தயாராக இருக்கிறாங்க.”

அமைதியாக ஒரு மூலையோடு சாய்ந்திருந்த மலையப்பன் “நண்பர்களே” என்று அழைத்தான். அவன் தொடர்ந்து சொன்னான் :

“கெட்டித்தனமாகச் சூழ்ச்சி செய்து நல்ல பெயர் எடுப் பவங்க இருக்கத்தான் செய்யிறாங்க. அதற்காக நீதியையும் உண்மையையும் நிலைநாட்டுவதற்கு, நாம் அவசர புத்தியில் முட்டாள்தனம் செய்யலாமா? நமது நல்லெண்ணத்தை அறி வற்ற செயல்கள் மறைக்கப்படாது. நாம் முன்னேறாவிட்டால் பாதகமில்லை. இப்படியே இருந்துவிடுவோம். காடையர் கூட்டம் என்று புதுப்பெயர் வாங்க வேண்டாம்.”

மலையப்பன் இப்படிக் கூறியபோது பல எதிர்ப்புக்கள் வரும் என்று எதிர்பார்த்தான். முத்துக்கறுப்பன் எழுந்து அறையை விட்டு வெளியேறுவான் என்று நினைத்தான். அதற்கு அவன் என்ன செய்யமுடியும்? அவன் தனது மனத்தில் எது தனது சமூகத்திற்கு நல்லதாகப் பட்டதோ, அதைச் சொல்லிவிட்டான்.

முத்துக்கறுப்பன் எழுந்தான். அனைவரும் அவனையே பார்த்தனர்.

“சரி, நம்ம தலைவர் சொல்வது போலவே செய்வோம்” என்று கூறிவிட்டு இருந்தான்.

“முத்து, ‘தலைவர்’ என்று என்ன ஒரு புது விஷயம் ஆரம்பிச்சிட்டே. மலையப்ப அண்ணை என்றே சொல்லு. அண்ணை என்று கூற விருப்பமில்லே, மலையப்பன் என்று கூப்புடு” என்றான் மலையப்பன்.

"அது என் விருப்பம். நான் 'தலைவர்' என்றுதான் கூப்புடுவேன்" என்றான் முத்துக் கறுப்பன்.

மலையப்பனுக்கு அன்று நித்திரை வர மறுத்தது. அடுத்த நாள் மகாநாட்டுக்கு முந்திய நாளல்லவா? அவன் பல விஷயங்களைச் சிந்தித்தான். அவனைச் சுற்றிப் பல பிரதிநிதிகள் தரையில் மூலைக்கொருவராகப் படுத்திருந்தார்கள். அந்த அறைமேல் பனித்தூறல்கள் மலர்கள்போல் விழுந்து கொண்டிருந்தன.

# 15

"தொழிலாள வர்க்கத்துக்கு ஜே!"

"எங்கள் சங்கம் நீடூழி வாழ்க!"

"ஐக்கியம் ஓங்குக!"

நாவலப்பிட்டிப் புகையிரத நிலையத்தில் வந்திறங்கிய தொழிலாளர்கள் தமது வருகையைத் தெரிவித்தனர்.

"ஒற்றுமை ஓங்குக!"

"பிரிவு வேண்டாம்"

"உரிமைக் குரல் கேட்கட்டும்"

நிலையத்துக்கு அருகில் ஏற்கனவே கூடியிருந்த தொழிலாளர்கள் இவ்வாறு குரல் எழுப்பி வந்தவர்களை வரவேற்றனர். சங்கத்தின் கொடிகளைத் தொண்டர்கள் ஏந்தி நின்றனர். தொண்டர்களில் ஆண்கள் வெள்ளை வேட்டியும் சிவப்புச் சேட்டும் அணிந்திருந்தனர். பெண்கள் சிவப்பு இரவிக்கை போட்டு வெள்ளைச் சேலை உடுத்திருந்தனர். தூய வெள்ளை மட்டும் உடுத்திருந்த சிலர் சிவப்பு நிறக் காகிதப் பூக்களைத் தங்கள் தாவணிகளில் குத்தியிருந்தனர். தொழிலாளர்கள் புதிய உடைகளை உடுத்து சிவப்பு 'மப்ளர்'களைக் கழுத்தில் சுற்றி, குல்லாய்கள் அணிந்து மிக்க உற்சாகத்துடன் காணப்பட்டனர். ஒருமைப்பட்ட இந்த ஆடை அணி, பார்ப்பதற்கு மிகவும் கம்பீரமான அழகைத் தந்தது. ஒரு சிலர் கோமாளி

வேஷம் போட்டவர்கள்போல் காணப்பட்டு, போட்டர்கள் டிக்கட் வாங்குவோர் முதலியோரின் நகைப்புக்குக் காரணமாயினர். அவர்கள் பேச்சிலும் கல்வி அறிவின் வறுமை நன்கு தெரிந்தது. தொண்டர்கள் விவேகிகளாகவும், ஓரளவு படித்தவர்களாகவும், அரசியல் பயிற்சி உள்ளவர்களாகவும் இருந்ததால் நிலைமையைச் சமாளித்து, கூட்டத்தை ஒழுங்குபடுத்தி இரு வரிசைகளாக்கினர். மலையப்பன், முத்துக்கறுப்பன், வெள்ளையத் தேவர், அண்ணுமலை, அஞ்சலை, பூச்சி, சோலையம்மாள், சங்கரவடிவு முதலானோர் தொழிலாளர் படையை ஒழுங்குபடுத்துவதில் முக்கிய பங்கு எடுத்தனர். புகையிரத நிலையத்திலிருந்து, தொலஸ்பாகே வீதி அம்பகமுவ ரோட்டைச் சேரும் சந்தி அளவுக்கு வரிசையை ஒழுங்கு செய்தும், இரு வரிசைகள் போதவில்லை. மூன்றும் வரிசை தேவைப்பட்டது. ஒரு வரிசையின் முன்னணியில் மாணிக்க மலைத் தோட்டத்து டீ மேக்கர் வல்லிபுரம் நின்ருர். அவர் ஏந்திநின்ற அட்டையில் "மது ஒழிக!" என்று எழுதியிருந்தது. மலையப்பனைக் கண்டதும் வல்லிபுரம் தனது கையை உயர்த்தி அசைத்தார். மலையப்பன் ஒரு சலாம் போட்டுவிட்டு, பெண்கள் அணிவகுப்பைக் கவனித்தான். அவன் அஞ்சலையிடம் கேட்டான் :

"அஞ்சலை! வள்ளியும் வீராயியும் வரலையா?"

அஞ்சலை கேட்டாள் :

"அடி புஷ்பம், வீராயி வரலையா?"

புஷ்பம் மலையப்பனைப் பார்த்துச் சொன்ஞள் :

"வீராயி வரமாட்டா"

அப்படியாஞல் வள்ளியும் வரமாட்டாள் என்றுதானே அர்த்தம். அவர்கள் இருவரும் மாணிக்கமலைத் தோட்டத்தின் மாதர் முன்னணியில் பெரும் பங்கு எடுப்பவர்கள்.

அவர்கள் வராதது ஏனே?

டீ மேக்கர் வல்லிபுரத்தைக் கண்டு களித்த மலையப்பனின் இதயம், வள்ளியையும் வீராயியையும் காணாது அலைந்தது. காத்தானைக் காணாதது அவனுக்குப் பெரும் ஏமாற்றமாக இருந்தது. 'மகாநாடு நம்ம உரிமைக்காக. உசிரு போனாலும் வராமல் விடுவேனா!' என்று வீம்பு பேசிவிட்டுப் போன அவன் இப்போது எங்கே படுத்துத் தூங்குகிறானோ?

ஊர்வலம் தொலஸ்பாகே வீதியில் ஊர்ந்தது. மதில்களிலும் கடைகளிலும் சுவர்களிலும் வச்சிர வர்ணங்களால் எழுதப்பட்ட வரவேற்புரைகள் காணப்பட்டன.

"வருக வருக! காடு வெட்டி நிலந்திருத்தி நமது நாட்டை வளமாக்கிய மன்னர்களே வருக!" என்றும் 'கண்ணீரையும் செந்நீரையும் தாரை வார்த்து இலங்கையைப் பொன் கொழிக்கச் செய்தோரே வருக!' என்றும் எழுதப்பட்ட சுலோகங்கள் ஊர்வலத்திற்கு உயிரும் ஊக்கமும் தந்தன.

இதுபோல் இன்னும் எத்தனையோ வரவேற்புப் பாராட்டுரைகளும் வேண்டுகோள்களும் எழுதப்பட்டிருந்தன.

அம்பகமுவ வீதிவழியாக ஒரு சிறு ஊர்வலம் ரம்புக்பிட்டியிலிருந்து வந்து முந்திய ஊர்வலத்துடன் சங்கமித்தது. அதில் பல சிங்களச் சகோதரத் தொழிலாளர் இருந்தனர். அவர்களில் இளைஞர்கள் மலையப்பனைக் கண்டதும், 'மலையப்ப சகோதரயாட்ட ஜயவேவா!' என்று கோஷமிட்டனர். கம்பளை, உலப்பனை முதலிய இடங்களிலிருந்து வந்தவர்கள் பஸ் நிலையத்தில் நின்ற கூட்டத்தோடு சேர்ந்து, பெரிய ஊர்வலத்தில் கலந்து கொத்தமலை ரோட்டு வழியாக ஜயத்திலகா மைதானத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தனர்.

'தொழிற் சங்கம் எங்கள் உயிர்'

'உரிமை பெறுவோம்; சங்கம் காப்போம்.'

ஊர்ந்த ஊர்வலம் பெருக்கெடுத்தது. உற்சாகம் பொங்கக் கோஷங்கள் வலுப்பெற்றன. நாவலப்பிட்டியில் ஒரு பெரிய

நீர்வீழ்ச்சி தோன்றியதுபோல் ஓர் ஓங்கார இரைச்சல் நகரின் மற்றெல்லா ஒலிகளையும் அமிழ்த்தியது. அது சுற்றியிருந்த மலைகளில் எதிரொலித்தது.

மலையிலே உற்பவ அவதியுடன் தோன்றும் ஒரு நதி, அதன் பருவ நிலைக்கு ஏற்ப அழகுமிகு அருவியாகவும், பயங்கர நீர்வீழ்ச்சியாகவும், பெண்மை நெளிவுடன் அசைவதுபோலவும், முன்னேறும் போர்ப்படையின் வீர உணர்வோட்டத்தைப் போலவும், கடலுடன் சங்கமிக்கும் சாந்த ரூபத்திலும் காட்சி தருவதுபோல் தொழிலாளர் ஊர்வலத்திலும் பலவிதமான உணர்ச்சி வெளிப்பாடுகளைக் காணமுடிந்தது.

தொழிலாளரின் ஒரு பகுதியினர் பட்டாளத்தின் வீரிய நடைபோட்டனர். சிலர் சத்தியாக்கிரகிகள் போல் காந்தி நடை நடந்தனர். இன்னும் சிலர் காவடி எடுப்போரைப் போல் பக்தி ஆவேசத்தால் ஆடிச் சென்றனர். பெண்கள் பள்ளிப்பிள்ளைகள்போல் ஒழுங்காக நடந்தனர். அவர்களில் சிலர் கற்பூரச்சட்டி எடுப்போரைப்போல் பக்தி மயக்கத்தில் அசைந்தனர். வீர முழக்கத்தின் பின்னணியில் அவர்கள் எல்லோருடைய சிந்தனையும் ஒருமைப்பட்டது.

கடைகளின் வாசல்களிலும் தெரு ஓரத்திலும் நின்று ஊர்வலத்தைப் பார்த்தவர்கள், பனித்த தங்கள் கண்களைத் துடைத்துக்கொண்டனர்.

"உச்சிமீது வானிடிந்து வீழுகின்றபோதிலும் அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே" என்ற பாடலை ஒரு பகுதியினர் பாடி முடிந்ததும், பெண்கள் அணியில் சென்ற ஒரு பெண் தனது வலது கையை மேலே உயர்த்தி "கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது" என்று ஆரம்பித்தாள். அதைத் தொடர்ந்து நாமக்கல் கவிஞரின் அந்தப் பாடலைத் தொண்டர்கள் பாடினபோது உணர்ச்சியின் சுருதி உச்சநிலையை அடைந்தது.

ஊர்வலம் நாவலப்பிட்டி அரசினர் ஆஸ்பத்திரியை அடைந்தபோது அவ்விடத்தில் தாங்கமுடியாத துர்நாற்றம் வீசியது. தொழிலாளர் தங்கள் மூக்குக்களைக் கைகளால் பொத்திக்கொண்டனர். ஊர்வலம் தடைப்பட்டது.

பிரேதப் பெட்டி உருவில் ஒரு வண்டியை ஆஸ்பத்திரியிலிருந்து இரு கூலியாட்கள் தள்ளிக்கொண்டுவந்தனர். அவர்கள் ரோட்டுக்கு வந்ததும் ஊர்வலம் போய்க்கொண்டிருந்த பக்கமாகவே வண்டியைத் திருப்பி விரைந்துசென்றனர். உற்றார் உறவினர் யாருமே சொந்தம் பாராட்டாத ஆஸ்பத்திரிப் பிரேதங்களைப் புதைக்கும் பூமி அவ்விடத்திலிருந்து சுமார் அரைமைலுக்கப்பால் இருந்தது. பிரேத வண்டி 'கடகட' என்ற ஓசையையும், குமட்டும் நெடியையும் எழுப்பிப் பரப்பிக் கொண்டு ரோட்டில் சென்றபோது, ஊர்வலம் சற்று ஒதுங்கி விட்டுக்கொடுத்தது. ஊர்வலத்திற்கு முன்னால் பிரேதவண்டி வேகமாக முன்னேறியது.

"சூ! இது யாரப்பா இந்தப் பெரியமனிசன்? நாவலப் பிட்டியில் இது போல் யாருடைய பிரேத ஊர்வலத்திலும் இவ்வளவு பேர் வந்தது இல்லையே! இவர் இந்தியத்தோட்டத் தொழிலாளர் தலைவர்களில் ஒருவரோ?" ஊர்வலத்தைப் பார்த்துக்கொண்டு நின்ற ஒரு யாழ்ப்பாணத்துத் தமிழ் வாத்தியாயர் இப்படி ஒரு கேலி ஆச்சரியத்தையும் விகட வினவையும் வெளியிட்டார்.

அதற்கு, அக்கம் பக்கத்திலிருந்தும் சில பதில்களும் கேள்விகளும் வந்தன.

"அவனுக்குப் பிறக்கும் போது அதிர்ஷ்டம் இல்லை. இறக்கும்போதுதான் புகழ் வந்திருக்கு."

"என்ன ஐயா அதிர்ஷ்டம்? செத்ததற்குப் பிறகு என்ன கொண்டாட்டம். ஒருவர் இறப்பதும் பிறப்பதும் தனியாகத் தானே?" ஒரு கிழவன் அங்கலாய்த்துச் சொன்னான்:

"அட எழவு விழுந்தவங்க, பிணத்தை வைச்சு வேடிக்கை யாகப் பேசினுனே. செத்துப் போனவனுக்காகத் துக்கப்படா விட்டாலும், இப்படிப் பேசாமல் இருக்கக் கூடாதா?"

"என்ன துக்கம்? தோட்டக்காரன் செத்த பிறகுதானே மண் உரிமை பெறுகிறுன். பார்க்கப்போனல் சந்தோஷம்தான்."

"பாவம் முந்தாநாள் இரா செத்து, நேத்துப் பூரா வைச் சுப் பார்த்திருக்கிறுங்க. யாருமே வரலையாம். ஒரு தோட்டக் கூலி"

"ஹட்டன் பக்கமாக நடந்து போயிருக்கான். ரம்புக் பிட்டியிலே பஸ் வந்து தட்டிச்சிட்டுதாம். உடனே குளோ சாயிட்டான்."

"அந்தக் காலத்திலே எம தர்ம மகாராசன் எருமைக் கடாவிலேதான் வருவான். இப்ப நம்ம பஸ் சங்கத்திலே அவ னுக்கு வேலை கிடைச்சுட்டுது. பெரிய மனிதனுகிவிட்டான். அட, அரசாங்க உத்தியோகமில்லே."

"பஸ் சரியாத்தான் வந்தது. இந்த மனிசன் வலிப்புவந்து ரோட்டில பஸ்ஸுக்கு முன்னுலேயே விழுந்திட்டானும்."

"வலிப்பா?"—கம்பீரமான ஒரு குரல் வேதக் கோவில் சாவு மணியின் தனி ஓசைபோல கேட்டது.

"ஆமாம், வலிப்பு வந்து விழுந்திட்டானும்."

ஊர்வலம் ஜயதிலகா மைதானத்தை நோக்கி அசைந்தது. ஆனுல், இந்தத் தொழிலாளர் ஊர்வலத்தை விட்டு மலையப் பன் எங்கே ஓடுகிறுன்? அவன் வலிவுள்ள இதயம் நெஞ்சுக் கூட்டுக்குள் விழுந்து புரண்டு எதற்காகத் தலைவிரித்து ஆடுகிறது.

மலையப்பனைத் தொடர்ந்து முத்துக் கறுப்பனும் ஓடினுன்.

பிரேத வண்டியைத் தள்ளிக்கொண்டு சென்ற கூலி யாட்கள், ஏற்கனவே வெட்டப்பட்டிருந்த குழியில் சடலத்தை

வைத்து மண்ணைப் போட்டனர். வேகமாக ஓடிவந்த மலையப்பன், அவர்கள் குழியை நிரப்புவதைப் பார்த்ததும் தனது வேகத்தைக் குறைத்துத் தள்ளாடி ஓடி வந்தான்.

கூலியாட்கள் தங்கள் வேலை முடிந்ததும் வெற்றிலையைக் குதப்பிக்கொண்டு திரும்பினர்.

மலையப்பன் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு முற்றாக மூடப்பட்ட குழிக்கு முன் கைகட்டித் தலை சரித்து நின்றான். அவன் பக்கத்தில் நின்ற முத்துக்கறுப்பன் வாய்விட்டு அலறினன். அவர்கள் முன் இருந்த புது மண்குவியல் மேல் தேயிலைத் தோட்டத் தொழிலாளரின் எழுதாத சோகக் கதை எழுதப்பட்டது போல் இருந்தது மலையப்பனுக்கு. ஆமாம், காத்தான் பத்து லட்சம் பேரில் ஒருவன்தானே? பத்து லட்சம் பேர்களும் அவனைப் போன்றவர்களே!

சிறிது தூரத்தில் மகாநாட்டு மைதானத்தில் கூடிவிட்ட தொழிலாளரின் ஆரவாரம் கேட்டது.

மகாநாட்டிற்கு மலையப்பன் திரும்பி வந்தபோது அவன் உள்ளம், காக்கை வலிப்புப் பிடித்து உதறித்தள்ளி ஓய்ந்த நிலையில் இருந்தது. அலுப்பாக வெறுப்பாக உற்சாகமில்லாமல் நோயுற்று இருந்தது.

மகாநாட்டு ஒழுங்குகளின் செயலாளர் என்ற முறையில் அவன் வரவேற்புரை நிகழ்த்த ஏற்பாடு. மேடையிலே பேச்சாளர்கள் இருந்தார்கள். கூட்டத்தில் அமைதி நிலவியது.

மலையப்பன் எழுந்து 'மைக்'கில் 'டொக் டொக்,'கென்று தட்டியபோது, மலைநாட்டின் மலைகளிலெல்லாம் அது எதிரொலித்து வந்ததுபோல் கரகோஷம் நாவலப்பிட்டி நகரை அதிரச் செய்தது.

"தோழர்களே. என்னருமைச் சகோதரர்களே! சகோதரிகளே!........."

மலையப்பனின் நாக் தழுதழுத்தது. காத்தானின் எதிர் பாராத பரிதாபமரணமும், கவனிப்பாரற்ற இறுதிச்சடங்கும் அவனை மிகுந்த வேதனை அடையச் செய்து விட்டன. அவன் அந்த அதிர்ச்சியிலிருந்து விடுபட இன்னும் சில மணி நேரம் வேண்டியிருந்தது. அவன் தலைவனும் பேச்சாளனும் மட்டுந்தானா? உணர்ச்சிமிக்க கற்பனை உள்ளம் படைத்த சிந்தனையாளனு மல்லவா?

கண்களைத் துடைத்துக் கொண்டான் மலையப்பன். மகா நாட்டில் துடித்த ஒவ்வோர் இதயத்தையும் அந்த நிகழ்ச்சி மின்சாரம் போல் தாக்கித் துரிதமாக இயங்கச் செய்தது. மலையப்பனின் கண்ணீர்த் திரையில், அவர்கள், தங்கள் ஒவ் வொருவரது கதையின் சோகமும் நிழலாடுவதை உணர்ந் தார்கள். மலையப்பன் ஓர் இளைஞன், படித்தவன், அனுபவசாலி, தொழிலாளி, தலைவன். அவன் கண் கலங்குவதென்றால் அதற்கு ஒரு மேன்மையான, நுண்மையான அர்த்தம் இருக்கத்தானே வேண்டும்? ஒரு தலைவனின் கண்ணீரில் ஒரு விதமான பயங் கரத் தன்மையும் இருக்கலாமல்லவா?

மலையப்பன் நிலைமையைச் சமாளித்துக் கொள்ள அதிக நேரம் எடுக்கவில்லை. அவனுடைய கண்ணீர், கோவில் தீர்த் தத்தைப் போலச் சிறிய அளவில்தான் இருந்தது. அவன் கூட்டத்தை ஒரு நிமிடம் பார்த்துக்கொண்டு நின்றான்.

அவனுக்கு முன்னால் மிக அண்மையில் பண்டாரி தனது நாயுடன் அவனை ஆவலுடன் பார்த்துக்கொண்டு பார்க்காமல் இருந்தான்! அவனைக் கண்டதும் மலையப்பனுக்கு எங்கிருந்து வந்தது அந்த அசுர உணர்ச்சி?

'மைக்'கைத் தனது வலது கையால் பிடித்துக் கொண் டான். அவனது பண்பட்ட இதய ஆலயிலே அந்த அசுர உணர்ச்சி அரச உணர்வாக மாறியது. அதன் பின்பு மலை யிலே பிறந்த தமிழ்த்தாய், மலையிலே பிறந்த தன் அருமை மகனுக்குச் சொல்கொடுத்து உதவினாளோ!

சொற்கள் தாலாட்டின; கெட்டி மேளம் கொட்டின. சொற்கள் கொழுந்து பறித்தன; பொருளாதாரத்தை வளர்த்தன. சொற்கள் ஆலயம் கட்டின; சங்கத்திற்குத் தொண்டர்கள் சேர்த்தன. அவை முகபாவனையுடன் நடனமாடின. பயில்வான்களைப்போல் குஸ்தி போட்டன.

கருத்துள்ள வசனங்கள் ஊர்வலமாகச் சென்றன; புள்ளி விபரங்களைக் காட்டிப் புரட்சி செய்தன. அவை ஒற்றுமையாக வேலைநிறுத்தம் செய்தன: சாத்வீக சத்தியாக்கிரகம் புரிந்தன.

மலையப்பனின் பேச்சு மலைநாட்டின் இதயங்களைக் கவர்ந்தது. அது பல பிரச்சினைகளைத் தொட்டுச் சென்றது. வரப்போகும் கோரிக்கைகளை அறிமுகப்படுத்தியது.

இலங்கையின் பொருளாதார வருவாயில் அறுபது சத விகிதத்தை உழைத்துத்தருபவர்கள் தோட்டத் தொழிலாளிகள். ஆனால் அவர்களது வாழ்க்கை நிலை, கல்வி ஒழுங்குகள், சுகாதார வசதிகள் எல்லாம் மிகக் குறைவான நிலையிலேயே இருக்கின்றன. இதைச் சான்றுகளுடன் எடுத்துக் காட்டினன் மலையப்பன்.

அவன் கேட்டான்:

"ஒரு தொழிலாளியிலும் பார்க்க ஒரு தோட்ட சுப்பறின்டன் நூறு மடங்கு அதிகமாக ஊதியம் பெறுகிறார். இதைச் சுட்டிக் காட்டினல் நாம் புரட்சிக்காரரா?"

அவன் மேலும் சொன்னன்:

"தோட்டத்தில் சட்டபூர்வமான வேலைநிறுத்தத்தின் போதும், சில்லறைத் தொந்தரவுகள் நடைபெறும்போதும் பொலீஸார் துப்பாக்கி சகிதம் வருவதைத் தடுக்க வேண்டும். அவர்கள் நிலைமையை மிகவும் மோசமாக்கிவிடுகிறார்கள்."

அவன் ஓரளவு ஆவேசத்துடன் வினவினன்:

"தோட்டத் தொழிலாளியென்றால் வேட்டையாடப்பட வேண்டிய கொடிய மிருகமா?"

பண்டாரி மலையப்பனைப் பார்ப்பதுபோல் கேட்டுக்கொண்டிருந்தான். மலையப்பன் அவ்வப்போது பண்டாரியைப் பார்த்துக்கொண்டே பேசினான். அந்த நேரங்களில் அவனுடைய சிந்தனை சிதறாமல் ஒருமைப்பட்டுப் புதிய கருத்துக்களை வழங்கியது. மன ஊற்று நிதானமாக, அமைதியாக, புனிதமாகக் கோவிலை வலம் வரும் நதியைப்போல் சிந்தனை வழியே ஓடியது.

"அஸ்ஸாமிலிருந்தும் சீனாவிலிருந்தும் கொண்டுவரப்பட்ட தேயிலைச் செடியின் பரம்பரை இப்போது 'சிலோன் டீ'. ஆனால் அதை வளர்க்க வந்தவரின் சந்ததியினர் இன்னும் இந்தியர்கள்! வேடிக்கையாக இருக்கிறதல்லவா?"

ஒரு நிமிடம் கூட்டத்தினர் கெட்டி மேளம் போலக் கரகோஷம் செய்தனர். மலையப்பன் கேட்ட இந்தக் கேள்வியில் சிந்திக்க வேண்டிய மனிதாபிமானப் பிரச்சினை இருக்கிறதல்லவா?

இல்லையென்று யாராலும் கூறமுடியுமா?

நாட்டிற்குப் பொருளாதாரத்தைக் காட்டும் தேயிலைச் செடிகள் காப்பாற்றப்பட வேண்டிய செல்வம்தான். செடிகளை அழிக்கும் பூச்சி வியாதியை ஒழிக்கப் புதிய ஆராய்ச்சி, புதிய பூச்சி நாசினி, அதைத் தெளிக்க நவீனகருவிகள் எல்லாம் வேண்டியன. மலையப்பன் உருக்கமாகக் கேட்டான்:

"தேயிலைச் செடிகளுக்கு இந்த நாடு காட்டும் கரிசனையில் ஒரு கால்வாசியாவது தேயிலை மனிதருக்கு இருந்தாலென்ன?" 'தேயிலை மனிதன்!'-மலையப்பன் புனைந்த இந்தப் புதிய சொற்கோவை தொழிலாள உள்ளங்களில் ஒருவித கிளர்ச்சியை உண்டுபண்ணியது.

தேயிலை மனிதரில் ஒரு பச்சிளங் கொழுந்தாக மலையப்பன் அவர்களுக்குக் காட்சியளித்தான்.

"தோட்டத் தொழிலாளர் இந்நாட்டு மக்கள். இந்நாட்டை இதயபூர்வமாக நேசிப்பவர்கள். வேறு நாட்டைக் காணுத வர்கள் அவர்களை வாழவையுங்கள் என்று இருகைகளையும் கூப்பி நல்ல மனம் படைத்த பெருமக்களை வேண்டித் தனது உரையை முடித்தான் மலையப்பன்.

கூட்டத்தில் இன்னும் பலர் பேசினுர்கள். அவர்கள் பேச்சுக்கள் மலையப்பனது சிந்தனு உருவத்தின் பல கோண நிழல்களாகவே இருந்தன.

மகாநாடு முடிவுற்றதும் டீ மேக்கர் வல்லிபுரம் சொன்னுர்:

"தம்பி, மலையப்பா! மகாநாடு பெரிய வெற்றி. உனக்கு எவ்வளவோ கூறவேண்டும்போல் இருக்கிறது. ஆனுல் உணர்ச்சியில் சிந்திக்க முடியவில்லை. இனி நானும் ஒரு தொழிலாளிதான்."

வல்லிபுரம் விடைபெற்றதும், பாராட்டவந்த பலரின் மத்தியில் அஞ்சலை கேட்டாள்:

"அண்ணு தோட்டத்துக்கு வர்றியா?"

"அஞ்சலை இப்போது வரமுடியுமா? நாளை வருகிறேன். பந்தலைப் பிரிக்கும் வேலை இருக்கு" என்ருன் மலையப்பன்.

"ஏன் முத்து, தேவர், வெள்ளசாமி எல்லாம் இருக் காங்களே, போதாதா."

மலையப்பன் உதட்டுக்குள்ளே சிரித்தான்.

"தலைவரே! உங்களுக்கு வீராயி அக்கா ஞாபகம் இருக்கா?" இப்படிப் புஷ்பம் கேட்டாள்.

அஞ்சலை புஷ்பத்தை இழுத்துக்கொண்டு போய்விட்டாள். மலையப்பன் ஒரு கம்பத்தைப் பிடித்தவாறு யோசித்துக் கொண்டு நின்ருன். அவனுக்கு வீராயியின் ஞாபகம்

இருக்கிறது. அதே நோக்கில் வீராயி, அஞ்சலை, புஷ்பம்... இவர்களின் வருங்காலச் சந்ததியைப் பற்றிய சிந்தனையும் அவனுக்கு உண்டு. அந்தச் சிந்தனை இல்லாவிடில் அவன் பத்து லட்சம் பேரில் இன்னும் ஒருவனாக மட்டும் இருந்திருப்பான். ஆனால், அவன் பத்து லட்சத்தில் ஒருவனாக அல்லவா இப்போது வளர்ந்து வருகிறான்!

அவனுக்கு வள்ளியின் ஞாபகங்கூட இருந்தது.

காத்தான் வள்ளிக்குப் பதியின் போலிக் கடிதத்தைப் பற்றிக் கூறாமலே இறந்துவிட்டான். "மலையப்ப அண்ணு ஒழுக்கம் கெட்டவன்" இப்படித்தானே வள்ளி நினைத்துக் கொண்டிருப்பாள்?

இல்லை, அவள் "அண்ணு"வென்றுகூட அழைக்க மாட்டாள். இதையெல்லாம் வைத்து வீராயி என்ன அர்த்தம் கண்டாளோ!

அவர்கள் இருவரும் மகாநாட்டுக்கு வராததில் என்ன ஆச்சரியம்?

மலையப்பன் வீராயியையும் வள்ளியையும் நினைத்துக் கொண்டு அப்படியே நின்றான்.

# 16

நாவலப்பிட்டி ஜயத்திலகா மைதானத்தில் தோட்டத் தொழிலாளர் மகாநாடு நடைபெற்றுக்கொண்டிருந்த அதே நேரத்தில், மாணிக்கமலைத் தோட்டத்து டிஸ்பென்சர் பதியின் பங்களாவில் ஒரு குட்டி மகாநாடும் சுவையான நாடகமும் நடந்துகொண்டிருந்தன.

டிஸ்பென்சரின் பங்களாவில் பதியுடன் மகாராஜன் பேசிக்கொண்டிருந்தான். பதியின் மூத்த மகன் பூபாலசிங்கம் அவர்களுக்குச் சிற்றுண்டி பரிமாறிக்கொண்டிருந்தான். அவருடைய இரண்டாம் மகன் எதிர்வீரசிங்கம் வானொலிக்குப் பக்கத்தில் இருந்து மெல்லிதாக வந்துகொண்டிருந்த கர்நாடக வீணை இசையை இரசித்தான்.

யாழ்ப்பாணத்திலிருந்து பார்சலில் வந்திருந்த பனங்காய்ப் பணியாரம், தோட்டுப் பணியாரம், சீனி அரியதரம், முறுக்கு முதலியன மகாராஜனுக்கு முன் படைக்கப்பட்டிருந்தன. மகாராஜன் முறுக்கில் ஒரு கால் வட்டத்தை மட்டும் எடுத்துச் சிறிது சிறிதாக உடைத்துக்கொண்டிருந்தான். பூபாலசிங்கம் ஒரு கோப்பை தேநீரை அவன் முன் வைத்துச் "சார்!" என்றான். மகாராஜனையும் பூபாலசிங்கத்தையும் ஒரு தரம் அவர்களைப் பிணைக்கும் சங்கிலிப் பார்வையோடு பார்த்துவிட்டுப் பதி சொன்னார்:

“பூபால்தான் தேநீரைத் தயாரித்தான் சார்......அவ னுக்குச் சிறுவயதிலிருந்தே டீ மேக்காராக வேண்டுமென்று ஆசை”

மகாராஜன் இலேசாகச் சிரித்தான். அந்தச் சிரிப்பின் இனம் காணமுடியாத பதியின் வியாபார மூளை அவரைப்பேச வைத்தது.

“சார் பூபால் ஒரு பாவி. எதைச் சொன்னாலும் செய் வான்.”

இந்த நேரத்தில் எதிர்வீரசிங்கம் எழுந்து உள்ளே சென்றான். செவ்விளநீர்க்குரும்பை நிறமுள்ள அவன் முகத்தில் ஒரு நாளைய தாடிப் பொட்டுக்கள் நீல நிறத்தில் தோன்றின. எழுந்து சென்ற அவன் கம்பீர உருவத்தை மகாராஜன் திரும்பிப் பார்த்தான்.

எதிர்வீரசிங்கம் போனபின்தான் அறிமுகம் நடந்தது.

பதி சொன்னார் :

“இவன் தான் என் இரண்டாம் மகன். நான் உங்க ளுக்கு நேரில் அறிமுகப்படுத்த விரும்பவில்லை. அவனுக்குப் பேசத்தெரியாது. சர்வகலாசாலையில் முதல் வருடத்தில் இருக்கிறான். பொருளாதாரம் படிக்கிறான். நான் சொல்வ தற்கு எதிராகப் பேசிப் பழகி விட்டான்.”

இந்த நேரத்தில் எதிர்வீரசிங்கம் பழையபடி அவ்விடத் திற்கு வந்தான். அவனைக் காணாத பதி தொடர்ந்து சொன்னார் :

“மலையப்பன் அவனுடைய ஹீரோ. இன்று கூட நாவ லப்பிட்டிக்குப் போக இருந்தான். நான் தடுத்துவிட்டேன்.”

“மன்னிக்கவேண்டும்” என்றான் எதிர்வீரசிங்கம்.

எல்லோரும் அவனைப்பார்த்தனர். எதிர்வீரசிங்கம் சொன்னான் :

"அப்பா நான் உங்களுக்கு எதிராக வேண்டுமென்று பேசுபவனல்ல. எனக்கு எது நியாயமாகப் படுகிறதோ அதை எடுத்துக் கூறுகிறேன். அவ்வளவுதான்."

மகாராஜனைப் பார்த்து எதிர்வீரசிங்கம் தொடர்ந்து கூறினன் :

"மலையப்பன் எனது ஹீரோ மட்டுமல்ல, அவர் மனிதாபிமானம் படைத்த அத்தனை பெயருடைய நெஞ்சுகளிலும் இடம் பெற்றவர். ஏழைத் தொழிலாளரின் வழிகாட்டி."

இப்படிப் பேசியது எதிர்வீரசிங்கம். ஆனல் மூச்சுத் திணறியது பதிக்குத்தான். அந்த இதய சுவாச ஒழுங்கினை நிலையில் பதிகேட்டார் :

"இவ்வளவுக்கு வந்துட்டதா? இதை அப்பவே சொல்லியிருக்கப்படாதா? பெரிய படிப்புக்கு விடாமல் ஊரிலே சுருட்டுக்கு அனுப்பியிருப்பேன்."

அவ்விடத்தில் சிறிது நேரம் யாருக்கும் விளங்காத மௌனம் நிலவியது. பதி ஒரு பிரம்புக் கதிரையில் இருந்தவாறு அவரது வலது பாதத்தில் முகம் காட்டிய நீரிழிவுப் புண்ணை அதன் ஓரங்களில் அழுத்திப் பதம்பார்த்துக் கொண்டிருந்தார்.

எதிர்வீரசிங்கம் வானெலிப் பெட்டியின் மேலிருந்த ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு போகுமுன் சொன்னன் :

"மிஸ்டர் மகாராஜன்! நான் உங்கள் முன் ஏதாவது தப்பாகப் பேசியிருந்தால் மன்னித்துக்கொள்ளுங்கள். நான் அப்பாவை மிகவும் நேசிப்பவன். கடந்த பத்து வருடங்களாக எங்களுக்குத் தாயும் அவர்தான். ஆனல் தோட்டத் தொழிலாளரையும் நான் அதே நேரத்தில் நேசிக்கிறேன். இதனல் அப்பாவுக்கும் எனக்கும் இடையில் அபிப்பிராய பேதங்கள் இருப்பதுண்டு."

மகாராஜனைப் பொறுத்த வரையில் இந்த விளக்கம் தேவையா?

அவன் ஒருவித அக்கறையும் காட்டாது, அல்லது அக்கறை காட்டாதவன்போல், எதிர்வீரசிங்கம் பேசிக்கொண்டிருக்கும் போதே ஒரு சிகரெட்டை எடுத்துத் தட்டிப் பற்றவைத்துப் 'பூ'வென்று புகையை ஊதினன்.

எதிர்வீரசிங்கம் தனது படுக்கை அறைக்குப்போய்க் கட்டிலில் படுத்துக் கொண்டான். அவனுக்கு எதிரிலே சுவரில், நல்லூர்க் கந்தசுவாமி கோவில் கோபுரத்தின் ஒரு கோணப் புகைப்படம் பெரிதாக்கப்பட்டு மிக அழகான சட்டத்தோடு காணப்பட்டது. படத்தின் தெய்வீக அழகு அவனுடைய நரம்புகளைச் சாந்தப்படுத்தியபோது, பதி அந்த அறையின் வாசலில் வந்து நின்ருர்.

எதிர்வீரசிங்கம் தனது புத்தகத்தை நெஞ்சில் அமர்த்திப் பக்கங்களைப் புரட்டினன்.

"சூ! தோட்டக்காரரை நேசிக்கிருராமல்ல, நேசிக்கிருராம்" என்ருர் பதி.

எதிர்வீரசிங்கம் முகத்தைச் சுருக்கியபடி புத்தகத்தின் பக்கங்களிலேயே கண்களை அலையவிட்டான். ஆனல் கண்களுக்கும் மூளைக்கும் தொடர்பு இருக்கவில்லை. அவன் சிந்தனை பனிப்படலம்போல் தகப்பனைச் சூழ்ந்தது.

"இவர் தோட்டக்காரியைக் கலியாணம் செய்தாலும் செய்வார்"

இதுவும் பதியின் குரல் நாண்களின் எளன ஒலிதான்.

எதிர்வீரசிங்கம் எழுந்து கட்டிலில் இருந்தான். அமைதியாக, உறுதியாக அவன் சொன்னன்:

"நீங்க சொன்னதுதான் உண்மை கூட"

"என்னடா?" என்று கத்தினர் பதி. "சொல்லடா அந்த இன்னும் ஒருதரம். சொல்லடா என் முகத்தைப் பார்த்து"

எதிர்வீரசிங்கம் தனது தகப்பனின் முகத்தைப் பார்த்துச் சொன்னான்: "நான் கல்யாணம் செய்வதானால், நான் காதலிக்கும் அந்த அறிவழகியைத்தான் செய்துகொள்வேன்... அவள் இந்தத் தோட்டத்து லயனில் வாழ்கிறான்"

பதியின் முகம் கொதிஎண்ணெயில் அப்பளம்போல் பொரிந்து, முகத்தசைகள் அங்குமிங்குமாகப் புடைத்துப் பெருங் கொப்புளங்களாகத் திரண்டன. மிகுதி உடல் சிலையாகி இருந்தது.

"அப்பா! உங்களுக்குத் தேகநிலை போதாது. வீணிலே கவலைப்படாதீர்கள். நான் உங்கள் விருப்பத்திற்கு மாறாக விவாகம் செய்யப் போவதில்லை. உங்கள் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டுதான் நான் விரும்பும் அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்வேன்" என்றான் எதிர்வீரசிங்கம்.

பதியின் வாயிலிருந்து வார்த்தைகள் வெடித்தன. "என்னடா தோட்டக்காரியைக் கட்டிக்கொள்ள நான் அனுமதி தருவேன் என்று நினைக்கிறியா? உனக்கென்ன மூளை கலங்கிப் போச்சா? எவ்வளவு காலமாக இந்தக் காதல் நாடகம் நடத்துகிறாய்?"

இந்த நேரத்தில் பூபாலசிங்கம் அவ்விடம் வரவே, "போ, பூபால். போய்த் துரையுடன் பேசிக்கொண்டிரு" என்று அவனை வெருட்டினார் பதி. அவர் துப்பறியும் நுட்பத்துடன் அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்காத தோரணையில் கேட்டார்.

"யார் அந்தத் தோட்டக்காரி?"

எதிர்வீரசிங்கம் கீழே பார்த்துக் கொண்டிருந்தான். 'அப்பாவுக்கு அவளைப்பற்றி இப்போது கூறுவதா?'

உண்மையைச் சொன்னால், தனது அன்பு வழிபாட்டைத் தன்னால் வணங்கப்படுபவளுக்குக் கூட அவன் இதுவரை தெரிவிக்கவில்லையே!

எதிர்வீரசிங்கம் கூறினான் :

"உங்கள் மனம் ஒருநாள் மாறும். தொழிலாளரைச் சகோதரக் கண்களால் பார்ப்பீர்கள். அப்போது உங்களுக்கு அவள் தெரிவாள்"

பதி கேட்டார் : "என்ன மிஸ்டர், நாடகமா நடிக்கிறீர் ?',

எதிர்வீரசிங்கத்தின் சோக முகநிலைக்குப் பொருந்தாத ஒரு குறுஞ்சிரிப்பு அவன் உதடுகளில் நெளிந்தது. அர்த்தம் இல்லாதது போல் காணப்பட்ட அந்தச் சிரிப்பில்தான் எவ்வளவு அர்த்தம் மறைந்திருந்தது!

வாழ்க்கையின் சோகப் பகுதிகளில் அர்த்தபுஷ்டியான சிந்தனையும் பேச்சும் நாடக உருவம் எடுப்பது சாதாரண அனுபவ அறிவல்லவா? ஆனந்தம் என்ற கோமாளியினால் ஆக்கபூர்வமாக ஏதாவது சிந்திக்க முடியுமா?

பதி அந்த அறையின் கதவைப் 'படார்' என்று சாத்திவிட்டு மகாராஜன் இருந்த முன் விறாந்தைக்கு நொண்டி நடந்தார்.

எதிர்வீரசிங்கம் தனது கட்டிலில் யோசித்தபடியே இருந்தான். அவனது சிந்தனை வானத்தின் இந்திரவில்லைப் போல் பல நிறங்களில் தெளிவாகவும் ஒன்றோடு ஒன்று சேர்ந்த வர்ணக் கலவையாகவும் இருந்தது. பார்க்கப்போனால் கசந்த அவன் மனத்திற்கு அது கற்கண்டுச் சிந்தனைதான்! அது அவன் மனத்திரையில் அவளின் நிழலாட்டமல்லவா?

தோட்டத்தில் நடந்த காமன் கூத்து ஒன்றின்போது அவளை அவன் முதன் முதலாகக் கண்டான். அவன் கூத்தைப் பார்த்துக்கொண்டு நின்ற இடத்திற்கு அண்மையில் சில தோட்டப் பெண்கள் குழுமியிருந்தனர். சிவன், மன்மதன், ரதி ஆகிய பாத்திரங்களைப் பற்றி ஒரு பெண் அந்தக்கூட்டத்தில் விமர்சித்துக்கொண்டிருந்தாள். விமர்சனத்தில் சில தத்துவக் கருத்துக்கள் மிக எளிமையான முறையில் பின்னப்பட்டுள்ளன. அவள்தான் அப்படிப் பேசிக்கொண்டிருந்தாள்.

தோட்டத்துக் கூட்டமொன்றில் அவளுடன் சிறிது நேரம் எதிர்வீரசிங்கம் பேசியிருக்கிறான். அவள் தங்கள் பிரச்சினைகளைத் தெளிவாக அறிந்திருக்கிறாள். அவள் அவனைத் 'துரை' என்றே அழைத்து வருகிறாள்.

கடைசியாகச் செம்மண் பாதையில் நேருக்கு நேரே சந்திக்க நேர்ந்தபோதும் 'துரை' என்றுதான் அழைத்தாள். அவளைப் பொறுத்தவரை 'டிஸ்பென்சர் துரை மகன்—தோட்டக்காரி' உறவைத் தவிர, வேறு ஓர் அர்த்தத்தைக் கற்பனை செய்யவும் முடியாது. எதிர்காலத்தின் கடிவாள வார் அவன் கைகளில்தான் இருந்தது.

சர்வகலாசாலையில் படிப்பு முடிந்ததும் அவன் தன் வாழ்வைத் தோட்டத்துப் பிள்ளைகளுக்கே அர்ப்பணிப்பான்.

அவன் உள் மனம் மிக அழுத்தமாகக் கூறியது : 'அப்பாவின் மனம் மாறும். அவரின் சம்மதத்துடன் நான் அவளை மணக்க முடியும்.'

அவன் அவளைப் பக்கத்தில் இருத்தி 'அ' எழுதக் காட்டிக்கொடுப்பான். 'இ' எழுதுவதும் 'ஒ' எழுதுவதும் அவளுக்குக் கொஞ்சம் சிரமம்தான். அவள் கையைப் பிடித்து எழுதுவது இருவருக்கும் இனிமையாக இருக்கும்.

'அதற்கிடையில் அவள் கையை வேறு ஒருத்தன் பிடித்து விட்டால்? அவளுக்கும் வயது வந்துவிட்டதல்லவா?

'அப்படியென்றால் அவன் தனது எண்ணத்தை அவளுக்கு இப்போதே வெளிப்படுத்துவதா?'

அவன் கண்கள் பனிக்க, வானவில் சிந்தனை மாயமாய் மறைந்தது.

அவன் மனத்துணிவுடன் தனது விருப்பத்தைத் தெரிவிக்கும் காலம் வந்துவிட்டது.

முன் விருந்தைக்கு வந்த பதி தனது பங்களாவிலுள்ள பூங்காவைப் பார்த்தார். ஒரு பெரிய கல்லின் மேல் ரெங்க சாமிக் கங்காணி, கையில் ஒரு குடையுடன் இருந்தான். அவனைச் சுற்றிவரப் பதது் பன்னிரண்டு கிழட்டுத் தொழி லாளர் வெற்றிலையைக் குதப்பிக்கொண்டும் பீடி, சிகரெட் புகைத்துக் கொண்டும் இருந்து மதுவிட்ட வழியே உரையாடி னர். இவர்கள்தாம் பதியைப் போஷகராகவும் ரெங்கசாமி யைத் தலைவராகவும் கொண்டுள்ள தோட்டச் சங்கத்தின் குழுவினர், உறுப்பினர், ஆதரவாளர் எல்லாம். மரண தேவனின் இடாப்பில் முதல் இடம் பெற்றுள்ள இந்தக் கிழட்டுக் கூட்டத்தின் எண்ணிக்கையை மட்டும் கணக்கிட்டு விட்டு பதி தனது பார்வையைப் பங்களாவிருந்த மலையின் அடிவாரத்திற்கு இறக்கினர்.

மலையின் அடியிலுள்ள பாதையில் ஒரு கூட்டம். மாமிச மலைக்குன்றுகள், மாஜி மறியல்காரர், கசிப்புச் சாராய உற் பத்தியாளர், ஹட்டனில் இறைச்சிக்கு மாடு அறுப்பவர்கள், ஹட்டன்—டிக்கோயா நகரசபை மல சுத்தித் தொழிலாளரில் சில காவாலிகள்—சுமார் ஐம்பது அறுபது பேர் குழு எருமை மந்தையின் பயங்கர முரட்டுத்தனத்துடன் நடமாடினர்.

தனது சேனையின் அணிவகுப்பைப் பார்வையிடும் படைத் தலைவனின் பெருமையுடன், பதி இவர்களைச் சிறிது நேரம் பார்த்துக்கொண்டே நின்றார். பின்பு, கால் புண் நெஞ்சுப் புண் எல்லாவற்றையும் மறந்து, தன் தலையை நிமிர்த்திக் காற்சட்டைப் பைகளுக்குள் கைகளைப் புதைத்தவாறு நெப் போலியன் நடையில் மகாராஜன் இருந்த இடத்திற்கு வந்தார்.

அவர் சொன்னர்: "சார், நீங்கள் யோசிக்கவேண்டாம். எல்லா ஒழுங்குகளும் சரி"

மகாராஜன் யோசிக்காமல் இருக்கமுடியுமா?

சிறிது நேரத்தின் பின் அவன் சொன்னன்:

"டாக்டர், தோட்டத்திற்கு வெளியே இருந்து வந்தவர்கள் ஏதாவது பெரிய குழப்பம் செய்வார்களோ தெரியவில்லை. அவர்கள் அந்நியர்கள். தங்கள் சொந்த நன்மைக்காக இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொள்ளை, களவில் இறங்கவும் கூடும்"

பதி சிரித்தபடி பதிலளித்தார்: "சார், நீங்கள் பயப் படுகிறீர்கள்"

மகாராஜனும் ஒரு சிந்தனைச் சிரிப்போடு சொன்னான்: "உங்கள் ஒழுங்குகளில் எனக்கு நம்பிக்கை உண்டு. நீங்கள் எந்த நிலைமையையும் சமாளிக்கக் கூடியவர். இங்கு வந்திருப்பவர்கள் நன்னடத்தையில் பயிற்சி பெறாதவர்கள். வேண்டிய நேரத்தில் அவர்களை எங்களால் கட்டுப்படுத்த முடியுமா? தெரு நாயை, அதிலும் விசர் நாயைப் பிடித்து வீட்டுக் காவலுக்கு வைத்தால் எப்படி இருக்கும்? அத்துடன் அவர்களைப் பொறுத்தவரையில் இந்தப் போராட்டத்தின் தயாரிப்பாளர் மாத்திரம்தான் தாங்கள். அவர்களின் நேரடியான மேற்பார்வையாளன் 'மது' அல்லவா?"

"சரி சார், அந்த 'மது'வும் எங்கள் கையாள்தானே"

"மது ஒருபோதும் நல்ல நிர்வாகியாக இருக்க முடியாது. நிர்வாகிக்கு எல்லைகள் தெரியவேண்டும்."

"சார் இவர்கள் என்ன செய்யப்போகிறார்கள். மலையப்பனது சங்கத்தின் தொழிலாளர் கூட்டம் முடிந்து இப்போது சிறிது நேரத்தில் வரத் தொடங்குவார்கள். அவர்களைக் கொஞ்சம் பயப்படுத்திச் சரியான இடத்தில் வைக்க வேண்டும். அல்லாவிடில் நாளைக்கு எங்களை மதிப்பான்களா?"

மகாராஜன் விஷயம் புரிந்தவன்போல், அல்லது இப்போதுதான் இந்த ஏற்பாட்டின் அவசியம் புரிகிறது என்பது போல் தலை அசைத்தான்.

பதி சொன்னார்: "சார், தோட்டத்தில் ஒரு பெரிய ஆபத்தான நிலை உருவாகிக்கொண்டு வருகிறது. தொழிலாளர் பழையபடி ஒன்றாகச் சேர்ந்து மலையப்பன் பக்கம் திரும்புகிறார்கள். ரெங்கசாமியின் சங்கத்தில் சேர விருப்பம் தெரிவித்த வாலிபர்கள் கூட இன்று நாவலப்பிட்டி மகாநாட்டிற்குப் போய்விட்டார்களாம். மலையப்பன் தலைமையில் தொழிலாளர் கூட்டு எமக்கு அணுக்குண்டினும் பார்க்க அபாயமானது."

மகாராஜன் எழுந்து மலையின் அடிவாரத்தைப் பார்த்தான். அங்கே பதியினால் இறக்குமதி செய்யப்பட்டவர்கள் போத்தல்களில் மண்ணை நிரப்பிக்கொண்டும், கற்களைக் குவித்துக்கொண்டும் இருந்தார்கள். ஒரு சிலர் கைக்குண்டுகளை ஒழுங்குபடுத்தினார்கள். இன்னும் ஒரு பகுதியினர் பந்தங்களைத் தயார் செய்தனர். அவர்கள் எல்லோருக்கும் சாராயம் பரிமாறப்பட்டது. போத்தல்களிலிருந்து மது வெளியேற அவற்றை மண்ணும் சிறு கற்களும் நிரப்பின. அவர்களின் உடல்களில் சாராயம் சேர, மனிதச் சாயம் வெளுத்தது. தூஷணை, மரபு தவறாது வெளிவந்தது. அவ்விடத்தில் மொழிப் பிரச்சினைக்கும் இடம் இருக்கவில்லை. மகாராஜனின் நாடியைப் பரிசோதிக்காமலே பதி சொன்னார்:

"சார், நீங்கள் அநாவசியமாகப் பயப்படுகிறீங்கள். இது ஒரு சில்லறை விஷயம். உங்கள் கௌரவத்தை நான் என் உயிரிலும் பார்க்க மதிக்கிறேன். இந்த ஒழுங்கால் எதாவது நட்டம் வந்தால் அதற்கு நானே பொறுப்பாளி." இந்தச் சமரச முதல் உதவி மகாராஜனுக்கு ஓரளவு திருப்தி தந்தது. வைத்தியம் தொடர்ந்து நடந்தது. பதி தனது பச்சை நிறக் கண்ணாடியைக் கையில் சுழற்றியவாறே பேசினார்.

"சார், நீங்கள் உங்கள் பங்களாவிலேயே இருந்து விடுங்கள். நான் எல்லாம் பார்த்துக்கொள்கிறேன். பெரிசாக ஒன்றும் செய்யவிடமாட்டேன். மலையப்பனின் கூட்டத்

தினர் வரும்போது கோஷங்கள் போட்டு நம்மை அவமதிக்காமல் பார்க்கவே இந்த ஏற்பாடு. அவங்கள் நம்ம ஆட்களைப் பார்த்ததும், தங்கள் லயங்களுக்குப் போய்ப் பேச்சு மூச்சு இல்லாமல் ஒதுங்கி விடுவார்கள். நாளைக்கு அவங்கள் உற்சாகம் போய்விடும். பழையபடி வேலைக்கு அடிமைகள் போல் போவாங்கள்.''

மகாராஜனுக்கு இந்த விளக்கம் திருப்தியளித்தது. அவனுக்கு ஏற்கனவே பதிமேல் பக்தி விசுவாசம் இருந்தது, தெரிந்த உண்மைதானே!

தோட்டத்து ஜீப் ஒரு பெட்ரோல் பெருமூச்சை எறிந்துவிட்டு மகாராஜனுடன் சென்றது.

மகாராஜன் போனபின் பதியின் விறுந்தையில், பதியோடு ரெங்கசாமி, அவன் தோழர்கள், மலை அடியில் நின்றவர்களின் ஐந்து பிரதிநிதிகள் முதலியோர் கூடினர். இரகசியமாக ஒரு குட்டி மகாநாடு நடைபெற்றது.

இடை இடையே 'பொடி மஹத்மயா முதலாளி' என்று பதியால் அழைக்கப்பட்ட ஒரு மாமிசக் குன்று "ஐயா, நீங்க ஏன் பயப்படுது'' என்றும் "நம்ம மனிசனுங்க செய்வானுங்க'' என்றும் "போலிஸ் நம்ம பக்கம் இருக்கிறானுங்க'' என்றும் உசார்ப்படுத்துவது மட்டும் வெளியேகேட்டது. மற்றவர்களின் பொது மொழி மௌனமாகவே இருந்தது. இருள் கூடக்கூட மயானத்தின் வெறுமையான பயங்கரம் அவ்விடத்தில் நிலவியது.

இருந்தாற்போல், ஆந்தைகளெனக் குந்தி இருந்தவர்கள் அவசரப்பட்டு எழுந்தார்கள். பதி, பொடி மஹத்மயா முதலாளி முதலானோர் அங்குமிங்கும் ஓடினர். தூரத்திலே சில கார்கள் ஹட்டன்-டிக்கோயா வீதி வழியாக வந்துகொண்டிருந்தன. மெல்லிய கோஷ ஓசை கேட்டது.

லயங்களில் மகாநாட்டிற்குப் போகாமல் இருந்தவர்கள் ஆரவாரம் செய்தனர்.

"வாழ்க !"

"வருக !"

"வெற்றி !"

பெண்கள், சிறுவர்கள் எல்லோரும் ஆர்ப்பரித்தனர் வந்துகொண்டிருந்த கார்களின் சோடி முன் லைட்டுக்கள் சந்திரன் குஞ்சுகள் போல் தெரிந்தன.

பதியின் 'படைவீரர்' நாலா பக்கமும் சிதறி ஓடி, முன்னேற்பாட்டின்படி சில இடங்களில் குந்தினர்.

அவருடைய பங்களா லைட்டுகள் அணைக்கப்பட்டன.

# 17

மாணிக்கமலைத் தோட்டத் தொழிலாளரில் சிலர் மகா நாட்டிற்குப் பின், நாவலப்பிட்டி ஸ்டேஷனில் நடுச்சாமப் புகை வண்டிக்காகக் காத்திருந்தார்கள். சிலர் பேசிக் கொண்டும் பாடிக்கொண்டும் டிக்கோயாவை நோக்கி நடந்தார்கள். மற்றவர்கள் வாடகைக் கார்களில் வந்தனர்.

மாணிக்க மலைத் தோட்டத்தின் மலை ரோட்டு வழியாக வந்த கார்கள் கூட்டத்தில் முதலாம் கார் திடீரென்று 'பிரேக்' போட்டு 'கிரீச்' என்ற பேரொலியுடன் நின்றது. அதன் முன் விளக்குகளில் ஒன்று 'படார்' என்ற ஓசையுடன் அணைந்து விட்டது. கார்ச்சாரதி இறங்கி வந்து பார்த்தான். முன் விளக்கு உடைந்திருந்தது. அவன் காரில் இருந்தவர்களைச் சிங்களத்தில் 'பசாசங்கள்' என்று திட்டி ஏசினான். அவர்களைக் காரில் ஏற்றிவர ஒத்துக் கொண்டதால் அல்லவா! இப்படி நேர்ந்துவிட்டது!

சேதமடைந்த காரைத் தொடர்ந்து வந்த கார்களும் நின்றன. கார்களிலிருந்து ஆண்கள் இறங்கினர். "அது யாருடா கல்லெறிந்தவன்?" என்று முதலாம் காரில் வந்த ஒருவன் கத்திக் கேட்டான். அந்தக் கேள்வி ஒரு மலையில் பட்டு மலையின் ஒரு பகுதியைக் கையளவு கற்களாகச் சிதறவைத்தது போல், ஒரு நிமிடம் கல் மழை பெய்தது. சில கற்கள் கார்களின் கூரைகளில் விழுந்தன. கார்ச் சாரதிகள் கார்க

ளுக்குள் இருந்த பெண்களைச் சிங்களமும் தமிழும் கலந்த ஒருவித பாஷையில் ஏசினர். கார்களை விட்டு எல்லாரும் இறங்கி, கல்லெறி பட்டார்கள். வெறும் கார்கள் கஷ்டப் பட்டுத் திரும்பி நாவலப்பிட்டியை நோக்கிச் சென்றன.

தொழிலாளர் மலைச்சரிவு வழியாக இறங்கிக் குறுக்குப் பாதையில் தங்கள் லயங்களை நோக்கிப் போக முயன்றார்கள். கற்கள் விழுந்தபோது தேயிலைச் செடிகளுக்குப் பின்னால் பதுங்கினார்கள். மற்ற நேரங்களில் தாவித் தாவி முன்னேறினர்.

அஞ்சலை சொன்னாள் :

"சகோதரிமாரே! பேசாது குந்தி இருங்கள். கல் எந்தப் பக்கமாக வருகிறது என்று பார்ப்போம். ஒருத்தரும் சத்தம் செய்யவேண்டாம்."

வேறொரு பெண் கூறினாள் : "ஏன் சத்தம் செய்ய வேண்டும். இது யாரோ சூழ்ச்சிக்காரரின் வேலை. செத்தாலும் நாங்கள் விட்டுக்கொடுக்க மாட்டோம்."

"ஆமாம் செத்து மடிந்தாலும் போராடுவோம். அநியாயத திற்குத் தலைவணங்கோம்" என்று கத்தினான் ஒருவன்.

சில தொழிலாளர்களின் தலைகளில் கற்கள் பட்டு, இரத்தம் கசிந்தன. காயம்பட்ட வாலிபர்கள் குனிந்து கற்களைப் பொறுக்கி, எதிரிகளின் கற்கள் வந்த பக்கமாக வீசினர். கற்களில் ஒன்று, பதியின் கண்ணாடி யன்னல்களில் ஒன்றைப் படார் என்று ஆயிரம் துண்டுகளாகச் சிதறச் செய்தது. பங்களாவில் விளக்குப் போடப்பட்டது.

எதிர்வீரசிங்கத்தின் குரல் கேட்டது : "அப்பா யாருக்குப் போன் செய்கிறீர்கள் ?"

"ஹலோ, ஹட்டன் போலீஸ் ஸ்டேஷனா? இங்கே பேசுவது டாக்டர் பதி..."

பதியிடமிருந்து போனின் கைக்கருவியைப் பறித்து உயரப் பிடித்திருந்தான் எதிர்வீரசிங்கம்.

"தாடா போனை மடையா?" என்று பதி உறுமினான்.

"அப்பா, நீங்கள் அந்தியில் போலீசுக்குப் போன் செய்ததையும் நான் கேட்டுக்கொண்டுதான் படுத்திருந்தேன். இரவு தோட்டத்தில் குழப்பம் ஏற்படலாம் என்று முன் அறிவிப்புக் கொடுத்தீர்கள். அப்பா குழப்பம் செய்பவர்கள் யார்?"

"பொத்தடா வாயை" என்று வெடித்தார் பதி.

"நீங்களும் உங்கள் சொற்படி ஆடும் ரெங்கசாமிக் கங்காணியும் அவர் கூட்டாளிகளும் அல்லவா கலவரத்திற்குக் காரணமாக இருப்பவர்கள்."

"என்னடா தகப்பனை எதிர்க்கவா இவ்வளவுக்குப் படிப்பித்தேன்."

வெளியே சற்றுத் தூரத்தில் இரு பகுதியினருக்குமிடையில் கைகலப்புத் தொடங்கி இருக்க வேண்டும். ஆண் பெண் கூட்டு ஓசை அலறலாகக் கேட்டது.

"விடடா பொலீசுக்குப் போன் செய்ய" என்று பதி முழங்கினார்.

இந்த நேரத்தில் தனது அறையிலிருந்து நித்திரையுடன் ஓடி வந்த பூபாலசிங்கம் "என்ன அப்பா? என்ன? என்ன?" என்று கேட்டுவிட்டு யன்னல் ஊடாகப் பார்த்து, "அப்பா தோட்ட லயம் ஒன்று தீப்பிடித்து எரிகிறது" என்று பா பரப்புடன் அறிவித்தான்.

"அப்பா, இது ஹட்டனிலிருந்து இறக்குமதி செய்யப் பட்ட நாசகாரக் கும்பலின் வேலை" என்றவாறு பங்களாவின் படிகளில் பாய்ந்து இறங்கி, தோட்டப் பாதையில் ஓடினான் எதிர்வீரசிங்கம்.

பதி நிதானமாக, டெலிபோனில் ஹட்டன் பொலீஸ், சின்னத்துரை, மகாராஜன் முதலியோருக்கு எண்களை இழுத்துப் பேசினர். கொழும்புக்கும் ஒரு 'டிரங்க் கோல்' கேட்டு வைத்தார்.

தோட்டம் அல்லோல கல்லோலப்பட்டது. கண்ணில்லாத கற்கள் கண்ட இடமெல்லாம் பறந்து விழுந்தன. மண் நிரப்பிய போததல்கள் அவ்வப்போது கற்களுடன் சேர்ந்து கொண்டன. கைவெடிகளின் நாச ஓசையுடன் 'ஐயோ! அம்மா!' என்ற ஓலங்கள் கலந்தன.

'ஐயோ—அம்மா' என்ற அவல ஓலம், மாணிக்கமலைத் தொழிலாளரின் நோவமுகை. அதில் ரெங்கசாமிக் கங்காணியின் சங்கத்தைச் சேர்ந்தவர்களின் குரலும் இருக்கத்தான் செய்தது! உண்மையில், ஹட்டனில் இருந்து வந்தவர்களுக்கு மலையப்பனின் ஆட்கள், ரெங்கசாமியின் ஆட்கள் என்ற பாகுபாட்டைத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இருக்கவில்லை. அவர்கள் தங்களைப் பதியின் கைப் பொம்மைகளாகவும் மதுச் சக்தியால் இயங்கும் இயந்திரங்களாகவும் மாற்றிக்கொண்டார்கள். பதிக்கு வேண்டியது தோட்டத்தில் குழப்பம். அவ்வளவுதான். 'மலையப்பன் நாவலப்பிட்டியில் மகாநாடு வைத்த அன்றிரவு, தோட்டத்தில் இரு யூனியன்கள் மோதிக் குழப்பம் ஏற்பட்டது' என்பது மட்டும் பத்திரிகைச் செய்தியாக வாவேண்டும். அதனுல் பெரும் சேதம் ஏற்பட்டது என்றும் தொடர்ந்து செய்தி தெரிவிக்க வேண்டும். மலையப்பன் என்ற 'யூனியன் லீடர்' கைது செய்யப்பட்டான் என்று பத்திரிகையில் வெளிவந்தாலும் நல்லதல்லவா?

ஒரு லயம் தீப்பற்றி எரிந்தது. தொழிலாளர் அதை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். ஈரப் படங்குகளை எடுத்து வீசினர் சிலர். சிலர் பீலிகளில் நீர் எந்தி ஊற்றினர். புதிய தீப்பந்தங்கள் வால் நட்சத்திரங்கள் போல் அங்கு மிங்கும் பறந்து லயங்கள் மேலும் தொழிலாளர்

நின்ற இடங்களிலும் விழுந்தன. வள்ளி ஒரு வாளியில் குழாய் நீரை யாருக்கோ கொடுத்து விட்டு, வெறும் வாளி ஒன்றை வாங்கிக்கொண்டு ஓடினாள். தனது லயத்திற்கு முன்னால் இருந்த பீலியில் நீரை எந்தினாள்.

"வள்ளீ !"

மெதுவாக, உருக்கமாக, அன்பாக, கவலை தோய்ந்த ஒரு குரல் கேட்டது.

"வள்ளீ !"

என்ன ! அது கண்ணீர்ச் சிற்றருவியின் கனிவோசையோ ? அந்த அழைப்பு அவள் மனத்திற்கு எவ்வளவு இனிமையாக இருந்தது. பழக்கமான நேசக்குரல்தானே !

அந்தக் குரல் வினவியது :

"வள்ளி, நம்ம தோட்டத்தில் பெரிய குழப்பமாமே ?"

"ஆமா வீராயி, உங்கப்பா எங்கே ?"

"சூ! சத்தம் போடாமல் பேசு. அப்பா காம்பராவில் இருக்கிறார். கண் கலங்கி சின்னப்பிள்ளையைப் போல அழுகிறார்டீ" அந்த நேரத்தில் ஒரு நிழல் ஓடி வந்து வள்ளியின் நீர் நிரம்பிய வாளியை எடுத்துக் கொண்டு ஓடியது. வெறும் வாளி ஒன்று அவள் காலடியில் போடப்பட்டது. அவள் அதைத் தண்ணீர்ப் பீலியின் கீழே வைத்துவிட்டு திரும்பவும் வீராயியின் காம்பராவுக்கு முன்னால் வந்து நின்றாள்.

'வீராயி கேட்டாள் : "வள்ளி, நீ என்னோடே கோபமா?"

"வீராயி நீ என்னோடே கோபமா ?" என்று வள்ளியும் கேட்டாள். இந்தக் கேள்விகள் அவர்கள் மன நிலையின் ஒற்றுமையை நன்கு சித்திரித்தன.

வள்ளி தொடர்ந்து சொன்னாள் : "வீராயி, நான் எதாவது தப்புச் செய்திருந்தா மன்னிச்சுக்கொள்."

வீராயி கேட்டாள்: "என்னை நீ மன்னிப்பியா?"

"வீராயி, நீ தப்பு ஒண்ணும் செய்யலையே!"

"அப்போ, நீ ஏன் என்னோடை பேசலை?"

வள்ளிக்கு அழுகை வந்தது. "இனிமேல் பேசிக்கொண்டே இருப்பேன்." என்றாள் அவள். தொடர்ந்து சொன்னாள்: "அண்ணை இன்று கூடத் தோட்டத்துக்கு வரலை."

வள்ளி 'அண்ணை' என்றதும் விராயிக்குத் திருப்தி அளித்தது. வள்ளி 'அண்ணை' என்றால் அதற்கு 'அண்ணை' என்று தானே அர்த்தம்.

"வள்ளிக் குட்டி, நீ என் கண்ணு" என்றாள் வீராயி.

அந்த நேரத்தில் அவ்விடம் ஓடிவந்த ஒரு வயோதிபர் "என்ன புள்ளே, பேசிக்கிட்டு நிற்கிற. லயம் ஒன்று புதிசா எரியுது" என்று பதற்றத்துடன் கூறினான்.

வள்ளி வாளியை எடுத்துக்கொண்டு ஓடினாள். அவள் கண்களிலும் கையிலும் நீர் இருந்தது.

எதிர்வீரசிங்கம் தீ அணைக்கும் வேலையில் மிகத்துரிதமாக ஈடுபட்டிருந்தான். தீக்கொழுந்துகளின் செவ்வொளியில் வள்ளியைக் கண்டதும் அவன் புதிய உற்சாகத்துடன் வாளிகளை வாங்கி வாங்கி நீரை வீசினான். இருண்ட மூலஸ்தானத்தில், அம்மன் விக்கிரகத்தின் செம்பு முகம் தனிக் கற்பூர ஆரத்தியின்போது ஒளிவிடுவதுபோல், வள்ளியின் முகம் ஒளியாகவும் நிழலாகவும் தெரிந்தது. அவளும் மற்றத் தொழிலாளருடன் சேர்ந்து எதிர்வீரசிங்கத்திற்கு உதவி செய்தாள். ஒருவர் வீட்டில் பற்றிய தீயை அணைப்பது எவ்வளவு புனிதமான சேவை! எதிர்வீரசிங்கம் அற்புதமான முறையில் அந்தப் பணியை நிறைவேற்றித் தீயை அணைத்தான். தனது தெய்வத்தின் நேரடியான கண்காணிப்பில் அந்த வேலையைச் செய்தது போல் அவனுக்கு ஒரு திருப்தி ஏற்பட்டது.

ஆரவாரம் அடங்க இருள் கவிந்தது. முகங்கள் தெரியவில்லை. நிழல் உருவங்கள் நடமாடின. நஷ்டம் அடைந்தவர்கள் குமுறினர். அழுதனர், திட்டினர், இடையிடையே கற்கள் விழுந்தன.

"நீ கெட்டிக்காரி" இரகசிய அன்போடு ஒரு சின்னஞ்சிறு பாராட்டுரை கேட்டது. வள்ளி அக்கம் பக்கம் பார்த்தபோது அவள் உள்ளம் கிளுகிளுத்தது. அவளுக்கு மிக அண்மையில் எதிர்வீரசிங்கம் நின்றான். அவன் அவள் தோளில் தொட்டுச் சொன்னான் :

"வள்ளியம்மா! கற்கள் இன்னும் விழுந்துகொண்டிருக்கின்றன. நீ உன் லயத்திற்கு ஓடு,"

சோர்வுற்றிருந்த வள்ளியின் இதயத்திற்குக் குளிர்ந்த பன்னீர் தூவியது யாரோ? அவள் மார்புக் கூட்டுக்குள் விழித்த அவள் இதயம் படபடவென்று அடித்தது.

"பார்த்தாயா, கற்களை யாரோ பழையபடி வீசுகிறார்கள். இங்கு நின்றால் உனக்கு ஆபத்து" என்று தொடர்ந்து எச்சரிக்கை செய்தான் எதிர்வீரசிங்கம்.

ஆமாம், மழை ஓய்ந்து திரும்பவும் புயலுடன் பெய்வது போல், தோட்டத்தில் குழப்பம் பழையபடி தொடங்கியது.

வள்ளி கேட்டாள் : "தொரே! எங்களுக்காகப் பாடுபடும் உங்களுக்கு மட்டும் இங்கே நின்றால் ஆபத்தில்லையா?"

எதிர்வீரசிங்கம் நின்ற இடத்திற்குச் சிறிது முன்னால் ஒரு போத்தல் வந்து விழுந்தது.

"பார்த்தீங்களா?" வள்ளி கேட்டாள்.

"அதற்காக, நான் ஓடி ஒளிக்கணுமா?"

ஓர் இதய அடிப்புநேர மௌனத்தின்பின் வள்ளி நிதானமாகச் சொன்னாள் :

"உங்களுக்குத் துணையாக நானும் இங்கே நிற்கத்தான் போகிறேன்."

அந்தத் துணையை அல்லவா எதிர்வீரசிங்கமும் விரும்புகிறான்? ஆனால் இந்த நெருக்கடியான நேரத்தில், அபாயகரமான இந்த இடத்தில் அவள் நிற்கவேண்டுமா?

அந்த நேரத்தில் ஒரு பொலீஸ் வான் ஆபீசுக்கு முன்னால் நின்றது. அதன் மேல் கற்கள் போட்டார்கள்.

"தோழர்களே! கற்களை வீசாதீர்கள். அமைதியாக இருங்கள்" என்று கூவினான் எதிர்வீரசிங்கம்.

"இல்லை தொரே இல்லை. எதிர்ப்பக்க மனுஷங்கதான் பொலீஸ்காரர் மேலேயும் கல்லு வீசுறாங்க" என்று கத்தினான் ஒரு தொழிலாளி.

பொலீஸ் வான் மேல் ஒரு கைக்குண்டு விழுந்தது. சப் இன்ஸ்பெக்டர் வானை ஸ்டோர் பக்கம் ஓட்ட உத்தரவிட்டார். ஆனால், வான் அசைந்தால்தானே! வானின் பின் டயர்களில் ஒன்று வெட்டப்பட்டு, காற்றில்லாது இருந்தது. பொலீஸ்காரரில் ஒருவன் சப் இன்ஸ்பெக்டரின் ஆணையின்படி ஒரு தரம் துப்பாக்கியால் மேலே சுட்டான். தொழிலாளர் அங்குமிங்குமாகப் பதுங்கினர். ஒருசிலர், 'இது அநியாயம். சூட்டுக்கு அஞ்சோம். நாம் என்ன தவறு செய்தோம்?' என்று கர்ஜித்தனர்.

"நீதி நியாயம் செத்துப்போச்சா?" என்று கத்திக் கேட்டாள் வள்ளி.

"ஹேய், சுடுவதை நிற்பாட்டு!" என்று ஆங்கிலத்தில் கதறினான் எதிர்வீரசிங்கம்.

எறிவெடி ஒன்று இன்னும் ஒரு தரம் வான் மேல் விழுந்தது.

சப் இன்ஸ்பெக்டர் ஏதோ கத்தினார். மண் போத்தல் அவருக்கு மேலாகப் பறந்தது. அப்படியே குந்தி இருந்து

விட்டார். பொலீஸ்காரர் இரண்டாம் முறையாகவும், மூன்றும் முறையாகவும் ஆகாயத்தை நோக்கிப் படபடவென்று சுட்டனர்.

“நண்பர்களே சுடாதீர்கள். நான் வருகிறேன்” என்று பொலீஸ்காரருக்குத் தெரிவித்தான் எதிர்வீரசிங்கம்.

அவன் வான் பக்கம் ஓட எத்தனிக்க வள்ளி பாய்ந்து அவன் இடது புயத்தை இறுக்கிக் கட்டிப் பின்னல் இழுத்தாள்.

“நீங்க போகாதேயுங்க தொரே போகாதேயுங்க.” என்றவாறு அவனுக்கு முன்னல் திரும்பி வழியைத் தடை செய்தாள்.

எறிவெடி ஒன்று பட்டு பொலீஸ்காரரில் ஒருவன் காயம் பட்டு முழங்கால்களில் விழுந்தான்.

“சூட்” சப் இன்ஸ்பெக்டரின் ஆணை வெடித்தது. துப்பாக்கி ரவைகள் தீயில் எரிந்த லயம் பக்கமாகச் சிதறின.

“ஐயோ!”

துவண்டு விழுந்த வள்ளியை எதிர்வீரசிங்கம் தனது நெஞ்சால் தாங்கி அணைத்து ஏந்தினன்.

“ஐயோ வள்ளியம்மா” என்று பதறினன் அவன்.

அக்கம் பக்கத்தில் நின்றவர்களும் கூச்சலிட்டனர். வள்ளியின் வலது பக்கத்து மார்பிலிருந்து இரத்தம் கசிந்தது. அவள் அவ்விடத்தைப் பொத்திப் பிடித்துக்கொண்டாள்.

“ஹேய் பொலீஸ்! எங்களில் ஒருவரைச் சுட்டுவிட்டீர்கள்” என்று கூவினன் எதிர்வீரசிங்கம்.

துப்பாக்கிச் சூடு நின்றுவிட்டது. கல் எறிகள் போததல் வீச்சுக்கள் எறிவெடிச் சத்தங்கள் எல்லாம் ஓய்ந்துவிட்டன. பொலீஸ்காரர் காயம்பட்ட தமது சகாவுக்கு முதல் சிகிச்சை அளித்தனர்.

தொழிலாளரில் பலர் காயம்பட்டிருக்க வேண்டும். மயான அமைதி நிலவிய அந்தக் கண நேரத்தில், சில லயங்களிலிருந்து ஒப்பாரியின் ஓகாரம் கேட்டது.

"தொரே, பயப்படாதிங்க. கொஞ்சம்தான் நோகிறது." வள்ளி தெளிவாகக் கூறினாள்.

எதிர்வீரசிங்கம் அக்கம் பக்கத்தில் நின்றவர்களுக்குச் சொன்னான் :

"நண்பர்களே, பீதி அடைந்து பிரயோஜனமில்லை. வள்ளியம்மாவை நான் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்கிறேன். நீங்கள் காயம்பட்டவர்களைக் கூட்டிக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு வாருங்கள்."

வள்ளியைக் கைகளில் ஏந்தியவாறு இருட்டில் நடந்து மகாராஜனின் பங்களாவை அடைந்தான் எதிர்வீரசிங்கம்.

பங்களாவின் முன்னால் நின்ற தோட்டத்து ஜீப்பில் அவளைக் கிடத்திவிட்டு 'வள்ளி' என்று குரல் கொடுத்தான்.

"தொரே. அவ்வளவாக நோகலை. ஆஸ்பத்திரிக்குப் போனா சரி"

எதிர்வீரசிங்கத்திற்கு இந்த வார்த்தைகள் மனத்தெம்பை அளித்தன.

ஓடிப்போய் அந்தப் பங்களாவின் முன்கதவைப் பலமாகத் தட்டினான்.

# 18

எதிர்வீரசிங்கம் அன்றுதான் முதல் தடவையாகத் தோட்டச் சின்னத்துரையின் பங்களாவிற்கு வந்திருந்தான். அவன் தகப்பன் பதி ஒவ்வொரு நாள் முன் இரவிலும் குடி போதையில் அங்கு குடியிருந்தாலும், அவன் வந்ததில்லை. வாசலின் ஒரு பக்கத்திலிருந்த மின்சார மணியின் விசையை அவன் அறிந்திருக்கவில்லை. அந்த இருட்டிலும் அவசரத்திலும் அது அவன் கண்களுக்குத் தப்பிவிட்டது. கதவைப் பலமாகத் தட்டி, பின்பு சிறிது அமைதியுடன் அதைப் பொத்திய கையால் குத்திக்கொண்டிருந்தான். இன்னும் சிறிது நேரத்தில் அது திறந்திராவிடில் கதவை உடைத்துப் பிளந்தே இருப்பான்.

"மிஸ்டர் மகாராஜன்! தோட்டத்தில் பெரிய குழப்பம்" என்றான் எதிர்வீரசிங்கம்.

"தெரியும்" ஓர் அலட்சிய அசட்டு உச்சரிப்போடு சொன்னான் மகாராஜன்.

"தெரிந்தும்"

"பொலீசுக்கு உமது தகப்பனைப் போன் பண்ணச் சொன்னேன்."

"ஓ! அப்படியா, உங்கள் பொலீஸ் ஒரு பெண்ணைச் சுட்டுவிட்டார்கள். உயிருக்கு ஆபத்தான நிலை. அவளை உங்கள் ஜீப்பில் கிடத்தியிருக்கிறேன். உடனே டிக்கோயா ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோக வேண்டும்"

"அது தோட்டத்து ஜீப். இப்படியான பிரைவேட் ஓட்டங்களுக்கு உபயோகப்படுத்துவது ஒழுங்கல்ல."

"மிஸ்டர் மகாராஜன்! இவளும் தோட்டத்துப் பெண். ஜீப்பை உபயோகிப்பது அவள் உரிமை"

"அதைப் பற்றிப் பேச நீ யார்?"

"நானு—ஆ" சிறுத்தையின் உறுமலைப் போல் அடித் தொண்டையிலிருந்து ஒலி எழுப்பியவாறு மகாராஜனது சட்டையின் முன்பகுதியைக் கையால் பற்றிப் பிடித்தான் எதிர்வீரசிங்கம்.

"விடடா சட்டையை ராஸ்கல்"

"குடடா ஜீப் சுவிச் திறப்பை. விட்டுவிடுகிறேன். இரக்க மில்லாத பேயே!"

மகாராஜன் நெளிந்து திரும்பி "ரோவர்! ரோவர்!" என்று கூவினன்.

"அது வரமாட்டுதடா" கத்தினன் எதிர்வீரசிங்கம்.

"அது உன்னைப் போல் பெண் வேட்டைக்குத் தோட் டத்துக்குப் போய்விட்டது" கூறியபடியே மகாராஜனைக் குலுக்கினன் எதிர்வீரசிங்கம்.

எதிர்பாராத விதமாக அவன் முகத்தில் ஓர் அறை கொடுத்தான் மகாராஜன். ஒரு நிமிடம் திகைத்துப் போனன் எதிர்வீரசிங்கம். அடுத்த கணம் நாடியில் ஒரு குத்து—ஒரு குத்துக்கரணம் போட்டு, ஒரு மூலையில் விழுந்தான் மகாராஜன். அவன் பல் ஈறுகளிலிருந்து இரத்தம் கசிந்தது. தலை கிறங்கியது. அவன் விழும்போது தட்டப்பட்ட சிறு மேசை, பூக் கிண்ணம் சிகரெட் டின் முதலியன தரையில் சிதறிக் கிடந்தன. மகா ராஜன் எழும்ப எத்தனித்தபோது எதிர், அவன் நெற்றியில் ஒரு குத்துவிட்டான். மகாராஜன் புரண்டபோது, கொழுந்து கிள்ளும் பெண்ணுருவில் இருந்த சிகரெட் சாம்பல் படிக்கம் தட்டப்பட்டுக் கீழே விழுந்தது.

"தொரே, இங்கவாங்க" வெளியில் இருந்து யன்னல் ஊடாக ஓர் இரகசியக்குரல் அழைத்தது.

எதிர்வீரசிங்கம் வெளியே வந்தபோது அந்த இரகசியக் குரலுக்குச் சொந்தம் பாராட்டிய ஒரு முரட்டு உருவம் தொடர்ந்து பேசியது:

"தொரே, நான்தான் இந்த ஜீப்பின் டிரைவர். இந்தாங்க ஸ்விச் சாவி. நீங்க ஓட்டுவீங்களா? அல்லது..."

"ஆமா, ஓட்டத் தெரியும்"

"தொரே, வள்ளி எங்க பெண்ணுங்க. எங்க பெரியப்பா மகள். காப்பாற்றி விடுங்க. கடவுளைப் போல வந்தீங்க" என்று சொன்னான், ஜீப் சாரதி. வள்ளியின் நல்ல உயிர் காப்பாற்றப்படவேண்டும் என்ற சிந்தனைதான் அவனுக்கு அப்போது இருந்தது. அவன் தொடர்ந்து கூறினான்:

"தொரே, தோட்டத்து ஏழைகள் மேலே இரக்கம் காட்டுறீங்க. நீங்க நல்லா இருப்பீங்க!" எதிர்வீரசிங்கம் இந்த வாழ்த்துரையைக் கேட்க நிற்கவில்லை.

ஜீப் குமுறியவாறு தோட்டப் பாதை வழியாக இறங்கிக் கொண்டிருந்தது. ஜீப்பை அந்த நேரத்தில் ஓட்டுவது எதிர்வீரசிங்கத்துக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. பனியும் பதியின் கையாளோ? பனி வழியை மறைத்துக் கொண்டே இருந்தது. ஆனால் அன்பு, அறிவு, ஆற்றல் இவற்றின் கூட்டு முயற்சிக்கு எதிராக என்னதான் இயங்கி வெல்ல முடியும்? ஜீப் தோட்டப் பாதையிலிருந்து டிக்கோயா வீதியை அடைந்தது. அதன் வேகம் அதிகரித்தது.

"வள்ளீ"

"தொரே"

"எப்படி இருக்கிறது?"

"லேசாக நோகிறது. நெஞ்சை இறுக்கிப் பிடிச்சிருக்கிறேன்."

சிறிது நேர மௌனத்தின் பின் வள்ளி, "தொரே, நீங்க தெய்வம்" என்று பக்தித் தளதளப்பில் சொன்னாள்.

"அப்படிச் சொல்லாதே வள்ளி. தெய்வந்தான் தெய்வம். நாமெல்லாம் தெய்வத்தின் வேலைக்காரர்.........வள்ளி, கேட்கிறியா ?"

"ஆமா, தொரே"

"சரி பேசாதே. கேட்டுக்கொண்டே இரு. நல்ல வேளையாகக் குண்டு வலது பக்கத்தில்தான் பட்டிருக்கிறது. பயமில்லை. தைரியமாக இரு. கடவுள் உன்னைக் காப்பாற்றுவார். இது நமக்குச் சோதனை. இனியாவது தொழிலாளர் ஒற்றுமையாக இருப்பார்களல்லவா ?.........வள்ளீ"

"என்னங்க தொரே"

"சரி நீ பேசாதே. நான் பேசிக்கொண்டே ஓட்டுகிறேன். டிக்கோயா ஆஸ்பத்திரியின் வெளிச்சம் தெரிகிறது"

புதிய நோயாளிகளைச் சோதிக்கும் அறையிலிருந்த ஓரே கட்டிலில் வள்ளி கிடந்தாள். நோயாளிகளை அனுமதிக்கும் அப்போதிக்கரி எதிர்வீரசிங்கத்திடம் கேட்டு, விபரங்களை எழுதினார். அவளுக்கு ஒரு டிக்கெட் தயாராகிக்கொண்டிருந்தது.

பெயர்—சிதம்பரம் வள்ளியம்மா.

வயது—பதினாறு.

பாதுகாப்பாளன்—க. எதிர்வீரசிங்கம்.

விலாசம்—டிஸ்பென்சர் பங்களா, மாணிக்கமலை, டிக்கோயா.

இந்த விபரங்களைக் கொடுத்ததும், எழுத்து மூலம் வள்ளிக்கும் தனக்கும் ஒரு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திவிட்டதாக நினைத்த எதிர், அவளுடைய கட்டிலுக்குப் பக்கத்தில் கைகட்டி நின்றான்.

வள்ளியின் செந்தாமரை முகமலர் வெண்டாமரையாக மாறிக் கொண்டிருந்தது. அந்தச் செந்தாமரையின் வர்ணச் சாயம்தான் வள்ளியின் மார்பை மூடிய தாவணியை மெதுவாகச் சிவப்பாக்கியதோ ?

அவள் தனது முகத்தைச் சற்றுத்திருப்பி எதிரின் முகத்தைப் பார்த்து, அவன் கண்களைப் பறித்து, அதில் கண்ணின் மணிகளைக் கவர்ந்து கொண்டிருந்தாள்.

அவன் கண்களில் அவள் பாவையாகவும், அவள் கண்களில் அவன் பாவையாகவும் ஆடாது அசையாது இருந்தனர், தங்கள் கண்கள் கலங்காதிருக்க மிகவும் சிரமப்பட்டனர்.

கண்களைக் கண்ணீர் திரையிட்டால் நேசப்பாவைகள் மறைந்து போய்விடும் அல்லவா ?

என்றாலும், ஒரு திருக்குறளைச் சொல்லும் நேரத்தில் இரு பாவைகளும் கலங்கி அழுதன. ஆறுதல் மொழிய வாய்ச் சொற்கள் தேவைப்பட்டன.

"வள்ளி, அழாதே தைரியமா இரு. உனக்கு ஒன்றும் ஆபத்தில்லை" என்று முணுமுணுத்தான் எதிர்வீரசிங்கம்.

அவன் எவ்வளவோ பேச யோசித்தான், இவ்வளவுதான் அவளோடு பேசினான். அவள் முகத்தைத் தன் இரு கைகளி லும் ஏந்திச் சூடேற்ற வேண்டும்போல் இருந்தது அவனுக்கு. ஆனால் அவளை அணுகத் தைரியம் வாவில்லை.

அப்போதிக்கரி வள்ளியைப் பரிசோதிக்க எதிர்வீரசிங் கம் சிறிது விலகிநின்றான்.

"சார் ! நான் டிஸ்பென்சர் கனகசபாபதியின் இளைய மகன். யூனிவர்சிட்டியில் படிக்கிறேன்............இவள் நான் விவாகம் செய்யவிருக்கும் பெண்" என்றான் அவன்.

ஆங்கிலத்தில், எதிர் இப்படிச் செய்த அறிமுகத்தின் அர்த்தம் என்ன ?

'இவள் பெரிய இடத்து உயிர். பெரிய டாக்டரை உடனே அழையுங்கள்' என்பதுதானே!

பெரிய டாக்டரின் பங்களாவிற்கு அப்போதிக்கரி போன் செய்தார்.

"டாக்டர்! ஒரு ஷூட்டிங் கேஸ் வந்திருக்கு. கொஞ்சம் சீரியஸ்தான். ஒரு எஸ்டேட் டிஸ்பென்சரின் ரிலேஷன்" என்றார் அவர்.

டாக்டர் பரிசோதிக்கும் அறைக்கு வந்ததும் விபரங்களை அறிந்துகொண்டு, எதிர்வீரசிங்கத்தை அறைக்கு வெளியே நிற்கும்படி வேண்டினர்.

எதிர், ஆஸ்பத்திரியின் வெளி விறுந்தைக்கு வந்தபோது அழுகையும் புலம்பலுந்தான் அவனை வரவேற்றன.

ஒரு தூணுடன் சாய்ந்த இருந்தபடியாக, வள்ளியின் அம்மா பொட்டு தலையில் கைவைத்து அலறினுள்.

"என்ன தொரே, எப்படி எம்புள்ள" கண்களைக் கரைய விட்டுச் சொற்களை ஒரு சால்வைத் தலைப்பால் மெல்ல மெல்ல விடுதலை செய்தபடியே கேட்டான் அப்பா சிதம்பரம்.

பல தொழிலாளர் குறுக்குப் பாதைகளில் மாணிக்க மலையிலிருந்து வந்து கொண்டிருந்தனர். அவர்களிற் பலர் தோட்டக் கலவரத்தில் காயப்பட்டவர்கள். மண் நிறைந்த போத்தல்கள் பட்டு, தலையின் தோல்பிளந்த காயங்கள், கற்களும் போத்தல் துண்டுகளும் உண்டாக்கிய வெடிப்புக்கள், எறிவெடிகளின் எரி புண்கள், எலும்பு முறிவுகள் இத்தியாதி காயங்களுடன் அவர்கள் வந்து ஒவ்வோர் அசைவோடும் 'ஆ, ஊ' என்றனர். சிலர் போன வந்த இடமெல்லாம் குருதிக் கோலமிட்டனர். ஆஸ்பத்திரி அட்டன்டன்ட்மாரும் தாதிமாரும் வந்து அவர்களைப் பலவாறு திட்டினர்.

'ஏய் மிருகன் மாதிரி இங்கே சத்தன் போடாதே' என்றும் 'ஏய் என்னு இது? சும்மா சத்தன் போடாதே' என்றும் கட்டளையிட்டனர்.

தன்மானமுள்ள இரண்டொரு தொழிலாளர் "நாங்க சத்தம் போடலை அம்மா. நோ பொறுக்க முடியலை. ஏதாவது செய்யுங்கோ" என்றனர்.

'இந்தா எல்லா மனிசனும் கீழே போ. விருந்தைக்கு ஒண்டு ஒண்டு ஆள் வா'—மேட்ரன் என்ற உத்தியோகப் பட்டம் பெற்ற ஒரு மாமிசக் கும்பம் தூய வெள்ளை உடுப்பினுள் இருந்து உரத்த குரலில் இவ்வாறு ஆணை இட்டுத் தனது அதிகாரத்தை நிலைநாட்டியது.

அது தொடர்ந்து ஏளனம் செய்து கண்டித்தது.

'நீ ரவிலே மிருகன் மாதிரி அடிச்சுக்கிட்டு இங்கே வாறது. இப்ப ரெக்லாஸ் பேசுறது. எல்லாம் மூடு வாயை'

தொழிலாளர் வாய்களை மூடத்தான் செய்தார்கள்.

அவளுடைய ஆணை அநியாயமாக இருந்தாலும், அதற்கு அதிகாரத்தின் அங்கிகாரம் இருந்ததல்லவா?

'ஐயோ' என்ற நோவின் ஓலங்கூடப் போட முடியாமல் நோயாளிகள் வருந்தினர். அவர்கள் உள்ளங்களும் உடல்களும் சோர்ந்திருந்தன.

ஆஸ்பத்திரியின் படிகளில் ஓர் உருவம் கவலையுடன் ஆனால் கம்பீரமாக ஏறியது.

எதிர்வீரசிங்கம் ஓடிவந்து அவனைக் கட்டி அணைத்துக் கொண்டான்.

"மலையப்ப அண்ணு" என்று மிழற்றியவாறு குழந்தையைப் போல் தனது தலையை அவன் பரந்த தோள்களில் புதைத்தான்.

மலையப்பனின் கண்களும் கனிந்தன.

இரத்தக் குழாய் மூலம் ஊசி போடும் கருவிக் கூட்டம் ஒன்றை எடுத்துக்கொண்டு பரிசோதிக்கும் அறைக்குள் ஒரு நர்ஸ் ஓடினாள். மலையப்பனும் எதிர்வீரசிங்கமும் அந்த அறைக்கு வெளியே கதவோடு நின்றனர். டாக்டரும் அப்போத்திக்கரியும் சம்பாஷணை செய்வது தெளிவாகக் கேட்டது.

"ஊசி"

"பஞ்சு. சேலைன ஏற்றி நாடியைத் திருப்தியாக்குவோம். சே! இரத்தம் இருந்தால் எவ்வளவு நல்லது"

"சார், கண்டிக்கு அனுப்புவோமா?"

"இல்லை. முதலில் உடல்நிலை சரியாக வர வேண்டும். இந்த நிலையில் அவ்வளவு தூரம் அனுப்புவது புத்தியல்ல... எங்கேயாவது 'நாலு ஓ' இரத்தம் எடுக்க முடியுமானால் நேரடியாகச் சோதித்து விட்டுக் கொடுக்கலாம்."

கதவில் யாரோ தட்டும் சத்தம் கேட்டது. "யாரது அங்கே? பெரிய உபத்திரவம். தோட்டத்து மனுஷங்களாலே சொல்லமுடியாத தொல்லை" என்று முணுமுணுத்தாள் நர்ஸ்.

"சார், கண்டியிலிருந்து ஒரு பைன்ட் 'நாலு ஓ' இரத்தம் எடுப்போமா?"

"அப்படித்தான் செய்யவேண்டும். சே! நேரம் போகுமே. ஒவ்வொரு நிமிஷமும் விலை மதிக்க முடியாதது."

கதவில் பலர் தட்டுவதுபோல் அவசரச்சத்தம் மீண்டும் கேட்டது. கதவு திறந்தது.

"டாக்டர்! நான் இரத்தம் கொடுக்கிறேன்."

"சார், நான் இரத்த தானம் செய்கிறேன். எனது இரத்தம் 'நாலு ஓ' வகையைச் சேர்ந்தது."

ஏக காலத்தில் எதிர்வீரசிங்கமும் மலையப்பனும் போட்டி போட்டு முன்னுக்கு வந்தார்கள்.

ஒரு நிமிடம் அதிர்ச்சியுற்று நின்றார் டாக்டர்.

அவர் யாழ்ப்பாணத் திருநாட்டில் பல வருட காலம் வேலை பார்த்த பின் டிக்கோயா மாறி வந்த ஒருவர். அங்கே இப்படி இரத்த தானம் செய்யத் தாமாகவே வந்தவர்களை அவர் கண்டதில்லை. தாயின் உயிரைக் காட்டினால் கூட வாலிப மகனின் நாளங்களிலிருந்து ஒரு பைன்ட் இரத்தம் கறந்தெடுப்பது கஷ்டமான காரியம்தான்!

சிலையாகி விட்ட டாக்டரின் உருவம் சாபம் நீங்கும் நிலையில் மெல்ல உயிர் பெற்றது.

அவர் கேட்டார்:

"என்ன, உனது இரத்தம் 'நாலு ஓ' வகையைச் சேர்ந்ததா?"

"ஆம் சார், சென்ற வருடம் நான் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியின் இரத்த வங்கிக்குச் சென்றபோது அப்படித்தான் சொன்னார்கள்" என்றவாறு தனது பர்சிலிருந்து ஒரு துண்டை எடுத்து டாக்டரிடம் கொடுத்தான் மலையப்பன். அதில் 'மலையப்பன். குருதி வகை நாலு ஓ' என்று எழுதியிருந்தது.

"சரி உம்முடைய இரத்தத்தை எடுத்து அந்தப் பெண்ணுக்கு ஏற்றுவோம்" என்று மலையப்பனின் தோளில் தட்டிக் கொடுத்தார் டாக்டர்.

மலையப்பனின் இரத்தம் தங்கை வள்ளியை வாழவைக்கப் போகிறது.

இதயத் தொடர்போடு இரத்தத் தொடர்பும் சேருகிறது!

அவன் அணிந்திருந்த இரத்தச் சிவப்பு மப்ளரால் மலையப்பன் தனது கண்களை ஒற்றிக்கொண்டான்.

வள்ளியைப் பரிசோதிக்கும் அறையிலிருந்து ஓர் அசையும் கட்டிலில் வார்ட்டுக்குத் தள்ளிச் சென்றார்கள். ஒரு போத்தலிலிருந்து சேலைன் உப்பு சொட்டுச் சொட்டாக

அவளது கை நாளத்தினுள் போய்க்கொண்டிருந்தது. அசையும் கட்டிலைச் சுற்றிவர டாக்டர், அப்போதிக்கரி, மேட்ரன், நர்ஸ், அட்டன்டன் முதலியோர் சென்றனர். விருந்தையில் கூடியிருந்தவர்களில் சிலர் இந்தக் குட்டி ஊர்வலத்தைக் கண்டதும், விழாக் கோலமெடுத்துப் பவனிவரும் அம்மன் விக்கிரகத்தைக் கண்டது போல் கைகூப்பிக் கெஞ்சினர். ஆனால், பெரும்பாலானோர் படலையைத் தாண்டிய பாடையை பார்க்கும் நிலையில் தலையில் கைவைத்து ஒப்பாரி ஒப்புவித்தனர். 'சிதம்பரமும் பொட்டும் தங்கள் கண்கள் மூலம் கரைந்துகொண்டிருந்தனர்.

எதிர்வீரசிங்கத்தைக் கண்டதும் வள்ளியின் முகத்தில் ஒரு நன்றிப் புன்னகை வெள்ளைப் பாலாடையைப் போல் படர்ந்தது.

பக்கத்தில் நின்ற மலையப்பனும் முன்னுக்கு வந்து சிறிது குனிந்து, "தங்கை" என்று சொல்லுவது போலவும், "சுகமா?" என்று கேட்பது போலவும் குரலில் அன்பும் செல்லமும் கனிய "வள்ளீ" என்று அழைத்தான்.

ஆனால்.........!

தீப்பந்தத்தின் பக்கத்தில் சிரிக்கும் பூவின் மாற்றங்கள் போல், வள்ளியின் புன்னகை ஒளியிழந்து பொலிவிழந்து உருவிழந்து கருகியது ஏன்?

வள்ளி, மலையப்ப அண்ணாவின் முகத்தைக் கண்டதும் உன் சக்தியெல்லாவற்றையும் திரட்டி, ஒரு நிமிடம் உன் இதயத்தைக் கூட நிறுத்தி, உன் முகத்தை மறுபக்கம் ஏன் திருப்பினாய்?

என் இந்த வேதனை வெறுப்பு?

இந்தக் கேள்விகள் மலையப்பனின் உள்ளத்திலும் கொதிக்கும் நீர்ப்பரப்பில் குமிழிகள் போல் தோன்றித் தோன்றி வெடித்து மறைந்து மறுபடியும் தோன்றின.

அசையாமல் அசையமுடியாமல் விருந்தையில் ஒரு தூணுடன் நின்றுவிட்டான் மலையப்பன்.

மனம் வைக்கோலாகிவிட்ட நினைவுகளை அசைபோட்டது.

பதி வள்ளிக்கு அனுப்பிய அந்தப் போலிக் கடிதம்......!

சே! காத்தான் வள்ளிக்கு உண்மையை விளக்கமுன் இறந்து போனானே!

மலையப்பனுக்கு இப்போது வள்ளியின் வெள்ளை உள்ளத்திலுள்ள கறையையும், அவள் காட்டிய வெறுப்பையும் உணர்ந்துகொள்ள முடிந்தது.

'போலிக் கடிதம் எழுதுபவர்களும் மொட்டைக் கடிதம் எழுதுபவர்களும் கொலைஞரிலும் கொடியவர்கள். அவர்கள் மனிதனின் இதயத் தசையை விலை கூறி விற்பவர்கள்.'

மலையப்பனுக்கு இந்தச் சிந்தனை குமட்டியது.

வள்ளியைப் பொறுத்தவரையில் 'மலையப்ப அண்ணா, வஞ்சகக் காதல் கடிதம் எழுதிய மானம் மரியாதை இல்லாதவன்'

ஏன், அப்படித்தானே!

# 19

மலையப்பனது இரத்தத்தின் சிவப்பு அணு ஒவ்வொன்றும் துடித்துக்கொண்டிருந்தது. 'எப்போது டாக்டர் அழைப்பார். இரத்தத்தை எடுப்பார், வள்ளிக்கு ஏற்றுவார்' என்று ஏங்கிக் கொண்டிருந்தது.

மலையப்பனின் செங்குருதியங்கள் இன்னும் சிறிது நேரத்தில் வள்ளியின் நாடி நாளங்களில் ஓடும். அவள் இதய அறைகளை நிரப்பும்; கன்னங்களில் நிறம் ஏற்றும்; மூளையில் தெளிவு தரும். அவளை வாழவைக்கும்.

அப்போது அவள் அவன் கூறுவதைக் கேட்டு 'அண்ணு' என்று அழைப்பாளல்லவா?

மலையப்பன் டிக்கோயா ஆஸ்பத்திரியின் நீண்ட அகன்ற முன் விறுந்தையில் நிம்மதி இல்லாது குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான். அந்த அவதியில் வேதனையுடன் ஓரளவு இனிமையும் இருப்பதை மலையப்பன் உணர்ந்தான். ஓர் உயிரின் உற்பத்தியில் இனிமையால் வேதனையும், உயிரின் பிரசவத்தில் வேதனையால் இனிமையும் இருப்பதாக அவன் படித்திருக்கிறுன். ஆகையால் நெஞ்சில் நிறைந்த ஓர் உயிரைக் காப்பாற்றும் இந்த வேளையில் வேதனை, இனிமை, அவதி இவற்றின் கலவையைப் பாகம் பிரித்து உணர அவனுல் முடிந்தது.

அந்த விருந்தையின் சுவர்களில் இளம் பிள்ளை வாதம் என்னும் 'போலியோ' நோயைப் பற்றிய அறிக்கைகள் ஒட்டப் பட்டிருந்தன. முற்றிய 'போலியோ' கால்களிலோ கைகளிலோ பாரிசவாதத்தை உண்டாக்குகின்றதாம்.

'—ம் 'போலியோ'வின் வேலை அவ்வளவுதானே!' என்று முணுமுணுத்தான் மலையப்பன்.

ஆனல், கடிதங்களில் போலியோ......! ஆமாம் போலிக் கடிதங்கள் இதயத்தில் அல்லவா பாரிசவாதத்தை உண்டுபண்ணு கின்றன. அன்பு இருக்கும் பாகத்தில் பக்க வாதத்தை வரச் செய்கின்றன. இயங்கின பகுதியைத் தயங்க வைக்கின்றன.

'வள்ளி! பதி என்ற வைரி, அல்ல மிகக்கொடிய வைரஸ் கிருமி, உன்னை மிகக் கடுமையாகத் தாக்கி என் மேல் வாழ் நாள் முழுவதும் அன்பு செலுத்தமுடியாமல் உனது முகம் அகம் எல்லாவற்றிலும் வாதத்தை இழுத்து விட்டதா?'

மலையப்பனின் மனம் இப்படி ஒரு கேள்வியைக் கேட்டது.

அப்படி யெல்லாம் நடக்குமா? இன்னும் சில மணிநேரத் தில் வள்ளிக்கு உண்மை தெரியவரும். அப்போது அவள் மலையப்ப அண்ணு மேல் இன்னும் அதிகமான அன்பு செலுத்து வாளல்லவா?

மலையப்பன் சிலை நடப்பது போல் அந்த விருந்தையில் அசைந்தான். அனல், நெஞ்சுக் கூட்டுக்குள் மட்டும் அம்பு பட்ட இதயப் புரு வேதனையால் சிறகடித்தது. அவனுடைய சோக நிழலிலே எதிர்வீரசிங்கம் அவன் பின்னல் நடந்து கொண்டிருந்தான்.

அந்த நேரத்தில் டீ மேக்கர் வல்லிபுரம் வார்ட்டுகளிலிருந்து விருந்தைக்கு வந்தார். அவர் ஆஸ்பத்திரிக்கு வந்ததையும் வார்ட்டுகளுக்குப் போனதையும் யாருமே அவதானிக்கவில்லை. இப்போது வல்லிபுரத்தைக் கண்டதும் சிதம்பரமும் பொட்டும் எழுந்து வந்து அவர் முன் கைகூப்பி நின்றனர்.

"தொரே! எப்படியுங்க எம்மவளுக்கு?" என்று கேட்டான் சிதம்பரம்.

"ஐயோ" என்று பெரு மூச்செறிந்தவாறு பொட்டு வல்லிபுரத்தின் காலடியிலே குந்தி விட்டாள்.

"பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. வள்ளியம்மா என்னுடன் நன்றாகக் கதைத்தாள்" என்றார் வல்லிபுரம்.

அவர் தொடர்ந்து சொன்னார்:

"சிதம்பரம்' உன் மகள் தோட்டத் தொழிலாளருக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கப் பிறந்தவள். அவளுக்கு ஒன்றுமே வராது. கடவுள் அவளைக் காப்பாற்றுவார். இந்த நேரத்தில் கூட 'மற்றவங்களுக்குக் காயமா?' என்றுதானே கேட்கிறாள். நல்ல மனசு உள்ளவங்களுக்குத் தீமை வராது."

வல்லிபுரத்தின் முகத்தையே அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்த பொட்டு அவரை இன்னும் ஒரு தரம் கைகூப்பிக் கும்பிட்டாள். சிதம்பரம் தனது முகத்தைத் துடைத்துக்கொண்டான்.

வல்லிபுரம் சொன்னார்: "கண்ணிலே வரவேண்டியது புருவங்களோடு போய்விட்டது. வள்ளிக்கு வலது பக்கத்திலேதான் குண்டு பட்டிருக்கிறது. இருதயத்தில் பட்டிருந்தால் கதை வேறாக இருந்திருக்கும்."

வல்லிபுரம் திரும்பிப் பார்த்தபோது மலையப்பன் பக்கத்தில் நிற்பதைக் கண்டார். சொண்டுகளிலே சிரித்தபடியே அவர் கேட்டார்: "மலையப்பா, வள்ளி உன்னுடன் கோபமா?"

"இல்லையே" என்றான் மலையப்பன்.

அவனுக்கு வள்ளிமேல் ஒருபோதும் துளிகூடக் கோபம் இல்லாததால், இந்தச் சிக்கலில்கூட அவன் அடிமனம் 'வள்ளிக்கும் என்மேல் கோபம் இல்லை' என்றுதான் சிந்திக்க முடிந்தது.

"'சங்கத் தலைவரின் இரத்தம் எனக்குவேண்டாம்' என்று வள்ளி கூறினாள்" என்றார் வல்லிபுரம்.

மலையப்பனின் கண்கள் கலங்கிவிட்டன.

"அப்படியானால் எனது இரத்தத்தை எடுக்கட்டும்." என்றான் எதிர்வீரசிங்கம்.

அந்த வேளையில், 'யாரு மலேயப்பன், பெரிய டாக்டர் வரச் சொல்கிறார்' என்று நர்சின் அழைப்புக் கேட்டது.

எல்லோரையும் தள்ளிக்கொண்டு மலையப்பன் வார்ட்டுக்குள் ஓடினான். அவன் இரத்தம் எல்லோருக்கும் கொடுக்கக் கூடிய குருதி வகையைச் சேர்ந்தது. அது அவன் நேசிக்கும் நல்ல தங்கைக்கும் பயன் தரக்கூடிய மருந்துதானே!

அவனுக்கு ஒரு முகமூடி கொடுக்கப்பட்டது. முகமூடியை அணிந்துகொண்டு, கையைச் சோப்புப்போட்டுக் கழுவி விட்டு, கட்டிலில் படுத்தான் மலையப்பன். விறைப்பு மருந்தைத் தெளித்து விட்டு கையில் ஊசி ஒன்றை டாக்டர் போட்ட போது, யாரோ மெல்லிசாகக் கிள்ளியதுபோல் இருந்தது அவனுக்கு.

அது எவ்வளவு இனிமையாக இருந்தது!

வள்ளி சிறியவளாக இருந்தபோது, கோபம் வந்தால் இப்படித்தான் கிள்ளுவாள். மெல்லிசாக நுள்ளுவதுதான் வள்ளி ஒருவருக்குத் தரும் ஆகக் கூடிய தண்டனை. அதற்குக் கூட, அவள் நுள்ளிய நோ மறையமுன்பு, 'அண்ணை நோகுதா? வீராயி நொந்ததாடி?' என்று கேட்டுக் கண்கலங்குவாள்.

போத்தலுக்குள் இரத்தம் சொட்டுச் சொட்டாக விழ அதை மலையப்பன் பார்த்துக்கொண்டே படுத்திருந்தான். விழுகின்ற இரத்த முத்துக்கள் மிக அழகாக இருந்தன. குருதிச் சிவப்பு முத்து மாலை வள்ளிக்கு மிகவும் அலங்காரமாக இருக்கும். அவள் கூடச் சிப்பியிலே பிறந்திருந்தால்

முத்து என்றுதானே பெயரெடுத்திருப்பாள். அவள் முத்து அல்ல. குன்றிமணி. குப்பையிலே செடிகளில் திரளும் குன்றி மணி.

குன்றிமணி அளவு துப்பாக்கிக் குண்டு என்ன வேலையெல்லாம் செய்கிறது!

மலையப்பனின் சிந்தனை வேதனையும் இனிமையும் கலந்த ஒரு தெளிவில்லாத பைத்தியக் கனவாக இருந்தது. மகாநாட்டின் பின் அவன் உடல் மிகவும் சோர்வுற்றிருந்தது. இப்போது உள்ளத்தின் தளர்ச்சியும் சேர்ந்து தாறுமாறான சிந்தனைப் பாதையில் அவனை இழுத்துச் சென்றது. அந்தச் சிக்கலான பாதையில் தோட்டத் தொழிலாளர் அத்தனை பேரும் அவனைப் பின் தொடர்ந்தனர்.

மலையப்பனின் நாளத்திலிருந்து ஊசி எடுக்கப்பட்டு அந்த இடத்தில் சிறு பிளாஸ்திரி ஒட்டப் பட்டது. அவனுக்கு ஒரு கோப்பைத் தேநீர் தயாராக இருந்தது. ஆனால் அவன் அப்போது அதைக் குடிக்கும் மனநிலையில் இருக்கவில்லை. கட்டிலை விட்டு அவசரத்துடன் இறங்கினான். உடம்பில் உற்சாகத்தின் சூடு ஏறியது.

மலையப்பனின் இரத்தத்தைப் போத்தலில் எடுத்துக் கொண்டு டாக்டர், நர்ஸ், அப்போத்திக்கரி, மூவரும் பெண் வார்ட்டுக்கு ஓட்ட நடை போட்டார்கள். அவன் இதயத்தை அவன் உடல் தாங்கிக் கொண்டு மெதுவாக அவர்களின் பின் சென்றது. பெண் வார்ட்டுக்கு வெளியே நின்று பார்த்தான். வள்ளியினுடைய கட்டிலின் ஒரு பக்கத்தில் பிரப்பந் தட்டியாலான ஒரு 'ஸ்கிறீன்' போட்டிருந்தார்கள். ஒரு கண்ணாடிக் குழாய் போன்ற பாத்திரத்திலிருந்து தெளிந்த திரவம் சொட்டுச் சொட்டாக அவள் இரத்தக் குழாய்க்குள் போய்க் கொண்டிருந்தது. அந்தப் பாத்திரம் வெள்ளைக் 'கோஸ்' துணியால் மூடப்பட்டிருந்தது.

மலையப்பனின் சூடு இன்னும் தணியாத இரத்தத்தை நர்ஸ் போத்தலில் மெல்ல ஆட்டிக்கொண்டிருந்தாள். டாக்டர் கண்ணாடிப் பாத்திரத்தை மூடிய 'கோஸ்' துணியை அகற்றி விட்டு, நர்ஸிடம் இரத்தப் போத்தலை வாங்கினார்.

மலையப்பனின் இதயம் படபட என அடித்துக்கொண்டது. டாக்டர் இரத்தத்தை, வள்ளியின் நாளங்களுடன் ரப்பர்க் குழாய் மூலம் இணைத்திருந்த அந்தப் பாத்திரத்தில் வார்க்கப் போனார். இரத்தத்தைத் தானாக அதற்குள் பிழிவதுபோல் மலையப்பனின் இதயம் துள்ளிக் குதித்தது. மூச்சுத் திணறு மளவுக்கு அது சுருங்கி விரிந்து சுருங்கியது.

ஆனால், வள்ளியின் இதயம்...?

டாக்டர் இரத்தத்தை வார்க்காமலே நர்ஸிடம் போத்தலைத் திருப்பிக் கொடுத்துவிட்டுப் பரபரப்புடன் 'ஸ்டெத்தாஸ் கோப்'பால் வள்ளியின் நெஞ்சைச் சோதித்தார். அவர் வாய் ஏதோ முணுமுணுத்தது. நர்ஸ் போத்தலை மேசைமீது வைத்துவிட்டு, ஓர் ஊசி மருந்தை எடுத்து ஓடி வந்து டாக்டரிடம் கொடுத்தாள். அப்போத்திக்கரி, இதயத்தைத் தூண்டும் இன்னோர் ஊசி மருந்தை ஊசிக் குழாயில் நிரப்பிக்கொண்டு விரைந்து வந்தார். ஓர் ஊசி போடப்பட்டது. மற்றது போடப்படவில்லை.

இரத்தம் கொடுபடவே இல்லை.

டிக்கோயா ஆஸ்பத்திரியின் மலைபோல் உயர்ந்த சுவர்கள் மலையப்பனின் அலறலை எதிரொலித்த போது, வள்ளியின் வெளிறிய முகத்தைப் பால் நிறத் துணியால் அமைதியுடன் மூடினார்கள்.

ஆஸ்பத்திரியின் முன் விருந்தையில் இருந்தவர்களை இந்த எதிரொலி அணுக் கதிர்கள் போல் தாக்கிற்று. எதிர்வீர சிங்கம் தூணோடு சாய்ந்து, துவண்டு படிகளிலே விழுந்தான்.

சிதம்பரமும் பொட்டும்—

வல்லிபுரமும்—

தோட்டத் தொழிலாளர் அத்தனைபேரும்—இதயமுள்ள எல்லோரும் இரத்தத்தைக் கண்ணீராக்கிக் கொண்டனர்.

பிரேத அறைக்குள்ளே டாக்டரும், பிணம் வெட்டும் கூலியாளும். வெளியே, சிறிது தூரத்தில் மலையப்பனும் எதிர் வீரசிங்கமும். முன் வேலிக்குப் பின்னால் நெஞ்சைப் பறை யாக்கிக் கொண்ட தோட்டத் தொழிலாளர்.

எதிர்வீரசிங்கம் ஒரு கல்லின் மேல் சிலையாக இருந் தான். அவன் ஆடி அசைந்திருந்தால் பைத்தியகாரன் போல் தோன்றியிருப்பான். அழுது, சிரித்து, நடித்து, ஆடி கோமாளியாகி, குரங்காகி எல்லாவற்றையும் அல்லோல கல் லோலமாக்கியிருப்பான். அவன் மனநிலை அப்படித் தடுமாறித் தத்தளித்தது. ஆனால் அவன் பேசாமல் நெஞ்சுக்குள்ளேயே சிரித்து, அழுது, நடித்து, குமுறிக்கொண்டிருந்ததால் வெளித் தோற்றத்தில் துன்பத்தையும் இன்பத்தையும், பிறப்பையும் இறப்பையும் வென்ற ஞானியைப் போல் காட்சி தந்தான்.

மலையப்பன் வேறு ஒரு பாறைக் கல்லில் இருந்து, ஒரு சிறிய கூர்க் கல்லால் அதைத் தட்டிக்கொண்டிருந்தான். சீன மொழியின் சித்திர எழுத்துக்களைப் போல், கூர்க் கல்லின் முனை பட்ட இடங்களில் தொட்டந் தொட்டமாகக் கீறுகள் பாறையில் தோன்றின.

டாக்டர் மரண விசாரணையின் பின் 'ரிப்போர்ட்' எழுதினார். மூளையையும், இதயத்தையும், ஈரலையும், இரைப் பையையும், குடலையும், கன்னிக் கருப்பையையும் கீறி வெட்டிப் பார்த்தபின் அவர் செய்த முடிவு—

'நெஞ்சுக் கூட்டில், துப்பாக்கிக் குண்டுக் காயங்களால் ஏற்பட்ட அதிர்ச்சியாலும் இரத்தப் பெருக்காலும் மரணம் ஏற்பட்டிருக்கிறது.'

மலையப்பன் கல்லால் கற்பாறையைக் குத்திக்கொண்டே இருந்தான். அவன் வள்ளியினுடைய மரணத்தின் காரணத்தை, எதிர்காலச் சந்ததி வாசித்து, அழுது, சிந்தித்துத் திருந்த, கல்லிலே சித்திர வடிவில் செதுக்கினானே?

'மலைநாட்டுத தொழிலாளரிடையே ஏற்பட்ட பிரிவினையும், அந்த வினையில் தழைத்த சுயநலக்காரரின் சூழ்ச்சிகளுமே அருமை வள்ளியின் மரணத்திற்குக் காரணங்களாகும்.'

மலையப்பனின் முடிவு இப்படித்தானே இருக்கும்?

டாக்டரின் தீர்ப்பு, ஹட்டன் கோர்ட்டுக்கு ஏறியது. ஆனால் தகுந்த அத்தாட்சிகள் இல்லாததால் வழக்குத் தள்ளப்பட்டது.

மாணிக்கமலைத் தோட்டத்தில் ஏற்பட்ட பயங்கரமான கலவரத்தை வெற்றியோடு சமாளித்ததற்காகப் பொலிசார் பாராட்டப்பட்டுப் பதவி உயர்வு பெற்றனர்.

# 20

**ப**னி தோய்ந்த காலை நேரம். பொழுது சரியாக விடிய வில்லை. கிழக்கிலே பட்டு நெசவு வேலை ஆரம்பமாகியது. பனியின் நுண்ணிய பட்டு நூல்களோடு, முகில்கள் வடித்துத் தூறிய சூரிய கதிர்கள் இழையோடிப் பின்னப்பட்டன. வானம் அந்தத் திசையிலே வெள்ளிப்பட்டுச் சரிகையாக மாறியது. பட்டு வானம் விதிர்த்த சீதளக் காற்று மலை நாடெங்கும் வியாபித்தது.

மலையப்பன் கனிந்த தன் கண்களை இமைகளாலேயே ஒற்றிவிட்டுப் பத்மாசனத்தில் அமர்ந்திருந்தான். நாவலப் பிட்டி ஆத்மஜோதி ஆசிரமத்தில் அவனுக்கு யோகாசனப் பயிற்சிகள் நடந்தன. காலை நதியில் குளித்துவிட்டு வந்திருந் ததால் அவன் உடல் நீர் நுரையைப் போல இலேசாகச் சுமையற்று இருந்தது. அவனுக்கு எதிரிலே கர்ப்பூர சாம் பிராணிப் புகை முகில்கள் சூழத் தெய்வ விக்கிரகங்களும் இயேசு, புத்தர் புனிதச் சிலைகளும் கோவில் கொண்டிருந்தன. விக்கிரகங்களுக்கும் சிலைகளுக்கும் முன்னால் தலைவாழை இலை களில் பூங்குன்றுகள். பனியில் தோய்ந்த புது மலர்கள். அன்பு ஒன்று, தோற்றம் பல என்பதை வெளிப்படுத்துவது போல் பல வர்ண, பல உருவ, பலவித வாசனை தரும் மொட்டுக்கள், முகைகள், மலர்கள்.........மலர்கள்.

சுவர்களில் அருள் வாய்ந்த புன்னகைகளில் பலவிதங்களைக் காட்டும் படங்கள்—காந்தி மகாத்மா, பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், தமிழ் வள்ளுவர். இவற்றைப் பார்த்த மலையப்பனின் மனமும் சுமையற்றிருந்தது.

"மலையப்பா, பத்மாசனம் மிக நன்றாக இருக்கிறது. கடவுளை நினைத்துக்கொண்டு தியானத்தில் இரு" ஆத்ம ஜோதியின் அதிபர் அன்புமணி அன்புக் கட்டளையிட்டார்.

"மாஸ்டர்! நான் காணாத கடவுளின் உருவை என்னால் நினைக்க முடியவில்லை. நான் எதையும் நினைக்க எத்தனித்தால் தோட்டத் தொழிலாளரின் சகோதர உருவங்கள்தாம் தெரிகின்றன.

மலையப்பன் கண்களை மூடிக்கொண்டிருந்த படியே பதிலளித்தான். அவன் முகம், தாய் கொஞ்சி விளையாடும் கைக் குழந்தையின் கையளவு முகம்போல் புன்னகையாய், புது மலராய், முழுமதியாய் அகத்தின் ஒளியை மந்தகாசம் செய்தது. அவனைப் பார்த்துக் கொண்டே இருந்த அன்பு மணி சொன்னார்:

"தம்பி! நீ என்ன சொன்னாலும் கடவுளைத் தான் நினைத்துக்கொண்டிருக்கிறாய். நீ கடவுளின் திருவடி நிழலிலே இளைப்பாறிக் கொண்டிருக்கிறாய். உனது உள்ளத்தின் கர்ப்பக் கிருகத்திலே கடவுளின் ஜோதி ஏதோ ஒரு விதத்தில் தோன்றியிருக்கிறது. ஏன், நான் சொல்லுவது உண்மைதானே?"

"இல்லை மாஸ்டர்! என் மனக் கண்களுக்கு வள்ளிதான் தெரிகிறாள்" என்றான் மலையப்பன்.

"மாஸ்டர்! அவள் குருதி வடியும் என் நெற்றியை வெண் துணியால் கட்டிக் கொண்டிருக்கிறாள். அவள் விளையாட்டாக உபதேசம் செய்கிறாள்." மலையப்பனின் மனத்தில் அந்தக் குறள் உபதேசம் செய்தது.

**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்.**

அவன் தொடர்ந்து சொன்னான் :

"வள்ளி கைகளில் வளைகள் கதைக்க, கால்களில் கொலுசுகள் குலுங்க, கூடையோடு கொழுந்தெடுக்கப் போகிறாள்.. இல்லை மாஸ்டர், இல்லை. அவள் தெய்வமாகி ஒரு மாதமாகி விட்டது."

"மலையப்பா! நீ தெய்வத்தைத்தானே கண்டு கொண்டிருக்கிறாய். இனி மற்ற ஆசனங்களைச் செய்வோமா?" என்று கேட்டார் அன்புமணி.

மலையப்பனுக்கு யோகாசனங்கள் பழகுவது மிகவும் உற்சாகமாக இருந்தது. அவன் சொன்னான் :

"மாஸ்டர்! என் உள்உறுப்புக்களுடன் நேரிலே பேசி ஆணையிடுவதுபோல் இருக்கிறது ...ஆனால் உலகத்தைத் தலைகீழாகப் பார்க்கச் செய்யும் சிரசாசனம் மட்டும் எனக்கு வேண்டாம்"

"உனது விருப்பம் மலையப்பா" என்பது போல் அன்புமணி தலை அசைத்துச் சிரித்தார்.

மலையப்பனும் அன்புமணியும் தரையில் ஜமக்காளம் விரித்து உணவருந்திக்கொண்டிருந்தனர். இட்லியும், பாலும், பழமும், பருப்பும் அவர்கள் முன் படைக்கப்பட்டிருந்தன. அன்று அந்தியில் தொலஸ்பாகே தாமரைவல்லித் தேயிலைத்தோட்டத்திலே ஒரு முக்கிய கூட்டம் இருந்தது. உணவருந்திய படியே அன்றுதான் பேசவிருந்த விஷயத்தைப் பற்றிச் சிந்தித்தார் அன்புமணி. பாலை வெள்ளிக் கிண்ணத்தில் சுவைத்தபடி, அதற்குக் கற்கண்டுச் சுவையும் கலந்தது போல் ஒரு பாட்டுப் பாடினார் :

**உலகெலாம் அன்பு மேவி ஒருகுல மாக வாழ்க.**
**கலகமுந் துயரும் வீழ்க ! கருணையும் களிப்பும் பொங்க!**
**நலமெலாம் விளைக, ஞான ஞாயிறு பொலிய நாளும்,**
**இலகுவாய் சுத்த ஜோதி, இறைவனே போற்றி ! போற்றி!**

"மலையப்பா ! சுத்தானந்தரின் இந்தக் கருத்தைவைத்து, நான் இன்று பேசவிருக்கிறேன்" என்றார் அன்புமணி.

அவர் தொடர்ந்து கேட்டார் :

"நீ எதைப் பற்றியோ சிந்தித்துக் கவலைப்படுகிறாயல்லவா?"

மலையப்பனின் ஒரு கையில் உரித்த வாழைப்பழமும், மற்றக் கையில் விரித்த கிராமியப் பாடற் புத்தகமும் இருந்தன. ஆனால் அவனது சிந்தனையில் கவலையின் சாயல் இருக்கவே செய்தது.

"மாஸ்டர் ! இந்தப் பாடல் என் மனத்தைக் கிளறிவிட்டது" என்று புத்தகத்தை அன்புமணியிடம் கொடுத்தான் :

**வாடாத பூவே மருக் கொழுந்தே யுன்னை**
**வாசலிலே வரக் காணேனடி !**
**தேடாத நாளிலே தேடித்தேடி நொந்தேன்**
**தேன் மொழியே முத்து விராயி !**

அவனுடைய வீராயியும் முத்து வீராயிதான். யாரோ ஒரு கவிஞன் எழுதிவிட்டுப் போன பாடல் இது. ஆனால் பேரும் கருத்தும் எவ்வளவு பொருத்தமாக அமைந்து அவனது மனமேடையில் நாடகம் நடத்துகின்றன !

"ஓ ! வீராயியைப் பற்றிய யோசனையோ ? மலையப்பா கொஞ்சம் பொறுத்திரு. காலம் விரைவில் வரும். வஞ்சகக் குமிழிவிட்டுக் கொதித்த மாணிக்கமலை இப்போதுதான் ஆறிக் கொண்டிருக்கிறது. இன்னும் அணுகமுடியாத சூடு இருக்கிறது."

"மாஸ்டர் ! வீராயி இளகிய உள்ளமுடையவள். ஆனால் வஞ்சனைக்கு இடம் கொடுக்கமாட்டாள். சூழ்ச்சியைக் கண்டு குமுறுவாள். அவளை ஆற்ற இப்போது வள்ளி இல்லை அவள் தன்னை அழைத்துக் கொண்டு எங்கேயாவது போய்விடும்படி வேண்டினாள். அவளைத் தோட்டத்துச் சின்னத்துரை மகாராஜனுக்குக் கட்டிக் கொடுக்க டிஸ்பென்சர் பகி திட்டம் போட்டு ஒழுங்குகள் செய்கிறாராம்"

அன்புமணி யோசித்தபடியே இருந்தார். தோட்டத்தின் சின்னத்துரையையும் பதியையும் ஒரு தொழிலாளி எதிர்ப்ப தென்றால், அது இலேசான காரியமா?

மலையப்பனுக்கு, ஒலிப்பதிவும் ஒளிப்பதிவும் செய்யப் பட்டதுபோல் ஒரு நிகழ்ச்சித் தொடர் ஞாபகம் வந்தது. ஒரு மாதத்திற்கு முன் மாணிக்க மலையில் அவன் கடைசியாகக் கண்ட வீராயி, மாமா ரெங்கசாமிக் கங்காணி, பதி முதலியோர் அவன் கண்முன்னே நின்றனர்.

'அத்தான்! நீங்க என்னை விட்டுட்டா போறீங்க?' என்று கேட்டாள் வீராயி.

'இல்லை வீராயி! நான் உன்னை என்றுமே பிரியமாட் டேன். ஆனால் இப்போதைக்கு இந்தத் தோட்டத்தை விட் டுப் போகிறேன். இந்தத் தோட்டத்திலே அநியாயமும் துரோக உணர்ச்சியும் ஆட்சி செய்கின்றன. அந்தப் பிசாசுகள் எங்கள் வள்ளியை எங்களிடமிருந்து பிரித்துவிட்டன.'

வீராயி அழுதுகொண்டு நின்றாள். மலையப்பன் தொடர்ந்து சொன்னான்:

'வள்ளி பாக்கியசாலி. கொடியவர்கள் மத்தியிலிருந்து விடுதலை பெற்றுவிட்டாள்.'

'அத்தான்! நீங்களும் என்னை விட்டுட்டுப் போனா எனக்கு யார் இருக்கிறாங்க?' என்று கேட்டாள் வீராயி. 'அத்தான்! வள்ளி இல்லாமல் நான் இறக்கை இரண்டும் வெட்டப்பட்ட புறாக்குஞ்சு. மீனாட்சிப் பாட்டிக்கும் நோய் கூடிவிட்டது. தினமும் இருமி இருமிக் கக்கிறா. வள்ளி யோட அப்பாவும் அம்மாவும் அண்டைக்குத் தொடக்கம் பித்துப் பிடிச்சவங்க போலத் திரியுறாங்க. சிதம்பரம் மாமா வுக்கு வேலையும் போய்விட்டது.

மலையப்பன் சொன்னான்:

'வீராயி! எனக்கு எல்லாம் தெரியும். நான் யோசித்துக்கொண்டுதான் இருக்கிறேன். யூனியன் மூலம் பேசிப் பலருக்கு வேலை வாங்கிக் கொடுத்துவிட்டேன். வள்ளியின் அப்பாவுக்கு வேலை கொடுப்பதைப் பதி எதிர்க்கிறார். வீராயி, நான் இனி நாவலப்பிட்டியில் முழு நேரமும் யூனியன் வேலை செய்யப் போகிறேன்.'

சிறிது நேர மௌனத்தின்பின் மலையப்பன் கேட்டான்:

'வீராயி! உனக்கு ஒரு விஷயம் தெரியுமா?'

துருவநட்சத்திரத்தைப் பார்ப்பது போல் மலையப்பனின் கண்களைப் பார்த்தாள் வீராயி. அவன் விழி வழியே சிந்திக்கும் அவன் மூளையைக் கண்டாளோ என்னவோ. வீராயி சிரிப்போசையோடு, 'அத்தான்! நீங்க ஒரு வாரப் பத்திரிகை நடத்தப்போறீங்களாமே. சரிதானே?' என்று கேட்டாள்

'அடே, அது கூடத் தெரிஞ்சு வைச்சிருக்கிறியா?' என்றவாறு வீராயியின் சிலும்பிய கூந்தலைச் செல்லமாக ஒழுங்கு செய்தான் மலையப்பன். அவன் நெஞ்சில் தன் முகத்தைப் புதைத்து இதயத்திடம் முறையிடுவது போல் அவள் கேட்டாள்:

'என் செல்ல அத்தான், நீங்க என்னையும் கூட்டிக்கிட்டுப் போய்விடுங்க. எனக்கு இங்கு இருக்கமுடியலை.'

'வீராயி! நாம் எங்கே போவது?' என்று கேட்டான் மலையப்பன். 'வீராயி! இந்தத் தோட்டத்தில் இருக்கு மட்டும் நாங்கள் உரிமையற்றவர்களானாலும் கள்வர்களல்ல. தோட்டத்துக்கு வெளியிலோ நாம் கள்ளத்தோணிகள். இந்த நாட்டின் ஓரங்களில் கன்னக்கோல் வைத்தவர்கள்.' வீராயிக்கு இதைக் கேட்கப் பயமாக இருந்தது. நன்றாக விளங்காமலும் இருந்தது.

மலையப்பன் தொடர்ந்து சொன்னான்: 'நீ இங்கேயே இரு. முக்கியமான யூனியன் வேலைகளும் பத்திரிகையின் ஆரம்ப வேலைகளும் முடிந்ததும் ஓடி வருகிறேன்.........'

'நீங்க வருவதற்கு முன்னம் நான் அந்தப் பொம்பளைக் கள்ளன் கையிலே செத்துடுவேன்' என்று வெடுக்கென வார்த்தைகளால் வழி மறித்தாள் வீராயி.

அந்த நேரத்தில் தோட்டத்தைச் சுற்றிப் பார்வையிட்டுக்கொண்டு வந்த மகாராஜனும், பதியும், ரெங்கசாமியும் ஆச்சரியம், அவசரம், கடுமை கலந்த பார்வையுடன் மலையப்பனை நோக்கினர். மலையப்பனுக்குத தோட்டத்தை விட்டு வெளியேறும் ஒரே வழிதான் அப்போது தெரிந்தது. வீராயியிடமிருந்து சோக விடை பெற்றுக்கொண்டான்.

மலையப்பனின் சிந்தனை கலைந்தது. அன்புமணியும் யோசனையை உதறிவிட்டுப் பேசினர்.

"மலையப்பா! அன்பும் உண்மையும் வெல்லும். சில சோதனைகள் வரலாம். ஆனால், அறிவும் பொறுமையும் அந்த வெற்றிக்கு உதவும்."

"மாஸ்டர்! நானும் அப்படித்தான் நம்பியிருந்தேன். ஆனால் வள்ளியின் மரணத்தை நினைத்தால் மனம் பொறுமையாக இருக்க மறுக்கிறது. அன்பு, உண்மை, பொறுமை இவற்றின் திருவுரு நம் கண்முன்னே இறந்ததல்லவா?"

"அல்ல மலையப்பா! அன்பையும் உண்மையையும் அஹிம்சையையும் நிலைநாட்ட உலகில் அவ்வப்போது நடைபெறும் ஒரு தியாக சம்பவம்தான் வள்ளியின் மரணம். இயேசு, சாக்ரட்டீஸ், லிங்கன், காந்தி முதலியோரின் முடிவின் சாயலை நீ வள்ளியின் மறைவில் காணவில்லையா? மனித தெய்வங்கள் மறையும்போது இப்படி அதிர்ச்சி ஏற்படுத்திவிட்டு, இறந்த பின்புதான் தாங்கள் வந்த காரியத்தைச் சாதிக்கிறார்கள். உலகில் வாழ்ந்த நல்ல தலைவர்களுக்கு அப்படியே நடந்தது; இனியும் அப்படியே நடந்துகொண்டிருக்கும்."

மலையப்பன் சிந்தித்துக்கொண்டிருந்தான்.

உலகம் உவப்ப வந்து அவதரித்த உத்தமத் தலைவர்கள் ஏன் கொலை செய்யப்பட்டு மறையவேண்டும்? அன்புமணி ஏன் அப்படி நினைக்கிறார்?

அன்புமணி சொன்னார்:

"மலையப்பா, சிறியவளான வள்ளியின் மறைவு தோட்டத்து மக்களுக்கு ஒரு படிப்பினையாக அமைகிறது."

மலையப்பன் கொத்மலை வீதியில் ஓர் அறையை வாடகைக்கு எடுத்துத் தனது யூனியன் காரியாலயத்தை அங்கு வைத்திருந்தான். அங்கே வேறு ஒரு பலகையும் தொங்கியது. அதில் 'மலை ஓசை காரியாலயம், ஆசிரியர் மலையப்பன்' என்று எழுதப்பட்டிருந்தது.

இத்தக் காரியாலயத்தை அடுத்து ஒரு நகைக் கடை. அங்கே கவிஞர் 'தாகூர்தாசன்' மனேஜராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். அவர் அன்பான பண்பும், பண்பான அன்பும் திருநீற்றையும் சந்தனத்தையும் குங்குமத்தையும் அழகு செய்யும் அறிவு விலாச நெற்றியும், மொழியைத் தேனாக்கும் கவிதை உருப் பேச்சும் மலையப்பனின் உள்ளத்தை அள்ளிக் கொண்டு விட்டன. ஓய்வு கிடைக்கும் நேரங்களிலெல்லாம் அவன் அவருடன் உரையாடுவான். நேரம் இல்லாதபோது அவர் கவிதைகளையே நினைத்துக் கொண்டிருப்பான். ஆனால் நேரிலும் நினைவிலும் அவர் மெல்லிய உருவமும் பொருத்தமில்லாத வாழ்க்கையும் அவனுக்கு வேதனை தான் தந்தன. அவர் மிகவும் கஷ்டப்பட்டு இரவுபகலெனக் கடையின் பங்காளி, முதலாளிக்கு உழைத்துக் கொண்டிருந்தார். சொற்களை இதயத் தராசில் வைத்து நிறுத்துக் கவிதை புனையவேண்டிய பிறவிக் கவிஞர், பொன் நகைகளைச் சிறு தராசில் போட்டு முள்ளைப் பார்த்துக் கொண்டிருந்தார்! நமது பிரபல எழுத்தாளரும் கலைஞரும் வாழ்வதற்காகப் பாத்திரக் கடைகளிலும், புடைவைக் கடைகளிலும், கராஜுகளிலும் தங்கள் நேரத்தைக் கழிப்பது வேதனை தரும் விஷயமல்லவா?

'தொழிலுக்குப் பெருமை உண்டு. ஆனால், ஒருவர் தகுந்த இடத்தில் தனது அறிவுக்கும் ஆற்றலுக்கும் உடல் உள வளர்ச்சிக்கும் ஏற்ப வேலை செய்தால்தான் நன்மை உண்டு.'

மலையப்பன் இப்படியான கருத்துப்படக் கவிஞருடன் பேசுவான்.

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே அந்த நகைக் கடையின் பங்காளி முதலாளி ஒருவர் வருவார்.

'ஐயா வாங்க' என்று அன்பாக வரவேற்பார் தாகூர்தாசன்.

'வாறது சரி. நீர் என்ன மனேச்சர் வேலை செய்கிறீரா அல்லது புத்தகம் எழுதுகிறீரா?'

'புததகங்களை நம்மால் எழுதமுடியுமா? ஏதோ இரவிலே இரண்டொரு கவிதைகள் எழுதுகிறேன். எனது ஆததும திருப்திக்காக. கடையில் வேலைகள் ஒழுங்காக நடைபெறு கின்றன. நல்ல லாபம் வரச் செய்திருக்கிறேன்.'

'கடை இருந்தால், பொருள் இருந்தால் இலாபம் வருந் தானே. என்ன நட்டம் வரவா நாங்கள் கடை போட்ட னுங்கள். நீர் கிழிக்காமலே இலாபம் வரும்.'

'அப்படிச் சொல்லாதேயுங்கோ. இரவு பகலாக வேலை செய்யவேண்டும். நியாயமாகவும் அதே சமயத்தில் வியாபாரம் தெரிந்தும் தொழில் நடத்த வேண்டும்.'

'அடே! எனக்குப் படிப்பிக்கிறாய் என்ன?' என்று உறுமினார் முதலாளி. அதிகார மது அவர் தலைக்கு ஏறியது. அவர் தொடர்ந்து கேட்டார்:

'உதென்ன உன்டை மேசையில ஒரு கதைப்புத்தகம். நீ குழந்தைப் பிள்ளையே?'

'இது உலக நூல் திருக்குறள்' என்றார் தாகூர்தாசன். 'இவர் மலையப்பன், தோட்டத் தொழிலாளருக்கென்று புதி தாக ஒரு பத்திரிகையை ஆரம்பிக்கப் போகிறார். அவர் கேட்ட ஒரு கேள்விக்கு இந்தக் குறளைப் படித்துக்காட்டினேன்.

'நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு'

அவ்வளவுதான்'

'என்ன உபதேசம் செய்யவும் துவங்கிவிட்டாயா, மடையா'

மலையப்பன் எழுந்து விட்டான். அவனால் அந்த வார்த்தைகளைக் கேட்கப் பொறுக்க முடியவில்லை. நகைக் கடை முதலாளியின் கோர 'கொரில்லா' முகத்தில் அறையத் துடித்தான். ஆனால், அதற்கிடையில் கவிஞரைப் பார்த்து விட்டான். அவர் முகத்தில் கோவில்தீபத்தின் அமைதியான ஒளி தெரிந்தது. அத்துடன் கவிஞரின் எதிர்காலத்தைப் பற்றி யோசித்தான் மலையப்பன்.

ஆம், அவர் ஏழை, அவன் ஏழை, தமிழ் ஏழை. யாரும் யாருக்குமே உதவி செய்ய முடியாது. அவரும் அவனும் தமிழும் முதலில் வாழவேண்டுமல்லவா ?

"ஐயா! நீங்கள் இந்தக் கடையிலிருந்து விரைவில் வெளியேற முயற்சி செய்யுங்கள்" என்றான் மலையப்பன். கவிஞருக்கு ஒரு கோவிலோ ஆசிரமமோ தான் சரியான இடமென்று மலையப்பன் எண்ணினான். நகைக்கடை முதலாளி கடையின் மேல்மாடிக்கு ஒரு கயிற்றைப் பிடித்து ஏறினார்.

மலையப்பன் அந்தச் சர்க்கஸ் விளையாட்டைப் பார்த்து விட்டுச் சொன்னான் : "ஐயா! நான் இந்தக் கடைக்கு இனிமேல் வரமாட்டேன். நீங்கள் பெரியவரானாலும் ஓய்வு நேரங்களில் எனது சிறிய இடத்துக்கு வாருங்கள். அங்கே நாம் இலக்கியம் பேசி மகிழ்வோம்."

இந்த இடத்தில் இருந்து இலக்கிய விஷயங்களை அலசி ஆராய்வது, சுடுகாட்டில் கல்யாண ஒப்பந்தம் செய்வதுபோல் தான்.

மலையப்பனுக்கு இப்படியான சிந்தனை விசித்திரச் சிரிப்பை உண்டாக்கியது. கவிஞரும் எழுந்து கைகளைக் கூப்பினார்.

மலையப்பனின் உடற் சூடு தணிந்தது. "ஐயா! நான் சில நாட்களாக வாங்கவிருந்த ஒரு பொருளை வாங்க இன்று வந்தேன். நான் இந்தக் குழப்பத்தை எதிர்பார்க்கவில்லை. குழப்பத்தின் மத்தியிலேதான் எனக்கு நன்மை பிறப்பது நியதிபோலும்."

மலையப்பன், கண்ணாடி அலமாரியிலே நீலப்பட்டு மெத்தையிலே கண் சிமிட்டிக் கொண்டிருந்த சின்னஞ்சிறு தாலியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனுக்கு ஒரு தாலி விரைவில் தேவைப்படப்போகிறது. அதைக் கவிஞரின் கையாலேயே வாங்கினால்......

"ஐயா! இதன் விலை எவ்வளவு?" என்று வினவினான் மலையப்பன்.

கவிஞர் தாலியை நிறுத்துவிட்டு "அறுபது ரூபா கொடுங்க" என்றார்.

பணமும் ரசீதும் கைமாறின.

கவிஞர் தாலியைக் கூப்பிய அவர் கைம்மலர் மொட்டின் இதயத்தினுள் வைத்து, சிறிது நேரம் கண்மூடிப் பிரார்த்தனை செய்தார். பின்பு, மலையப்பன் பாத்திரமாக அமைத்து விட்ட அவன் உள்ளங்கைகளின் மத்தியில் அதை வைத்தார்.

'மலையப்பனுக்கு விரைவில் கல்யாணம் நடைபெறவேண்டும்.' அதுதான் அவருடைய உள்ளத்தின் வேண்டுகோள்.

மலையப்பன் தனது பர்சின் பெரிய அறைக்குள் அந்தத் தாலியை மெல்லிய கடுதாசியில் சுற்றி வைத்தான். பர்சைச் சட்டைப் பையில் நழுவவிட்டுத் தட்டிக் கொடுத்தான்.

தாலி அவன் இதயத்தோடு ஒட்டி உறவாடியது.

# 21

அன்று இரவு, மலையப்பன் தனது 'மலை ஓசை' என்ற பத்திரிகைக்கு ஆசிரியத் தலையங்கம் எழுதிவிட்டுப் படுக்கச் சென்றான். அன்புமணி அவனுக்கு ஆத்மஜோதியிலிருந்த ஒரு கட்டிலைக் கொடுத்தார். கட்டிலுக்குப் பக்கத்தில் ஒரு மேசையும் கதிரையும் இருந்தன. இவற்றை 'மலை ஓசை'யைப் பிரசுரிக்கப் போகும் ஜனுப் ஜகுபர் பரிசளித்திருந்தார். மேசை மீது தாகூர்தாசனின் அன்பளிப்புக்களான சில புத்தகங்களும் ஆங்கில-தமிழ் அகராதியும் காணப்பட்டன. மலையப்பன் மாணிக்க மலையிலிருந்து தனது புத்தகங்களைக் கொண்டுவர வில்லை. அவற்றை மேசைமீது வைக்க முடியாது. அங்கிருக் கும் சிறு அலமாரியையும் கொண்டுவரவேண்டும்.

மலையப்பனுக்கு அன்றிரவு நித்திரை வரவில்லை. கட்டி லில் படுத்திருந்தபடியே மேசை விளக்கின் விசையைத் தட்டி விட்டுத் தனது ஆசிரியத் தலையங்கத்தை எடுத்து வாசித்தான். அது ஒரு நல்ல மேடைப் பேச்சின் கையெழுத்துப் பிரதி போலவே இருந்தது.

'பரவாயில்லை, சீரியசாக நான் எழுதிய முதற் கட்டுரை இதுதானே. போகப் போக எனக்கென்று ஒரு நல்ல எழுத்து நடையை வளர்க்கலாம்' என்று யோசித்தான் மலையப்பன். அந்தக் கட்டுரைக்கு 'ஒற்றுமை' என்ற தலைப்பு மிகவும் பொருத்தமாக இருந்தது. அவனால் அதை உரக்க வாசிக்காமல் இருக்க முடியவில்லை.

இரண்டாம் காட்சி முடிந்து படரசிகர்கள் வீதியில் போய்க் கொண்டிருந்தனர்.

"அண்ணு! நீ இன்னும் தூங்கலையா?" என்று வெளியிலிருந்து ஒரு குரல் கேட்டது.

"யாரு ஆப்டீனு?" என்று கேட்டவாறு அவனுடைய அறையின் முன் அடைப்பின் ஒரு பலகையை அகற்றினுன் மலையப்பன்.

வாசலில் ஆப்டீன், சந்தனப் பிச்சை, மகாலிங்கம் முதலியோர் நின்றனர்.

"படம் பார்த்திட்டுப் போகிறோம்" என்றுன் ஆப்டீன்.

சந்தனப் பிச்சை பலகைகளின் இடைவெளியூடாகப் பார்த்து விட்டுக் கேட்டான்: "என்ன இரவிரவாகப் படிச்சுக் கொண்டு இருக்கிறியா அண்ணே? 'மலை ஓசை' ஆசிரியருக்கு ரொம்ப வேலை இருக்கலாமல்லவா?"

மலையப்பன் சிரித்துவிட்டு, "ஹோட்டலுக்குப் போய் காப்பி சாப்பிடுவோமா?" என்று கேட்டான்.

தலையையும் கழுத்தையும் ஒரு மப்ளரால் சுற்றிக் கொண்டு மலையப்பன் வெளியே வந்ததும், ஆப்டீன் பலகையை எடுத்து அறையின் வாசலை அடைத்தான்.

அப்போது நாவலப்பிட்டிப் புகையிரத நிலையத்தில் நள்ளிரவு வண்டி ஒன்று வந்து நின்றது. சந்தைக்கு முன்னுல் நின்ற வாடகைக் கார்கள் புகையிரத நிலையத்தை நோக்கி ஓடின.

"வாங்க, ஸ்டேசனிலை வந்து இறங்கிறவங்களைப் பார்த்திட்டுப் போவோம்" என்றுன் சந்தனப் பிச்சை.

"அண்ணே! சந்தனத்துக்கு இரவிரவாக ஊர் சுத்துறது ரொம்பப் பிடிக்கும்" என்றுன் மகாலிங்கம்.

"அண்ணே! பிறந்த மண்ணை இரசித்து நேசிக்க வேண்டுமானால், சனசந்தடி இல்லாத இரவிலே உலாவவேண்டும்" என்று தனது சிந்தனையின் குறிக்கோளை விளக்கினான் சந்தனப் பிச்சை. எல்லோரும் அதைக் கேட்டுச் சிரித்தனர்.

சிரிக்கவேண்டிய சிந்தனையா அது?

'பிறந்த மண்' என்பது மலையப்பனுக்கு உணர்ச்சியூட்டும் ஓர் அன்புச் சொல் இணைப்பாகும். சந்தனம் கூறியதில் இலகுவில் விளங்காத உண்மை இருப்பதை மலையப்பன் உணர்ந்தான். அவன் கூட மாணிக்கமலைத் தோட்டத்தை நள்ளிரவுகளில் அளந்த ஒருவன்தான். கரிய பனிப் போர்வைகளைப் போர்த்த தேயிலைச் செல்விகளை நடு நிசியில் தீண்டி ஜில்லென்ற தன் விரல்களை உதறிக் கம்பளிக் கோட்டுப் பைகளுக்குள் புதைத்திருக்கிறான். நிழல்போல் தோன்றிய தோட்டக் கோவிலின் முன் நின்று கரிய பிள்ளையாரையும் சூலத்தையும் பார்த்திருக்கிறான். இருளில் லயங்களும், பிள்ளை மடுவமும் அவ்வளவு பயங்கர வறுமையுடன் தோன்றமாட்டா.

ஹோட்டலில் காப்பி அருந்தும்போது ஆப்டீன் கேட்டான்: "அண்ணே, மலை ஓசை எப்போது வெளிவரும்?"

"நாளைக்கு" என்று விடையளித்தான் மலையப்பன். "என்னுடைய ஆசிரியத் தலையங்கந்தான் பாக்கி. நாளை அந்தியில் அச்சுவேலை முடிவடையும். நான் உங்களுக்குக் கடிதம் போட்டிருக்கிறேன். நாளை வரும்"

"ஆம் அண்ணே, மலை ஓசையின் முதல் இதழைச் சிவனொளிபாத மலையின் உச்சியிலேயே வெளியிடப் போகிறாயாமே?" என்று கேட்டான் மகாலிங்கம்.

"ஆமா தம்பி! நாளை அந்தியிலே சில பிரதிகளை எடுத்துக்கொண்டு நாம் புறப்படுகிறோம்."

பார்க்கப் போனால் எவ்வளவு அபூர்வமான யோசனை. மலை ஓசையின் முதல் ஓசை உண்மையாக மலையின் ஓசையாகவே இருக்கப் போகிறது!

மலையப்பனுடன் காப்பியை இரசித்துக்கொண்டிருந்த இலக்கிய நண்பர்கள் மூவரும் சிவனொளிபாத மலையில் அவனைச் சந்திப்பதாகக் கூறினார்கள்.

ஆப்டீன் சொன்னான்: "அண்ணே! நான் மலை ஓசைக்குச் சந்தா நேயராக இருபது பேரைச் சேர்த்து விட்டேன்."

"நல்லது ஆப்டீன். எங்கள் தோட்டச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் சந்தா தரப்போகிறார்கள். மலை ஓசையின் முதல் இதழே பத்தாயிரம் அடிபடுகிறது."

மகாலிங்கம் சொன்னான்: "அண்ணே! சந்தனப் பிச்சை நூறு பேரைச் சேர்த்து விட்டான். அவர்களில் பெரும் பாலானோர் பாடசாலை ஆசிரியர்கள்."

சந்தனப் பிச்சை சிரித்துவிட்டுத் தான் எழுதிய ஓர் உருவகக் கதையைத் தன் களிசான் பையிலிருந்து எடுத்து வாசித்தான்.

"கவிஞரிடம் காட்டிச் சில திருத்தங்களைச் செய்துவிட்டு மலை ஓசையின் மூன்றாம் இதழுக்குத் தா" என்றான் மலையப்பன்.

உருவகக் கதை மிக நன்றாகத்தான் இருந்தது. ஆனால் ஒருவித தேவையுமில்லாமல் தொழிலாளரின் கடவுட் கொள்கைகளைச் சந்தனம் அதில் தாக்கியிருந்தான். தாகூர்தாசனின் கையில் அந்தத் தவறு நீக்கப்படும் என்று மலையப்பன் நம்பினான். அவர்களிடமிருந்து விடை பெறுவதற்குமுன் மலையப்பன் சந்தனப் பிச்சையைப் பார்த்துக் கேட்டான்:

"படிக்காத தாய் வயிற்றில் மேதாவிகள் பிறந்திருக்கிறார்கள். பழைமையின் கருப்பையிலே புதுமை உருவாகுமல்லவா?"

சிறிது யோசித்துவிட்டு அவன் தொடர்ந்து சொன்னான். "சமுதாயத்தில் வேரூன்றி நிலைத்துவிட்ட கொள்கைகளை எல்லாம் அறுத்துவிட்டுப் புதிய கருத்துக்களை ஒட்டு வேலை செய்ய முடியாது. கிளைகளிலேதான் ஒட்டு வேலை செய்ய முடியும்; மரத்தின் வேரிலல்ல."

மலையப்பன் 'மலை ஓசை'யின் மாதிரிப்பிரதி ஒன்றில் திருத்தங்கள் செய்துகொண்டிருந்தான். அதன் அமைப்பு அவனுக்கு மிகவும் பிடித்துக்கொண்டது. அவ்விடத்தில் ஜனாப் ஜகுபர் வந்து "தம்பி! பத்திரிகையின் பெயரைச் சிவப்பில் போடுவோமா?" என்று கேட்டார்.

அவர் முகத்தைப்பார்த்து "ஓ! நன்றாயிருக்குமே" என்றான் மலையப்பன்.

"தொழிலாளரின் வாழ்க்கைப் பிரச்சினைக்கே நாம் முதலிடம் கொடுக்கப் போவதால், இரத்தநிறம் பொருத்தந் தானே" என்றார் ஜகுபர்.

மலையப்பன் சிரித்துவிட்டுச் சொன்னான்: "ஐயா! உருத்திராட்சம் அணிந்தவர்கள் எல்லோரும் துறவிகள் அல்ல. அதேபோலச் சிவப்புப் போட்டாப் போலச் சமூகப் பொது நலம், தொழிலாளர் பிரச்சினை இவற்றைப் புரிந்துகொண்டது என்று அர்த்தமல்ல. இதயமில்லாதவர்களிடம் சிவப்பு வெறும் ஃபாஷன் ஆகவும் மாறலாம்."

மலையப்பன் தொடர்ந்து கூறினான்: "ஜகுபர் ஐயா! நமது நாட்டிலே தொழிலாள மக்களுக்குத் தலைவர்கள் என்று கூறுபவர்கள் மத்தியிலே அரசியல் கிளிப்பிள்ளைகள்தாம் அதிகம்."

"ஆமா, யாராவது சொன்னதைக் கேட்டுப் பேசுபவர்கள் தானே" என்றார் ஜகுபர்.

"அவர்களால் கூட ஆபத்தில்லை. அவர்கள் சிந்திக்காமல் பேசுபவர்கள்" என்றான் மலையப்பன்.

"ஆனால் நான் குறிப்பிடுபவர்கள், நெஞ்சிலும் உடலினும் ஒரு நிறமுள்ளவர்கள். பச்சைக் கிளியைப் போல் அவர்கள் உதட்டில் மட்டும் சிவப்பு நிறம். உதட்டால் சிவப்புப் பேசினால் போதுமா?"

மலையப்பனின் அரசியல் கிளிப்பிள்ளைக் கருத்தை முற்றாக விளங்கியதும், ஜகுபர் உரக்கச் சிரித்தார். அச்சுக்கூட்டச் சிப்பந்திகள், அவருடன் சேர்ந்து, அவர்கள் வேலை செய்த இடங்களில் நின்றபடியே சிரித்தனர்.

மலையப்பன் மாதிரிப் பிரதியைத் தொடர்ந்து படித்தான். தாகூர்தாசனின் 'தொழிலாளர் கீதமும்' மயில்வாகனத்தின் ஆசிச் செய்தியும் முதலாம் பக்கத்தில் அச்சேறியிருந்தன. 'குரு' என்ற புனைபெயருள் மறைந்துகொண்டு பத்திரிகையில் 'அரசியல் வகுப்பு' என்ற பகுதியை ஆரம்பித்திருந்தான் மலையப்பன். டீ மேக்கரின் மனைவி ஜெயவாணி வல்லிபுரம், யாழ்ப்பாணத்தில் குடும்பக் கலை கற்பிக்கும் ஓர் ஆசிரியை. மாதர் பகுதியில் 'நீ அழகாக இருக்க... ...' என்ற ஒரு தொடர் கட்டுரையில் முதலாவதாகத் தோட்டத் தங்கையருக்கு ஆடை அலங்காரத்தைப் பற்றி எழுதியிருந்தார். நாவலப்பிட்டியின் எஸ்டேட் சுகாதார வைத்தியர் 'சுகாதாரப் பகுதியில்' அத்தியாவசியமான சுகாதார உண்மைகளைத் தந்திருந்தார். 'லயங்களில் சுகாதாரம், பிள்ளைமடுவத்தில் குழந்தைகளின் பராமரிப்பு, நல்ல உணவு, வீட்டு விபத்துக்கள் ஆதியன இந்தப் பகுதியில் இடம்பெறும்' என்று மலையப்பன் குறிப்புப் போட்டிருந்தான்.

நாவலப்பிட்டி கொத்மலை வீதியில் கதிரேசன் கோவிலுக்கு முன்னால் மூன்று வாடகைக் கார்கள் திருநீறு சந்தனம் பூசப்பட்டு வரிசையாக நின்றன. இதழ் அவிழ்த்துச் சிரிப்பு முகத்தைக் காட்டும் பொன்னிறத் தென்னம் பாளைகள் கார்களுக்கு முன்னால் கட்டப்பட்டிருந்தன. ஒரு காரில் புத்த சமயத்தினரின் பலவர்ணக்கொடி ஒன்று பறந்தது.

முதலாவதாக நின்ற காரில் அன்புமணி, தாகூர்தாசன், ஜனாப் ஜகுபர், எதிர்வீரசிங்கம் முதலியோர் ஏறினர். அடுத்த காரில், மலையப்பன் டிக்கோயா ஆஸ்பத்திரியின் அட்டன்டன்ட் ரணசிங்கா, மயில்வாகனம் முதலியோர் இருந்தனர். மூன்றாவது

காரில் மலையப்பனின் யூனியனைச் சேர்ந்த இளைஞர்களிற் சிலர் காணப்பட்டார்கள். முதல் காரின் டிக்கியில் மலை ஓசையின் ஆயிரம் பிரதிகள் இருந்தன. கார்கள் தங்கள் பிரயாணத்தை ஆரம்பிக்க முன் ஒரு குரல் கேட்டது.

"மலையப்பா! கோவில் முன்னுக்கா நிக்கிறே. நீ வாழ்க. கடவுளே இன்னைக்கும் சுகமாக இருக்க வைச்சியே. இந்த மலையப்பனையும் உன் கடைக்கண்ணால் பார்த்துக்கொள்."

"சாமி, சிவனொளிபாதத்திற்குப் போகிறோம்" என்றான் மலையப்பன்.

"யாரு தம்பி அது? தெரிஞ்ச குரலாக இருக்கு"

"நான்தான் சாமி, மலையப்பன் தோட்டத் தொழிலாளி"

பண்டாரி குழந்தையைப் போல் கைதட்டிச் சிரித்தான்.

மலையப்பன் தொடர்ந்து சொன்னான்: "சாமி நான் இப்போது நாவலப்பிட்டியில்தான் இருக்கிறேன். விரைவில் நான் உனக்கு ஒரு நிரந்தர வேலை தரப்போகிறேன்."

"எனக்கா தம்பி, இந்தக் குருடனுக்கா?"

"ஆமா சாமி, டவுணிலே ஓர் இடத்தில் இருந்து என்னுடைய பத்திரிகைகளை விற்றுத் தரப்போகிறாய். நீ என்னுடனேயே இருந்துகொள்ளலாம்."

பண்டாரிக்குக் கண்களிலே ஒளி வந்ததுபோல் இருந்தது.

"தம்பி, நீ வாழ வேண்டும்" என்று ஆசீர்வதித்துவிட்டு நடந்தான்.

அந்த நடையிலேதான் எவ்வளவு தன்மான வேகம்! அவன் இனிப் பிச்சைக்காரன் இல்லை அல்லவா?

மஸ்கெலியாவில் நல்ல தண்ணீர் இறக்கத்தில் மலையப்பனின் கார்கள் வந்து நின்றன. இலங்கையின் பல பாகங்களிலிருந்து வந்தவர்களின் கார்கள் அங்கு நிறுத்தப்பட்

டிருந்தன. தோட்டத் தொழிலாளரில் பெரும்பாலானோர் நடையிலேயே வந்தனர். ஒரே நோக்கம் பல மொழிகளில் ஒலியானதுபோல் எல்லா மதத்தினரும் சாதியினரும் ஆரவாரம் செய்தனர்.

அரோஹரா! அரோஹரா!!

கருணைவாய்! கருணைவாய்!!

அல்லாஹு அக்பர்!!

நல்ல தண்ணீர் இறக்கத்திலிருந்து சாமிமடம் வரை சுமார் அரை மைல் தூரம் இலேசான ஏற்றம். அதன்பின்பு ஒரே செங்குத்தான பாறைகள். வளைந்து வளைந்து ஏறும் பாதை. ஏற ஏற உயரும் பாதை. உடலைப் பார்க்க உள்ளத்தைச் சோதிக்கும் பிரயாணந்தான்! ஏதோ ஒன்றின் அதீத சக்தி எல்லோரையும் மேலே இழுத்துக்கொண்டே இருந்தது. மலையப்பன் குழுவினர் 'மலை ஓசை'க் கட்டுக்களைக் கையிலேந்தி ஒற்றுமை, அன்பு, தொண்டு முதலியவற்றை மனத்தில் தாங்கி ஏறினர். ஏறிக்கொண்டிருந்தனர்.

மலையிலிருந்து கீழே பார்த்தால் ஒரே இருட்டு விரிப்பு. அதில் பல மைல் வட்டாரத்தில் தொட்டம் தொட்டமாக மின்சார நட்சத்திரங்கள் கண்சிமிட்டின. மேலே உண்மையான நட்சத்திரங்கள் வானில் பதிந்து மினுக்மினுக்கென ஒளி வீசின. நடுவிலே யாத்திரிகர்கள் அந்தரத்தில் தொங்கும் ஒரு தனி உலகில், தங்கள் சொந்த உலகை மறந்து முன்னேறிக் கொண்டிருந்தனர். மலையப்பனும் அவன் தோழர்களும் மேலே பார்த்தனர். கோவில் தெரிந்தது. மணிஓசை கேட்டது. யாரோ அவர்களை மேலே தள்ளினார்கள். விரைந்து ஏறினர். பனி மூச்சு மேலும் கீழும் வாங்கி ஒரு வித வேதனை தந்தது. அவதி துடித்தது. ஆனால், விளைவை நினைக்க இன்பமாக இருந்தது.

மலையின் உச்சி புதுமையான ஓர் உலகம்தான். துன்பம் கவலை அவா இவற்றின் ஈர்ப்பு அங்கு இருக்கவில்லை. உடல் நூலாகி உள்ளம் மாத்திரம் அங்கு கோவில் வலம் வந்தது போல் ஒருவித உணர்ச்சி.

வானிலே ஒரு மம்மர் நிலை. அதைப் பார்ப்போர் மனத்திலும் கனவின் மயக்கம். கனவு நீங்கும் நனவு நிலையில் காலையின் விடிவு வடிவாக இருந்தது. காலைக் கதிரவன் செந்நிறத் தீயில் காய்ச்சப்பட்ட வெள்ளிக் காசுபோல் உமிழப்பட்டான். தீச்சிவப்பாக இருந்தது, பின்பு தங்கம் போலாகி, மேலே வரும்போது வெள்ளித் தகடெனப் பிரகாசித்தான். ஒளிக் கதிர்கள் எல்லாத் திசைகளிலும் ஊடுருவிச் சென்றன. சிவ ஞெளிபாத மலையைத் தாக்கிய கதிர்கள் மலையைச் சரித்து மேற்குப் பக்கத்திலே அகண்ட மலை, நீல வானவெளியில் பிரம்மாண்டமான நிழலாக விழச்செய்தன. வெறும் நிழல்! ஆனால், அந்த அலங்காரத்தை, தத்துவத்தை, பரிமாணத்தை வர்ணிக்க அல்லது விளக்கச் சொற்கள்? ஆம், சொற்கள், புதிதாக மொழிகளில் தோன்ற வேண்டும்!

அன்புமணி சொன்னார்: "மலையப்பா! நாம் கீழே இருந்தபோது மலைதெரிந்தது; நிழல் தெரியவில்லை. இப்போது மேலே நிற்கும்போது நிழல் தெரிகிறது; மலை தெரியவில்லை."

மலையப்பன் அவரைப் பார்த்துக்கொண்டு நின்றான். அன்புமணி தொடர்ந்து சொன்னார்: "ஒன்று நமது கண்களுக்குப் புலப்படவில்லை என்றால் அது இல்லை என்று அர்த்தமல்ல. பரம் பொருளும் அப்படித்தான்."

மலையப்பன் எதையோ யோசித்துக்கொண்டு நின்றான் 'மலை ஓசை'யின் பிரதிகள் அவ்விடத்தில் கொடுபட்டன.

'நாட்டின் ஒற்றுமைக்கும் அதன் வளர்ச்சிக்கும் 'மலை ஓசை' புனிதப் பணி செய்யும். நேர்மை, தூய்மை, வாய்மை இவற்றிற்காகவே அவன் தனது பேனவை அர்ப்பணிப்பான்'

மலையப்பனின் மனம் இப்படித்தான் சத்தியப் பிரமாணம் செய்திருக்கவேண்டும்.

'மலை ஓசை' கோஷ்டியினர் மிக உற்சாகத்துடன் இறங்கி, வழியில் சாமிமடத்தை அடைந்தனர். அங்கே அரசாங்கத்தினரின் தற்காலிக டிஸ்பென்சரி இருந்தது. மஸ்கேலியா ஆஸ்பத்திரியைச் சேர்ந்த ஓர் அப்போதிக்கரி அந்த டிஸ்பென்சரியில், சிவனொளிபாத மலை யாத்திரிக சீசன் போது வேலை செய்வார். அந்த நேரத்தில் அங்கு இருந்தவர் டிஸ்பென்சர் பதியின் சிநேகிதர். எதிர்வீரசிங்கம் எல்லோரையும் அழைத்துக்கொண்டு சிறிது இளைப்பாறிச் செல்வதற்காக டிஸ்பென்சரிக்குச் சென்றான். அங்கே அப்போதிக்கரியும் ஒரு சுகாதாரப் பரிசோதகரும் கல்லோயா ஸ்பெஷல் சாராயம் அருந்திக் கொண்டிருந்தனர். எதிர்வீரசிங்கம் அவனுடன் வந்தவர்களைத் தனது நண்பர்கள் என்று அறிமுகப்படுத்தினான்.

"இன்று உங்களுக்கு ஒரு கல்யாணம் இருக்கிறது போல" தற்செயலாக ஒரு கேள்வியை முடியாத வசனமாக்கினார் அப்போதிக்கரி.

"கல்யாணமா?" எதிர்வீரசிங்கம் சொல்லைக் கேள்வியாக்கினான்.

"ஏன் உமக்குத் தெரியாதா? உங்கள் அப்பா தான் எனக்கு எழுதியிருக்கிறார்" என்ற அப்போதிக்கரி, தொடர்ந்து சொன்னார் :

"மாணிக்கமலைத் தோட்டச் சின்னத்துரைக்கும் ஒரு கங்காணியின் மகளுக்கும் மஸ்கேலியா ஸ்ரீ சண்முகநாத கோவிலில் இன்று கல்யாணமாம்."

எதிர்வீரசிங்கம் யாருடைய முகத்தையுமே பார்க்க விரும்பவில்லை.

அப்போதிக்கரியிடம் கேட்டு அந்தக் கடிதத்தை வாங்கிப் பார்த்தான். கங்காணியின் பெயரையோ அவன் மகளின் பெயரையோ அதில் காணவில்லை. அதற்கு என்ன அவசியம்?

'மலையப்பன் இனி மாணிக்கமலையில் கால் எடுத்து வைக்க முடியுமா ?'

இப்படி ஒரு வெற்றிக் கேள்வியையும் பதி தனது கடிதத்தில் கேட்டிருந்தார்.

# 22

**ம**லையப்பன் சிவனொளிபாத மலையிலிருந்து இறங்க, அவன் மனப்பாரம் அதிகரித்துக்கொண்டே இருந்தது. மலைவழியே அவன் யாருடனும் பேசவில்லை. அவன் மற்றவர்களின் உரை யாடல்களைக் கேட்டும் கேட்காமலும் வந்து கொண்டிருந்தான்.

தாகூர்தாசன் சொன்னார்: "ஆச்சரியமாக இருக்கிறது. இப்படி ஒரு சிக்கலான கலியாணத்தை இவ்வளவு விரைவில் ஒழுங்குசெய்ய முடியுமா?...வீராயிக்குத் தாலி கட்டப் போகிறவன் மலையப்பன்தான். ஏதோ, என் உள்மனம் அப் படித்தான் சொல்லுகிறது."

"கவிஞரே! நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. மலையப்பன் அநாவசியமாகக் கவலைப்படுகிறான். இருந்து பாருங்கள், ஏதோ அற்புதம் நடக்கத்தான் போகிறது. இது மலையப்பனின் வாழ்க்கையில் ஓர் உச்சநிலை. மலையிலே இந்த விதமான தெய்வ தரிசனம் கிடைத்தது, மலையப்பனுக்கு நன்மை வருவதற்கே அறிகுறி. ஒரு கேடும் வாராது." என் றார் அன்புமணி.

எதிர்வீரசிங்கம் கேட்டான்: "மகாராஜனுக்கும் வீரா யிக்கும் கல்யாணம் இன்று நடக்கப்போகிறது. அது நிச்சய மாகிவிட்ட ஒன்றுதானே?"

அன்புமணி பதிலளித்தார் : "எதிர்! இந்த வாழ்க்கையில் எது நிச்சயம்? நாம் நினைப்பது போல் ஒன்றும் நடப்பதில்லை. டாக்டர் பதி உமது அன்பான தந்தைதான். ஆனால் அவரினும் பெரிய ஒருவர் இருக்கிறார்."

இதுவரை ஒன்றும் பேசாது வந்த சந்தனப்பிச்சை சொன்னான் : "அண்ணே! இந்தக் கல்யாணத்தை நாங்கள் நிறுத்தமுடியும். சரியான நேரத்தில் குழப்பம் உண்டாக்குவோம். மலையப்ப அண்ணு தாலியை அவள் கழுத்திலே கட்டட்டும்."

இதைக் கேட்டதும் மலையப்பனின் முகத்தில் ஒரு பிரேதச் சிரிப்புத் தோன்றியது.

சந்தனப் பிச்சை திருப்பிக் கேட்டான் : "ஆப்டீன்! நான் சொல்வது சரிதானே?"

"சந்தனம்! இதெல்லாம் தமிழ்ச் சினிமாவிலே நடபெறலாம். ஆனல் இது வாழ்க்கை" என்றான் ஆப்டீன்.

மலையப்பனின் அந்தச் சிரிப்பை ஆப்டீன் இரத்தினச் சுருக்கத்தில் வசனமாக்கிவிட்டான். மலையப்பனுக்கு அதில் ஒரு திருப்தி ஏற்பட்டது.

'இது வாழ்க்கை'—உண்மைதானே!

அவன் வாழ்க்கையை அன்புமணி, தாகூர்தாசன் முதலியோர் போல் அமானுஷிக மேலிடத்தில் இருந்தோ, சந்தனப்பிச்சையைப் போல் குழந்தைப்பிள்ளைத் தனமாகவோ பார்க்க முடியுமா?

அவன், தானக நிர்மாணித்த வாழ்க்கையைத் தனது சிந்தனையின் ஆணைப்படி திருப்பினான். கஷ்டங்களும் பிரச்சினைகளும் வந்தன. அவற்றை அலசி ஆராய்ந்து விடை காண, அவனுக்கு அனுபவமும் மனத்திடமும் உதவி செய்தன.

அவன் மனம் ஒரு கேள்வி கேட்டது : 'அன்று வீராயியை அழைத்துக்கொண்டு போயிருந்தால், இந்தக் கொடிய சிக்கல் ஏற்பட்டிருக்குமா ?'

பார்க்கப்போனால், மகாராஜன்-வீராயி கல்யாண ஏற்பாடே முற்றுப் பெற்றிருக்காதல்லவா ?

'வீராயி! நமது தோட்டத்திலே நாங்கள் உரிமையற்றவர்களானாலும் கள்வர்கள் அல்ல. தோட்டத்துக்கு வெளியிலோ நாங்கள் கள்ளத்தோணிகள்.'

இப்படித்தானே அவன் வீராயிக்குக் கூறியிருந்தான். இது கூட மறுக்கமுடியாத உண்மையல்லவா ?

அத்துடன், கல்யாணத்தின் முன், அவர்களின் உரிமையான, முறையான அன்பை வைத்து, சமுதாயத்தின் கற்பனை எப்படியெல்லாம் ஓடியிருக்குமோ !

மலையப்பன், மகாநாட்டைத் தொடர்ந்த குழப்பத்தின் பின் மாணிக்க மலையிலும் இருக்க முடியவில்லை. தவறான குற்றச்சாட்டுகளினால் பல தொழிலாளரின் வேலை பறிபோயிருந்தது. அவர்களுக்கு யூனியன் மூலம் பேசித் திரும்பவும் வேலை வாங்க வேண்டியிருந்தது. எரிந்த பழுதடைந்த லயங்களைப் புதிதாகக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பது அவசர காரியமாயிற்று. மகாநாட்டில் விதைத்த சிந்தனை வித்துக்களைப் பராமரித்து வளர்க்கவும், மாணிக்க மலையின் குழப்பத்தின் விளைவைச் சமாளிக்கவும் ஒரு பத்திரிகையின் அத்தியாவசிய உடனடித் தேவையையும் அவன் உணர்ந்தான். இவற்றின் பின்தான், தன் சொந்த வாழ்வைப் பொறுத்தவரையில் மிக முக்கியமான திருமணத்தை வைக்கத் திட்டம்போட்டிருந்தான்.

'அதில் என்ன தவறு ?'

ஆனால், அவனால் கட்டுப்படுதத முடியாத சக்திகள் வீராயி—மகாராஜன் கல்யாணத்தையே இலக்காக வைத்து ஒரு சில நாட்களால் அவனை முந்திவிட்டன! சிவனொளிபாத

யாத்திரை முடிந்ததும், அவனுக்கும் வீராயிக்கும் கல்யாணப் பதிவு செய்ய அன்புமணி யோசனை கூறியிருந்தார். அன்புமணி, தாகூர்தாசன் இருவர்களின் மேன்மையான அறிவுச் சொற்களால் ரெங்கசாமி மாமாவை இணங்கவைக்க முடியும் என்று மலையப்பன் நம்பி இருந்தான்.

அவனுக்கு மட்டும் நாளும் பொழுதும் ஆசை வீராயியின் பக்கத்திலிருந்து கதை கதையாகக் கேட்க விருப்பமில்லையா ?

துணை வேண்டிய இதயத் தேவைகள் மற்றவர்களைப் போல் அவனுக்கும் எவ்வளவோ இருந்திருக்கின்றன. ஆனால், எடுத்துக்கொண்ட பொதுக் காரியங்களுக்காகத் தனது சொந்தத் தேவைகளைச் சிறிது ஒத்தி வைக்க நினைத்தான்.

'அது பெரும் குற்றமாகுமா ?'

வீராயியை நினைக்க அவனுக்கு மனத்தில் தடுமாற்றம் ஏற்பட்டது. உண்மையைக் கூறினால், அவனுக்கு அவளின் எதிர்காலத்தைப்பற்றி நினைக்கவே முடியவில்லை. மகாராஜன் அழகுப் பொருள்களைச் சேகரிப்பவன். அவளிடம் தோட்டப் பெண் உருவில் ஒரு சிகரெட் சாம்பல் படிக்கம் உண்டாம். இனி, அவனுக்கு வீராயியும் அப்படி ஒன்றுதானே!

மலை அடி வாரத்திற்கு வந்ததும், மலையப்பன் கோஷ்டியினர் ஒரு தேநீர்க் கடைக்குள் புகுந்தனர். எல்லோரும் ஒரு கிளாஸ் வெறுங்காப்பி அருந்தினர்.

மலையிலிருந்து அவர்களின் பின்னால் இறங்கிய சிலரும் அந்தக் கடைக்கு வந்தனர். அவர்களில் ஒருவன் சர்வகலா சாலை மாணவன். அவன் எதிர்வீரசிங்கத்தைக் கண்டதும் ஆச்சரியத்துடன் கேட்டான் :

"என்ன எதிர், இன்று உங்கள் தகப்பனாரின் ஒப்பரேஷனல்லவா ?"

பதிக்குக் கால்புண் பெருகி நீரிழிவு இழையச் சிதைவு ஏற்பட்டிருக்கிறது. அந்தக் காலை முழங்காலுக்குச் சற்றுக் கீழே வெட்டி எடுப்பதுதான் உயிரைப் பாதுகாக்க ஒரே வழி. நேற்று இரவு அவரைக் கண்டி ஆஸ்பத்திரியில் சேர்த்ததும், இன்று காலை ஒப்பரேஷன் என்று கூறிவிட்டார்கள். பூபாலசிங்கம் பேராதனைக் சர்வகலாசாலை விடுதிகளில் எதிர் வீரசிங்கத்தைத் தேடிவிட்டுச் சென்றிருக்கிறான்.

இவ்வளவையும் கேட்ட எதிர், கீழே பார்த்தபடியே சிந்தனையில் இருந்தான்.

மலையப்பன் சொன்னான்: "எதிர்! இவர்கள் கண்டிக்குத்தானே போகிறார்கள்? அவர்கள் காரிலேயே போ. உனது உதவி டிஸ்பென்சர் ஐயாவுக்குத் தேவைப்படலாம்."

ஒருவர் சொன்னார்: "டாக்டர் பதி தனது நீரிழிவு நோயைக் கவனிக்காது விட்டுவிட்டார். ஒழுங்காக இன்சுலின் போட்டிருந்தால் காலை இழக்கவேண்டி வருமா? மற்றவர்களின் காரியங்களில்தான் அவருக்கு அக்கறை அதிகம்........நல்லவர்களுக்குக் காலமில்லை."

மலையப்பன் கூறினான்: "எதிர்! நேரம் போகிறது. தாமதியாமல் போய்விடுங்கள். எனது உதவி தேவைப்பட்டால், நாவலப்பிட்டி ஸ்டூடியோ வர்ணத்திற்குப் போன் செய்."

"ஆமா தம்பி, போய்விடு" என்றார் ஜகுபர்.

"மலைநாட்டில் திடீர்ச் சம்பவங்களுக்கும் அதிசயங்களுக்கும் குறைவில்லைப் போலும்" என்றான் மயில்வாகனம்.

எதிர்வீரசிங்கம் ஏறிச்சென்ற கார் ரோட்டின் வளைவில் திரும்பி மறையமுன், மலையப்பன் தனது பெரிய கைகளைத் தட்டி ஒலி எழுப்பி அவர்களை நிறுத்த முயற்சி செய்தான் ஆனால் காரில் இருந்தவர்களுக்கு அது கேட்கவில்லை. கார் மறைந்துவிட்டது.

மலையப்பன் அவசரப்பட்டதற்குக் காரணம் உண்டு. அதை எதிர் தெரிந்தால் சிறிது சந்தோஷத்துடன் போவான் என்று மலையப்பன் எண்ணினன்.

மகாராஜன்—வீராயி கல்யாணம் நின்றுவிட்டதாம்! சண்முகநாத கோவிலில் கல்யாணச் சோடனைகளைக் கழற்றுகிறார்களாம்... ...

சே! மஸ்கெலியா டவுனிலிருந்து இந்தச் செய்தியைக் கொண்டுவந்தவர்கள் சில நிமிடங்களுக்கு முன்பாக வந்திருக்கக்கூடாதா?

அந்தக் கல்யாணம் ஏன் நின்றுவிட்டது?

"யாருக்குத் தெரியும்? ஒரு துரைக்கும் தோட்டக்காரப் பெண்ணுக்கும் கல்யாணம் எப்பவாவது நடக்க முடியுமா?" என்று கேட்டான் ஒருவன்.

"உசிரு போனாலும் அந்தக் கல்யாணம் வேண்டாம் என்று அந்தப் பொண்ணு சொல்லிச்சாம்" என்றான் இன்னொருவன்.

மலையப்பனுக்கு இதைக் கேட்டதும் இதயம் சிலிர்த்தது.

அவ்விடத்தில் நின்ற வேறு ஒருவன் கேட்டான்: "இதென்ன கதை. ஒரு தோட்டக்காரி ஒரு சின்னத்துரையைக் கட்டிக்கிட மாட்டேன்னு எப்பவாவது சொல்லுமா?"

மலையப்பன், மயில்வாகனம், அன்புமணி, தாகூர்தாசன் இவர்கள் யாருக்குமே இந்தப் பிதற்றல்கள் பிடிக்கவில்லை. அவர்கள் தாங்கள் வந்த கார்களில் மஸ்கேலியா டவுனை நோக்கிப் புறப்பட்டார்கள்.

சண்முகநாத கோயிலின் முன் காரை நிறுத்திவிட்டு அன்புமணி உள்ளே சென்றார். மற்ற இரு கார்களும் அவ்விடத்தில் வந்து நின்றன. அன்புமணி அவசரத்துடன் திரும்பி வந்து காரில் ஏறியபடி "மாணிக்கமலைக்குக் காரை விடும்" என்றார்.

அவர் தொடர்ந்து சொன்னார் : "அங்கு போனால்தான் உண்மை தெரியும். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதை சொல் கிறார். வீராயியைக் காலையிலிருந்து காணவில்லையாம்."

மாணிக்கமலையில் ரெங்கசாமிக் கங்காணியின் காம்பரா பூட்டப்பட்டிருந்தது. கடந்த ஒரு வாரமாக வீராயியும் ரெங்கசாமியும் பதியின் பங்களாவில் இருக்கிறார்கள். மீனாட் சிப் பாட்டிக்குக் கசரோகம் என்று கண்டுபிடிக்கப்பட்டு, கச ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்விட்டார்கள். சிதம்பரமும் பொட்டும் வள்ளியின் மரணத்தின் பின்பு வேறு ஒரு லயத் துக்கு மாறிவிட்டார்கள்.

'இவ்வளவு குறுகிய காலத்தில் இத்தனை மாறுதல்களா ?'

காலத்தின் மாறுபடும் தன்மையையும் வேகத்தையும் எடைபோட்டு வியந்தவாறு மலையப்பன் அங்குமிங்கும் பார்த் தான். காம்பராக்களில் பெரியவர்கள் வேலைக்குப் போயிருந் தார்கள். பிள்ளைகள் 'மலையப்பத் தலைவருக்குக் கல்யாணம் போய்' என்றும் 'தலைவர் வந்திட்டாரு. சுடப்போறாங்க போய்' என்றும் ஆர்ப்பரித்தனர். அப்படிக் கூவிக்கொண்டே தங்கள் காம்பராக்களுக்குள் ஓடினர், மலையப்பன் இதையெல் லாம் கேட்டும் பார்த்தும் சிரித்தான். ஆம், சிரித்தான்!

அந்த நேரத்தில் அவ்விடத்திற்கு வந்த பொட்டு, மலையப் பனின் காலடியில் அப்படியே குந்தி இருந்துவிட்டாள். "மலையப்பா! வீராயி ராத்திரி எங்கேயோ ஓடிட்டா" என்று 'ஓ'வெனக் கதறினாள்.

"வீராயி அக்கா காலையில இதால ஓடுனு" என்றான் நிர்வாணமாக நின்ற ஒரு பையன்.

"தம்பி, நீ கண்டியா, சொல்லு" என்று துப்பறியும் துடிப்புடன் கேட்டார் தாகூர்தாசன். பையன் 'ஹூயா' என்று சிரித்துக்கொண்டே ஓடினான். 'அடே பண்டி, என்டா

பொய் சொன்னே?'' என்றவாறு அவளைத் துரத்திக்கொண்டு ஒரு பெரிய பையன் ஓடினான். அவனும் ஆபத்தில்லாத அளவு தூரத்திற்குப் போனதும், தனது தம்பியுடன் சேர்ந்து கொண்டு 'வீராயி அக்கா ஓடிட்டா' என்று கத்திச் சிரித்தான்.

பொட்டு தலையிலே கைவைத்து அழுதாள்.

"ஐயோ, அவ எங்கே போனான்னு தெரியல்லையே! வள்ளியம்மா, நீ இருந்தா வீராயி இப்படி ஓடுவாளாடீ?''

கொழுந்து கிள்ளும் சில பெண்கள் கூடை நிறையப் பசுங் கொழுந்துகளைக் காவிக்கொண்டு அந்த வழியாக விரைந்து சென்றனர். முதலாம் நிறுவைக்கு நேரம் சரியாக இருந்தது.

மலையப்பன் அவர்களைப் பார்த்தபடியே நின்றான்.

அவர்களின் பின்னால் கணக்கப்பிள்ளையுடன் வந்த ஹெட் கிளாக் சேவுகப்பெருமாள் சொன்னான்:

"மலையப்பா! நான் கண்டியிலிருந்து ஒரு வார லீவின் பின் இன்றுதான் வந்தேன். காலையிலே ஹட்டன் பஸ் நிலையத்தில் வீராயி போல ஒரு பெண் நின்றா. எனக்கு அப்போது விஷயம் ஒன்றும் தெரியாது. நான் நன்றாகக் கவனிக்கவில்லை.''

இதைத் தொடர்ந்து கணக்கப்பிள்ளை கூறினார்: "சரிதான், அவ நாவலப்பிட்டிக்குப் போயிருக்கவேண்டும். பதி ஐயா மீது எவ்வளவு விஸ்வாசம் இருந்தாலும் ரெங்கசாமி இப்படி யான நேரத்தில் அவளை விட்டுட்டுப் போயிருக்கக்கூடாது. நேற்று ராத்திரி கண்டி ஆஸ்பத்திரிக்குப் போக அவருக்கு என்ன அவசியம்?''

மலையப்பன் ஹட்டன் பொலீஸ் ஸ்டேஷனில் தகவல் கொடுத்தான். அங்கே, இதே விஷயத்தை மகாராஜன் போன் மூலம் தெரிவித்திருப்பதாகவும், டீ மேக்கர் வல்லிபுரம் தாமாகவே காலையில் வந்து அறிவித்ததாகவும் கூறினார்கள்.

வீராயி ஹட்டனுக்கு வந்ததை உண்மையாகத்தான் கொள்ள வேண்டும். குங்குமநிற வெல்வெட் சட்டையும் வெள்ளைச் சேலையும் உடுத்துக் கொண்டு அவள் ஹட்டனுக்கு வந்திருக்கிறாள். அவளைக் கண்டதாகவும், ஆனால் அவளுடன் பேசவில்லை என்றும் ஹட்டன் நகரசபை அலுவலகத்தில் வேலை செய்யும் ஒரு பியூன் மலையப்பனுக்குச் சொன்னான்.

வெல்வெட் சட்டை மலையப்பன் சில வருடங்களுக்கு முன் ஒரு தீபாவளிக்குத் தைத்துக் கொடுத்ததாகும். அது அவள் வெகுவாக விரும்பிய ஒரு சட்டைதான். அந்தச் சட்டையின் கைகளில் ஜரிகை வேலைப்பாடு உண்டு.

நாவலப்பிட்டிக்குச் சென்று பொலீஸ் ஸ்டேஷனில் 'ரிப்போர்ட்' செய்தபோது, மலையப்பன் இந்த விபரங்களையும் கூறினான். ஆப்டீனும் சந்தனப்பிச்சையும் மயில்வாகனமும் மலையப்பனுடன் அங்குமிங்கும் அலைந்தனர். மற்றவர்கள் தங்கள் இடங்களுக்குப் போய்விட்டனர். ஏதாவது உதவி வேண்டியிருந்தால் தாங்கள் தாமதிக்காது வருவதாகக் கூறியிருந்தனர்.

காலையிலே சிவனொளிபாத மலையின் சிகரப் பார்வையிலே ஜகஜோதியாக உதித்த சூரியன், இப்போது தனது வாழ்க்கைப் பிரயாணத்தின் நடுப்பொழுதில் வானத்தின் உச்சியில் பிரகாசிக்க வேண்டும். ஆனால் மலைநாட்டில் சதாதோன்றும் கருமேகங்கள் சூரியனை விழுங்கிவிட்டன. மேகம் சேற்றுக் குளமாகக் குழம்பியிருந்தது. மழை பெய்து கொண்டும் இடை இடையே தூறிக்கொண்டும் இருந்தது.

மலையப்பன் அன்று இரவு தனது அறைக்குச் சென்றபோது பத்து மணிக்கு மேலாகிவிட்டது. அவனால் ஒன்றும் சாப்பிட முடியவில்லை. அன்று முழுவதும் காப்பியும் தேநீரும் மட்டும் அருந்தியிருந்தான். அவன் கட்டிலில்

சாய்ந்ததும் உடல் அயர்ந்து போயிற்று. ஆனால் உள்ளம் விழிப்பாகவே இருந்தது. இரவு முழுவதும் உடலுக்கும் உள்ளத்திற்கும் ஓரே போராட்டம்.

அடுத்த நாள் ஹட்டன், டிக்கோயா, மஸ்கேலியா பகுதிகளுக்குச் சென்று அங்கெல்லாம் பலரைக் கண்டு கேட்டு அலைந்து விட்டு வந்தான். வீராயியைப் பற்றிய தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

அதற்கு அடுத்த நாள் அதிகாலையிலே எழுந்து லக்ஸபானவுக்குச் சென்றான். அங்கிருந்து மஸ்கேலியாவுக்குப் போய், வரும் வழியில் மாணிக்க மலையில் விசாரித்துவிட்டு நாவலப்பிட்டிருக்கு வந்தான். மழை தொடர்ந்து பெய்து கொண்டேயிருந்தது நாலுமணிக்கு வருகிற புகைவண்டி ஒன்று அப்போது தான் அம்பகமுவ ரோட்டைக் கடந்து ஸ்டேஷனுக்கு விரைந்துகொண்டிருந்தது. அவனுக்குத் தாங்க முடியாத பசி. பஸ்ஸிலிருந்து இறங்கியதும் ஒருதாம் பொலீஸ் ஸ்டேஷனில் விசாரிக்கலாம் என்று சென்றான்.

போனது நல்லதாய்ப் போயிற்று. வீராயி விஷயமாக அவனை, உடனடியாக வட்டவளை ஆஸ்பத்திரிக்குப் போகச் சொன்னார்கள்.

பொலீஸ் ஸ்டேஷன் படிகளில் அவசரத்துடன் இறங்கி, கொடிய பசியைக் கொட்டும் மழை கழுவ, ரோட்டில் ஓடித் தபால் கந்தோருக்குமுன் நிறுத்தப்பட்டிருந்த ஒரு வாடகைக் காருக்குள் ஏறினன். காரின் 'ஹோரனை' விட்டு விட்டு நன்றாக அழுத்தினன். பக்கத்திலிருந்து ஓடி வந்த கார்ச் சாரதி "ஏய். யாரு இது? இப்போது ஒரு இடமும் போகப் பாதை தெரியாது" என்று சிங்களத்தில் ஏசியபடியே கதவைத் திறந்து, ஆளைப் பார்த்ததும் தமிழில் "ஓ! நம்ம மலேயப்பனு? எங்கே மச்சான் போறது?" என்று கேட்டான்.

"நம்ம மச்சினி வட்டவளை ஆஸ்பத்திரியிலே. அங்கே தான் போகவேண்டும்" என்றான் மலையப்பன்.

அவன் தொடர்ந்து சொன்னான்: "நான் இப்போது தான் அந்த வழியாக பஸ்ஸில் வந்தேன். அவள் அங்கே இருக்கிறாள் என்று அப்போது தெரியவில்லை."

மலையப்பனை வட்டவளை ஆஸ்பத்திரியில் இறக்கிவிட்டு, அவன் வந்த காரின் சாரதி ஹட்டனுக்குப் போய் வருவதாகச் சென்றான். அதே நேரத்தில் மாணிக்கமலைத் தோட்டத்து ஜீப் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுகொண்டிருந்தது.

ஒரு தோட்டப் பெண்ணின் பிரேதம் அண்மையிலிருக்கும் மலை அடிவாரத்தில் கண்டெடுக்கப்பட்டு வட்டவளை பிரேத அறையில் போலிஸ் காவலில் இருக்கிறதாம்.

சின்னத்துரை மகாராஜனும் போலீசுக்கு ரிப்போட் செய்திருந்ததால், அவனையும் அழைத்திருந்தார்கள். டிக்கோயா 'பிளான்டர்ஸ் டென்னிஸ் கிளப்'பிலிருந்து நேரே வட்டவளைக்கு வந்த மகாராஜனால் பிரேதத்தை அடையாளம் கண்டு ஒன்றும் சொல்ல முடியவில்லை. பிணத்தின் முகம் இனம் காணமுடியாதவாறு காயப்பட்டு மழை நீரிலே சிதம்பி விகாரமாக உருமாறியிருக்கிறது என்று கூறினார்கள்.

மலையப்பனைப் பிரேத அறைக்கு ஒரு பொலீஸ்காரன் அழைத்துச் சென்றான்.

பிரேதத்தின் பாதங்களையும் பாத விரல்களையும் கண்டதும் தனது முகத்தை மப்ளர் குவியலில் புதைத்துக் கொண்டான் மலையப்பன். அழுது துடித்து நெஞ்சோடு மோதிய இதயத்தைத் தன் இடது கையால் அழுத்திப் பிடித்தான்.

இதயத்தின் பேரோசை அவன் காதுகளுக்குக் கேட்டது.

'மலையப்பா, பார்த்தியா என் வீராயி.'

மலையப்பன் ஆஸ்பத்திரிக்கு வெளியே வந்தபோது, கடும் மழை குறைந்து வானம் தேம்பிக்கொண்டிருந்தது.

அவனுக்கு உடனே செய்யவேண்டிய பொறுப்பான சொந்த வேலைகள் நிறைய இருந்தன. அவன் வட்டவளைக் கடைத் தெருவை நோக்கி, கீழே பார்த்தபடி விரைந்து நடந்தான்.

கடைத் தெருவில் ஒரு நகைக் கடையும், ஏறத்தாழ அதற்கு எதிர்ப்புறமாக, சவப் பெட்டி விற்கும் இடமும் இருந்தன.

மலையப்பன் தனது பர்சைத் திறந்து, கண்கள் பனிக்கத் தன் விரல்களால் தான் நேசித்த சின்னஞ் சிறு தாலியை எடுத்தான்.

நாலா பக்கங்களிலும் இருந்த பெரிய மலைகளிலிருந்து, இரவின் கரிய குளிர்த்திரை எங்கும் எல்லாவற்றையும் மூடிக்கொண்டு வந்தது.

ஆசிரியரின் பிற நூல்கள்:

அருமைத் தங்கைக்கு

அன்பார்ந்த நந்தினி
(அச்சில்)

